

82
தமிழ்க்கடல்
ராயசொ
டாக்டர் ந. சுப்புரெட்டியார்
மணிவாசகர் பதிப்பகம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**
இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# தமிழ்க் கடல்
# இராய. சொ.

தமிழ்க் கடலின் நூற்றாண்டு விழாப் பொழிவு


பேராசிரியர்

முனைவர் ந. சுப்புரெட்டியார்

*இயக்குநர், தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின்*
*மரபுவழிப் பண்பாட்டு நிறுவனம்*
*சென்னைப் பல்கலைக் கழகம்*



**மணிவாசகர் பதிப்பகம்**
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : திசம்பர், 1998
திருவள்ளுவர் ஆண்டு : 2029
உரிமை : இந்துமதாபிமான சங்கம்
விலை ரூ. 35.00
மணிவாசகர் வெளியீட்டு எண் : 674

## பதிப்பாசிரியர்

### டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்; திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; தமிழகப் புலவர் குழுவின் துணைத் தலைவர்; பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருபவர். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பதினாறு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய 'தாகூர்' நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர், துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார், 'தமிழவேள்' என்னும் விருதினை வழங்கியுள்ளார். குளித்தலை கா.சு. பிள்ளை இலக்கியக்குழு, 'தமிழ் நெறிக் காவலர்' என்னும் விருதினை அளித்து இவரைச் சிறப்பித்துள்ளது. பதிப்புச் செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :

சிதம்பரம் : 23069 சென்னை : 561039
மதுரை : 622853 கோயமுத்தூர் : 397155
திருச்சி : 706450

அச்சிட்டோர் : பீகே ஆப்செட் பிரஸ், சென்னை - 600 013.



தமிழ்க் கடல்
இராய. சொ.




இந்துமதாபிமான சங்கம்
காரைக்குடி



மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

9—11—1919ல் சங்க நிலையத்தில் படம் எடுக்கப்பெற்றது.



# தமிழ்க் கடலின் ஆழம்

பதிப்புச் செம்மல், தமிழவேள் ச. மெய்யப்பன்

தமிழ்க்கடல் இராய.சொ. செட்டிநாடு தமிழுக்கு அளித்த குலதனம். சொக்கலிங்க ஐயா, பண்டிதமணி வழியில் சைவமும் தமிழும் பரப்பிய தண்டமிழ்ச் சான்றோர். நாட்டுப்பற்று மிக்க இவர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, சிறை சென்ற செம்மல். மறுமலர்ச்சிக்கு வித்திட்ட 'ஊழியன்' இதழின் ஆசிரியர். மிகச்சிறந்த எழுத்தாளர்களை ஊழியன் இதழின்மூலம் தமிழ் இதழியலுக்கு அளித்த கொடைஞர். ஒரு இலக்கிய இதழ் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக இருந்த இதழ் ஊழியன்.

1917இல் பாரதியாரால் பாராட்டப் பெற்ற இந்து மதாபிமான சங்கத்தை உருவாக்கிய இளைஞர் அணியில் தனிச்சிறப்பிடம் பெறுபவர். இந்து மதாபிமான சங்கம் தேசிய எழுச்சிக் களம். தமிழ் வளர்ச்சி மன்றம்; சைவம் பரப்பும் சங்கம். நகரத்தார் மறுமலர்ச்சியின் தாயகம். இப்பெருமைமிகு சங்கத்தை வளர்த்துக் காத்தவர் வன்தொண்டர் இராய.சொ.

கவிஞர்
இதழாசிரியர்
சொற்பொழிவாளர்
தொகுப்பாசிரியர்
நூலாசிரியர்
சுவைஞர்
நினைவுக் கலைஞர்

எனப் பன்முக ஆற்றல்களைக் கொண்டவர். தமிழிலக்கியம் அனைத்தையும் எழுத்தெண்ணிக் கற்ற ஏந்தல். ஆதலால் இவர் தம் கவிதை தமிழ்வளம் பொதுழியது. மரபுவழிக் கவிஞர். தமிழ் மரபில் இவர் யாத்த காந்திவழிச் சிற்றிலக்கியங்கள் 'காந்திக் கவிதை' என்னும் பெருநூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளது. அதன் சிறப்பினை மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் திறனாய்ந்து தெளிந்து அணிந்துரை அளித்துள்ளார். தமிழில் காந்தி அடிகள் பற்றி வந்த நூல்களில் இச்சிற்றிலக்கியத் தொகுதி பெறும் இடம் பெரிய இடமாகும். காந்தி புகழ் பாடுவதில் தனிச்சிறப்புப் பெற்றது. காலவெள்ளம் அழிக்க முடியாத கவித்துவம் கொண்டது இந்நூல். தேசிய இலக்கியச் செப்பேடு. விடுதலைப் போரின் பொன்னேடு.

இராய.சொ. தன்மானம் உடைய தமிழ்க் கவிஞர். சங்கக் கவிஞர்கள் போல பெருமித வாழ்வினர். கபிலரைப் போல புலனழுக்கற்றவர்; மாசறு காட்சியர்.

இவர் நல்ல சுவைஞர். இவரைச் சுற்றி, பூவில் மொய்க்கும் வண்டுகளைப் போல, தமிழ்ச் சுவைஞர் குழு சூழ்ந்திருக்கும். இவர் பாட்டைச் சொல்லும் முறையிலேயே பாட்டு நம் நெஞ்சில் பதிந்துவிடும். அழுத்தமாகச் சொல்லுவார். திருத்தமாகச் சொல்லுவார். ஓசைநயம் பிறழாது ஒலிநயம் சிறக்கச் சொல்லும் சிறப்பு இவரின் தனிச்சிறப்பு. இவருடைய நினைவாற்றல் கல்லெழுத்துக்களைப் போன்றது. இராய.சொ. நினைத்த மாற்றத்தில் ஆயிரக்கணக்கான பாடல்களை அடிபிறழாமல் சொல்லும் ஆற்றலாளர். தம் நூல்களின் மூலம் இன்றும் நம்மோடு வாழ்கிறார்.

நூற்றாண்டு விழா நாயகரின் நூலை எழுதுதற்கு முற்றிலும் தகுதியுடையவர் பெருமகனோடு பல்லாண்டு பழகிய கேண்மையர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். பெருநூல்கள் பல படைத்துப் பேரும் புகழும் பெற்றவர். உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராக வாழ்வைத் தொடங்கி பல்கலைக்கழகப் பேராசிரியராக உயர்ந்தவர். இந்திய மொழிகளில் முதலில் தோன்றிய தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராய் விளங்கியவர்.

அறிவியல் நூல்களைப் பழகுதமிழில் தமிழுக்கு வழங்கிய அறிவியல் கொடைஞர். தமிழ்பயிற்றும் முறை, கவிதை அநுபவம் முதலிய அரிய பெரிய நூல்களை உருவாக்கிய பெரும் சாதனையாளர். இவர் நூல்கள் செய்திக் களஞ்சியம் மட்டுமல்ல; ஆராய்ச்சி நுண்கூறுகளை உடைய கருவூலங்கள்.

இந்த நூலில் இராய. சொக்கலிங்கனாரின் அனைத்து இலக்கியச் சாதனைகளையும் திட்ப நுட்பத்துடன் ஆராய்ந்து தெளிந்துள்ளார். இராய.சொ.வின் இலக்கியப் பணிகள் - ஒரு மதிப்பீடு' என்னும் பெயர் சூட்டும் அளவுக்கு இந்நூல் இராய.சொ.வின் அனைத்து இலக்கியப் பணிகளையும் ஆழ்ந்து ஆராய்ந்து வெளிக்கொணரும் ஒரு ஆய்வேடாகத் திகழ்கிறது. இராய.சொ.வின் அனைத்து நூல்களையும் கற்ற பயனை இந்நூல் ஒன்றின் மூலமே பெறலாம். இந்நூலாசிரியரோடு நாமும் இனிமையான இலக்கியப் பயணம் மேற்கொள்ள இந்நூல் வழி செய்கிறது.

ஒரு பெரும் புலவரின் படைப்பு நுட்பத்தைப் பெரும் பேராசிரியர் அன்போடும் அனுபவத்தோடும் அணுகி வழங்கும் ஓர் இலக்கியச் சுரங்கம் இந்நூல். நகரத்தார் சாதனைகளை ஆவணமாகக்கொண்ட **நகரத்தார் கலைக் களஞ்சியம்** வெளியிட்ட மணிவாசகர் பதிப்பகம் நகரத்தார் சிகரங்களில் ஒருவராகிய இராய.சொ.வின் பெருமை பேசும் இந் நன்நூலையும் வெளியிடுவதில் பெருமை கொள்கிறது.

தேசிய கவிஞர்

பாரதியாரின் பாடல்பெற்ற

இ.ம. சங்கத்து

முன்னைய - இன்றைய - பின்னைய

சான்றோர்கட்கு

# அன்புப் படையல்

நினைவினில் இலக்கம் பாடலை நிறுத்தும்
ஆற்றலன் இராய.சொக் கலிங்கன் *
அனைவரும் நயந்து நினைவினில் ஏந்திநூற்
றாண்டுவி ழாவினைக் கண்டார்.
முனைவன்சொக் கலிங்கன் யாத்தநூல் கொத்துள்
மூழ்கியான் தொடுத்துள தேனைப்
புனைவிலை, இ.ம. சங்கமார் சான்றோர்
புசிக்கெனப் படைத்தனென் யானே!

---

* முதலடியில் இராய. சொக்கலிங்கன் - இராய. சொக்கலிங்கனை என இரண்டாம் வேற்றுமை விரித்துக் கொள்க.

# இராய. சொ.
## வாழ்க்கைக் குறிப்புகள்

**பிறப்பு, கல்வி, திருமணம்:**

'தமிழ்க்கடல்', இராய. சொக்கலிங்கனார் காரைக்குடியில் 30-10-1898 இல் நாட்டுக்கோட்டை, தனவணிகக் குடும்பத்தில், தலைமகனாகப் பிறந்தார். தந்தையார் திரு. இராய. சொ. இராயப்பச் செட்டியார்; தாயார் அழகம்மை ஆச்சி.

இராய. சொ. இளமையில் காரைக்குடியில் ஆசிரியர் சுப்பையா அவர்களிடம் திண்ணைப் பள்ளியில் கல்வி பயின்றார். தந்தையாருக்கு மலையாளத்தில் பாலக்காடு என்னும் ஊரில் ஒரு லேவாதேவிக் கடை இருந்தது. அதன் காரணமாக, எட்டு - ஒன்பது வயதுவரையில் பாலக்காட்டில் படிக்க நேர்ந்தது. பதின்மூன்றாவது வயதில் பர்மா சென்றார். அங்கு பியாப்பம் என்ற ஊரில் மூன்றரை வருடம் இருந்துவிட்டுத் தாயகம் திரும்பினார்.

காரைக்குடியில் தமது பதினெட்டாவது வயது முதல் இருபதாவது வயதுவரையில் தமிழ் ஆசிரியர், பண்டித திரு. சிதம்பர அய்யரிடம் தமிழ் இலக்கண, இலக்கியப் பாடங்கள் பயின்றார். அப்பெரியாரை நன்றியறிதலோடு நினைந்து மகிழ இராய. சொ. ஒருபோதும் மறந்ததில்லை.

21-6-1918 இல் பள்ளத்தூரில் திருமதி உமையாள் ஆச்சியை, இராய. சொ. அவர்கள் திருமணம் செய்து கொண்டார். சுமார் 43 ஆண்டுகள் இல்வாழ்வில் கழித்தார்.

**சமூகத் தொண்டு:**

தமிழ் படிக்கும்போது இராய. சொ. அவர்களுக்கு, அப்போது 'சமூகச் சீர்திருத்தத் தந்தை' என அழைக்கப்பட்ட திரு.சொ. முருகப்பாவின் தொடர்பு ஏற்பட்டது. அன்னார் காரைக்குடியில் 10-9-1917இல் பல அன்பர்களைச் சேர்த்துக் கொண்டு இந்து மதாபிமான சங்கத்தைத் தோற்றுவித்தார். இச்சங்கம் கண்டதில் இராய. சொ. பெரும் பங்குகொண்டார். இச்சங்கத்தில் தலைவராக இராய. சொ. பல ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். அதன் பொன் விழாவைச் சீரும்

சிறப்புமாகக் கொண்டாடி மகிழ்ந்தார். 'இராய. சொ. உமையாள் மண்டபம்' என்ற பெயரால் சங்கத்தின் கட்டடத்தில் மேல்மாடி ஒன்றும் கட்டிக்கொடுத்துள்ளார்.

தனவணிக சமூகத்தில் வளர்ந்த குறைபாடுகளைச் சீர்திருத்தம் செய்யக் கருதி, 11-9-1919இல் பல அன்பர்கள் சேர்ந்து 'தனவைசிய ஊழியர் சங்கம்' கண்டனர். இதிலும் இராய. சொ. அவர்களுக்குப் பெரிதும் பங்கு உண்டு.

## இதழியல் தொண்டு:

தனவைசிய ஊழியர் சங்கத்தின் சார்பில், 8-9-1920 இல் 'தனவைசிய ஊழியன்' என்ற பெயரோடு ஒரு பத்திரிகை ஆரம்பிக்கப் பெற்றது. இதன் ஆரம்பகால ஆசிரியராக, அன்பர் சொ. முருகப்பா பதின்மூன்று திங்கள் பணியாற்றினார். இரண்டாவது ஆண்டு ஆரம்பத்திலிருந்து இராய. சொ. அவர்கள் இதன் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

சில ஆண்டுகளுக்குப்பின் இப்பத்திரிகையை 'ஊழியன்' என்ற பெயருடன் மாற்றியமைத்து கொள்கையைப் பரந்த அளவில் விரிவுபடுத்தி, காங்கிரஸ் கொள்கை வழிநின்று இருபது ஆண்டுகள் இராய. சொ. நடத்தினார். இப்பத்திரிகை காரைக்குடியிலும் சென்னையிலுமாக வெளிவந்தது.

இன்றையப் பத்திரிகை உலகில் முன்னணியில் உள்ளவர்கள் பலர், 'ஊழியன்' பத்திரிகையில் உதவி ஆசிரியர்களாக இருந்தவர்கள். வரா, தி.ஜ.ர, புதுமைப்பித்தன் முதலியோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். கொத்தமங்கலம் சுப்பு 'ஊழியன்' தொண்டில் பங்குபெற்றிருக்கிறார். 'ஊழியன்' பத்திரிகைக்கு சென்னையின் விளம்பர முகவராக எஸ்.எஸ். வாசன் பணிபுரிந்தார்.

## அரசியல், சிறை வாழ்வு:

இராய. சொ.வின் அரசியல் குரு திரு.விக. எனலாம். அவருடைய பேச்சு, எழுத்து எல்லாமே திரு.விக. அவர்களைப் பின்பற்றியதாக இருக்கும்.

வ. வே. சு. அய்யர், வ. உ. சிதம்பரனார்,சுப்பிரமணிய சிவா முதலியோரிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றவர் இராய.சொ.

நாட்டின் விடுதலை அறப்பணிகளில் காந்தியடிகள் காட்டிய நெறியில் மிகுந்த ஈடுபாடுகொண்ட இராய.சொ. சட்ட மறுப்பு இயக்கத்தில் சேர்ந்து 9-1-1932 அன்று ஓர் ஆண்டுச் சிறைத் தண்டனை அடைந்தார். நாட்டுக்கோட்டை நகரத்தார் வகுப்பில் அரசியல் காரணமாக முதன் முதலாகச் சிறை சென்றவர் இராய.சொ. தான்.

இராய. சொ. மாசற்ற தேசபக்தர். பல காங்கிரஸ் மாநாடுகளுக்குப் பிரதிநிதியாகச் சென்றுள்ளார். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினராகவும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிச் செயற்குழு அங்கத்தினராகவும், காரைக்குடி மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

**காந்திக்கு விருந்து:**

1934ஆம் ஆண்டு மகாத்மா காந்தியடிகள் தென்னாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது, இராய.சொ. அவர்களின் குடிலுக்கு வந்து, விருந்துண்டு பெருமைப் படுத்தினார். இதனால் தமக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிப் பெருக்கையும், பேற்றையும் இராய.சொ. அவர்கள்:

"காந்தியடிகளை விருந்தினராகப் பெறும் பேற்றை நான் பெற்றேன். என் உள்ளக் கமலத்தே இடம் பெற்ற அத் திருப்பாதத் தூளி என் சிறு குடிலையும் புனிதமாக்கியது.

'எம்மை ஆளுடை நாயகன்
விருந்தினுக்கு இசைந்தான்'

என்று என் உள்ளம் இன்பக் கடலாடியது. இன்னோரன்ன நிகழ்ச்சிகள் இறவாதவை; காலாவதி இல்லாதவை" என்று குறிப்பிடுகிறார்.

**நகரசபைத் தலைமையும் தொண்டும்:**

1938 முதல் 1941 வரையில் காரைக்குடி நகரசபைத் தலைவராகப் பணியாற்றினார், இராய.சொ. அவர் தலைமை ஏற்கையில் நான்கே நான்கு ஆரம்பப்பள்ளிகள்தாம் காரைக்குடியில் இருந்தன. அவர் பதவியிலிருந்த காலத்தில் ஆரம்பப் பள்ளிகள் 17 ஆகப் பல்கின. ஊரினை அழகுபடுத்துவதில் முதன்மையான தெரு விளக்குப்போடும் திட்டம் நன்கு செயல்படுத்தப்பட்டது. வீதிதோறும் நீலரச விளக்குகள் அமைக்கப்பட்டன. 'காந்தி மாளிகை' என்னும் நகரசபையின் அலுவலகம் அப்போது கட்டப்பெற்றதே.

**வெளிநாட்டுப் பயணம்:**

*1930ஆம் ஆண்டு மலேயாவில் சுற்றுப் பயணமும், 1935, 1936ஆம் ஆண்டுகளில் தமது மனைவி உமையாள் ஆச்சியுடன் பர்மா, மலேயா, சிலோன், சுமத்திரா, இந்தோசைனா முதலிய நாடுகளில் சுற்றுப்பயணமும் செய்துள்ளார். அப்போதெல்லாம் தமிழ் பரப்பும் நற்றொண்டையும் விடாது செய்து வந்துள்ளார்.*

*1961இல் மீண்டும் பர்மா சென்று, இருபது நாட்கள் தங்கி இலக்கியப் பணிபுரிந்தார். 1963ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற சைவ சித்தாந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கவும், சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றவும் அழைக்கப்பட்டு, மலேயா சென்றார். 24 நாட்கள் ஓய்வு ஒழிவின்றி அந்நாடு முழுவதும் சுற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றினார்.*

**பட்டங்கள்:**

*1958ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் தேதி, காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தார் தமது அருமைத் தலைவர், இராய.சொ. அவர்களின் மணி விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். அவ்வமயம் இராய. சொ. அவர்களின் ஆழ்ந்தகன்ற தமிழறிவையும், தொண்டினையும் பாராட்டு முகத்தான் அவர்கட்குப் பொன்னாடை போர்த்தி, 'தமிழ்க்கடல்' என்ற பட்டமும் சூட்டி மகிழ்ந்தனர்.*

*1961, சனவரியில் பர்மா சென்றிருந்த போது, இரங்கூன் நாட்டுக்கோட்டைச் செட்டியார் தர்ம பரிபாலன சபையார் இராய. சொ. அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, 'சிவமணி' என்ற பட்டமும் சூட்டினார்கள்.*

*1963 ஏப்ரலில் கோலாலம்பூரில் அருள்நெறித் திருக்கூட்டத்தார் இராய.சொ. அவர்களின் சைவ சமய ஈடுபாட்டையும், தொண்டையும் சிறப்பிக்கும் வகையில் 'சிவம் பெருக்கும் சீலர்' என்ற பட்டமளித்துப் பேருவகை கொண்டனர். கோயம்புத்தூர், ஈரோடு, பவானி முதலிய இடங்களிலுள்ள மெய்யன்பர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்துள்ளார்கள்.*

5-12-64 அன்று சென்னையில் தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் இராய.சொ. அவர்களுக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினர். இராமனாதபுரம், புதுக்கோட்டை மன்னர்கள் பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்தியுள்ளார்கள்.

**தமிழ்த் தொண்டு:**

1960 ஆம் ஆண்டு, சனவரி மாதம் கல்கத்தா தமிழ்ச் சங்க அன்பர்கள் அழைப்பை ஏற்று, அங்குச் சென்று, இருவாரங்கள் தங்கித் தாய்மொழிப் பணி பெருகச் செய்துள்ளார் மீண்டும் பர்மா சென்று திரும்பிய சமயமும் கல்கத்தாவில் தங்கி இலக்கியப் பேருரைகள் நிகழ்த்தினார்.

மும்பைத் தமிழ்ச் சங்கத்தின் அழைப்பை ஏற்று, இருமுறை அங்குச் சென்று இலக்கிய விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார்.

**சமயப் பணி:**

இராய.சொ. அவர்களின் அருமை வாழ்க்கைத் துணைவியார் உமையாள் ஆச்சி 31-10-60 சிவபதவி எய்தினார். அந்தத் தாங்கொணாத் துயரம் காரணமாக இராய.சொ. அமராவதிபுதூரில் தமது வீட்டில் தங்கியிருக்க விரும்ப வில்லை. இந்து மதாபிமான சங்கத்தில் பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், வில்லிபாரதம் முதலிய இலக்கிய, பத்திப் பனுவல்களுக்கு வாரந்தோறும் சனி, ஞாயிறு நாட்களில் மாலை இரண்டுமணி நேரம் விளக்கம் தந்துதவினார்கள்.

இராய. சொ. காரைக்குடி நகரச் சிவன்கோவிலின் மேற்பார்வையாளராக ஓராண்டு பணிபுரிந்தார். தமிழோடு இசைபாடல் மறந்தறியாச் சிவத்தளியாக அச்சிவன்கோவிலை விளங்கச் செய்தார். ஒவ்வொரு சந்நிதியிலும் தெய்வப் பாடல் ஒளிவிடும் காட்சியை இன்றும் கண்டு மகிழலாம். செல்வர்களைக்கொண்டு சுவாமிகளுக்கு ஏராளமான வெள்ளி அங்கிகள் செய்துவைத்தார்.

இராய.சொ. அவர்களின் பரம்பரையைச் சேர்ந்த காரைக்குடி நாகநாதபுரம் பெருமாள் - சிவன் கோவில்கள் பழுதுபட்ட நிலையில் இருந்தன. இராய. சொ. அவர்கள் கோவில் நிர்வாகத்தின் தலைமையை ஏற்றவுடன் கோவிலைச் செப்பனிட்டு, திருப்பணி செய்து, குடமுழுக்கும் செய்தார்கள்.

## திருத்தலப் பயணம்:

சைவ, வைணவ சமரச நோக்கம் கொண்டவர் இராய.சொ. தேவாரப் பாடல்பெற்ற திருத்தலங்களுக்கும் இன்னும் சிவநேசச் செல்வர்கள் பாடியருளிய திருத்தலங்களுக்கும், ஆழ்வார்கள் பிரபந்தம் அருளிய திருத்தலங்களுக்கும் சென்று வணங்கும் கொள்கையுடையவர். தேவாரத் தலங்கள் 275-இல் 269 திருத்தலங்களுக்கும், ஆழ்வார் பாசுரங்கள் பெற்ற 108 திருப்பதிகளில் 99 தலங்களுக்கும் பலமுறை சென்றிருக்கிறார். இதன் விளைவாகத் 'திருத்தலப் பயணம்' என்னும் அரிய நூலொன்றும் வெளியிட்டுள்ளார்.

வடநாட்டில் மும்பை, நாசிக், பஞ்சவடி, முதலிய திருக்கோயில்களுக்கும், கல்கத்தாவில் காளிகட்டம், இராம கிருஷ்ணாலயம், வைகுந்த நாதர்கோயில் முதலியவற்றிற்கும், அயோத்தி, காசி, திருக்கோகர்ணம், ஸ்ரீசைலம், அகோபிலம், மகாநந்தி, நேப்பாளம் முதலிய இடங்களுக்கும் சென்று ஆண்டவனை வழிபட்டு வந்து இருக்கிறார்.

துவாரகை செல்லுகையில், காந்திடிகள் பிறந்தருளிய புண்ணியத்தலமாகிய போர்பந்தர் சென்று, அம்மகான் அவதரித்த இல்லக்கோயிலையும் கண்டு, வணங்கும் பேறு பெற்றார்.

சிவாகம நூற்கு எல்லைகண்ட பெருந்தவத்தார் ஈசான சிவாச்சாரியார் அவர்களால் இராய.சொ. சிவபூசை எழுந்தருளிவிக்கப்பெற்றார். இதை இராய.சொ. அவர்கள் எண்ணியும், சொல்லியும் மகிழ்வார்.

## நூலகக் கொடை:

வள்ளல் அழகப்பரின் தன்னல மற்ற ஈகையை, இராய.சொ. மிகவும் மதிப்பவர். எனவே அம்மதிப்பிற்கு ஒரு சான்றாக, தாம் வாழ்நாள் முழுதும் சேகரித்துத் தொகுத்த பெரிய நூல்நிலையத்தை அழகப்பா கலைக்கல்லூரிக்கு வழங்கினார். கிடைத்தற்கரிய பதிப்புகளும், திங்கள் இதழ்களும், அகரநூல்களும் இலக்கண, இலக்கிய, சமய, அரசியல் நூல்களும், பல்பொருள் பற்றிய அரிய உரைநடை நூல்களும் ஏராளமாக இந்நூலகத்தில் உள்ளன.

அப்போதைய மாநிலக் கல்வி அமைச்சர் திரு.சி. சுப்பிரமணியம், 'இராய.சொ. ஒரு நடமாடும் நூலகம்; ஆகவே அவர் நன்கொடை அளித்துள்ள அத்தனை நூல்களும் அவரிடம் குடி கொண்டவை; எனவே இந்நூலகம் அவருக்குத் தேவையில்லையல்லவா?' என்று மகிழ்ந்து பாராட்டினார்.

தமிழ்ப் பாடல்களைச் சிறிய தொகுப்பு நூல்களாக, பாமரனும் படிக்கும் வண்ணம் வெளியிட வேண்டும் என்ற கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர் இராய.சொ. அந்த முறையில், நயம் சான்ற செய்யுட்களைத் தொகுத்து, நிரல்படுத்தித் தக்க குறிப்பும் எழுதி இவர் பல நூல்களைப் பதிப்பித்துள்ளார்கள்.

வள்ளல் அழகப்பரின்' கல்லூரிகளை நடத்தி வந்த நிருவாகி திரு.க.வெ.சித.வெ. வெங்கடாசலம் செட்டியார் அவர்களின் அழைப்பை ஏற்று, 1962 செப்டம்பர் மாதம் முதல் இராய. சொ. தமிழ் ஆராய்ச்சித் துறையின் கௌரவத் தலைமைப் பொறுப்பேற்று, தமிழ் இலக்கியங்களை ஆய்ந்து வெளியிடும் பணியில் ஈடுபட்டார்.

**கவிதை அஞ்சலி:**

இராய. சொ. பழைமை போற்றிப் புதுமை கொள்ளும் தமிழ்க் கவிஞர். யாப்பு மரபு கெடுவதைப் பொறாத புலவர் இவர். காந்திப் பெருமானைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றியும், புதுமை விழைந்தும் விடுதலை நாயனாராகிய இராய. சொ. கவிதை நூல்கள் இயற்றியுள்ளார்.

காந்தி நூற்றாண்டு விழாவினை ஒட்டி அன்னார்மீது இராய.சொ. தாம் முன்னர் பாடிய 901 பாடல்களையும் தொகுத்து 'காந்திக் கவிதை' என்ற தலைப்பில் ஒரு கவிதை நூல் 2-10-69 அன்று சென்னையில் வெளியிட்டார்.

தமிழுக்கும் சைவத்திற்கும் இவ்வாறு பாடுபட்டு உழைத்த இராய. சொ. 30-9-74இல் இறைவன் திருவடியடைந்தார். அவர்கள் வீடுபேறு எய்திய அன்று உரைத்த பாடல், மனமெலாம் கலந்து நின்ற மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடலாகும். அப்பாடல் :

நோயுற்று மூத்துநான் நுந்துகன்றாய் இங்கிருந்து
நாயுற்ற செல்வம்நயந்(து) அறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை யாண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

# இந்துமதாபிமான சங்க வரலாறு

**சங்கப் பிறப்பு:** இந்துமதாபிமான சங்கம் 10-9-1917இல் தோன்றியது. காரைக்குடியில் 'கோவிலூர் ஆண்டவர்' எனப் போற்றப் பெறும் முத்துராமலிங்க ஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள், நூற்றாண்டுகளுக்கு முன் உண்டாக்கிய திருவாசக மடத்தில் முதலில் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

அந்தநாள் இருந்த குறைபாடுகளை அகற்றி, திருத்தம் பல கண்டு சிறப்போங்கச் செய்தவர், சீர்திருத்தச் செம்மல் சொ.முருகப்பனார் அவர்கள். சங்கம் 1967இல் பொன்விழாக் கண்டது. 1992இல் பவள விழாக் கண்டது.

**சங்கக் கொள்கை:** தன வணிக நாட்டிற்கும், தமிழுலகுக்கும் தொண்டு செய்துவரும் இச் சங்கத்தில் பல ஊரைச் சேர்ந்தவர்கள் பங்கு பெற்றிருக்கின்றனர். இந்து மதத்தையும், தமிழையும் வளர்ப்பது சங்கத்தின் குறிக்கோள். சங்கம், மதத்தின் பெயரைக் கொண்டிருப்பினும் நாட்டிற்கும் மொழிக்கும் பெரிதும் உழைத்திருக்கின்றது. அடிமைப்பட்டுக் கிடந்த பாரத நாட்டை, உலகெலாம் வியக்க மீட்டுத் தந்த ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெரியார் காந்தியடிகளின் ஆணையைத் தலைமேற் கொண்டே இச் சங்கம் செயலாற்றியது. தனவணிக நாட்டில் விடுதலை வேள்விப் பெரு நெருப்பில் குதித்த அன்பர்கள் பலரும் இச் சங்கத்தின் தோன்றல்களே.

**தமிழ்ப்பணி:** சங்கம் தமிழ் மொழிக்கு அரும்பணி செய்து வருகிறது. இச்சங்கத்தில் கலந்து கொள்ளாத தமிழறிஞர்களே இல்லை எனலாம். தமிழ் முனிவர் திரு.வி. கல்யாணசுந்தரனார் சங்கத்தின் விழாக்கள் பலவற்றிலும் தலைமையேற்றுச் சிறப்பித்ததோடன்றி, இன்று பொலிவுடன் திகழும் அழகிய சங்கக் கட்டிடத்திற்கும் கால்கோள் செய்திருக்கிறார். மூதறிஞர் இராஜாஜி 1952இல் இக்கட்டிடத்தைத் திறந்து வைத்துச் சிறப்பித்துள்ளார். 1965இல், தமிழ்க் கடல். இராய. சொ. அவர்கள், சங்கத்தில் மேல்மாடி ஒன்று, தம் துணைவியார் நினைவாக எழுப்பித் தந்தார்.

**சங்கத்திற்கு வந்த சான்றோர்:** தம் புகழ் நிறுவிச் சென்ற சான்றோர்களான, வ. உ. சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, வ.வே.சு. அய்யர், ஞானியார் சுவாமிகள், ஈசான சிவாச்சாரிய சுவாமிகள்,

விபுலானந்த அடிகள், வீர. சுப்பையா சுவாமிகள், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், டி.கே. சிதம்பரநாத முதலியார், சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசனார், ரா.பி. சேதுப் பிள்ளை, ஜகவீர பாண்டியனார், பூரணலிங்கம் பிள்ளை, தமிழவேள் உமா மகேசுவரம் பிள்ளை, உலக ஊழியனார், சரவண முதலியார், முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா, தவத்திரு குன்றக்குடி அடிகளார், தமிழ்க் கடல் இராய. சொ. ஆகியோர் உட்பட பலரும் சங்கத்தின் விழாக்களில் பங்கு பெற்றுள்ளனர்.

**பாரதியார்:** மகா கவி சுப்பிரமணிய பாரதியார் 1919ஆம் ஆண்டில் சங்கத்துக்கு எழுந்தருளி, சில நாள் தங்கி, பாராட்டி ஏழு அரிய பாடல்களைப் பாடியருளினார். தமிழகத்தில் பாரதியின் பாடல் பெற்ற சங்கம் இது ஒன்றே.

**சங்க நூலகம்:** விவேகாநந்த புத்தக சாலை என்ற நூலகம் சங்கத்தை அணி செய்கின்றது. தமிழ்ப் பெரும் புலவர் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்கள் மறைவிற்குப் பின் அவர்கள் அரும்பாடுபட்டுத் தேடித் திரட்டி வைத்திருந்த நூலகத்தைப் பெற்று அதையே ஆதியாக வைத்து, நாளடைவில் சேர்க்கப் பெற்ற பல நூல்களைக் கொண்டு இந்நூலகம் சிறந்து விளங்குகிறது. மணிவாசகர் பதிப்பக உரிமையாளர் பதிப்புச் செம்மல், ச. மெய்யப்பனார் ரூபாய் மூவாயிரம் மதிப்புள்ள நூல்களைக் கொடையாக வழங்கியுள்ளார்கள்.

**படிப்பகம்:** தமிழ், ஆங்கில நாளிதழ்கள், வார இதழ்கள், திங்கள் இதழ்கள், வாரமிரு முறை இதழ்கள், சமய வெளியீடுகள் படிப்பகத்திற்கு வருகின்றன.

**தொடர் சொற்பொழிவும் விழாக்களும்:** ஆண்டுதோறும் நகரச் சிவாலயத்தின் ஆடிப் பூரத் திருவிழாவை யொட்டி, சங்கச் சார்பில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தப்படுகிறது. ஒவ்வொரு சனவரித் திங்களிலும் தமிழ்க் கடல் ராய. சொ. விழா, பாரதி விழா, சங்க ஆண்டு விழா ஆகியன நடைபெறும்.

**சமுதாயப் பணி:** மக்கள் நலன் கருதிச் சேவை மனப்பான்மையுடன், சமுதாயத்திலுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடு இணைந்து, இயன்ற சமுதாயப் பணிகளை மேற்கொண்டு, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சேவை செய்து வருகின்றது.

# முன்னுரை

**அவைத் தலைவர் அவர்களே!**
**சங்கச் சான்றோர்களே!**
**செட்டிநாட்டுப் பெருங்குடி மக்களே!**

இன்று இனிய நாள் எல்லோருக்கும். நம்முடன் இருந்து 76 ஆண்டுகள் வாழ்ந்து, ஈடில்லாத தமிழ்த்தொண்டு புரிந்த தமிழ்க்கடல் இராய. சொ. அவர்களின் நூற்றாண்டு விழா. அவர் காலத்தில் நாம் வாழ்ந்திருந்தோம் என்ற பெருமிதமும் பெருமையும் நாம் பெற்றோம் என்ற மனநிறைவும் அடைகின்றோம். இல்லையா?

எங்கோ பிறந்து வளர்ந்து கல்வி கற்றுத் தமிழ்ப்பணி புரிவதற்கு அடியேன் செட்டிநாடு வருவேன் என்பதை எவர் கண்டார்? 'மல்லல் பேர்யாற்று நீர்வழிப்படூஉம் புணைபோல், முறை வழிப்படும் ஆருயிர்' (புறம் - 192) என்று செட்டி நாட்டுச் சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் திருவாக்கிற் கொப்ப 1950 சூலை 5ஆம் நாள் காரைக்குடி வந்தேன். இதனால் அடியேனுக்குப் பெரும்புலவர் இராய.சொ. வின் தொடர்பு கிடைத்தது; தொடர்பு நட்பாக மாறியது; நட்பு நாளடைவில் தந்தை - மகன் அன்பாக வளர்ந்தோங்கியது. இப்பெருமகனாரின் நூற்றாண்டு விழாவில் உரையாற்றும் பேறுகிடைத்தது இறைவனது திருக்குறிப்பாகும். இந்தப் பேறு கிடைத்தமைக்கு இறைவனுக்கு வணக்கம். வாய்ப்பை நல்கிய சங்கச் சான்றோர்களுக்கு என் இதயம்கலந்த நன்றி.

'தமிழ்க் கடலைப் பற்றிப் பேசப் புகுவது இப்பூமண்டலத்தை முக்கால் பகுதி சூழ்ந்திருக்கும் நீர்க்கடலைப்பற்றிப் பேசுவதோடொக்கும். இரண்டும் இயலாத செயல்கள். எனினும் முயல்கின்றேன். இப் பெருமகனாரைப் போற்றிப் பேசும் பொழிவை, பெரியோர் கேண்மை, பதிப்பித்த நூல்கள், விளக்க நூல்கள், தொகுப்பு நூல்கள், படைப்பு நூல்கள், ஆய்வு நூல்கள், உரைநடைப் படைப்புகள், திருத்தலப் பயணம் என்று எட்டுப் பகுதிகளாக - வைணவ மந்திரமாகிய எட்டெழுத்து மந்திரம் போல் - அமைத்துக் கொண்டு பேச முற்படுகிறேன். முன்னுரையையும் முடிப்புரையையும் சேர்த்துக் கொண்டால் 'உரைப்பதிகம்' போல் அமையும் என்றும் கொள்ளலாம். தயாரித்த பேச்சு, பெருவடிவம் கொண்டுள்ளதால் 'தவளைப் பாய்த்து'[1] என்று இலக்கண நூலார் குறிப்பிடும் முறையில் பேச நினைக்கிறேன்.

---

1. நன்னூல் - 19 (சூத்திர நிலையைப்பற்றிக் கூறியது).

# நூல்முகம்

எவன்உயிர்க்கு உயிராய் எள்ளும்எண் ணெயும்போல்
 எங்கணும் இடையறா நின்றான்,
எவன்அனைத்து உலகும் ஈன்றுகாத் தழிக்க
 இறைமைசால் மூவுருவு எடுத்தான்,
எவன்முதல் இடையூறு இன்றிஎஞ் ஞான்றும்
 ஈறிலா மறைமுடி இருப்பான்,
அவன்எனைப் புரக்கத் திருக்களா நீழல்
 அமர்ந்தருள் புரிந்தகா ரணனே[1]

*– அதிவீரராம பாண்டியனார்*

இந்நூல் தமிழ்க்கடல் இராய. சொ. எழுதிய எல்லா நூல்களையும் பல தலைப்புகளில் ஆய்ந்து எடுத்துக் கூறிய கருத்துகள் அடங்கியது. அவருடைய நூற்றாண்டு விழாவில் பேசிய கருத்துகள் இவை. தமிழ்க் கடலைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் ஒரே இடத்தில் காணக்கூடிய ஒளிவிளக்கு. இறையருளாலும் தமிழ்க்கடலின் ஆசியாலும் சங்கச் சான்றோர் அடியேனுக்கு வழங்கிய வாய்ப்பாலும் இந்நூல் அடியேனின் பொழிவாக வெளிவருகின்றது. இன்று விழாவில் குழுமியிருக்கும் செட்டிநாட்டுப் பெருங்குடிமக்கள் விரிவாக அறிந்து கொள்வதற்கும் இவ்விழாவில் கலந்து கொள்ள முடியாத ஏனையச் சான்றோர்கட்கும் இராய. சொ. வைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்கும் இந்நூல் துணையாக இருக்கும் என்பது அடியேனின் நம்பிக்கை. இராய.சொ. நூல்களனைத்தையும் சங்க நூலகத்திலிருந்து எடுத்து உதவிய செயலர் திரு. நா. மெய்யப்பனாருக்கு என் இதயங் கலந்த நன்றி. இந்த வாய்ப்பை நல்கிய சங்கத் தலைவர் முதல் நிர்வாகசபை உறுப்பினர்வரை அனைவருக்கும் என் நன்றி கலந்த வணக்கங்கள். அடியேனை இச்சீரிய பணியில் ஈடுபடுத்திய அடியேனின் ஆகூழுக்கும் நன்றி.

---

1. திருக். பதிற். அந். 16. நம்மாழ்வார் பாசுரத்தின் (திருவாய் 1–1:1) கருத்தைத் தழுவியது.

இருக்கினும் நிற்கும் போதும்
இரவுகண் துயிலும் போதும்
பொருக்கென நடக்கும் போதும்
பொருந்திஊண் துய்க்கும் போதும்
முருக்கிதழ் கனிவா யாரை
முயங்கிநெஞ்சு அழியும் போதும்
திருக்களா உடைய நம்பா!
சிந்தைஉன் பால தாமே.[2]

– *அதிவீரராம பாண்டியனார்*

'வேங்கடம்'
AD 13, அண்ணாநகர்,
சென்னை – 600 040.
திசம்பர் – 1998.

அடியேன்
*ந. சுப்புரெட்டியார்*

2. திருக். பதிற். அந்தாதி – 62. களா – தல விருட்சம்.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| | அன்புப் படையல் | 12 |
| | தமிழ்கடலின் ஆழம் | 13 |
| | நூல்முகம் | 16 |
| | முன்னுரை | 18 |
| 1. | பெரியோர் கேண்மை | 21 |
| 2. | பதிப்பித்த நூல்கள் | 37 |
| 3. | விளக்க நூல்கள் | 61 |
| 4. | தொகுப்பு நூல்கள் | 98 |
| 5. | படைப்பு நூல்கள் | 128 |
| 6. | ஆய்வு நூல்கள் | 152 |
| 7. | உரைநடைப் படைப்புகள் | 164 |
| 8. | திருத்தலப் பயணம் | 174 |
| | முடிப்புரை | 182 |
| | பின்னிணைப்பு | 188 |

1

# பெரியோர் கேண்மை

இப்பூவுலகில் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் பெரியோர்களது தொடர்பு மிகவும் இன்றியமையாதது என்பது நம் அநுபவத்தில் காணும் பேருண்மை. அவர்களிடம் பெறும் உதவி சிறியதாக இருக்கலாம்; ஆனால் அவர்தம் ஆசி என்றுமே இருந்து கொண்டிருக்கும். இஃது ஒருபுறம் இருக்க, சிற்றினம் சேராது தவிர்க்கப் பெறுவது நாம் அடையும் பெரிய வாய்ப்பாகவும் அமையும். இதனை நீள நினைந்த வள்ளுவர் பெருமான், 'பெரியாரைத் துணைக் கோடல்' என்ற ஓர் இயலே தமது நூலில் வகுத்துக் கொண்டு பத்துக் குறள்களில் பல்வேறு நோக்கில் பல பட விரித்து ஓதுகின்றார். மூன்று வயதில் தந்தையை இழந்த அடியேனது வாழ்வில் நான் இன்றுவரை பெரியோரை நாடும் பண்பை என்னிடம் ஏற்படுத்தியுள்ளான் இறைவன். சிறுவயது முதல் இன்று வரை (வயது 83) நல்ல நண்பர்களையும் பெற வாய்ப்புகள் தந்துள்ளான்.

1949-என்பதாக நினைவு. துறையூரில் (திருச்சி மாவட்டம்) 24-33 அகவையிலேயே புதிதாகத் தொடங்கப் பெற்ற ஓர் உயர்நிலைப்பள்ளியில் முதல் தலைமையாசிரிய னாகப் பணியாற்றிய காலம். அறிவியலில் ஆழங்கால் பட்டிருந்த அடியேனைத் தமிழன்னை ஆட்கொண்டு ஆசி வழங்கிய காலம். தமிழ் நூல்களைப் பேரார்வத்துடன் கற்று அளவற்ற அறிவுப்பசியுடன் இருந்த காலம். திருச்சி

மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளின் கவனத்தையெல்லாம் ஈர்த்த காலம்.

தமிழ்க்கடல் இராய.சொ. அவர்களின் தொடர்பு கிடைத்தது இறையருள் என்பது என் அதிராத நம்பிக்கை. அச்சமயம் பல பெரியோர்களின் நட்பும் ஒருசேரக் கிடைத்தது. என் இளமைத் துடிப்பும் எல்லையற்ற தமிழ் ஆர்வமும் இப்பெரியார்களின் கவனத்தைக் கவர்ந்தன. அவர்களால் ஈர்க்கப் பெற்றேன். இன்றுவரை இறையருள் தொடர்ந்து இருந்து கொண்டே வருகின்றது. நன்மைகளுடன் தொல்லைகளையும் நிறையத் தந்து கொண்டிருக்கின்றான். "அதுவும் உன் விருப்பன்றோ" என்ற மணிவாசகப் பெருமான் கூறியவாறு எண்ணி இரண்டையும் இன்முகத்துடன் துய்த்துக் கொண்டுள்ளேன்.

> நன்றாங்கால் நல்லவாக்
> காண்பவர் அன்றாங்கால்
> அல்லற் படுவ தெவன்? (குறள் – 379)

என்பது வள்ளுவரின் வாக்கன்றோ?

நெல்லை மாவட்டத்தில் பணியாற்றித் துறையூருக்கு மாற்றலாகி வந்தவர் திரு. கே.எஸ். முத்துவேல் பிள்ளை என்ற பெரியார். தமிழ்ப் புலமை அதிகம் இல்லையெனினும் கேள்வி ஞானம் அதிகம் உள்ளவர். எல்லையற்ற தமிழ் ஆர்வம் உள்ளவர். என்னை 'மாப்பிள்ளை' என்ற முறை கொண்டு அழைப்பவர். இரசிகமணி டி.கே.சியுடன் நெருங்கிய நட்புக் கொண்டவர். அவர் ஒருநாள், "மாப்பிள்ளை, உங்கள் தமிழறிவு குத்து விளக்குபோல் உள்ளது. காரைக்குடிக் கம்பன் திருநாளுக்குப் போய் வாருங்கள்" என்று ஆற்றுப்படுத்தியவர், "இரசிகமணி சென்னையிலிருந்து அந்த விழாவுக்குப் போகின்றார்கள். அவரைத் திருச்சி இருப்பூர்தி நிலையத்தில் சந்திக்கப் போகின்றேன். நீங்களும் வாருங்கள்" என்று என்னை இட்டுச் சென்று அவருடன் சேர்த்து விட்டார். இருவருமாக

உரையாடிக் கொண்டே காரைக்குடி வந்தோம். விழாவில் கலந்து கொண்டோம்.

இராமனை வசிட்டன் விசுவாமித்திரரிடம் சேர்ப்பித்த நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டேன், அது மட்டுமா?

பெய்யு மாரியில் பெருகு வெள்ளம்போல்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய ! நின்மகற்கு அளவில் விஞ்சைவந்து
எய்து காலம் இன்(று) எதிர்ந்ததாம்.[1]

என்ற வசிட்டன் வாக்கும் இன்றளவும் நினைவில் இருந்து கொண்டுள்ளது. காரைக்குடிக் கம்பன் திருநாள் பயணம் கம்பன் அடிப்பொடி, தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், சொ. முருகப்பா, தமிழ்க்கடல் இராய.சொ. ஆகிய பெரியார்களுடன் சேர்த்து வைத்தது. இதுவே அடுத்த ஆண்டு (ஜூலை 5, 1950) புதிதாகத் தொடங்கப் பெற்ற அழகப்பா ஆசிரியர்க் கல்லூரியில் பணியேற்கவும் வாய்ப்பாக அமைந்தது.

"மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொழு திரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது"[2]

என்ற கணியன் பூங்குன்றனார் திருவாய் மொழியினை நினைந்து இன்றளவும் அசை போட்டுக் கொண்டுள்ளேன். எனது நல்லூழை நினைந்து போற்றுகின்றேன்.

1950 ஜூன் 4இல் காரைக்குடி வந்தேன். பிள்ளையார் வழிபாடுபோல் சா.க. அவர்கள் இல்லத்தில் 3 நாட்கள் தங்கினேன். பிறகு 20 நாட்களில் கல்லூரி உணவு விடுதிக்கு மாற்றிக் கொண்டேன். ஒரு வாரத்தில், முதலில் அமராவதி

1. கம்ப. பாலகா. கையடை – 15
2. புறம். 192

புதூரில் தமிழ்க்கடலைச் சந்தித்தேன், டாக்டர் ஜான்சனை முதன் முதலாகப் பாஸ்வெல் சந்தித்தது போல், அற்புதமான அநுபவம். இந்த ஒருநாள் சந்திப்பு அவர் வாழ்நாள் முதல் என் வாழ்நாள் வரை ஆழப்பதிந்து விட்டது.

> ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
> இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.[3]

என்ற அதிவீரராம பாண்டியனின் கூற்றுக்கு இலக்கியமாகியது.

தமிழ்க்கடலை அமராவதிபுதூரில் சந்தித்தேன் இரண்டு ஆப்பிள் பழங்களுடன். உண்மையில் இல்லமேயானாலும் அஃது ஓர் ஆசிரமத்தின் களையுடன் காணப்பெற்றது. ஓராண்டிற்குமுன் அறிமுகமாய் விட்டதனால் இருவரும் ஒருவரையொருவர் நன்றாக இனங்கண்டு கொண்டோம். நான் சென்ற நேரம் முற்பகல் பத்துமணி. நான்கு பக்கமும் நூல்கள் நிறைந்த அலமாரிகள் சூழ இருந்த அறையின் நடுவில் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டு ஏதோ ஒரு நூலில் ஆழங்கால் பட்டிருந்தார். திருநீறும் சந்தனப் பொட்டும் தாங்கிய அகன்ற நெற்றி, புன்முறுவல் பூத்த அன்பொழுகும் திருமுக மண்டலம், தமிழே உருக் கொண்டது போன்ற பொன்னிறத் திருமேனியுடன் காட்சி தந்தார். கையுறையாகக் கொண்டு சென்ற இரண்டு ஆப்பிள்களைத் தந்து வணங்கினேன். நான் ஒரு வாரத்திற்கு முன் அழகப்பா ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரியில் பணியேற்று இருப்பதாகக் கூறினேன். மிகவும் மகிழ்ந்தார். சுமார் அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்தோம். குளிர்பானம் வழங்கினார். பின்னர் விடைபெற்றுத் திரும்பினேன்"[4] விரிவான செய்திகள் இந்த நூலில் அடங்கியுள்ளன. சுருக்கமாகச் சிலவற்றை ஈண்டுக்

3. வெற்றி வேற்கை – 34
4. மலரும் நினைவுகள் – 1989. இந்த நூலில் 'கம்பன் அடிப்பொடி', சொ. முருகப்பா ஆகியவர்பற்றிய நினைவுகளும் அடங்கியுள்ளன.

குறிப்பிட்டு அவர்தம் பெருமையையும் உயர்ந்த பண்பாட்டையும் புலப்படுத்துவேன்.

**நினைவு – 1:** நான் பல்லாண்டுகள் இந்து மதாபிமான சங்கத்து நிர்வாக சபை உறுப்பினர். இதில் அவர் கூட்டம் நடத்தித் தீர்மானங்களைப் பதிவு செய்வதே எங்கும் காண முடியாத சிறப்பு.[5] சரியான நேரத்தில் கூட்டம் தொடங்கும். கூட்டத்திற்கு வேண்டிய குறைந்த அளவு உறுப்பினர் (Quorum) வந்து விட்டவுடன் கூட்டத்தைத் தொடங்கி விடுவார். வந்த உறுப்பினர்கள் கையெழுத்து இட்டவுடன் தீர்மானங்கள் உடனுக்குடன் எண்ணிட்டுப் பதிவு செய்யப் பெறும் நிகழ்ச்சிப் பதிவேட்டில். இரண்டு தீர்மானங்கள் பதிவானவுடன் ஓர் உறுப்பினர் தாமதப்பட்டு வந்தால் அவர் இந்தத் தீர்மானங்களை அடுத்துக் கையெழுத் திடுவார். ஐந்து தீர்மானங்கள் எழுதப் பெற்றவுடன் மற்றோர் உறுப்பினர் வந்தால் அவர் அடுத்துக் கையெழுத்திடுவார். பிறகு யார் தாமதத்துடன் வந்தாலும் இப்படியே கையெழுத்திடுவார்கள். கூட்டம் முடிந்தவுடன் இறுதியாக ஒருவர் வந்தாலும் கையெழுத்திடலாம். அதன் பிறகு தலைவர் கையெழுத்திட்டுப் பதிவேட்டு வேலையை முடித்து விடுவார். இந்த நிகழ்ச்சிப் பதிவேட்டை நோக்கினால் தாமதமாக வந்தவர்கள் யாவர் என்பது தெரியும். அதன் பிறகு சிற்றுண்டி விருந்து நடைபெறும். ஒவ்வோர் உறுப்பினரும் ஒவ்வொரு கூட்டத்திற்கு விருந்தளிக்க வேண்டும். என் போன்ற ஏழ்மை நிலையில்

5. 'வில்லியும் சிவனும்' என்ற நூலுக்குப் பெரியவர் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் வழங்கிய அணிந்துரையின் மூலந்தான் இராய.சொ. காரைக்குடி நகராண்மைத்தலைவர், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் உறுப்பினர், தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர் மாவட்டக் காங்கிரஸ் குழுவின் தலைவர், அனைத்திந்தியக் காங்கிரஸ் உறுப்பினர் பதவிகளில் இருந்ததை அறிந்தேன். காரைக்குடியில் இருந்த காலத்தில் ஒருவரும் இதைத் தெரிவிக்கவில்லை. இந்த அனுபவங்களால்தான் சங்கக்கூட்டத்தை அற்புதமாக நடத்தியதை இப்போது அறிந்து மகிழ்கின்றேன்.

இருப்பவர்கள் உணவு விடுதிப் பொருள்களை வாங்கி விருந்தளிப்பார்கள். செல்வச் செழிப்புள்ள நகரத்தார் உறுப்பினர் இல்லத்திலிருந்தே தயாராகியுள்ள பொருள் களை மகிழ்வுந்தில் சமையல்காரப்பையன் கொண்டு வருவான். அன்று விருந்து பலமாக இருக்கும்.

நினைவு – 2: தமிழ்க்கடல் வாழ்வில் சொ.முரு. மகளிர் இல்லத்தில் இரண்டாண்டுகள் (சனி, ஞாயிறு நாட்களில்) நடைபெற்ற கம்பராமாயண ஆராய்ச்சி மிக முக்கியமானது. இது சொ.முரு. அவர்களது திட்டம். கம்பராமாயணத்தில் நல்ல பாடல்களைத் தேர்ந்தெடுத்து வெளியிடல் வேண்டும் என்பது சொ. முரு. அவர்களது எல்லையற்ற ஆர்வம். இதில் கலந்து கொண்டவர்கள் அடியேன், அழகப்பா கல்லூரி, க. தேசிகன், முனிசிபல் மேல்நிலைப்பள்ளி, தமிழாசிரியர் பூ. அமிர்தலிங்கன் ஆகியோர்.[6] இராய.சொ.தான் கூட்டத்தின் தலைவர். க. தேசிகன் இசையேற்றிப் பாடல்களை அற்புதமாகப் படிப்பார். கூடியிருப்போரில் கவிதையின் குறை நிறைகளைக் கூறுவார்கள். சொ. முரு. நுணுக்கமாகப் பேசுவார்; 'செருகுகவி'யைக் காரணங்களுடன் இனம் காட்டுவார்; நாடி பிடித்துக் காட்டும் மருத்துவர்போல். குழு இதனை ஆராயும். இராய.சொ. முடிவு சொன்னவுடன் பாடல் நீக்கப்படும். அல்லது வைத்துக் கொள்ளப்படும். இராமாயணம் முழுவதையும் இப்படி ஆராய்ந்தோம். இத்தகைய அநுபவத்தை என் வாழ்க்கைப் பகுதிகளில் என்றுமே பெற்றதில்லை.

செருகுகவிகளாகத் தாம் கருதுவனவற்றைச் சொ. முரு. அவர்கள் நீக்கிய முறையைப் பன்னி உரைக்கில் பாரதமாம். ஒரு பாடலை எடுத்துக் காட்டி அஃது இராய.சொ. ஒப்புதலுடன் நீக்கப் பெற்றதைக் குறிப்பிடுவேன்.

6. சனிக்கிழமை சிற்றுண்டிக்குப் பிறகு மகளிர் இல்லம் செல்வோம். ஞாயிறு மாலை 6 மணிக்குத் திரும்புவோம்.

வேசியர் உடுத்த கூறை
    வேதியர் சுற்ற, வெற்றிப்
பாசிழை மகளிர், அன்னார்
    ஆடையைப் பறிந்துச் சுற்ற,
வாசமென் கலவைச் சாந்துஎன்று
    இனையன மயக்கம் தன்னில்
பூசினர்க்கு இரட்டி ஆனார்
    பூசலார் புகுந்து ளோரும் (திருமுடி – 13)

*இராமன் காட்டிலிருந்து அயோத்தி நகர் வந்து முடிசூடுகின்ற எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம்; விலை மாதர்களின் இல்லங்களில் பார்ப்பனர் எல்லாரும் குவிந்து நிர்வாணமாகக் கிடக்கின்றார்கள். இராமனுக்குப் பட்டம் என்ற செய்தி இவர்கள் காதுக்கு எட்டுகின்றது. மகிழ்ச்சி மண்டைக்குக் கொண்டுபோய் விடுகின்றது. உடனே வெளியில் புறப்படுகின்றார்கள். அவர்களும் விலைமாதர்களும் தத்தம் கைக்கு அகப்பட்ட ஆடைகளை எடுத்துச் சுற்றிக் கொண்டு ஓடுகின்றனர். அந்தக் காட்சியை வருணிப்பது இப்பாடல்.*

*விலைமாதர் உடுத்திக் கொண்டிருந்த சேலையை பார்ப்பனர்களும், பார்ப்பனர்கள் உடுத்திக் கொண்டிருந்த வேட்டியை (9 முழம்) விலைமாதர்களும் உடுத்திக் கொண்டு தெருவிற்கு வந்து விடுகின்றனர்! இராமனைக் காண்பதிலுள்ள ஆர்வமும் விரைவும் இப்படி ஒரு மாறாட்டத்தை ஏற்படுத்தி விடுகின்றது! "வேசியர்கள் மடிசார் மாமிகளாக 9முழம் புடவையை உடுத்திக் கொண்டு "பக்தைகள்" போல் 9முழம் வேட்டியை உடுத்திக் கொண்டு பக்தர்கள் போல் - ஆஷாடபூதிகள் போல - தோற்றம் அளிக்கும் பார்ப்பனர்களைக் கவர்ந்தார்கள் போலும்! இருட்டில் இனம் தெரியாமல் மாற்றுடைகளை உடுத்திக்கொண்டு, "மாற்றுடைப் போட்டிகளில் கலந்து கொள்ள அரங்கத்திற்கு வரும் பள்ளி மாணவர்களைப் போல், பார்ப்பனர்களும், பார்ப்பனிபோல் நடிக்கும்*

வேசியர்களும் தெருவிற்கு வந்து விடுகின்றார்கள் போலும். யாரோ பார்ப்பனரை வெறுக்கும் 'திராவிடக் கழகத்தை'ச் (அப்போது திராவிடக் கழகம் இல்லை) சேர்ந்த புலவர் ஒருவர் செருகின கவி இது" என்று நான் கூறினேன். தொடர்ந்து "விறலிவிடு தூதில்" வரும் பார்ப்பனரைப் படைத்துக்காட்டும் (அதிகாலையில் மடிசஞ்சியுடன் படுக்கை அறையிலிருந்து) வெளிவரும் பார்ப்பனருக்கும் தாய்க் கிழவிக்கும் ஓசையின்றி நேரிடும் கைகலப்பை நினைக்கவும்) புலவரைவிட, இச்செருகு கவியைப் புனைந்த புலவர் எமகாதகர்" என்று கூறினபோது இராய.சொ.வும், சொ.முரு.வும் விழுந்து விழுந்து சிரித்ததை இப்போது நினைவு கூர்கின்றேன்.

(கவிக்கு வருவோம்). இது மட்டுமா? எதிர் கொள்வதிலுள்ள விருப்பமேலீட்டால் வாசக் கலவைச் சாந்துகளைப் பூசிக் கொள்ளாமலேயே வந்தவரும், வாசக் கலவைகளைப் பூசியவரோடு நெருக்கி உரசுதலால் பூசியவர்களின் வாசக் கலவைச் சாந்து தம்மீது இழுசிக் கொள்ள, வாசக் கலவைச் சாந்துகளைப் பூசி வந்தவரினும் இருமடங்கு வாசக் கலவைச் சாந்தை உடையவர்களானார்கள். இந்தப் பாடலும் 'கல்வியிற் பெரிய கம்பர்' வாக்குதான் என்று யார் ஒப்புக் கொள்வார்கள்? ஒப்புக் கொண்டுதான் இத்தனைக் காலம் ஏட்டில் இடம் கொண்டிருந்தது. இப்போது இராய.சொ. ஒப்புதலுடன் களைந்தெறியப்பட்டது!

**நினைவு–3:** மகளிர் இல்லத்தில் கம்பராமாயண ஆராய்ச்சி நிறைவு பெற்றதும் இந்து மதாபிமான சங்கத்தில் 'வில்லிபாரதம்' படிக்கலாம் என முடிவாயிற்று. இது சனிக்கிழமை தோறும் மாலை மூன்று மணிக்குத் தொடங்கி ஆறு மணிக்கு முடிவு பெறும். இரண்டாண்டுக்குமேல் வில்லி பாரதம் தொடர்ந்து நிறைவு பெற்றது. **திருநாவுக்கரசு செட்டியார்** பாடலை இசையுடன் படிக்க, **தமிழ்க் கடல்** அவர்கள் விளக்கம் சொல்வார்கள். சொல்வதற்கரிய

இலக்கிய அநுபவங்கள்! எதைச் சொல்வது? எதை விடுவது? எனக்கு இந்த அநுபவம் பெறற்கரிய பேறாக அமைந்தது. எல்லா நிகழ்ச்சிகளையும் விட ஒன்று மட்டிலும் மிகப் பசுமையாக உள்ளது. கன்னனுக்குக் கண்ணன் தந்த காட்சிதான் அது. நடைபெற்றது போர்க் களத்தில்.

நீலநெடுங் கிரியுமழை முகிலும் பவ்வ
நெடுநீரும் காயாவும் நிகர்க்கும் இந்தக்
கோலமும்,வெங் கதைவாளும், சங்கு நேமி
கோதண்டம் எனும்படையும் குழையும் காதும்
மாலைநறுந் துழாய்மார்பும் திரண்ட தோளும்
மணிக்க முத்தும் செவ்விதழும் வாரிசாதம்
காலைமலர் எனமலர்ந்த முகமும், சோதிக்
கதிர்முடியும் இம்மையிலே கண்ணுற்றேனே.[7]

திருநாவுக்கரசு செட்டியார் இப்பாடலைப் படிக்கும் போதே குரல் தழுதழுத்து உருகி விடுகின்றார். கூடியிருந்தோர் திருமால் கஜேந்திராழ்வானுக்குத் தந்த காட்சியையே கண்டு மனம் புளகாங்கிதம் அடைகின்றனர். தமிழ்க்கடலின் விளக்கம் இந்த அநுபவத்திற்கு முத்தாய்ப்பு வைத்து விடுகின்றது. மீண்டும் இந்தப் பாடலைத் திருநாவுக்கரசு செட்டியார் இசையேற்றிப் படிக்கும்போது கூடியிருந்தோரின் பக்தியநுபவம் கொடுமுடிக்குச் சென்று விடுகின்றது.

**நினைவு – 4:** இந்துமதாபிமான சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமையும் வில்லிபாரத வகுப்பு சனிக்கிழமையுமாக நடைபெறும்போது சங்கக் கட்டடம் கலகலத்துப் போகும். வெளியூர் நிர்வாக சபை உறுப்பினர்களும் வந்து சேர்வார்கள். இப்படி வருபவர்கள் திரு. கா. காடப்ப செட்டியார் (ஆத்தங்குடி), திரு. முத்த. வெ. சொக்கலிங்கம் செட்டியார் (காரைக்குடி-

7. பதினேழாம் போர் – 247.

கும்பகோணம்), மற்றொருவர் சொக்கலிங்கம் செட்டியார் (காரைக்குடி-புதுக்கோட்டை) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். ஒரு சமயம் மாலை நேரத்தில் இராய.சொ. நாற்காலியிலும், முத்த. வெ. சொவும் புதுக்கோட்டை சொவும் அவருக்கு எதிராகப் பக்கவாட்டில் போடப் பெற்றிருந்த பெஞ்சுகளிலும் அமர்ந்திருந்தனர். மூவரும் சிவபூசை எடுத்தவர்கள். இவர்களுள் கும்பகோணம் முத்த.வெ.சொ., இராய.சொவைப் போலவே செம்மேனியுடன் திகழ்வார். புதுக்கோட்டை சொ. மாநிற மேனியுடையவர். இருவருமே சத்துவ குணம் படைத்த சாதுக்கள். மூன்று சொ.களும் மாலை நியம நிட்டைகளை முடித்துக்கொண்டு நெற்றியிலும் திருமேனியிலும் வெண்ணீற்றுப் பட்டை தீட்டிய நிலையில் அமர்ந்திருந் தனர். வேறு சில அன்பர்களும் அருகில் இருந்து உரையாடிக் கொண்டிருந்தனர். இராய.சொ. புதுக் கோட்டை சொ.வைப் பார்த்து, "நம்முடைய புதுக் கோட்டை சொ. முனியாண்டி விலாஸ் சோற்றுப் பானைக்குப் பட்டை தீட்டியது போல் அமர்ந்திருக் கிறார்கள்' என்று நகைச்சுவையை உதிர்த்தார். புதுக் கோட்டையார் உட்பட அனைவருமே நகைத்து மகிழ்ந்தனர். இப்படிப் பல சந்தர்ப்பங்களில் நண்பர்கள் மகிழ்வதற்காகவே நகைச்சுவையை உதிர்ப்பார்கள் இராய.சொ.[8]

நினைவு – 5: *1958* அக்டோபரில் இராய.சொ.வின் மணி விழா. இந்துமதாபிமான சங்கத்தின் ஆதரவில் விழாவை நடத்துவதென்றும், அப்போது அவருக்குத் 'தமிழ்க்கடல்' என்ற விருதை வழங்குவதென்றும் தீர்மானம் ஆயிற்று.

8. இன்னும் ஏராளமான குறிப்புகள் உள்ளன. அவற்றையெல்லாம் விரித்தோத நேரம் இல்லை. என்னுடைய 'மலரும் நினைவுகள்" (1989) என்ற நூலிலும், "நீங்காத நினைவுகள்" (1998) என்ற நூலிலும் பதிவு செய்துள்ளேன். அவை சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கப் பெற்றுள்ளன. அவற்றில் அறிந்துகொள்ள வேண்டுகின்னேன்.

ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றன. அப்போது அவர் உடல் நிலையும் சற்றுக் குன்றியிருந்தது. 'இதயக்கோளாறு' என்பது மருத்துவச் சோதனையால் உறுதிப்பட்டது. மருந்து மாத்திரைகள் கவனமாக உட்கொள்ளச் செய்து கவனமாகப் பார்த்துக் கொண்டோம். இவருடைய நெருங்கிய நண்பர் (சிறைச்சாலைத் தோழர்) பல் மருத்துவர் திரு வர்க்கீஸ் என்பார் "நீங்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ விரும்பினால் என் சொல்லைக் கேட்க வேண்டும். மணிவிழா முடியட்டும். உங்கள் பற்கள் முழுவதையும் பிடுங்கி எறிய வேண்டும். பிறகு பற்சீழ் நோய்க்கு (Pyorrhoca) ஊசி போட்டுக் கொள்ளவேண்டும். நான் அழகாகப் பல் கட்டித் தருவேன். அதைப் போட்டுக் கொண்டு நான் சொல்லும் உணவு வகைகளை மட்டிலும் தான் உட்கொள்ள வேண்டும். எண்ணெயாலான பொருள்களை அறவே விலக்க வேண்டும். இதய நோய்க்குத் தொடர்ந்து மாத்திரைகள் விழுங்க வேண்டும்" என்று அறிவுரை கூறினார். இராய.சொ.வும் அவர் அறவுரையைக் கடைப்பிடித்தார். அதனால் மேலும் பதினாறு ஆண்டுகள் (மார்க்கண்டேயர் ஆண்டுகள்) உயிர் வாழ்ந்திருந்தார். இக்காலத்தில் தமிழகத்தின் திசைகள்தோறும் சென்றும், திரைகடலைக் கடந்தும் தம் சொற்பொழிவுகளால் சைவத்தையும் தமிழையும் பரப்பி ஒல்காப் பெரும்புகழ் பெற்றார். இக்காலத்தில் இவர் பெற்ற விருதுகள் 'சிவமணி' 'சிவம் பெருக்கும் சீலர்' என்பன.

ஒருநாள் சங்கத்தில் இராய.சொ. என்னிடம் "'தமிழ்க்கடல்' என்ற விருது தமிழகத்தில் எனக்குத்தான் முதன் முதலாக வழங்கப் பெறப் போகிறது என்று கருதுகின்றேன்" என்றார். நான் அப்போது "அஃது பெரும் பாலும் உங்கட்கு இரண்டாவதாக இருக்கும்" என்றேன். 'எப்படி?' என்றார். சங்கத்தில் கட்டமைத்து வைக்கப் பெற்றிருந்த 'ஞானசாகரம்' (பின்னர் 'அறிவுக்கடல்' என்று மாற்றப்பெற்றது) என்ற ஒரு தொகுதியிலிருந்து மறைமலை

யடிகள் இந்த விருது பெற்ற செய்தியை எடுத்துக் காட்டினேன். வியந்து போனார். "நீங்கள் பெரிய ஆய்வாளராகத் திகழ்வீர்கள்; திகழ வேண்டும்" என்று வாழ்த்தினார். இப்பெரியாரின் வாழ்த்தின் 'கனம்' என்னை ஆய்வுப் பணியில் இன்று வரை ஈடுபடுத்தி வருகின்றது என்பது என் அதிராத நம்பிக்கை.

**நினைவு – 6:** *1960* ஆகஸ்டு முதல் நாள் காரைக்குடிப் பணியைத் துறந்து 'பைந்தமிழ்ப் பின்சென்ற பசுங்கொண்டலாகிய' ஏழுமலையான் எழுந்தருளியிருக்கும் திருப்பதிப் பலள்கலைக் கழகத்தில் பணியேற்றேன். குடும்பம் (*1966* மே வரை) காரைக்குடியில்தான் இருந்து வந்தது. இதனால் விடுமுறை நாட்களில் காரைக்குடியில்தான் இருந்தேன். இக்காலத்தில் இராய.சொ. துணைவியார் திருநாடு அலங்கரித்து விட்டார்கள். இதனால் சமையல்காரனை அமர்த்திக் கொண்டு இந்து மதாபிமான சங்கத்தின் மாடியில் (இராய.சொ. உமையாள் மண்டபத்தில்) குடியிருந்தார். இக்காலத்தில் இரண்டு மூன்று ஆண்டுகள் காரைக்குடிப் பெருமாள் கோயிலுக்கு அறங்காவலர் பொறுப்பிலிருந்தார். இந்தக் காலப்பகுதியில் இத்திருக் கோயிலின் திருப்பணியை மேற்கொண்டு நிறைவு செய்தார். 'வைகுண்ட வாசலை' இயங்கச் செய்தார். மகர் நோன்பு விழாவில் நான்கு கோயில் சாமிகளின் புறப்பாட்டை மிகச் சிறப்புடன் குதிரை வாகனங்களில் எழுந்தருளச் செய்து காந்தி சதுக்கத்தில் சிறப்பாக அம்பு போடும் விழாக்களை அற்புதமாக நடைபெறச் செய்தார்.

இக்காலத்தில்தான் நான் ஏற்கெனவே எழுதிப் பல இதழ்களில் வெளியான ஒன்பது கட்டுரைகளை 'அறிவுக்கு விருந்து' என்ற தலைப்பில் தொகுத்த (செப்டம்பர் - *1963*) நூலொன்றை வெளியிட்டேன். இதனை நான் இராய.சொ. விடம் கொண்டிருந்த மதிப்புக்கும் மரியாதைக்கும் அறிகுறியாக,

பக்குவமெய்ஞ் ஞானியென உலகம் போற்றும்
 பாரதியைக் கண்டுமகிழ் பேறு பெற்றோன்;
மிக்கநறுங் கலைத்தமிழ்நூல் ஒன்று கூடி
 வெண்ணீறு புனைந்ததென விளங்கும் சான்றோன்;
தக்கதிரு வாசகத்தை மூன்று போதும்
 தலைதாழ்த்திப் பணிந்திடுவோன்; எங்கள் ராய
சொக்கலிங்கம் எனப்பெயர்கொள் தமிழ்க்க டற்குச்
 சொல்விருந்தாம் இச்சிறுநூல் உரிமை யாகும்.

என்ற பாடல் மூலம் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். இதற்கு முன்னர் வெளிவந்த 'கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி' (மார்ச் – 1957) என்னும் நூலுக்குத் 'தமிழ்க்கடல்' 'அறிமுகம்' என்ற தலைப்பில் 'அணிந்துரை' ஒன்று வழங்கி ஆசி கூறியுள்ளார். அது கம்பன் அடிப்பொடிக்கு அன்புப் படையலாக்கப் பெற்றுள்ளது.

இக்காலத்தில் இராய.சொ. இரண்டாண்டுக் காலம் (1962–64) காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ் ஆராய்ச்சித் துறைப் பேராசிரியராகப் பணி புரிந்தார். வள்ளல் அழகப்பரின் கனவை அறக்கட்டளை நிறுவனத்தின் செயலராக இருந்த திரு க.வெ.சித.. வெ. வேங்கடாசலம் செட்டியார் நனவாக்கினார். இந்த இரண்டாண்டுக் காலம் கல்லூரி வளாகத்தில் ஆசிரியர் குடியிருப்பிலுள்ள இல்லம் ஒன்றில் வாழ்ந்தார். நான் காரைக்குடி வந்திருந்தபோது, இப்பெரும் புலவரை இந்த இல்லத்தில் சந்தித்து, அளவளாவினதாக நினைவு.

**நினைவு – 7:** தமிழ்ப் பேராசிரியராக இருந்தபோதோ அதற்குச் சற்றுப் பின்னரோ அறக்கட்டளை நிறுவனத்தின் செயலராக இருந்த வேங்கடாசலம் செட்டியாருடன் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டு சைவ வைணவ வேறுபாடின்றி எல்லாத் திருக்கோவில்களையும் சேவித்தார். இக்காலத்தில் நான் குடும்பத்தைத் திருப்பதிக்குக் கொண்டு போய் விட்டேன். அப்போது என் பிஎச்.டி. ஆய்வுக்கு நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தை ஆய்வுப் பொருளாகக்

கொண்டு ஆய்ந்து கொண்டிருந்த காலம். 1965 முதல் 1970 வரை வைணவத் திருப்பதிகள் 108யும் சேவித்துக் கொண்டிருந்தேன். என் அருமை நண்பர் K. சீனிவாச வரதனைத் துணையாகக் கொண்டு காஞ்சியிலுள்ள திவ்விய தேசங்களைச் சேவித்து வந்தபோது (சனவரி 1966) திருத்தலப் பயணத்தை மேற்கொண்டிருந்த இராய.சொ. குழுவினரைக் காஞ்சி **'அட்டபுய கரம்'** என்ற திருக்கோவிலில் சந்தித்தேன். இக்காலத்தில் இத்திருக் கோயிலில் **'பகல்பத்து–இராப்பத்து'** உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பொருளில் அதிக நாட்டம் கொண்டிருந்த திரு வேங்கடாசலம் செட்டியாரை இத்திருத்தலப் பயணத்தின் மூலம் இறையருளில் - பரம் பொருளில் - நாட்டங் கொள்ளச் செய்தது இராய.சொ.வின் பெரிய சாதனை. பின்னர் இராய.சொ. தம் பயண அநுபவங்களை நூல் வடிவமாகச் செய்ததையும் அறிந்தேன். இதுகாறும் அந்த நூல் என் கண்ணுக்கு அகப்படவில்லை. இப்போது கிடைத்தமையால் உங்கள் முன் பேசும் வாய்ப்பைப் பெறுகின்றேன்.

# 2

## பதிப்பித்த நூல்கள்

நூல்களைப் பதிப்பித்தல் எளிய செயல் அன்று. அதுவும் ஓலைச் சுவடிகளில் உள்ளவற்றை அச்சிற்குக் கொண்டு வருதல் என்பது ஓர் இமாலயப் பெருஞ்செயல்; அசுவமேத வேள்வி செய்தலை ஒத்தது. இதில் முயன்று வெற்றி கண்டவர் மகாமகோபாத்தியாயர் உ.வே. சாமிநாத அய்யர். அவருக்கு 'மகாமகோபாத்தியாயர்' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்ததை நினைத்து சிறப்பித்துப் பாடிப் போற்றுகின்றார் - மூன்று பாடல்களில் பாரதியார்.

செம்பரிதி ஒளிபெற்றான்; பைந்நறவு
  சுவைபெற்றுத் திகழ்ந்தது; ஆங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனர்என்று
  எவர்கொல்இங்கு உவத்தல் செய்வார்?
கும்பமுனி எனத்தோன்றும் சாமிநா
  தப்புலவன் குறைவில் கீர்த்தி
பம்பலுறப் பெற்றனரேல், இதற்கென்சொல்
  பேருவகை படைக்கின்றீரே. (1)

அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி அறியாதார்
  இன்றெம்மை ஆள்வோ ரேனும்
பன்னியசீர் மகாமகோ பாத்தியா
  யப்பதவி பரிவின் ஈந்து
பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா
  தன்றனக்குப் புகழ்செய் வாரேல்

முன்னிவனப் பாண்டியர்நாள் இருந்திருப்பின்
இவன்பெருமை மொழிய லாமோ ? (2)

'நிதியறியோம் இவ்வுலகத் தொருகோடி
இன்பவகை நித்தம் துய்க்கும்
கதியறியோம்' என்றுமனம் வருந்தற்க;
குடந்தைநகர்க் கலைஞா கோவே !
பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெல்லாம் பயில்வோர் வாயில்
துதியறிவாய், அவர்நெஞ்சில் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே. (3)

அற்புதமான பாராட்டுக் கவிதைகள் இவை.

நம் இராய.சொ.வும் அவருக்குக் கிடைத்த வாய்ப்பில் அச்சு வடிவங்களில் இருந்த நான்கு நூல்களை - 'பிழை மலிந்த சருக்கமாக' இருந்தவற்றைப் - பிழையின்றி வெளியிட்ட பெருமையைப் பெறுகின்றார். இதற்குச் சைவ உலகமும் வைணவ உலகமும் மிகவும் கடமைப்பட்டுள்ளது. இந்நூல்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய முற்படுகின்றேன்.

**1. வருண குலாதித்தன் மடல்**[1]: 'மடல்' என்பது *96* பிரபந்த வகைகளுள் ஒன்று. பழம் பெரும் கடல்துறைப் பட்டினமான திருநாகையில் வாழ்ந்த காத்தான் என்ற வருண குலாதித்தனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்ற நூல். இந்நூல் *470* கண்ணிகளைக் கொண்ட கலிவெண்பாவால் ஆக்கப் பெற்றுள்ளது. அருமையான நூல். நூல் முழுதும் கற்பனை மயம். நயமான உயர்ந்த சொற்களும் வருணனைகளும் கருத்துகளும் எங்கும் பரவி வைரமணிகள் போல் மின்னும் ஓர் அற்புதப் பெட்டகம். ஆனால் இத்தகைய சிறந்த நூலை ஆக்கினவரின் பெயர் அறியக்கூடவில்லை. பழைய பதிப்புகள் அனைத்தும் பிழை மயமாகக் காணப்

1. ஆசிரியர் வெளியீடு.

பெறுகின்றன. இந்நூலுக்குத் திருந்திய பதிப்பு இதுகாறும் இல்லை. இக்குறைகளை நீக்கிப் பதிப்பித்துள்ளார் தமிழ்க்கடல் இராய.சொ. அவர்கள்.

**மடல் – விளக்கம்:** மடலேறுதல், மடலூருதல் என்பன அகப்பொருள் துறைகளுள் ஒன்று. காமம் காழ்க்கொள்ளும் காலத்தில் ஆடவன் தன் மார்பில் எலும்பு மாலையையும் தலையில் எருக்கம் பூ மாலையையும் சூடிக்கொண்டு பனங் கருக்காற் செய்யப்பெற்ற குதிரைமேல் ஏறித் தெருவில் வலம் வருவது 'மடலேறுதல்' அல்லது 'மடலூருதல்' ஆகும். தான் காதலிக்கும் மங்கையின் படத்தைக் கையில் வைத்துக் கொண்டிருப்பான். ஆடவன் மகளிரைக் குறித்து மடலேறலேயன்றிப் பெண் ஆடவனைக் குறித்து மடலூரல் ஆகாது என்று தமிழ் நெறியில் விதிக்கப் பெற்ற ஒரு வரம்பாகும்.[2]

> எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
> பொற்புடை நெறிமை இன்மை யான[3]

என்பது தொல்காப்பியம். பன்னிரு பாட்டியலும் இதனை வழிமொழிகின்றது இரண்டு சூத்திரங்களால்[4]. இம் முறையில் ஆடவன் தான் காதலிக்கும் மங்கையை அடைதல் இறுதியான வழி. பெரியோர்கள் தலையிட்டுப் பெற்றோர்களை இணங்கச் செய்து திருமணத்தை முடித்து வைப்பர்.

மடலூர்தல்பற்றி வள்ளுவப் பெருந்தகையும் ஆறு குறள்களில் குறிப்பிட்டுள்ளார்.[5] இப்பெருமகனாரும் மடலூருஞ் செயல் ஆண்களுக்கேயன்றிப் பெண்களுக்கு உரியதன்று என்று மொழிந்துள்ளார்.

2. பன்னிரு பாட்டியல் – 146, 147
3. தொல்.பொருள். அகத்திணை – 38 (இளம்)
4. பன்னிரு – பாட்டியல் – 146, 147
5. திருக்குறள் – காமத்துப்பால் – நாணுத்துறவு உரைத்தல்.

**காமம் உழந்து வருந்தினார்க்கு ஏவம்**
**மடலில்லாது இல்லை வலி. (1)**

என்று கூறிய பெருமான்

**கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்**
**பெண்ணின் பெருந்தக்கது இல். (7)**

என்று வரம்பும் கட்டுகின்றார். காமத்தால் தாக்கப்பெற்று அலைவார்க்குப் பாதுகாப்பாவது மடலைத் தவிர வேறில்லை என்பது முதல் குறள் கருத்து. ஆனால் கடல் போன்ற பெருங்காம வயப்பட்டாலும் மடல் ஏற மாட்டாத பெண் இனத்தை விடப் பெருந்தகுதி வாய்ந்த பிறப்பு எதுவுமே இல்லை என்பது இரண்டாவது குறளின் கருத்து. இதனால் என்னதான் நேர்ந்தாலும் ஆணைப்போல் மானத்தை விற்கப் பெண் துணிய மாட்டாள் என்பது வள்ளுவரின் கருத்தாகின்றது.

"திருமங்கையாழ்வார் என்னும் பரமபக்தர் இம்முறையில் வழுவியிருக்கின்றார்" என்ற தமிழ்க்கடலின் கருத்து ஒப்புக் கொள்ளுமாறு இல்லை. இதனை விளக்குவது இன்றியமையாததாகின்றது. பன்னிரு பாட்டியலின்,

**மடன்மாப் பெண்டிர் ஏறார் ஏறுவர்**
**கடவுளர் தலைவ ராய்வருங் காலே[6]**

என்ற சூத்திரம். "மகளிர், காதல் தம்மை மிகுதியும் கவற்றிய காலத்தும் மடலேறார். கடவுளர் தலைவராய் வருங் காலத்து மடலேறுவர்" என்பதால் மகளிர் மடலேறுவர் என்று வகை செய்கின்றது. இதனால் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த திருமடலும் பெரிய திருமடலும் இங்கு கூறிய சூத்திரத்திற்கு இலக்கியங்களாக அமைகின்றன.

விளக்கம்: திருமங்கையாழ்வார் பிராட்டி தசயை ஏறிட்டுக் கொண்டு - பரகால நாயகியான பின்னர்

6. பன்னிரு – பாட்டியல் – 147.

மடலூர எண்ணுகின்றார். இவர்தம் இரு மடல்களிலும் ஆழ்வார் நாயகி மடலூரத் துணிவதாகக் கூறப்பெறுகின்றது. இரண்டு மடல்களிலும் ஆழ்வார் நாயகி "மடலூர்வன், மடலூர்வன்' என்று சொல்லி அச்சமுறுத்துகின்றாரேயன்றி அச்செயலை முற்ற முடிய நடத்தினதாகக் கூறவில்லை. சிறிய திருமடலில்,

ஓர்ஆனைக் கொம்பொசித்து
ஓர்ஆனை கோள்விடுத்து
சீரானை, செங்கண்
நெடியானைத் தேன்துழாய்த்
தாரானைத் தாமரைபோல்
கண்ணானை எண்ணருஞ்சேர்
பேரா யிரமும்
பிதற்றிப் பெருந்தெருவே
ஊரார் இகழினும்
ஊராது ஒழியேன்நான்
வாரார்பூம் பெண்ணை
மடல்.[7]

என்று கூறுவார். பெரிய திருமடலிலும்,

உலகறிய ஊர்வேன்நான்
முன்னி முளைத்தெழுந்து
ஓங்கி—ஒளிபடந்த
மன்னியபூம் பெண்ணை
மடல்.[8]

என்று உரைப்பர். இந்த இரண்டிலும் ஊரினதாகச் சான்றுகள் இல்லை. நம்மாழ்வார் பராங்குச நாயகி நிலையில் இம்மடலேறுதலைக் குறிப்பிடும்போது,

தோழி! உலகு
தோறலர் தூற்றிஆம்

7. சிறிய திருமடல்
8. பெரிய திருமடல்

கோணைகள் செய்து குதிரி
யாம்மட லூர்துமே[9]

(கோணை - மினுக்கு. குதிரி - அடங்காத பெண்.)

என்றும்,

யாம்மடல் ஊர்ந்தும் எம்ஆழி
அங்கைப் பிரானுடை
தூமடல் தண்ணந் துழாய்மலர்
கொண்டு சூடுவோம்
ஆம்மடல் இன்றி தெருவு
தோறயல் தையலார்
நாம்அடங் காப்பழி தூற்றி
நாடும் இரைக்கவே.[10]

என்றும் கூறுவது ஈண்டு ஒப்பு நோக்கி அறியத்தக்கது. எனவே, ஆழ்வார் தமிழ் இலக்கண நெறியை அறியாது கூறினார் என்று சொல்வதற்கில்லை. ஆகவே, அவர்கள் கூற்றினைப் புரட்சிப்போக்கு என்று சொல்லுவதும் ஒவ்வாது.

திருமங்கை ஆழ்வார்தாமும் தாம் தமிழ் நெறியினை அறிந்திருப்பதாகவும், வடநெறியினைப் பின்பற்றியே இத்துணிவினை மேற்கொண்டதாகவும் கூறுவர்.

மான்நோக்கின்
'அன்ன நடையார்
அலரேச ஆடவர்மேல்
மன்னும் மடலூரார்'
என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவ
துண்டு அதனை யாம்தெளியோம்

9. திருவாய் 5.3:9
10. மேலது 5.3:10

மன்னும் வடநெறியே
வேண்டினோம்.[11]

என்ற பெரிய திருமடல் பகுதியால் அறியலாம். ஆகவே தமிழ்க் கடலின் கருத்து பொருந்துமாறில்லை என்பது காட்டப்பெற்றது.

'வருணகுலாதித்தன் மடல்' என்ற இந்நூலில் வருண குலாதித்தனுக்குத் தான் காதலித்த நங்கையைப் பெறுவதற்கு மடலேறும் வழி தோன்றுகின்றது. இந்த வழியைச் சொன்ன வள்ளுவரை வாயார வாழ்த்து கின்றான். மடற்கோலம் பூண்டு அவள் திருவுரு எழுதி எடுத்து நாகையர் கோன் திருமுன்னர் அவன் தென்நாகைப் பதியின் திருவீதியில் பனைக்குதிரை மடலேறத் துணிந்தேவிட்டான்.

பொதுவாகத் தமிழ் இலக்கியங்களில் மடலூர்வதாகச் சொல்லப்பெறுகின்றதேயொழிய ஊர்ந்து அதன் முடிவு கண்டதாகச் சொல்லப் பெறவில்லை. அதற்கு இலக்கியமும் இல்லை.

**2. சோண சைல மாலை:**[12] சோண சைலம் என்பது தேயுத்தலம் ஆகிய திருவண்ணாமலைக்குரிய பெயர்களுள் ஒன்று. சோணம் - சிவப்பு; சைலம் - மலை. 'சோண சைல மலை' என்பது திருவண்ணாமலை என்னும் சிறந்த சிவத் தலத்தைப்பற்றிய துதி நூல்களாகிய பிரபந்தங்கள் பலவற்றுள் ஒன்று. இது 100 எழுசீர் விருத்தங்களாலாகிய திருப்பாடல்களைக் கொண்டது. துறை மங்கலம் (பெரம்பலூருக்கு அருகில் உள்ளது) சிவப்பிரகாச சுவாமிகள் என்னும் வீரசைவப் பெருஞ்சான்றோர் இந்நூலை இயற்றியருளினார். இந்நூல் எளிய இனிய தெளிவான தீந்தமிழ் நடையில் சொற்சுவை, பொருட்சுவை, கற்பனை நலங்கள் நிறைந்து திகழ்வதாகும்.

11. பெரிய திருமடல்
12. வெளியீடு: அருணாபேசுவரர் கோயில், திருவண்ணாமலை

இந்த நூலின் சிறப்பைப் பெரிதும் போற்றி, முன்னாளில் தமிழ் பயிலுதலைத் தொடங்கும் மாணாக்கர் கட்கு ஆசிரியர்கள் தாம் முதன் முதலாகக் கற்பிக்கும் நூல்களுள் ஒன்றாகக் கருதியிருந்தனர். ஆறுமுக நாவலர், ஞானியார் அடிகள் முதலிய சான்றோர் பலர் இதனை முதன் முதலாகக் கற்பிக்கத் தொடங்குவர் எனப் பெரியோர்கள் பணிப்பர்.

இந்நூலுக்கு முன்னே உரை கண்டவர் சிலர். இப்போது இந்த அரிய நூலுக்குத் தக்க மேற்கோள்களுடன் புதிய உரை கண்டவர் புரிசை சு. முருகேச முதலியார். இப்பெரியார், "நாளும் தொழுவார் எழுபிறப்பை மாற்றும் மலை" யாகிய அண்ணாமலை வாசி. இவர் பெயரைச் சொல்லாமலேயே 'புரிசையார்' என்று சொன்னாலே போதும். அவரை அடையாளம் கண்டுகொள்வர்.

இந்த அரிய நூலை நம் இராய.சொ. அவர்கள் உரையுடன் பிழையின்றி அற்புதமாகப் பதிப்பித்துள் ளார்கள். பதிப்புரையில் நூலாசிரியர் சிவப்பிரகாச அடிகளை மிக்க ஈடுபாட்டுடன் அறிமுகம் செய்து வைத்திருப்பது மிகவும் போற்றத்தக்கது.

சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டும் (22 பகுதிகள் அடங்கியது) அதில் அடங்காத 'பிரபுலிங்க லீலையும்' கற்பனைக் களஞ்சியங்கள். இவற்றை இயற்றியருளிய சிவப்பிரகாச அடிகளும் ஒரு கற்பனைக் களஞ்சியம். 'திருச்செந்தில் நீரோட்டகயமக அந்தாதி' என்ற நூல் இவர் செய்தது. முப்பது பாக்கள் அடங்கியது. செந்திலாண்டவனைக் குறித்தது. நிரோட்டகம் என்றால் உதடோடு உதடு பொருந்தாமல் பாடத் தக்கது. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள பகர மகர வரிசை இந்நூலில் இடம் பெறவில்லை. இது யமக அந்தாதியும் கூட. யமகம் என்பது பாடல் தொடக்கத்தில் ஏறக்குறைய ஒருபாதி நான்கடியும் ஒரே மாதிரி வருவது. தவிர, இந்நூல் எழுத்து எண்ணிப் பாடத் தக்க கட்டளைக் கலித்துறைகளால் ஆயது.

அடிகளார் செய்த நூல்களுள் மிகச்சிறப்பு வாய்ந்தது நால்வர் நான்மணிமாலை. சமயக்குரவர் நால்வருக்கும் நான்கு மணிகள் விரவி நாற்பது பூக்களால் அழகிய மாலை தொடுத்தார். இந்நூலில் திருவாசக ஆசிரியர் மணிவாசகப் பெருமான்மேல் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டார்.

திருவா சகம்இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துஉக; கண்கள்
தொடுமணல் கேணியில் சுரந்துநீர் பாய,
மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர்விதிர்ப்பு எய்தி,
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.

என, திருவாசகத்திற்கு உருகிய அடிகளார் நூலின் இறுதியில் மணிவாசகப் பெருமானை விளித்து 'பாவெனப் படுவது உன்பாட்டு' என்று பகர்வார். இஃது எது போலவெனின்: உலகிலுள்ள மலர்கள் எல்லாம் பூக்கள் என்றாலும் திருமகள் தங்கியுள்ள தாமரையே 'பூ' என்று கூறுதல் போல, "பூவெனப்படுவது பொறிவாழ் பூவே" என்று போற்றுவார்.

சிவப்பிரகாச சுவாமிகள் 'வெங்கை'[13] என்ற ஊருக்கு கோவை, கலம்பகம், உலா என மூன்று நூல்கள் செய்துள்ளார். இவ்வூரில் அடிகள் கட்டுவித்து வழிபட்ட பழைய சிவன் கோவில் உள்ளது. சுவாமிகளின் பாடல் காரணமாக நம் தமிழ்க்கடல் இரண்டு முறை அவ்வூர் சென்று வணங்கி வந்ததாக அவர் தரும் குறிப்பால் அறிய முடிகின்றது.

சிவப்பிரகாச அடிகள் நகைச்சுவை மிக்க தனிப் பாடல்கள் சில அருளியுள்ளார்கள். அவற்றில் ஒன்று.

அரனவன் இடத்திலே ஐங்கரன் வந்துதான்
'ஐயஎன் செவியை மிகவும்

13. இப்போது வெங்கனூர் என வழங்குவது. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ளது.

அறுமுகன் கிள்ளினான்' என்றே சிணுங்கிடவும்
அத்தன்வே லவனை நோக்கி
விரைவுடன் வினவவே, 'அண்ணன் என் சென்னியில்
விளங்குகண் எண்ணி னன்'என,
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து 'நீ அப்படி
விகடம் என்செய் தாய்'என,
'மருவும்என் கைந்நீள முழம்அளந் தான்'என்ன
மாமிலவன் நகைத்து நிற்க,
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கி 'நின்
மைந்த ரைப்பா ரீர்'என
கருதரிய கடலாடை உலகுபல அண்டம்
கருப்பெறாது ஈன்ற கன்னி
கணபதியை அருகழைத்து, அகமகிழ்வு கொண்டனள்
களிப்பு டன்உமைக் காக்கவே.

என்பது. தாய்தந்தையர்கள் முன் அவர்தம் சிறு குறும்புகளைக் கண்டு மகிழலாம் என்பது கருத்து.

நம் தமிழ்க் கடல் இங்ஙனம் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு தமிழ் இலக்கியத்தைத் தமக்கே உரிய முறையில் பரப்புவது அவர்தம் தனிச் சிறப்பாக அமைந்துவிடுகின்றது. அவர்தம் பேச்செல்லாம் தமிழ் மூச்சு; மூச்செல்லாம் தமிழ்ப் பேச்சு.

3. அருணாசலப் புராணம்: இப்புராணம் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ எல்லப்ப நாவலரால் இயற்றப் பெற்றது. இந்த நூலாசிரியர் நல்ல பாவலர். இப் புராணத்தை ஆற்றொழுக்காக கவிதைச்சுவை கொப்பளிக்க, கற்பனை வளம் செறிய, அருமையாகப் பாடியுள்ளார். இவர்தம் பாடல்கள் பெரிதும் சிவமணம் கமழ்வன. இந்தப் புராணத்திற்குப் பழைய உரை ஒன்று உள்ளது. உரையாசிரியரின் பெயர் அறியக்கூடவில்லை.[14] நூலுடன்

14. இதனை எழுதியவர் மழவை மகாலிங்கையர் என்பதாக குறிப்பிடுகின்றார் வாகீச கலாநிதி கி.வா.ஜ. அவர்கள் தமது முன்னுரையில் (பக். 31).

அவ்வுரையும் சேர்ந்து முன்னே அச்சாகியுள்ளது. அப்பதிப்பு இன்று கிடைத்தற்கு அரிதாகவுள்ளது.

அண்ணாமலையார் கோவில் அறங்காவலர் விருப்பத்திற்கு இசையத் தமிழ்க்கடல் அப்புராணத்தை உரையுடன் வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். இறைபணி எதுவானாலும் உவப்புடன் ஏற்றுக் கொள்வார்கள் நம் தமிழ்க்கடல். பலநூல்கள் வெளியிட்டுப் பழகிய இப்பெருமகனாருக்கு இப்பதிப்பு பெருத்த தலைவலியைத் தந்துள்ளது. அவரே கூறுவது: "இப்புராணத்தை வெளியிடுவதில் மிகவும் சிரமப்பட வேண்டியதாகி விட்டது. முந்திய பதிப்பிலுள்ள பிழைகளுக்கு எல்லையே இல்லை. அண்ணாமலையாரின் அடிமுடியைத் தேடி அறிவதைவிட, அப்புராணத்திலுள்ள பிழைகளைக் களைவது அரிதாகிவிட்டது. எனவேதான் எவ்வளவோ முயன்று திருத்தியும், பெரிய பிழை திருத்தம் போட வேண்டிய அவசியம் வந்துவிட்டது. யாப்பிற்குக் கட்டுப்படாமல் அச்சிடப்பெற்ற பழைய பாடல்களை யெல்லாம் பெரிதும் முயன்று திருத்தினோம். பழைய உரையில் இருந்த வடமொழித் தொடர்களைக் கணக்கிட முடியாது. கூடுமானவரைக் கருத்து வேறுபடாமல் பற்பல இடங்களில் நல்ல தமிழில் திருத்தம் செய்தேன்" என்பதாகும்.

தலப்பெருமை: திருவண்ணாமலை, பெரியார்கள் பலராலும் பெரிதும் போற்றித் துதிக்கப் பெற்ற தலம்.

> அண்ணாமலை தொழுவார்வினை
> வழுவாவண்ணம் அறுமே[15]

என்பர் சம்பந்தப்பெருமான்.

> ஆதியே அமரர் கோவே
> அணியணா மலையு ளானே[16]

என்று கூறுவார் நாவுக்கரசர்.

---

15. சம்ப.தேவாரம் 1.10:1
16. அப்பர். தேவாரம் 4.63:1

அண்ணா மலையானைப்
பாடுதுங்காண் அம்மானாய்[17]

என்று போற்றுவார் மணிவாசகர் பெருமான்.

அண்ணா மலைமேல் அணிமலையை
ஆரா அன்பின் அடியவர்தம்
கண்ணார் அமுதை[18]

என்று சிறப்பிப்பர் சேக்கிழார் அடிகள்.

கற்றார்தொழும் அருணாசலம்[19]

என்று புகழ் பாடுவர் வில்லிபுத்தூரராழ்வார்.

ஞானத் தபோதனரை வாஎன்று
அழைக்குமலை அண்ணாமலை

என்று பாராட்டுவார் குருநமச்சிவாயர்.

பெருமானை, அருணகிரிப் பெம்மானை
அடிபணிந்து பிறவி தீர்ப்பாம்[20]

என்பர் இந்நூலாசிரியர். இன்னொரு பாடலில்,

அளகை வளம்பதி தனிலும்
வளம்பதி அருணை வளம்பதியே[21]

என்று போற்றியுரைப்பர்.

சிவபெருமான் நாமத்தை 'நமப் பார்வதி பதயே' என்று தொடங்கி ஒருவர் கூறினால், யாவரும் 'ஹரஹர மகாதேவா' என்று கூறும் வழக்கம் நெடுங்காலமாகத் தமிழ் நாட்டில் நிலவுகின்றது. 'ஹர ஹர' என்பது 'அரோகரா' என்று வழங்குகின்றது. இது திருவண்ணாமலையில்தான் பெருவழக்காகக் கேட்கப் பெறுகின்றது. 'அண்ணாமலைக்கு

17. திருவா. திருவம்மானை – 10
18.
19.
20. பாயிரம் – 8.
21. பாயிரம் – 4.

அரோகரா' என்ற முழக்கம் அத்தலத்தில் பெருகி வழங்கும். இப்புராணத்தில்.

> 'அரிகர' என்பது கடலில்
> முழங்கியது அருணை வளம்பதியே[22]

என்பதில் இச்செய்தி குறிக்கப் பெறுகின்றது.

இங்ஙனம் அண்ணாமலை பெருஞ்சிறப்புடையது. இத்தலத்தின் சிறப்புகளை எல்லாம் விரித்துப் பாடியுள்ளார் இந்நூலாசிரியர். அனைத்தும் நல்ல இனிய பாடல்கள். திருவிளையாடற்புராணம், காஞ்சிப்புராணம், திருத் தணிகைப் புராணம் முதலிய பல புகழ் பெற்ற தல புராணங்களைப் போல, இப்புராணமும் தமிழறிஞர்களால் பெரிதும் போற்றிப் பாராட்டப் பெற்று வரும் புகழ்மிக்க சிறந்ததொரு தல புராணமாகும்.

சுவையான இடங்கள்: இப்புராணத்தில் சுவையான இடங்களில் சிலவற்றைக் கண்டு மகிழலாம்.

(1) அவையடக்கத்தில் ஓர் அருமையான கருத்து. "புதிய நூலாக இதனைச் செய்துள்ளேன். பழைய நூல்கள் பல உள்ளன. பழையவற்றைச் சிறப்பிப்பதும் என் நூல் புதியதென்று இகழ்ந்தும் யாரேனும் சொல்லக்கூடும். எட்டி மரம் வளர்ந்து பழையதாக நின்று கனி தருகிறது. அதில் இனிமை உண்டா? கரும்பு புதியது. அதற்குச் சுவை இல்லாமல் போகுமா? செய்யுளில் சுவையில் உயர்வு, இழிவு என்று பார்ப்பதையன்றிப் பழமை, புதுமை என்பதற்காகச் சிறப்பிப்பதோ இழித்துக் கூறுவதோ முறையாகாது" என்ற கருத்து அடங்கிய பாடல்:

> அழகுதரக் கனிந்தநச்சு மரம்பழைய
> தெனினும்அதில் அமுதுண் டாமோ ?
> விழைவுதரு சுவைக்கரும்பு புதியதுவே
> எனினும்அதில் இரதம் போமோ ?

22. பாயிரம் – 4.

இழிவுறுபா டலும்உயர்வு தங்கியசெய்
யுளும்அவைபோல் இருக்கும் ஆகில்
பழமைஎன நலம்தருமோ ? புதுமைஎன
இகழ்படுமோ ? பயன்கொள் வோர்க்கே. (19)

என்பது. இந்த அவையடக்கப் பாடல் சித்தாந்த சாத்திரமாகிய சிவப்பிரகாசத்தில் வரும், "தொன்மைய வாம் எனும் எவையும்" *(12)* என்ற அவையடக்கப் பாடலைப் பின்பற்றி அமைந்ததாகக் கருதலாம்.

(2) திருமலைச் சருக்கத்தில் நான்முகனுக்கும் நாரணனுக்கும் வாக்குவாதம் நடைபெறுகின்றது. நான்முகன் சொல்வான்: "நான் எல்லாவற்றையும் படைத்தேன். படைப்புத் தொழில் இல்லையாயின் நீ எங்ஙனம் அளித்தல் தொழிலைச் செய்வாய்? ஆகவே உன் தொழிலுக்கு ஆதாரம் என் தொழில்தான்" என்று. அதற்குத் திருமால், "என்னுடைய உந்தியில் தானே நீ முளைத்தாய்? என்னிடம் தோன்றிய நீ என்னைவிட எவ்வாறு வலிமையுடையவனாவாய்?" என்று கேட்க, அதற்கு ஏற்ற விடையைச் சொல்கின்றான். "நான் உந்தித் தாமரையில் உதித்தேன் என்றால் நீ தூணில் உதிக்கவில்லையா? நானாவது உயிருள்ள தாமரையில் உதித்தேன். உன்னிடம் பிறந்ததனால் உன்னிலும் வலியவனாக முடியாதோ? மூங்கிலில் பிறக்கும் தீ அந்த மூங்கிலையே அழித்து விடுகின்றதே" - இப்படிப் பேசுகின்றான் நான்முகன்.

உந்திமல ரோன்என
இகழ்ச்சிஉரை யாதே
முந்திஒரு தூணிடை
முளைத்தனை; உனக்குத்
தந்தையென வோ ?அலது
தாய்அதுஎன வோ ?சொல்
செந்தழல் பிறந்துகழை
தீய்ப்பதறி யாயோ ?" (101)

அதற்கு நாராயணன் தக்க விடை தருகின்றான். 'தந்தைதான் மைந்தர் பிழையைப் பொறுப்பர் என்றே இப்படிப் பேசுகின்றாய்? தவறு செய்தால் மைந்தன் என்று பார்க்க மாட்டேன். மதுவும் கைடவனும் என் மைந்தர்களாகப் பிறந்தார்களாயினும் அவர்களை அழித்தேன். உடம்பிலே நோய் தோன்றுகின்றது. அந்த நோய் தன்னிடம் தோன்றிற்று என்று விட்டு விடுவார்களா? அதனை அறுத்துப் போக்கமாட்டார்களா?" என்கின்றான்.

கன்றும்மது வும்கயிட
    வப்பகடு தானும்
என்றனையர் ஆகவும்
    இகழ்ந்துஉயிர் குடித்தேன்;
மன்றஒரு தீமைசெயின்
    மைந்தன்என உண்டோ ?
அன்றிஉடல் நோயையும்
    அறுத்தெறிகி லாரோ ? (26)

நான்முகன் தன் அகந்தை நீங்கிச் சிவபெருமானை வணங்கித் துதிக்கின்றான். *(148-152)* அங்கே வரும் ஐந்து பாடல்களும் மிக அழகியவை. இறுதியில் உள்ள பாடலில் ஓர் அருமையான கருத்து உள்ளது. "நான் உன்னை அளந்து உன் முடியைக் கண்டு பிடிப்பேன் என்று எண்ணியதே பிழை. அங்ஙனம் எண்ணியதற்கு அப்பொழுதே தண்டனை கிடைத்தது. அந்த எண்ணம் தோன்றிய அளவில் படைப்பு தொழிலாற்றும் நிலையில் உள்ள நான் வெறும் பறவையாகி விட்டேன். இதுவே அந்த எண்ணத்தின் தீமையைப் புலப்படுத்துகின்றது" என்ற கருத்துப்பட அவன் புலம்பு கின்றான்.

அறிதற்கரி தாம்உன்முடி
    அறிவேன்எனும் அளவே
பறவைப்படிவு ஆனேன்இனி
    மேலோஇடர் படுவேன் ? (132)

இதே கருத்தை அருணைக் கலம்பகத்திலும் இவ்வாசிரியர் ஆளுகின்றார். அங்கே நான்முகன், நாராயணன் ஆகிய இருவரும் தங்கள் நினைப்புக்குரிய தண்டனையை அப்போதே பறவையாகியும் விலங்காகியும் பெற்று விட்டனர் என்கின்றார்.

யாதவர் குலத்துநெடு மாதவன்
மருப்புடைய ஏனமிரு கத்துருவமாய்
வேதமொழி பெற்றஅயன் ஓதிமம்
எனப்பறவை வேடமும் எடுத்ததிலையோ ?
ஓதருணை வித்தகரை மூவரில்ஒ
ருத்தர்என ஓதிவிடும் அற்பமதியீர் !
சீதமதி வைத்தமுடி பாதமல
ரைச்சிறிது தேடுதல் நினைத்தபரமே. (6)

என்பதைக் கண்டு மகிழலாம்.

(3) அண்டலிங்கம்: சோதிலிங்கமாக நிற்கும் பெருமான் எவராலும் அளவிடற்கரியவன். அவனுக்கு எவர் பூசை புரிய முடியும்? அந்த லிங்கம் அண்டலிங்கமாக விரிந்திருப்பது. அந்த லிங்கத்தைப்பற்றித் திருமூலர் ஒரு பாடல் தருகின்றார். இந்த நிலமே ஆவுடையாராம் (சக்தி); வட்டமாக நிலத்தை, தன் விளிம்புதொடத் தோற்றும் வானமே இலிங்கமாம். கடலே மஞ்சனசாலையாம்; மேகமே திருமஞ்சனக்குடமாம்; மழையே திருமஞ்சனமாம்; நட்சத்திர வரிசையே மாலையாம்; திசைகளே பரிவட்டமாம்.

தரைஉற்ற சக்தி; தனிலிங்கம் விண்ணாம்;
திரைபொரு நீரது மஞ்சன சாலை;
வரைபொரு மஞ்சுநீர்; வானஉடு மாலை;
கரையற்ற நந்தி கலையும் திக்காமே.

இந்த அண்டலிங்கத்துக்கு அகண்ட பூசை நடைபெறுகிறதாம். திருவண்ணாமலைச் சோதிலிங்கத்துக்கும் அப்படி ஓர் அகண்ட பூசை நடைபெறும்.

"வழிபடுவார்க்கு ஏற்றபடி அவர்கள் பூசைக்கு எளிய பிண்ட லிங்கமாகவும் எழுந்தருளவேண்டும்" என்று தேவர்கள் வேண்டிக் கொண்டார்களாம். அண்டலிங்கத்துக்கு நடைபெறும் பூசையை இவ்வாசிரியர் சொல்லுகின்றார்.

'அடுத்துஅருண கிரியானே ! உனக்குவிண்நீர்
அலதுபுனல் ஆட்டுவார்யார் ?
தொடுத்தஉடுத் திரள்அலது திருமுடிக்கு
மணிமாலை சூட்டு வார்யார் ?
கடுத்திகழும் மிடற்றானே ! கதிர்கனன்றி
மணித்தீபம் காட்டு வார்யார் ?
எடுத்திறைஞ்சும் பூசைசெய்ய, இதன்கீழ்ஓர்
இலிங்கவடி வெடுப்பாய்' என்றார்.

என்ற பாடலில்.

**(4) (அ) உவமை நயம்:** திருவண்ணாமலையைச் சார்ந்த இடங்களில் தாம்புக் கயிற்றின் இரு நுனிகளிலும் இரண்டு குடங்களைக் கட்டி ஒன்று கீழே சென்று மொள்ள மற்றொன்று மேலே இருக்க, மீட்டும் மேலிருப்பதைக் கீழிறங்கி மொள்ளச் செய்து கீழிருப்பதை மேல் ஏற்றித் தண்ணீர் எடுப்பார்கள். இந்த வழக்கத்தை நூலாசிரியர் ஒரு கவிதையில் உவமையாக்குகின்றார்.

சோதி மலையாய் நின்ற இறைவனை அன்னமும் பன்றியுமாக உருவெடுத்து முடியும் அடியும் தேட அயனும் மாலும் செல்வது முத்துக்குடமும் நீலமணிக் குடமும் மேலும் கீழும் போவதுபோல் இருந்ததாம்.

மெத்தும்அரைக் கணத்தினுக்குஆ யிரம்காதம்
பறந்தயனார் விரைந்து போனார்
துத்திஅரா எடுத்தபுவி கணத்தினுக்கா
யிரம்காதம் தொளைத்துப் போனார்
அத்தகையோர் செயல்உரைக்கின், கனகமணி
நெடும்பூட்டுக்கு அருகில் ஓடும்

நித்திலப்பொற் குண்டிகையும் நீலமணிக்
குண்டிகையும் நிகர்த்த மாதோ ! (123)

என்ற பாடலில் இந்த உவமையைக் கண்டு மகிழலாம்.

(4) (ஆ) இன்னொரு சிறப்பும் நயமும் பொருந்திய உவமை. திருவண்ணாமலையில் பூசை நடைபெற்றால், எல்லாத் தலங்களுக்கும் பூசை நடந்ததாகும் என்ற கருத்திற்கு ஏற்ற உவமை ஒன்றைச் சொல்கின்றார் ஆசிரியர். 'வேரில் நீர் சொரிந்தால் பூ, இலை எல்லாம் குளிர்ச்சி பெறுவதுபோல' என்கின்றார்.

"வீசுஅலர் இலைமெய் குளிர்ந்திடும் கொடியின்
வேரில்நீர் சொரிந்திடின்;அதுபோல்
பூசனை அருணை, நகரிலே சிறிதாம்
புரைஅற நடக்குமே ஆகில்
காசியே முதல்எத் தலமெலாம் பூசை
கனம்பெற நடந்ததாம்" (76)

என்ற பாடலில் உவமை நயத்தைக் கண்டு மகிழலாம்.

(4) (இ) தவம் புரிந்த உமாதேவியாருக்கு அருள எம் பெருமான் எழுந்தருளுகின்றான். தன் திருமேனியில் பாதியை அருளப் போகின்றான். அவன் வரும் கோலத்தை எடுத்துரைக்கையில் அவன் திருமார்பில் உள்ள முப்புரி நூலுக்கு ஓர் உவமை கூறுகின்றார். இனி நடைபெறப் போவதை எண்ணி அதற்கு ஏற்ற உவமையை ஆளுகின்றார்.

'புவியைப்
பெற்ற மாதினுக்கு ஒருபுறம்
அளித்திடப் பிடித்த
ஏற்று நூல்எனப் புரிமுந்நூல்
மார்பகத்து இலங்க (395)

மரம் முதலியவற்றை அளவுபிடித்து அறுக்க மையிலே தோய்த்த நூலைப் பிடித்து எற்றி அடையாளம் செய்வது வழக்கம். அந்த நூலுக்கு ஒற்றுநூல் என்று பெயர், இங்கே, அம்பிகைக்குத் தன் உடம்பை அளந்து கொடுக்க வாய்த்த

எற்று நூலைப் போல இருந்தது பூணூல் என்ற உவமையின் நயம் அறிந்து இன்புறற்குரியது.

(5) துதிப்பாடல்கள் நம் உள்ளத்தை உருக்குகின்றன. அவற்றுள் இரண்டை மட்டிலும் ஈண்டு தருவேன்.

(அ) அண்ணாமலையார் துதி:

ஒருமானைக் கரத்தினில்வைத்து ஒருமானைச்
சிரத்தினில்வைத்து, உலகம் ஏழும்
தருமானை இடத்தினில்வைத்து அருள்வானை,
பவளநெடுஞ் சயிலம் போல
வரும்ஆனை முகத்தானை அளித்தானை
பொரும்ஆனை மகிழ ஏறும்
பெருமானை அருணகிரிப் பெம்மானை
அடிபணிந்து பிறவி தீர்ப்பாம். (8)

(ஆ) உண்ணாமுலையார் துதி:

கார்ஒழுகும் குழலாளை, கருணைவழிந்து
ஒழுகும்இரு கடைக்கண் ணாளை
மூரல்இள நிலவுஒழுகப் புழுகுஒழுக
அழகுஒழுகும் முகத்தி னாளை
வார்ஒழுகும் தனத்தாளை, வடிவுஒழுகித்
தெரியாத மருங்கு லாளை
சீர்ஒழுகும் பதத்தாளை, அருணைஉண்ணா
முலையாளைச் சிந்தை சேர்ப்பாம் (9)

இத்தகைய பல சிறப்புகளை உடைய அருணாசல புராணத்தைப் பதிப்பித்துத் தமிழ் உலகுக்கு ஈந்து பக்தியைப் பெருகச் செய்யும் தமிழ்க்கடல் இராய.சொ.வுக்குத் தமிழ் உலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது.

4. திருவிளையாடற்புராணம் (மதுரைக்காண்டம்): சிவபெருமான் முக்கண்ணன். அந்த மூன்று கண்களைப் போல் சைவர்களால் போற்றப்பெறும் புராணங்கள் மூன்று. அவை: பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் என்பவை. இந்த மூன்றும் மூன்று வகையானவை.

பெரிய புராணம் தமிழில் தோன்றிய மூல நூல். கந்தபுராணம் மகாபுராணங்கள் பதினெட்டில் ஒன்றன் பகுதி. திருவிளையாடற்புராணம் என்பது மதுரைத் திருத்தலத்தில் இறைவன் செய்த 64 திருவிளையாடல்களை விரித்துச் சொல்வது. இஃது ஒரு தலத்தின் புராணம். சைவத் திருமுறைகளில் ஒன்றாக அமைந்த பெரிய புராணத் தோடும் மகாபுராணங்களில் ஒன்றாகிய கந்தபுராணத் தோடும் ஒரு நிரலாக வைத்து எணணப் பெறும் பெருமை ஒரு தலபுராணத்துக்கு அமைந்ததற்கு அப்புராணத்தின் சிறப்பே காரணம். சிவத்தலங்களில் எல்லாம் சிறந்ததாக முன்வைத்து எண்ணப்பெறுவதும் அடையின்றியே 'கோயில்' என்று சொல்லப்பெறுவதுமாகிய தில்லைக்குரிய புராணத்துக்குக் கூட இத்தகைய சிறப்பு இல்லை என்பது நீள நினைந்து நோக்கத்தக்கது.

வடமொழியிலுள்ள தலபுராணங்களுக்கு இலக்கிய மதிப்புப் பெரும்பாலும் இல்லை. ஆனால் தமிழில் பல புலவர்கள் இயற்றிய தல புராணங்கள் சொற்சுவை பொருட்சுவை நிரம்பியுள்ளனவாய்த் திகழ்கின்றன. திரிகூட ராசப்ப கவிராயர், சைவ எல்லப்ப நாவலர், சிவப்பிரகாச அடிகள், கச்சியப்ப முனிவர், பரஞ்சோதி முனிவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதலிய பெரியார்கள் படைத்த தல புராணங்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றன.

**பெரிய புராணம்:** பெரிய புராணம் வரலாற்று நூல். அந்தப் பெயர் புராணம் என்பதற்காக, அதனைத் தல புராண வரிசையில் சேர்க்கலாகாது. பெரியபுராணம் காவிய வரிசையில் சேர்க்கத்தக்கது. இவ்வுலகில் புகழொடு வாழ்ந்து செய்த அருஞ்செயல்கள் செய்த சிவனடியார் களின் வரலாறு கூறுவது பெரிய புராணம். அது அடியார்கள் திறம் கூறுவதில் ஈடு இணையற்றது. அந்நூல் முழுவதும் தெய்வமணம் கமழும் செய்யுட்களால் ஆனது,

எனவே, அதற்கு ஒப்பற்ற தனி இடத்தை அளித்து விட்டு நோக்கும் போது, திருவிளையாடல் புராணம் முதல் இடம் பெறுகின்றது.

**மதுரைத் தலபுராணங்கள்:** மதுரைத் தலத்திற்குரிய புராணங்கள் நான்கு. அவை:

**(1) திருவாலவுடையார் திருவிளையாடற்புராணம்:** இஃது உத்தர மகாபுராணம் என்னும் வடநூலில் ஒரு பகுதியாகிய 'சார சமுச்சயம்' என்பதிலிருந்து மொழியாக்கம் பெற்றது. இதனை இயற்றியவர் செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பி. இதனைப் பழைய திருவிளையாடல், வேம்பத்தூரார் திருவிளையல் என்றும் வழங்குவர். டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் இந்நூலை நல்ல முறையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள்.

**(2) கடம்பவன புராணம்:** இலம்பூர் வீமநாத பண்டிதர் என்னும் புலவரால் வடமொழியில் உள்ள நீபாரண்ய மகாத்மியம் என்பதிலிருந்து மொழியாக்கம் செய்யப் பெற்றது. இந்நூலும் அச்சுவாகனம் ஏறியுள்ளது.

**(3) சுந்தர பாண்டியம்:** வாயற்பதியில் இருந்த அனதாரி என்னும் புலவர் பெருமானால் வடமொழியில் 'சுந்தர பாண்டியம்' என்ற பெயரோடுள்ள நூல் மொழியாக்கம் பெற்றமைந்தது இந்த நூல். பதினாறாவது நூற்றாண்டில் தோன்றியது. அச்சில் வந்துள்ளது.

**(4) திருவிளையாடற் புராணம்:** இந்நூலை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர். இதுவே தமிழுலகம் எங்கும் நன்கு பரவி வழங்கும் புராணம். மேற்கூறப்பெற்ற நூலகளுக் கெல்லாம் பின்னே தோன்றியதாகக் கருதுவர் அறிஞர்கள். காலத்தினால் பிற்பட்டதாக இருப்பினும், 'முன்னே முளைத்த காதிலும் பின்னே முளைத்த கொம்பு வலிது' என்றவாறு பக்திச் சுவையிலும் தமிழ் நயத்திலும் மற்றவற்றை விடச் சிறந்து திகழ்கின்றது.

இப்புராணம் மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்று மூன்று பெரும் பகுதிகளையும் 64 திருவிளையாடல்களைச் சொல்லும். 64 படலங்களையும் 3363 பாடல்களையும் அவற்றிற்கு முன் கடவுள்வாழ்த்து, பாயிரம், அவையடக்கம், நாட்டுச்சிறப்பு, நகரச் சிறப்பு, திருக்கயிலாயச் சிறப்பு, புராண வரலாறு, தலச் சிறப்பு, தீர்த்தச் சிறப்பு, மூர்த்திச் சிறப்பு, பதிகம் என்னும் பகுதிகள் இறுதியில் அர்ச்சனைப் படலம், என்னும் பகுதி ஆகியவற்றையும் 3363 பாடல்களையும் கொண்டது.

இந்தப் புராணத்தை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர் என்னும் துறவி. அப்பெரியார் திருமறைக் காட்டில் சைவ வேளாளர் மரபில் தோன்றியவர். இந்தப் புராணத்தைத் தவிர இப்பெரியார் வேதாரண்ய புராணம், திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா முதலிய நூல்களையும் இயற்றியவர். இவர் மதுரை மாநகருக்கு வந்திருந்த பொழுது இவர்தம் பக்தியையும் புலமையையும் நன்குணர்ந்த சான்றோர்கள் பலர் இவரை இந்தப் புராணம் பாடும்படி வேண்டிக் கொண்டனர். வடமொழியில் உள்ள 'ஹாலாஸ்ய மகாத்மியம்' என்ற நூலைத் தழுவி இயற்றலாம் என்று முனிவர் எண்ணினார். ஒருநாள் அவருடைய கனவில் அங்கயற்கண்ணம்மை ஓர் இளம்பெண் உருவில் எழுந்தருளி வந்து, "இந்தப் புராணத்தை அருள் செய்வாயாக!" என்று பணித்தருள, அதனால் ஊக்கம் பெற்ற முனிவர் இப்புராணத்தைப் பாடத் தொடங்கி, "சத்தியாய்" என்று முதலில் அன்னையின் பெயரை வைத்துப் பாடினதாக ஒரு வரலாறு உண்டு.

'மதுரைக் காண்டம்' என்னும் நூலின் பாடல் தொகை 1306; 18 திருவிளையாடல்கள் இதில் அடங்கியுள்ளன. கடவுள் வாழ்த்து, நாடு, நகரம் முதலியவற்றின் சிறப்பு ஆகியவற்றைத் தித்திக்கும் செந்தமிழில் பாடிய பாக்கள் நூல் முகப்பை அணி செய்கின்றன.

இந்த மதுரைக் காண்டத்தைச் சிறந்த முறையில் பதிப்பித்தவர் நம் தமிழ்க்கடல் இராய.சொ. அவர்கள். வெளியிட்டது மதுரை மீனாட்சி திருக்கோயில். இத்தலத் புராணத்துக்கு இணையான மற்றொன்று இல்லை என்பது நம் தமிழ்க் கடல் அவர்களின் தேர்ந்த முடிபு. முழு முதற் கடவுளாகிய சிவபெருமான் மதுரை நகரில் சங்கத் தலைவராக அமர்ந்து பெரும் புலவர்களோடு ஒன்றித் தமிழ் ஆய்ந்தார் என்ற பெருமை மதுரையைத் தவிர வேறு எந்த நகருக்கும் இல்லை. பரஞ்சோதி முனிவர்,

**'கண்ணு தற்பெருங் கடவுளுக்**
**கழகமோடு அமர்ந்து**
**பண்ணு றத்தெரிந்து ஆய்ந்தஇப்**
**பசுந்தமிழ்' (88)**

என்று பெருமிதமாகப் பேசுவர்.

**'கண்ணுதற் பெருங்கடவுள்'**

என்ற கம்பனின் சொற்றொடரை இப்புலவர் பெருமான் பொன்னேபோல் போற்றியிருப்பது ஒரு சிறப்பு.

நால்வர் பற்றிய நான்கு வணக்கப் பாடல்கள், அதாவது 'கடிஅவிழ் கடுக்கை' *(19)*, 'அறப்பெருஞ்செல்வி' *(20)*, 'அரவு அகல அல்குலார்' *(21)*, 'எழுத அரும் மறைகள்' *(22)* என்று தொடங்கும் பாடல்கள் மிக அருமையாக அமைந்திருப்பவை. தவிர, அங்கயற்கண்ணிபற்றி 'பங்கயற்கு அண்ண' *(9)* என்று தொடங்கும் பாடலும் தடாதகை பற்றி 'செழியர் பிரான்' *(12)* என்ற பாடலும், கூத்தபிரான் பற்றி 'உண்மை அறிவு' *(10)* என்று தொடங்கும் பாடலும் சோமசுந்தரர் பற்றி 'சடைமறைத்து' *(11)* என்ற பாடலும் நம் நெஞ்சினை நெகிழ்வித்துப் பக்தியின் கொடுமுடிக்கு நம்மை இட்டுச் செல்பவை. மதுரை நகர்பற்றி முனிவர் பாடிய பாடல்கள் அனைத்தும் தித்திக்கும் தெள்ளமுதமாய் இனிப்பவை. இவற்றை நூலில் கண்டு சுவைத்து மகிழ்தல் ஒவ்வொருவரின் கடமையாகும்.

இங்ஙனம் எல்லாச் சிறப்புகளும் பொருந்திய தமிழ்க் கடல் இராய.சொ. அவர்கள் பதிப்பித்த நூல்கள் படிப்போருக்குத் தமிழ் உணர்வையும் பக்திப் பெருக்கையும் பதிப்பிக்கும் திறனையும் படிப்போர்களிடையே எழுப்பி வளர்க்கக் கூடியவை.

# 3

# விளக்க நூல்கள்

உலக இலக்கிய வரலாற்றில் செய்யுள் வடிவமே முதன் முதலாகத் தோன்றியது என்பது இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் கண்ட முடிவு. தமிழ் இலக்கிய வரலாற்றுக்கும் இவ்வுண்மை பொருந்துவதாக அமை கின்றது. தாள், அச்சு இயந்திரம் முதலியவை கண்டறியாத தற்கு முன்னர் தமிழ் நாட்டில் ஓலைச் சுவடிகளிலேயே எழுதி வந்தனர். சொற்சுருக்கமாகிய கவிதைகளை எழுதி வருவதற்கு ஓலைச்சுவடியே மிக்க துணையாக இருந்தது. பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் போன்றவர்களின் உரையும் இந்த ஓலைச்சுவடிக்குத் துணையாக அமைந்தது. அகராதிக்கு மூலங்களாக இருந்த நிகண்டுகள் கூட செய்யுள் வடிவமாக இருந்து வந்தவை. அக்காலத்தில் கல்வி முறையும் ஒரு சில புலவர்களின் சொத்தாக இருந்தது. கவிதை வடிவம் நினைவில் வைத்துக் கொள்வதற்குப் பெருந்துணையாக இருந்தது. காகிதமும் அச்சுப் பொறியும் தோன்றிய பிறகு உரைநடை இலக்கியம் பெருகலாயிற்று. இதனால் கவிதை வடிவிலிருந்த நூல்கட்கும் பரிமேலழகர் போன்ற செறிவும் சுருக்கமுமாக அமைந்திருந்த உரைக்கும் விளக்க நூல்கள் தோன்ற வேண்டியது இன்றியமையாத தாயிற்று. இந்தப் போக்கில் புலவர்கள் விளக்க நூல்கள் படைத்து உள்ளனர். இந்த முறையில் தமிழ்க்கடல் இராய.சொ. இரண்டு விளக்க நூல்கள் படைத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளார்கள்.

**1. வள்ளுவம் தந்த இன்பம் (1947):** இதன் முதற்பதிப்பு (1947)லும் இரண்டாம் பதிப்பு (1958)லும் வெளி வந்துள்ளன.[1] இதனை ஆய்பபுகுமுன் திருக்குறளைப் பற்றிச் சிறிது சொல்ல வேண்டும்.

**திருக்குறள்:** உலகப் பொதுமறையாயது திருக்குறள். 'எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்கண் இல்லாத எப்பொருளும் இல்லை'[2] என்று சான்றோர் பலராலும் போற்றத்தக்க சிறப்பு வாய்ந்தது இத்தெய்வப் பனுவல். திருக்குறள் செய்த வள்ளுவரைப் பெற்றதால் தமிழ் மொழி உயர்ந்து விட்டது என்று சொன்னால் அதற்கு மறுப்பு இராது. வள்ளுவன் கூறும் செய்தி வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்திற்கு மட்டுமன்று;; அஃது உலகத்தற்கெல்லாம் உரியது; அதனால் அது வான்புகழ் கொண்டு திகழ்வது. அதனைத் தமிழ் நாட்டார் தமிழிலே அறியும் பேறு பெற்றது அவர்களது தவப்பயன் ஆகும்.

வள்ளுவர் இறை உண்மையில் நம்பிக்கை கொண்டவர். அவர்தம் கடவுட்கொள்கை எந்தச் சமயத்திலும் அடங்காதது. திருவள்ளுவர் கூறும் கடவுளுக்கு ஒரு நாமமும் இல்லை; ஓருருவமும் இல்லை; சமயக் குறிகளும் இல்லை; அவர் காட்டும் இறைவன் ஆதிபகவன் (1), வாலறிவன் (2), மலர்மிசை ஏகினான் (3), வேண்டுதல் வேண்டாமை இலான் (4), இறைவன் (5), பொறிவாயில் ஐந்தவித்தான் (6), தனக்குவமை இல்லாதான் (7), அறவாழி அந்தணன் (8) என்ற பெயர்களால் வழங்கப்பெறுபவன்.

அவர் கூறும் அறம் சமய எல்லையைக் கடந்தது; மொழிகட்கு அப்பாற்பட்டது; நாட்டெல்லை கடந்தது, எல்லோரும் ஒப்புக் கொள்ளத்தக்கது. தாமும் வாசுகி

1. வெளியீடு: வள்ளுவர் பண்ணை 1/23, பிராட்வே, சென்னை – 600 001.
2. திருவள்ளுவமாலை.

அம்மையாரும் நடத்தின இல்வாழ்க்கையின் சோதனை யால் பெற்ற உண்மைகளை இல்லறத்தானுக்குக் கூறுவார். துறவறத்தாருக்கு வழிகாட்டுவார். ஊழ்வினையை ஒப்புக்கொள்ளுகின்றார். அரசனுக்கு வழி காட்டுகின்றார். அமைச்சனுக்கும் நெறியமைக்கின்றார். அரசாங்கத்தில் இருக்கவேண்டிய இன்றியமையாத பகுதிகளை வரை யறுத்து வழிகாட்டுகின்றார். 'அறன் அறிந்தேம்; ஆன்ற பொருள் அறிந்தேம்; இன்பின்திறன் அறிந்தேம்; வீடு தெளிந்தேம்' என்று வள்ளுவர் வாய்மொழியைப் பாராட்டுவார் கொடிஞாழன் மணிபூதனார் என்ற செந்நாப்புலவர். அதன் சுருக்கத்தின் பெருமையை, 'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்' என்று புகழ்வார் இடைக்காடர் என்ற புலவர் பெருமான். நம் ஔவைப் பாட்டியாரோ 'கடுகு பெரியது' எனக் கருதி அந்நூலுக்கு அணுவை ஒப்பிட்டுக் காட்டுவார்.

**இன்பத்துப்பால்:** வள்ளுவர் இதனைப் பாடவில்லை என்று சிலர் கருதுவர். அது தவறு; பெருந்தவறு. அகப்பொருள் தத்துவத்தை அறியாதார் கூறுவது இது. அகத்திணைப் பொருளான இன்பம் அல்லது காமம் பருவம் நிரம்பிய உயர்திணை அஃறிணை உயிர்க்கெல்லாம் பொதுவாய் அமைந்து கிடப்பது.

> எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
> தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்[3]

என்று ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் சுட்டி உரைப்பார். காமம் அல்லது இன்பம் உடலோடு ஒட்டிய இயல்புடையது. இத்தகைய இன்ப உணர்வை - காமத் துடிப்பை - நெறிப்படுத்திய பொருளாகக் கொண்டவை அகத்திணைப் பாடல்கள். வாழ்க்கை நெறியுடன் வாழ்ந்த சங்கப் புலவர்கள் மன்பதையை அந்நெறியில் வாழ்விக்க விரும்பியே உலகம் நீடு நின்று வாழ உயிர்க் கொடையாகத்

3. தொல்—பொருள். பொருளியல் – 27 (இளம்)

திகழும் காம உணர்ச்சியைச் சிறப்புடைய பொருளாகக் கொண்டு பாடல்களை யாத்தனர். "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற குறிக்கோள் நெறியுடன் வாழ்ந்தவர்கள் சங்கப்புலவர்கள்.

**இன்றியமையாமை:** அகத்திணையின் இன்றியமை யாமையையும் சிறப்பினையும் புலப்படுத்தவே பொருளிலக் கணம் கண்ட தொல்காப்பியர் **அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல்** என நான்கு இயல்கள் வகுத்து அகத்திணை நெறியினைத் தெளிவுபட விளக்கி யுள்ளார். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழின் தனிச்சிறப்பை வலியுறுத்த விரும்பிய 'சங்கப்புலவராகிய கபிலர் பெருமான்' அவனுக்கென்றே பத்துப்பாட்டில் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டு என்ற அகத்திணைப் பாடலினை யாத்தனர் என்பது ஈண்டு நீள நினைந்து பார்க்கத் தக்கது. அதற்குக் காரணம், என்ன? தமிழ் மொழியின் தனி வீற்றினைப் பிற மொழியாளர் உணர வேண்டுமேல் அவர்கள் முதலில் அறிய வேண்டும் பொருள் அகப்பாட்டே என்று கருதியதே யாகும். அறிவியலாசிரியர் தாமே தம் செய்திறனால் கருவி யொன்று சமைத்துச் சில அறிவியல் மெய்ம்மைகளை விளக்குவதுபோல் ஆசிரியப் பெருந்தகையாகிய கபிலரும் தானே பாவியற்றி அதனைக் கொண்டே அகத்திணை நெறியின் உயிரனைய கருத்தினை அவ்வரசனுக்குத் தெளிவுறுத்தினார்.

**சிறப்பு:** அகத்திணையின் சிறப்பு வேறு சில குறிப்புகளாலும் அறியப்பெறும் "ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற்குப் பாடியது" என்ற குறிஞ்சிப் பாட்டின் துறைக் குறிப்பும், நுதலியதோ எனின், "இந்நூல் என் நுதலிற்றோ எனின் தமிழ் நுதலியது"[4] என்ற இறையனார் களவியலுரையாசிரியரின் குறிப்பும், "ஒண்டீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ?"[5] என்ற

4. இறை.கள. முதல் நூற்பா உரை. பக். 14.
5. திருக்கோவை – 20.

திருக்கோவையார் பாடலடியும் இதன் சிறப்பினைப் புலப்படுத்துவதைக் காணலாம். இந்த மூன்று இடங்களிலும் தமிழ் என்னும் சொல் அகத்திணைக்கு மறுபெயராய் நிற்றல் அறியப்பெறும். ஒரு மொழியின் பெயர் அம்மொழியின் கண் தோன்றியுள்ள பல்வகை இலக்கியங்களுள் ஒருவகை இலக்கியத்திற்குமட்டிலும் பெயராய் ஆளப்படுமாயின் அந்த இலக்கிய வகை அம்மொழியிலன்றிப் பிற எம்மொழி யிலும் காண்டற்கில்லை என்பது தெளிவாகின்றதன்றோ? இதனால் உலகில் நின்று நிலவும் மொழிகளுள் தண்டமிழ் மொழியின் தனிச்சிறப்பும் தமிழிலக்கிய வகைகளுள் அகத்திணையின் சிறப்பும் வெள்ளிடைவிலங்கலெனத் தெரிகின்றதல்லவா?

தள்ளாப் பொருளியல்பின்
தண்டமிழாய் வந்திலார்
கொள்ளார்இக் குன்றுபயன்[6]

என்ற அடிகளால் இது மேலும் வலியுறுகின்றது. ஈண்டு 'குன்று பயன்' என்பது குன்று தரும் பயன்; அதாவது களவுப் புணர்ச்சி இன்பம்; குறிஞ்சி நிலத்து ஒழுக்க மாதலின், இவ்வாறு கூறப்பெற்றது. தமிழின் பொருளி லக்கணங் கல்லாத அறிவுக்குறைவுடையார் காதல் களவினையும் குறை கூறுவர் எனவும், தமிழை ஆய்ந்தவர் களவு நெறியை உடன்படுவர் எனவும் இப்பரிபாடல் பகுதி தெரிவிக்கின்றது. இங்கு இவ்வாசிரியர் களவிற் புணர்ச்சியை உடைமையான் வள்ளி சிறந்தவாறும் அத்தமிழை ஆய்ந்தமையான் முருகன் சிறந்தவாறு[ம்] உணர்த்துவர். இந்த அடிப்படையில் வள்ளுவரின் இன்[ப] பாவினைக் கருத்தில் கொண்டு ஆராய வேண்டும்.

**இன்பத்துப்பால்:** திருக்குறளின் மூன்றாம் பகுதியா[க] இன்பத்துப்பால் இருபத்தைந்து இயல்களைக் கொண்ட[து]. 'தகையணங்குறுத்தல்' என்ற இயல் தொடங்கி 'ஊட[ல்] உவகை' என்ற இயல் இறுதியாக இருபத்தைந்து இயங்களில்

6. பரிபா. 9 அடி 25–26.

250 அரிய குறள்களில் வள்ளுவர் காட்டும் இன்பம் பரவிக் கிடக்கின்றது. இந்தப் பகுதிகளைக் 'களவியல்', 'கற்பியல்' என்ற இரு கூறுகளாகப் பிரித்துள்ளனர். 'களவியலில்' ஏழு அதிகாரங்களும் 'கற்பியலில்' பதினெட்டு அதிகாரங்களும் அடங்கியுள்ளன. இன்பத்துப்பாலின் குறள்கள் யாவும் அதி நுட்பமானவை; நாடக வழக்காக அமைந்தவை. "நாடக வழக்கு என்பது, சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வருவனவாகத் தொகுத்துக் கூறுவது. அதாவது, செல்வத் தானும் குலத்தானும், ஒழுக்கத்தானும், அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து, எதிர்ப் பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போருமின்றி அடுப்போருமின்றி வேட்கை மிகுதியால் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையால் வரைந்தெய்தினார் எனவும், பிறவும் இந்நிகரன வாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல்"[7] என்பர் இளம்பூரணர். இங்ஙனம் வரும் குறள் களும் நுட்பமானவை; பரிமேலழகர் உரையும் நுட்பமானது. ஆகவே, சாதாரண மக்களும் படித்து இன்புறுவதற்காகத் தமிழ்க்கடல் இராய.சொ. இன்பத்துப் பாலை எளிமைப் படுத்தி எளிய நடைகளில் வழங்கியுள்ளார்கள்.

எடுத்துக்காட்டுகளாக சிக்கலான இயல் தலைப்பு களையும் விளங்குவதற்குச் சிரமமான குறட்பாக்களின் பொருளையும் எளிமைப்படுத்தியுள்ள சில இடங்களைக் காட்டுவேன்.

**(1) தகை அணங்கு உறுத்தல்:** இது களவியலில் முதல் அதிகாரத் தலைப்பு. இதன் பொருள் விளங்கவில்லை என்று கருதலாம். தமிழ்க்கடலின் விளக்கம் இது. தகை - அணங்கு - உறுத்தல் என்ற மூன்று சொற்களைக் கொண்ட தொடர் இது. இதனை அணங்கு - தகை - உறுத்தல் என்று மாற்றிக் கொண்டால் பொருள் விளங்கிக் கொள்வது

7. அகத்திணை – 56 இன் உரை.

எளிதாகும். 'அணங்கு' என்றால் பெண். 'தகை' என்றால் அழகு. முதலியன. 'உறுத்தல்' என்றால் வருத்தத்தை உண்டாக்குதல்; எனவே, இச்சொற்றொடர் 'மங்கையின் அழகு முதலியன வருத்தத்தைச் செய்தல்' என்ற பொருள் தந்து நிற்கின்றது. மேலும், இந்த அதிகாரத்தின் பெயர் நிறைந்த பொருளை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. 'பெண்ணின் அழகு யாருக்கு வருத்தத்தைத் தருகின்றது? அந்தப் பெண் யார்? அஃது ஏன் வருத்துகின்றது?' என்ற வினாக்கள் எழுகின்றன. இவற்றிற்குரிய விடைகள் முழுவதும் அந்த அரிய சொற்றொடருக்குள் தொக்கி நிற்கின்றன.

வள்ளுவர் பெருமான் தம் காமத்துப்பாலை ஒரு நாடகம் போல் ஆக்கியுள்ளார். (அதில் கூறப்பெறும் செய்திகள் அனைத்தும் நாடக வழக்காக அமைந்தவை). செய்திகளைக் கூறும் தலைவி, தோழி, தலைவன் முதலியோரும் நாடக வழக்காகப் படைக்கப் பெற்றவர்கள் என்பதை நினைவிலிருத்திக் கொண்டு காமத்துப்பாலை அநுபவிக்க வேண்டும். கவிஞர் பெருமான் திருக்குறளின் மற்றப் பகுதிகளைத் தற்கூற்றாக அமைத்ததுபோல் காமத்துப்பாலை அமைக்கவில்லை. இப்பகுதியில் வரும் கூற்றுகள் யாவும் பிறர் வாயிலாக வெளிப்படுபவை. இவை யாவும் அகத்துறைகளாக வெளிப்படுகின்றன.

களவியல் என்பது 'காதல் சேர்க்கை'. காதலர் சேர்வதற்கு முதலாவது நிகழ்ச்சி அவ்விருவரின் சந்திப்பு. சோலையில் ஒரு பருவமங்கை தனித்து நிற்கின்றாள்; ஆங்கு ஓர் இளைஞன் அந்த அணங்கைக் காண்கின்றான். அணங்கின் அழகு அவ்விளைஞனை வருத்துகின்றது. இதுதான் 'தகைஅணங்கு உறுத்தல்' என்பது. அம்மெல்லியலாளின் பேரெழிலால் தாக்கப்பெற்ற இளைஞன் அம்மங்கை நல்லாளைப்பற்றி எண்ணமிடுகின்றான். அவன் உள்ளப் பெருக்கம் ஊற்றெடுத்தோடும் அழகே இந்த அதிகாரத்தின் பாக்கள் பத்தும். இவையனைத்தும் விலையில்லா மாணிக்கங்கள்.

இந்த அதிகாரத்தின் முதல் குறள் மிகவும் கம்பீரமாக நடைபெறுகின்றது. நாடக அரங்கில் நின்று கொண்டிருக்கும் அழகிய அரிவையின் உருவைக் கண்ட, தேர்ந்த ஆண் நடிகன் எவ்வளவு பரபரப்போடு செயற் படுவான் என்பதை முதல் குறள் ஓவியம் தெள்ளிதிற் தெரிவிக்கின்றது. தேன் பிளிற்றும் பூஞ்சோலை நடுவே நிற்கும் மயிலனைய மங்கையின் கட்டழகால் சொக்கிய தலைவன்,

**அணங்குகொல் ஆய்மயில்**
**கொல்லோ ! கணங்குழை**
**மாதர்கொல் ! மாலும்என்**
**நெஞ்சு (1)**

என்று மருள்கின்றான். கனங்குழை - கனத்த காதணியை யுடைய இப்பெண்[8] அணங்குகொல் - தெய்வப் பெண்ணோ? அன்றி ஆய்மயில் கொல் - ஆராய்ந்தெடுக்கப் பெற்ற மயிலோ' அல்லது, மாதர்கொல் - ஒருமானுடப் பெண்தானோ? என் நெஞ்சு - என் மனம், மாலும் - மயங்கி நிற்கின்றதே என்று கூறி அவள்வயத்தே தன்னைப் பறி கொடுத்துவிட்டான்.

இங்ஙனம் முதல் குறள் பேசுகின்றது.

**2. புணர்ச்சி மகிழ்தல்:** இது களவியலில் மூன்றாவது அதிகாரம். தான் காதலித்த பெண்ணின் தகுதியால் தலைவன் தாக்கப்பெற்றான். பின் தான் காதலித்த பெண்ணின் குறிப்பை அறிந்தான். (அதிகா. - 2). அப்பெண் தன்னை விரும்பியதை அறிகின்றான். 'இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்.' இருவரும் கூடி இன்புற்றனர்

8. காதில் கனமான ஆபரணத்தை அணிதல் பெண்களுக்கு அழகும் சிறப்பும் ஆகும் எனப் பண்டைக் காலத்தில் கருதப்பெற்றதாகத் தெரிகின்றது. இதுபற்றியே வள்ளுவர் 'கனங்குழை' என இயம்புகின்றார். இன்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் பழைய தமிழ்மக்கள் நமக்குக் கனங்குழையை – பூச்சிக்கூடு எனப் பெயரால் வழங்குவது – நினைப்பூட்டுகின்றனர்.

- கந்தர்வ முறையால்[9]. இதுகாறும் காணாப் புத்தின்பத்தை இருவரும் எய்தினர். இன்பம் இருவருக்கும் பொது எனினும் அம்மங்கை பெண்ணியல்பால் வாய்விட்டுக் கூறவில்லை. ஆனால் தான் அம்மங்கைபால் நுகர்ந்த இன்பத்தை எண்ணி எண்ணி மகிழ்கின்றான் இன்பக் கடலாடிய ஆணழகன். புணர்ச்சியை மகிழ்ந்து கூறும் முறையில் யாக்கப் பெற்ற பாக்களைக் கொண்ட அதிகாரமாதலின் இது 'புணர்ச்சி மகிழ்தல்' என்னும் பெயர் பெற்றது.

இந்த அதிகாரத்தின் முதற்குறள் இதன் கொடுமுடி என்று எண்ணத்தக்க முறையில் அமைந்து கிடக்கின்றது. கலவியினால் தான் பெற்ற இன்பத்தை அப்படியே ஓவியம் போல் காட்டுகின்றான் தலைவன்.

**கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து**
**உற்றுஅறியும் ஐம்புலனும்**
**ஒண்டொடி கண்ணே**
**உள (21)**

மனிதன் இன்பத்தை நுகர்வதற்கு இறைவனால் அருளப் பெற்ற வாயில்கள் ஐந்து. அவை கண், காது, வாய், மூக்கு, உடல் (மெய்) என்பவை. இந்த ஐந்தின் வழியாகவே மக்கள் அனைவரும் இன்பம் அடைகின்றனர். இவ்வைம் புலநுகர்ச்சியையும் ஒரே காலத்தில் ஓரிடத்தில் பெறுவது அரிது. கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐந்து கருவிகளின் இன்ப நுகர்ச்சியும் (ஒரு சங்கீத கச்சேரி போல்) மங்கையிடம் தான் உள்ளன என்று இயம்புகின்றான் தலைவன். அவள் அழகை - அன்பைப் பருகும் இன்பத்தைக் - கண்கள் கொண்டன. அக்குயிலின் இசையை - உண்ணும் இன்பத்தைச் - செவிகள் ஏற்றன. அப்பணி மொழியாளின் பாலொடு தேன் கலந்தன்ன திருவாய் அமிழ்தத்தை மாந்தி வாய் இன்பம் பெற்றது.

9. உடலால் புணரவில்லை, உள்ளத்தால்தான் புணர்ந்தனர் என்று இருவேறுபட்ட கருத்துகள் உண்டு.

அப்பாவை பூமேனியின் இயற்கை மணத்தையோ, செயற்கை மணத்தையோ மூக்கு நுகர்ந்து இன்புற்றது. அம் மடமயில் உடலொடு பொருந்தி யாக்கை பெற்ற இன்பத்துக்கு அளவே இல்லை. இப்படியாக ஐவகை இன்பத்தையும் ஒருங்கே பெறவல்ல ஒரு பொருள் உலகத்தில் உண்டு என்றால் அப்பொருள் பெண்ணே எனத் தலைவன் வாயிலாக வள்ளுவனார் விளக்குகின்றார்.

இந்தக் குறள்மணியை அப்படியே எடுத்துச் சிறிதும் சுவை குன்றாமல் இடமறிந்து தமது பெரிய புராணத்தில் காதல் விளையாட்டில் தேர்ந்த சுந்தரமூர்த்தி காதையில் ஒரு பாடலில் பொருத்தி இன்புறுகின்றார் சேக்கிழாரடிகள் என்று ஈண்டுக் குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமாகும்.

**பண்டுநிகழ் பான்மையினால்**
**பசுபதிதன் அருளாலே**
**வண்டிமிழ்பூங் குழலாரை**
**மணம்புணர்ந்த வன்தொண்டர்**
**புண்டரிகத் தவள்வனப்பைப்**
**புறங்கண்ட தூநலத்தைக்**
**கண்டுகேட்டு உண்டுஉயிர்த்துஉற்று**
**அமர்ந்திருந்தார் காதலினால்**[10]

என்ற இப்பாடலில் வள்ளுவப் பெருந்தகையின் குறள் மணி அற்புதமாகப் பதிக்கப்பெற்றிருப்பதைக் கண்டு இன்புறத் தக்கது.

**3. நலம் புனைந்து உரைத்தல்:** இது களவியலின் நான்காம் அதிகாரம். காதலியைக் கண்டு, அவளது குறிப்பை அறிந்து அவளோடு இன்பக் கடலாடிய தலைமகன், அவளது கூட்ட இன்பத்தை மகிழ்ந்து உரைத்தான் சென்ற அதிகாரத்தில். இங்கு அந்த நங்கையின் நலத்தைப் புனைந்து உரைத்து மகிழ்கின்றான். நலம்

10. பெரிய புரா. ஏயர்கோன் – 267

சிறப்பாக உள்ளது அவளது அழகேயாகும். எனவே, அப்பூங்கொடியின் அழகிய உறுப்புகளை தனித்தனியே அகக்கண்ணாலும் நோக்குகின்றான். அவற்றிற்கேற்ற பொருள்களும் உலகத்து உண்டோ எனத் தேடுகின்றான். எந்தச் சிறிய பொருளும் தன் காதலியின் எழிலுக்கு ஈடாகாதென உணர்கின்றான். புணர்ச்சி மகிழ்ந்த காதலனுக்கு அவ்வாறு தோன்றுவதில் வியப்பொன்றும் இல்லை. கண்ணகிபால் புத்தின்பம் நுகர்ந்த கோவலன் மெய்ம்மறந்து நலம் புனைந்து உரைத்தல் பற்றிச் சிலப்பதிகாரத்தில் இளங்கோஅடிகள் அள்ளிப் பொழியும் தீந்தமிழ்ச்சொற்கள் இவை:

மாயிரும் பீலி மணிநிற மஞ்ஞை, நின்
சாயற்கு இடைந்து தண்கான் அடையவும்
அன்னம் நன்னுதல்! மென்னடைக்கு அழிந்து
நன்னீர்ப் பண்ணை நளிமலாச் செறியவும்;
அளிய தாமே, சிறுபசுங் கிளியே!
குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த,நின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியும்
மடநடை மாறு! நின் மலர்க்கையின் நீங்கது
உடன்உறைவு மரீஇ ஒருவா ஆயின!
. . . . . . . . . . . . . . . . . . . . . .
மாசறு பெண்ணே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறல் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே என்கோ!
தாழிருங் கூந்தல் தையால்! நின்னை என்று
உலவாக் கட்டுரை பலபா ராட்டி[11]

11. சிலம்பு - மனையறம்படுத்த - 53-102, 73

இவ்வாறு மகிழ்கின்றான் கோவலன். பொருத்தமான இடத்தில் பொருத்தமான பகுதியைப் பிற இலக்கியங்களி லிருந்து காட்டும் இராய.சொவின் புலமையைப் பாராட்டுகின்றோம்.

நம் வள்ளுவனார் படைத்துக் காட்டும் தலைவன் அவளையே முன்னிலைப்படுத்தாது, படர்க்கையில், தன் காதலியின் நலனைப் புனைந்து உரைக்கின்றான். அவன் அனிச்சம் என்ற மெல்லிய மலரை நோக்குகின்றான். அதனைக் கண்டவுடன் மகிழ்ச்சி அடைந்து அதற்கு வாழ்த்தும் கூறுகின்றான்.

**நன்னீரை ! வாழி, அனிச்சமே ! நின்னினும்**
**மென்னீரள், யாம்வீழ் பவள் (31)**

'ஏ அனிச்சப் பூவே! நீ வாழ்வாயாக. நீ நல்ல தன்மையையுடையாய்! எனினும் எம்மால் விரும்பப்பட்ட அணங்கு நின்னைவிட மெல்லிய நீர்மை வாய்ந்தவள்' என உரைக்கின்றான். அவனுடைய விருப்பத்திற்கு இலக்கான மங்கை நல்லாள் அனிச்சத்தை விட மெல்லியலாள் என அவன் தீண்டி உணர்ந்தானாதலின், தன் காதலியை நோக்கக் கேவலமான அந்த அனிச்சம் வாழ்வதில் அவனுக்குத் தடை இல்லை.

**4. நாணுத் துறவு உரைத்தல்:** இது இன்பத்துப் பாலில் ஆறாவது அதிகாரம். காதற்சிறப்பைச் சொல்லி மகிழ்ந்த தலைவன் (5-வது அதிகா.) ஈண்டு தன் நாணத்தை முழுதும் துறந்து வாய்வெருவுகின்றான். தலைவிக்கும் இதே நிலை தான். நாணத்தைத் துறந்து சொல்லுதல், 'நாணுத துறவு உரைத்தல்' ஆகும்.

நாண் துறந்த தன்மையை வள்ளுவர் பெருமான் தலைவன்-தலைவி ஆகிய இருவர்பாலும் ஏற்றுகின்றார். ஆயினும் தலைவன் மீதே மிதமிஞ்சி சுமத்துகின்றார். இந்த அதிகாரத்தின் பத்துப் பாக்களில் ஏழு தலைவன் கூற்றாகவும் மூன்று தலைவி கூற்றாகவும் அமைகின்றன.

இருவர் முறைக்கும் வேறுபாடு மிகப் பெரிது. பெண் கூற்றைப் பெண்ணியல்புக்கேற்றவாறு மிக்க நயமாக - நுணுக்கமாக - நாகரிகமாக - அமைத்துக் காட்டுகின்றார். இந்த அதிகாரத்தில் மடல்பற்றிய கருத்தை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மடல் ஏறும் கருத்தைத் தமிழ்க்கடல் விரும்பவில்லை. அஃது அநாகரிகமான செயல் என்பது அவர்தம் கருத்தாகும்.

எனினும் இக்கருத்தை விளக்காமல் விட்டு வைக்கவில்லை. மடலேறுதல் என்பது விருப்பம் மேலிட்ட ஒரு பெண்ணை அடைவதற்கு கையாளப்பெறும் முறையாகும். பனங்கருக்கால் ஒரு குதிரையைச் செய்து, அதன் மீது ஏறித் திருவீதியை ஒருவன் பவனி வர வேண்டும். அப்போது தான் காதலித்த பெண்ணின் உருவத்தை எழுதிய படத்தைத் தன் கையில் வைத்திருப்பான். பெற்றோர் இதனைக் கண்டு நாணித் தன் மகளை அவனுக்கு மணம் செய்விப்பர். அல்லது ஊர் மக்கள் அப்பெற்றோரைத் திருமணத்திற்கு இணங்கச் செய்வர். இது பற்றித் திருமங்கையாழ்வார் செய்த சிறிய திருமடல், பெரிய திருமடல் என்ற இரண்டு இலக்கியங்கள் மிகுபுகழ் பெற்றன. இதனை முன்னர் விளக்கியுள்ளேன். நம் தமிழ்க்கடல் பதிப்பித்த வருணகுலாதித்தன் மடலை முன்னர்க் குறிப்பிட்டேன்.[12]

வள்ளுவப் பெருந்தகை காதலன்[13] களவு முறைப்படி இன்பம் நுகர்ந்து களிக்கின்றான். அவளை மடலூர்ந்தாவது மனையாளாக அடைய முயல்கின்றான். அவளும் தனிமை பொறாது அவனை அடையும் அவா மிகுதியால் நாணம் துறந்து பேசுகின்றாள். எனவே, முன் அதிகாரங்களில் குறிப்பிட்டவாறு இவ்வளவு நெருங்கி அளவளாவி இன்பம் நுகர்ந்த இப்பெருங்காதலர் முறைப்படி மணந்து

12. இந்நூல் – பக் – 136
13. வள்ளுவர் இன்பத்துப்பால் முழுவதும் நாடக வழக்காகப் படைத்துக் காட்டப் பெற்றது. இதனை நினைவில் வைக்க வேண்டும்.

கொள்வதற்கு ஏதேனும் தடை தோன்றியிருத்தல் வேண்டும் என்று ஊகிக்க வேண்டியுள்ளது. முதலில் காதல் கொண்ட ஆணும் பெண்ணும் வேறு எவர் தலையீடுமின்றித் தாங்களாகவே கூடி உறவாடி இன்புற்று மகிழ்ந்து பின்னர் திருமணம் செய்து கொள்ளுதல் என்ற முறை நம் தமிழ்நாட்டில் பண்டை நாளில் பெரிதும் இருந்து வந்ததாகத் தெரிகின்றது. இம்முறையை வள்ளுவர் படைத்த தலைமகனும் தலைமகளும் முதற்படியை ஒல்லும் வகையால் கடந்து விட்டனர். இரண்டாம்படி ஏறும்போது தடை தோன்றுகின்றது. காரணம் யாதாக இருக்குமோ? வகுப்போ? சமயமோ? பணமோ? அன்றி அவை போன்ற பிற எவையோ? காரணம், யாதாயினும் என்? இவ்வளவு தூரம் சென்று இன்பம் கரைகாணாதெய்தி அறவழி நிற்கும் வள்ளுவப் பெருந்தகை படைத்த காதலர் எதையும் பொருட்படுத்தி அஞ்சுவரோ? துணிவு கொண்ட ஆண் மகன் மடலூரமுன் வருகின்றான்.

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி (51)

பெண்களிடத்தில் காமத்தை அநுபவித்துவிட்டு அவ்வநுபவிப்புக்கு ஏற்படும் தடை காரணமாக வருந்திய ஆண் மக்கட்கு அவ்வின்ப நுகர்ச்சிக்குத் துணை செய்ய வல்லது 'மடல்' என்ற ஒன்றைத் தவிர வேறில்லை என்று கூறுகின்றான் தலைமகன்.[14]

காதல் நோயால் தாக்கப்பெற்ற தலைவிபால் திரும்பலாம். நோயால் தாக்குதல் ஒன்றே எனினும், தனது மென்மைக்கேற்ப அவள் மென்மையாகப் பேசுகின்றாள்.

நிறையரியர் மன்னளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும் (58)

14. இம்முறை செயற்பட்டதாக இலக்கியம் இல்லை. பயமுறுத்துவதற்கு இம்முறை பயன்பட்டதாகவே கொள்ள வேண்டும். 'புலி வருகிறது, புலி வருகிறது' என்று சொல்லிப் பயமுறுத்துவது போல.

ஐயோ! காமத்துக்குக் கண்ணில்லையோ? "காமமானது, 'பெண்கள் நிறையினாலே அருமையுடையார்; அன்னார் மிகவும் கருணை செய்தற்குரியார்;' என்று கூடக் கருதி இரங்காது அவர் மறைதலையும் மீறி அம்பலமேறி வெளிப்பட்டு விடுகின்றதே" என்று தனது நிலையைப் பொதுவாகப் பெண்ணினத்தின் மேலேற்றிச் சொல்லு கின்றாள்.

இவ்வாறு படர்க்கையில் பொதுவாகப் பேசிய தலைவி, அடுத்துத் தன்னையே முன்னிலைப் படுத்தியும் கூறிக்கொள்ளுகின்றாள்.

அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும், மருண்டு (59)

"என்னுடைய காமமானது, எல்லோரும் இதுவரை என் நிலையை அறியவில்லை என்று கருதியே தெருவின் கண்ணே மயங்கிச் சுற்றுகின்றது. என்னை இரகசியமாக இருக்கவிடாது வீதிவரை இழுத்து விட்டுவிட்டதே இந்தப் பொல்லாத காமம்! அந்தோ! இஃதென்னை?" என் கின்றாள்.

காலச் சுருக்கம் கருதி கற்பியலில் சில இடங்களைக் காட்டி வள்ளுவரை நிறைவு செய்ய நினைக்கின்றேன். இந்த இயலில் 18 அதிகாரங்கள் உள்ளன. இவை 'பிரிவாற்றாமை' முதல் 'ஊடல் உவகை' ஈறாக உள்ளவை.

**8. படர் மெலிந்து இரங்கல்:** மணம் புரிந்தபின் காதலன் ஏதோ ஒரு காரணம்பற்றிப் பிரிகின்றான். அவன் பிரிவை ஆற்றாத காதலி துன்பத்தால் மெலிவெய்தி வருந்துதல் பற்றி இவ்வதிகாரம் பகர்கின்றது. படர் – துன்பம்; மெலிதல் – இளைத்தல்; இரங்குதல் – வருந்துதல். இதனைத் தலைவி தன் தோழிபால் தலைவனின் பிரிவு தன்னால் ஆற்ற முடியாத துன்பத்தைப் பகர்ந்து அலமருகின்றாள். காமத்துப் பாலில் இஃது ஒன்பதாவது அதிகாரம்.

தோழி, 'நீ இப்படி வருந்துதல் தகுமா? நின் நாணத்துக்கு இஃது அடுக்காதே' என்கின்றாள். இதற்குத் தலைவி தோழியை நோக்கி 'நான் என் செய்வேன்?' என்கின்றாள்.

**மறைப்பேன்மன் யானிஃதோ நோயை; இறைப்பவர்க்கு**
**ஊற்று நீர்போல் மிகும் (81)**

'இந்நோயை நான் மறைத்துத்தான் பார்க்கின்றேன். ஆனால் அது குறைகின்றதில்லையே! இறைக்கின்றவர்க்கு ஊற்று நீரானது எப்படிப் பெருகி வருமோ அவ்வாறு அதிகமாகி வருகின்றது இக்காமநோய். யான் செய்யுமாறு என்?' என்று பேசுகின்றாள் தலைவி.

**9. பசப்பு உறு பருவரல்:** இது இன்பத்துப் பாலில் 11வது அதிகாரம். கற்பியல் பகுதியில் 3வது அதிகாரம். இங்கு பசப்பு என்பது பிரிவாற்றாமையால் வரும் ஒரு நிறமாற்றம். நாயகன் பிரிவை ஆற்றாத நாயகி அதனாலேயே நிறவேறுபாட்டால் அடையும் துன்பம்பற்றிக் கூறுவது. பருவரல் - துன்பம். பிரிவினால் பசலை என்ற ஒரு நிறத்தையடைந்து தலைவி வருந்துதல் கூறும் பசப்புறு பருவரல் என்னும் இந்த அதிகாரத்திலுள்ள பத்துப் பாக்களும் தலைவி கூற்றாகவே வருகின்றன. மேனி பசந்த தலைவி கூறுகின்றாள்.

**நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன்; பகர்ந்தஎன்**
**பண்பியார்க் குரைக்கா பிற (101)**

'என்னை விரும்பி ஏற்ற தலைவருக்குப் பிரிவுக்கு அன்று உடன்பட்டேன்; இன்று நிறம் பசந்த என் இயல்பை யாரிடம் முறையிடுவேன்? முதலில் என்னை நயந்த அவர், பின்னர் அவர்பாட்டுக்குப் பயணம் வைத்துக் கொண்டு விட்டார். நானும் அவரைப் பிரியவிட்டு விட்டதால் எப்படியோ அவர் பிரிவை உடன்பட்டேன் என்பது நிச்சயம். இப்பசப்பு வந்து ஏன் என் பிராணனை வாங்குகிறது? இந்தப் பசப்புக்கு எவ்வளவு ஆணவம்?'

அருமையான விளக்கம்.

**10. தனிப்படர் மிகுதி:** இஃது இன்பத்துப் பாலில் 12வது அதிகாரம். 'தனிப்படர் மிகுதி' என்பது தனிமையாகிய துன்பப் பெருக்கம் எனப் பொருள்படும். காதலன் தன்னைப் பிரிந்து சென்றதால் ஆற்றாது மேனி வெதும்பி, கண்ணீர் உகுத்து, நிறம் மாறிய ஆரணங்கு, தனிமை தாங்காது தளர்கின்றாள். அன்னாளின் தனிமை பொறாத் துயர்க்கடலை உரைப்பதே இந்த அதிகாரம். இதிலுள்ள பத்துப் பாக்களும் காதலியின் கூற்றாகவே அமைந்துள்ளன. புத்தின்பம் நுகர்ந்து உடன் பிரிந்த காதலர் தனிமை பொறாது ஆராத் துயர் உறுதல் இயல்பேயன்றோ? அத்துயர் பிரிவுற்ற ஆண் பெண் இருபாலார்க்கும் ஒருபடித்தாக இருக்க வேண்டியதே முறை. இங்கு வள்ளுவப் பெருந்தகை தனிப்படர் மிகுதியை முற்றும் காதலிபால் ஏற்றியுள்ளார்.

'தலைவன் அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்தானாதலின் தனிப்படர் மிகுதி அவன்கண் இல்லையாயிற்று' என்று உரைப்பர் பரிமேலழகர். பிரிந்தது எது நோக்கியாயினும் பிரிவுத்துயர் உணர்வு எவ்வாறு அவனிடம் இல்லாது போகும்? இவ்வாறு கூறுவது உளவியல் உண்மைக்கும் பொருந்தாது. அவனிடம் அத்துன்பம் இருக்கத்தான் செய்தது. ஆயினும் அவன் 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்ற உணர்வுகளால் அதனை அடக்கிக் கொள்ளுகின்றான் என்று கருதுதல் தான் பொருத்தமாகும். பிரிந்த செய்கை அவனுடைய தாகலின், பிரிவு நல்கிய அவனைக் கடியும் முறையில் தலைவியின் துயரையே காட்டி வருகின்றார் ஆசிரியர். அம்முறையிலேயே இத் 'தனிப்படர் மிகுதியும்' ஆக்கப் பெற்றுள்ளது என்று கொள்ளலே ஏற்புடைத்தாக அமைகின்றது. பிரிவுத்துயர் அவளைப் போல் அவனுக்கு இல்லையென அவள் கூற்றாக ஆசிரியர் கூறுவது கொண்டு உண்மையிலேயே அவன் அந்நோயினின்றும் நீக்கப் பெற்றான் எனக் கூறுதல் ஆகாது. 'அவன் பிரிந்து

போனான்; இன்னும் வாராமலும் உள்ளான்' என்ற சினத்தால அவன் இவ்வுணர்வு அற்றவன் எனத் தலைவி கடிவது இயல்பேயன்றோ? இதுவும் ஒரு விதத்தில் உளவியல் உண்மைக்குப் பொருந்துவதாக அமைகின்றது. இம்முறையிலேயே இந்த அதிகாரம் அமைகின்றது.

**தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே**
**காமத்துக் காழில் கனி (111)**

என்பது முதல் பாட்டு. "தாம் வீழ்வார் - தாம் விரும்புகின்ற கணவரால், தம் வீழப் பெற்றவர் - தம்மை விரும்பப்படும் பெண்கள்; காமத்துக்காழ் இல்கனி - காம நுகர்ச்சி என்னும் வித்து இல்லாத பழத்தை; பெற்றாரே பெற்றார் ஆவர். 'பெண்ணாகிய நான் மட்டும் அவரைக் காதலித்து என்ன பயன்? தாம் காதலிப்பது போல் கணவராலும் காதலிக்கப் படும் மகளிரல்லவா காம நுகர்ச்சியாகிய கனிச்சாற்றை அருந்தவல்லார்? என்நிலை அவ்வாறாயிற்று' என்று வருந்துகின்றாள் காதலி.

**11. உறுப்பு நலன் அழிதல்:** பிரிவுத்துயரால் வருந்தும் காதலியின் உறுப்புகள் வாட்டம் அடைதலைக் கூறுவது இந்த அதிகாரம். இன்பத்துப்பாலில் பதினாறாவது அதிகாரம் இது. உறுப்பு - அவயவம்; நலன் - அழகு. அழிதல் - கெடுதல். உறுப்பு நலன் அழிதல் - உடம்பில் காம ஊற்றுகளாக உள்ள நற்பகுதிகள் வனப்பு இழத்தல். மாலைப் பொழுதைக் கண்டு ஏற்பட்ட வருத்தம் பொங்கி எழ (15வது அதிகாரம்.) அவள் உறுப்புகள் சோர்வடை கின்றன. தலைவிக்கு உயிரனையாளாகிய தோழியால் தன்னால் பெரிதும் போற்றிக் காக்கப்பெறும் உறுப்பு நலன் அழிதலைப் பொறுக்கக் கூடவில்லை. தோழியானவள் தலைவி அழகிழத்தலுக்கு ஆற்றாளாகித் தலைவியை நோக்கி உரைக்கின்றாள்.

**சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உன்னி**
**நறுமலர் நாணின கண் (151)**

'ஆற்றாமைச் சிறுமையை நம்மிடம் நிற்க வைத்து நீண்ட யாத்திரை போன அவரையே நினைத்தலால் நின் கண்கள் நல்ல பூக்களுக்கு வெட்கம் அடையும் நிலைக்கு வந்து விட்டன. குவளை, தாமரை முதலான பூக்கள் அன்று நின்கண்களுக்குப் போட்டியிட வந்து ஆற்றாமல் தோற்று நாணமடைந்தமை இன்று கதையாகி விட்டது. அவற்றை வென்று பொலிவெய்து விளங்கிய நின் அஞ்சனம் தோய்ந்த வாட்கண்கள், இன்று அழுதழுது அருவிபோல் நீர் உகுத்து ஒளியிழந்து கேவலம் அம்மலர்கட்குப் பின்னிடும் நிலையை எய்திவிட்டனவே.

**12. குறிப்பு அறிவுறுத்தல்:** இஃது இன்பப் பகுதியின் இருபதாம் அதிகாரம். குறிப்பு அறிவு உறுத்தல் என்றால் என்ன? ஒருவர் குறிப்பை மற்றொருவருக்குக் காட்டுதல். இது பிரிந்து சென்ற காதலன் திரும்பி வந்த பிறகு நடைபெறும் நிகழ்ச்சி. காதலன் இல்லம் வந்து சேர்ந்து விட்டான். "பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?"

காதலியைப் பிரிந்து சென்று திரும்பிய காதலன், அவன் தவறுதலை அறிவுறுத்துவதுபோல், அவன் வரவால் தோன்றிய மகிழ்ச்சியை மறைத்து ஒரு மாதிரியாகக் கோணி நின்ற நங்கையைப் புகழ்ந்து பாராட்டுகின்றான். 'நீ எவ்வளவு மறைத்தாலும் பயனில்லை. உன் கண்கள் உன் உள்ளத்தை உள்ளவாறு உரைக்கின்றன.'

> கரப்பினும் கையிகந்து ஒல்லா நின்உண்கண்
> உரைக்கல் உறுவதொன்று, உண்டு (191)

'கரப்பினும் - மறைத்தாலும்; கையிகந்து - அதனைக் கடந்து; ஒல்லா - கட்டுப்படாமல். நின் உண்கண் - நினது மையுண்ட கண்கள்; உரைக்கல் உறுவது - சொல்லி நிற்பது; ஒன்று உண்டு - ஓர் இரகசியம் இருக்கின்றது. அதை ஏன் மறைக்கப் பார்க்கின்றாய்? 'கண்களைக் கட்டுப்படுத்த வலிமை இருந்தால் உன் முயற்சி பயன்படும். அஃது இல்லாதபோது வீண் முயற்சி எதற்கு?' என அவள் கண் மூலம் வெளிப்பட்ட காதலைப் பலபடப் பாராட்டிக்

கொண்டிருக்கும்போது அவள் ஆருயிர்த்தோழி தோன்று கின்றாள். தோழியிடம் காதலி நலத்தைப் புனைந்து நான்கு குறள்களில் கூறுகின்றாள்.

இன்பப் பகுதியில் கொடுமுடிகளாக இருப்பவை புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை என்ற இறுதி மூன்று இயல்கள். புலவி என்பது ஊடல். முதல் இரண்டு பாக்கள் தோழியின் கூற்று. தோழி தலைவியிடம் கூறுகின்றாள். முதல் குறளில் (221) "சிநேகிதையே, உன் கையிருப்பை இன்று நீ செவ்வையாகக் காட்டி விடல் வேண்டும்; தெரிகின்றதா? அவசரமாக அவரை ஆலிங்கனம் செய்துவிடலாகாது. புல்லாமல் இன்றிரவு புலவியை மேற்கொள்வாயாக! அதனால் அந்தப் பிரிவுத்துயரை நல்கிய மனிதர் அநுபவிக்கும் துன்ப நோயைப் பார்த்துக் கொஞ்சம் விளையாட்டுச் செய்யலாம்" என்று உரைக்கின்றாள்.

பின்னும் பகர்கின்றாள். ஒருகால் புலவியை நீட்டித்து விட்டால் ஆபத்தல்லவா? விளையாட்டு விபரீதமாக ஆகக் கூடாதே என்று நினைத்த தோழி கூறுவாள்;

> உப்பமைந் தற்றால் புலவி; அதுசிறிது
> மிக்கற்றால் நீள விடல் (222)

'புலவி என்பது என்ன தெரியுமா? கூர்மையாகக் கவனித்துக் கொள். புலவி உப்புக்குச் சமம். சமையல் செய்வதில் உப்புக் கலப்பு எவ்வளவு சுவை தருகின்றதென்பது உனக்குத் தெரியும். உப்பின்றேல் எல்லாம் சப்பென்று தான் இருக்கும். உணவு சுவையாக இருப்பதற்கு உப்பு எவ்வளவு இன்றியமையாததோ அது போலக் கலவி இனிப்பதற்குப் புலவி இன்றியமையாதது. ஆனால் உப்பைப் போல புலவியும் ஓர் அளவுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். உப்பு கூடினால் உணவு எப்படி இருக்கும்? கசக்குமல்லவா? புலவி அளவுக்குமேல் நீண்டாலும் கலவி கசப்பாக மாறிவிடும். எனவே புலவியாகிய உப்பை அளவறிந்து போட்டுக் கலவியாகிய உணவைச் சுவையுடையதாக்கு

வாயாக. 'உப்பைப் போட மறந்து விடாதே; அதிகமாகப் போட்டும் கெடுத்து விடாதே' என்று மிக அழகான எடுத்துக்காட்டோடு தலைவிக்கு அறிவுரை புகல்கின்றார் தோழியாக இருந்து புலவர் பெருமான். தோழியின் பேச்சைக் கடைப்பிடித்து வெற்றி பெறுகின்றாள் தலைவி. தலைவியைப் புலவி நீக்கிக் கூடி மகிழும் தலைவன், தலைவியின் புலவி அழகைப் புகழ்ந்து மகிழ்கின்றான் எட்டுப் பாக்களில்,

**'புலவி நுணுக்கம்'** *(24)* என்ற அதிகாரத்தில் புலவியின் நுட்பமான தன்மையைப் புலப்படுத்துகின்றார் புலவர் பெருமான். பள்ளியறையில் தலைவனோடு கூடியிருக்கும் தலைவி நுண்ணிய சில காரணங்களைக் கற்பித்துக் கொண்டு ஊடல் நிகழ்த்துவது பற்றி இந்த அதிகாரத்தில் கூறப் பெறுகின்றது. முதல் இரண்டு பாக்கள் தலைவி கூற்றாக அமைகின்றன. முதல் பாடல் தலைவி தலைவனை நோக்கிக் கூறுவது; இரண்டாவது தலைவி தோழியிடம் உரைப்பது. பின்வரும் எட்டுக்குறள்களும் தலைவன் கூற்றாக அமைகின்றன. இவை தலைவன் தோழியிடம் தலைவி புலவிக்குக் கொண்ட நுணுக்கத்தை விரித்துரைப்பனவாக அமைகின்றன.

*நுணுகிப் புலக்கும் தலைவி தலைவனிடம் சாற்றுவது:*

பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்த ! நின் மார்பு (231)

'பரத்த - பரத்தமையுடையாய்; பெண்ணியலார் எல்லாரும் - பெண்ணியல்பினையுடைய அனைவரும், கண்ணில் - அவர்கள் கண்களினால்; பொது உண்பர் - பொதுவாக நின் அழகைப் பருகுவர். நின் மார்பு நண்ணேன் - ஆதலால் அவரனைவரும் குடித்த எச்சிலாக்கிய நின் மார்பை நான் அணையேன்' என்று இயம்புகின்றான். 'பரத்தன்' என்பது பரத்தையின் ஆண்பால். அவன் புறத்தே போயிருந்தபோது எதிர்ப்பட்ட

*பெண்கள் யாவரும் கண்களால் பார்த்திருப்பார்களாம்! அதனால் காதலன் மாசுபடுத்தப்பெற்று விட்டானாம்! அதற்காகக் காதலனை அணுக மாட்டாளாம்! புலவிக்குக் கற்பித்த நுணுக்கம் அற்புதம்!*

*தோழியிடம் கூறுகின்றாள் தலைவி:*

**ஊடி இருந்தேமாத் தும்மினள்; யாந்தம்மை**
**நீடுவாழ் கென்பாக் கறிந்து (232)**

*'நாம் அவரோடு ஊடியிருந்தோம்; அவர் என்ன செய்தார் தெரியுமா? பலே ஆசாமி; உடனே ஒரு தும்மல் தும்மினார்; ஏன்? என் வாயைக் கிளறத்தான்! புலந்து வாய் பேசாது ஒரு பக்கமாகத் திரும்பிக் கொண்டிருந்த யான் அவர் தும்மியவுடன் தும்மியவர்க்குக் கூறும் ஆறுதல் மரபுப்படி அவரை நோக்கி "நீடுவாழ்க" என்று கூறுவேன் என்பது அவர் கருத்து. என்ன தந்திரம்?*

**'ஊடல் உவகை'** *(25) என்பது வள்ளுவர் தந்த இன்பப் பாவின் 25-ஆம் அதிகாரம். காமத்துப்பாவின் இறுதி அதிகாரம். ஊடல் உவகையாவது, ஊடலால் கூடல் இன்பம் சிறத்தல் கண்டு மகிழ்ச்சி பெறுதல். இந்த உவகை காதலன் - காதலி இருவர் மட்டும் நிலை பெறுகின்றது. ஊடலுவகைப் பாக்கள் அவ்விருவர் வாயினின்றும் வெளிவருகின்றன. இந்த அதிகாரத்தில் ஒரு குறள்:*

**உணலினும் உண்டது அறல்இனிது; காமம்**
**புணர்தலின் ஊடல் இனிது (246)**

*'உண்பதை விட உண்ட உணவு செரிப்பதே இன்பம் தருவது; அதுபோல் காமம் நுகர்வதிலும் இன்பம் தருவது ஊடலே'. இக்கூற்றில் பேருண்மை அடங்கியுள்ளது. இது ஒரு பெரிய தத்துவத்தை விளக்கி நிற்கின்றது. உண்டது அற்றுப் போவதற்குமுன் மேலும் மேலும் போட்டுக் கொண்டிருப்பது உடம்பைப் பிணிப்புண்டாக்குவதாம். உண்பது இன்பம் தருவதுதான். எப்பொழுது? முன் உண்டது செரித்த பிறகுதான். உணவு சுவையாக*

இருப்பதற்காகச் செரிமானம் ஆகாதவன் உண்ணக் கூடாது. எனவே, உண்டது அறுவதிலேயே இன்பத்தைக் காண்பான் அறிஞன். மேலும் நன்றாக உண்பதற்குக் காரணமாக இருப்பது உண்டறுதல். அதுபோல, கலவி பருகுவதற்குக் காரணமாவது புலவி. எனவே 'காமம் புணர்தலின் ஊடல்' இனிதாகின்றது!

இந்த அதிகாரத்தின் இறுதிக் குறள்கள் இரண்டும் முத்தாய்ப்பாக அமைந்து இன்பத்தின் கொடுமுடியை எட்டச் செய்கின்றன. வள்ளுவர் படைத்த காதற் செல்வி நிலவுப்பயன் நல்கும் நிலா முற்றத்தில் காதலனுக்குக் கலவியும் புலவியும் மாறிமாறி அளித்து அவனைக் களிப்புறுத்தித் தானும் களிப்புறுகின்றாள். அப்பெருமான் படைத்த காதற் செல்வனும் அவள் நலத்தைப் புனைந்து புனைந்து பாராட்டுகின்றான். எப்படி?

**ஊடுக மன்னோ ஒளியிழை; யாம்இரப்ப**
**நீடுக மன்னோ இரா. (249)**

என்று தன் காதலியையும் இரவையும் இரந்து இரந்து அவளையும் இன்பக் கடலாட்டித் தானும் அக்கடலுள் கிடந்து திளைக்கின்றான்.

**ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்கின்பம்**
**கூடி முயங்கப் பெறின் (250)**

'காமத்திற்கு இன்பம் தருவது ஊடல். அவ்வூடலை இன்பமாக முடிப்பது கூடி முயங்கல். கூடி முயங்கல் பெற்றாலொழிய ஊடல் இன்பம் தராது. ஊடல் இன்பம் தருவதுதான். எந்நிலையில்? கூடி முயங்கப் பெறுமானால். இந்தக் குறள் ஈடில்லாத இன்பப் பாடல். தமிழ்க்காதலர்க்கு, இதுவே வள்ளுவர் பெருமான் அளித்த இன்பக் கொடை. இன்னோர் உண்மையையும் ஈண்டுச் சிந்திக்கலாம். இதுவே காமத்துப் பாலின் (வள்ளுவர் குறளின்) இறுதிப்பாடல். 'அகர முதல எழுத்தெல்லாம்' என்ற முதற் குறள் 'அ' எழுத்தில் தொடங்குகின்றது. இறுதிக் குறளாகிய இது 'கூடி

முயங்கப்பெறின்' என்று முடிவதால் 'ன்' எழுத்தில் முடிகின்றது. எனவே இது தமிழ் நெடுங்கணக்கின் 'முற்றிலக்கியமாக' அமைகின்றது என்று கொள்ளலா மல்லவா?

வள்ளுவர் பெருமான் அளித்த 'இன்பப்பாலை' நாம் எல்லோரும் பருகுவதற்கேற்ப **'அமுல்பாலாக்கி'** நம்மை மகிழ்வித்த 'தமிழ்க்கடலை' வாழ்த்தி வணங்குகின்றோம்.

**2. திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி (1974)**[15]

திருக்கருவை என்பது கரிவலம்வந்த நல்லூர்[16] கருகாபுரி எனவும் வழங்கும். இத்தலத்து எம்பெருமான் பாலவண்ண நாதர்; அவர்மீது அதிவீரராம பாண்டியரால் இயற்றப் பெற்றது பதிற்றுப்பத்து அந்தாதி. வேறுபட்ட பலவகையான பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்டு விளங்குவதால் பதிற்றுப் பத்து என்ற பெயராயிற்று. முன்பாடலின் முடிவை (அந்தம்) அடுத்த பாடலின் முதல் (ஆதி) தொடர்வதால் அந்தாதி எனப் பெயர் பெற்றது. இந்நூல் தவிர, 'திருக்கருவை வெண்பா அந்தாதி', 'திருக்கருவை கலித்துறை அந்தாதி' என்ற வேறு இரண்டு நூல்களையும் இயற்றியுள்ளார். இவ்விரண்டினும் முன்னதே சுவைமிக்கது; உள்ளத்தை உருக்குவது. சொல்நயம் பொருள் நயம் மிகுந்து ஆற்றொழுக்கான இனிய கவிதை நடையில் நடைபெறுவது. இதனால் இது **'குட்டித் திருவாசகம்'** என்று தமிழ்ப்பெரு

15. வெளியீடு: அருள்மிகு சங்கர நாராயணசுவாமி திருக்கோயில், சங்கரநயினார் கோயில்.

16. இத்திருத்தலம் இராசபாளையத்தினின்றும் சங்கர நாராயணர் கோயில் செல்லும் வழியில் சங்கரநயினார் கோயிலுக்குச் சில மைல்கள் முன்னே உள்ளது. புகழ் பெற்ற சங்கர நயினார் கோயிலோடு இத்திருக்கோயில் சேர்த்து நிர்வகிக்கப் பெறுகின்றது.

இத்திருக்கோயில் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. பாண்டிய மன்னர் காலத்து இறுதியில் வாழ்ந்ததாகக் கருதப்பெறுகின்ற அதிவீரராம பாண்டியர் என்ற பெரும் புலவர் இப்பகுதியை ஆண்டதாகச் சொல்வர். இவர் ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்ததாகக் கணிப்பர் காலக்கணக்கர்.

மக்களால் போற்றப் பெறுகின்றது. இந்நூலுக்குப் பொழிப்புரை எழுதியவர் தமிழ்க்கடல் இராய.சொ. "இதுவும் திருமுறையோ?" என்று ஐயம் எழச் செய்யும் இடங்கள் பல.

இவை தவிர அதிவீரராம பாண்டியர் நிடத நாட்டை ஆண்ட நளன் என்னும் அரசனது வாழ்வை விளக்கும் **'நைடதம்'** என்ற தலைப்பில் ஒரு காவியத்தையும் விருத்த யாப்பில் வடித்துத் தந்துள்ளார். 'வெற்றிவேற்கை அல்லது நறுந்தொகை' என்ற ஒரு நீதிநூல் இவருடையது.[17]

'திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி' ஒரு பக்தி நூல் என்று பாராட்டப் பெறுவதற்கு அடியிற் கண்ட ஒரு பாடலே பெரிய சான்றாக அமைகின்றது.

> உரகா பரணத் திருமார்பும்
> உமையொப் பனையாள் இடப்புறமும்
> சிரமா லிகையும், புரிசடையும்
> செய்ய வாயும் கரைமிடலும்,
> வரதா பயமும், மழுமானும்,
> வயங்கு கரமும், மலரடியும்
> கருவா புரியான் வெளிப்படுத்திக்
> காட்சி கொடுத்து நின்றானே[18]

இப்பாடலில் அமைந்துள்ள சொல்லோவியம் சிவபெருமானின் திருவுருவத்தை நம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றது இல்லையா?

இதனைப் போலவே வரதுங்கராம பாண்டியன் பாடிய தனிப்பாடல் ஒன்று உண்டு. அது இது:

17. இலக்கியம் இயற்றவல்ல புலவர்கள் நீதிநூலும் இயற்ற விரும்புதல் அக்கால வழக்கம் போலும். அதனால் குமரகுருபரர் ஒரு நீதிநூலும் சிவப்பிரகாசர் மற்றொரு நீதி நூலும் இயற்றியுள்ளனர்.
18. திரு. கரு. பதிற். அந்தாதி – 9. உமை – பொதுப்பெயர். ஒப்பனை; கருகாபுரியில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையின் பெயர்.

அஞ்சல் என்ற கரதலமும் கணபணக்கங் கணமும்
அரைக்கிசைந்த புலிஉடையும், அம்புலிச்செஞ் சடையும்
கஞ்சமலர்ச் சேவடியும், கணைகழலும் சிலம்பும்,
கருணைபொழி திருமுகமும், கண்களொரு மூன்றும்
நஞ்சைஉண்ட மணிமிடறும், முந்நூலும் மார்பும்
நலந்திகழ்வெண் நீற்றொளியும், மறிமானும், மழுவும்
பஞ்சடிச்சிற் றிடையுடையாள் ஒப்பனைபா கமுமாய்ப்
பால்வண்ணன் உளத்திருக்கப் பயமுண்டோ எமக்கே.

*இப்பாடலும் இறைவன் இறைவியின் திருக்கோலத்தை நம் மனக்கண்முன் நிறுத்துவதைக் கண்டு மகிழலாம்.*

*இனி, இந்நூலில் நயம் மிக்க சில பாடல்களையும் அவற்றிற்கு இராய.சொ. மேற்கோளுடன் காட்டும் நயம் மிக்க உரைக்குறிப்பையும் காட்டுவேன்.*

(1) வேனில் சிலைவேள் தொடுகணைக்கும்
விளங்கும் மகளிர் உளங்கவரும்
பானல் கொடிய விழிவலைக்கும்
பற்றாய் வருந்தி... (4)

*என்ற நான்காம் பாடலின் பொழிப்புரைக்குப்பின் இராய.சொ.வின் உரைக்குறிப்பு: 'வேனில் வேள்கணை' என்ற திருவாசகப்பாடலைப் பெரிதும் தழுவியது இப்பாடல்' என்பது.*

வேனில் வேள்கணை கிழிந்திட மதிசுடு
மதுதனை நினையாதே
மானி லாவிய நோக்கியர் படிறிடை
மத்திடு தயிராகித்
தேனி லாவிய திருவருள் புரிந்த என்...
(திருவா. திருச்சத. 40)

*என்ற பாடலை இப்பாடலுடன் ஒப்பிட்டுப் பயின்றால் நயம் விளங்கும்.*

(2) நடித்தேன் பொய்க்கூடு எடுத்து, அவமே
 தன்னால் கழிய; இந்நாளில்
படித்தேன் உனது திருநாமம்;
 பண்டை வினையின் பற்றறுத்தேன்;
பிடித்தேன் பிறவிக் கடல்நீந்தப்
 பெரிய புணையா உனது அடியை
. . . . . . . . . . . . . . . . . . . . . . (5)

*இதில் உள்ள உரைக்குறிப்பு: "பாலனாய்க் கழிந்த நாளும்" என்ற அப்பர் சுவாமிகள் தேவாரத்துடன் இப்பாட்டு ஒப்பிடத் தக்கது. 'இறைவனடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர்.'*

பாலனாய்க் கழிந்த நாளும்
 பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
 மெலிவோடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்த நாளும்
 குறிக்கோவில்லாது கெட்டேன்
. . . . . . . . . . . . . . . . (அப்பர் தேவாரம் 4.61.9)

*இரண்டையும் ஒப்பிட்டு நோக்கினால் உண்மை தெளிவாகும்.*

பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவனடி சேராதார் (குறள் – 10)

*இதனையும் நோக்கலாம்.*

(3) முன்னைப் பிறவித் தவப்பயனோ ?
 முழுதும் அறியா மூடனிவன்
என்னக் கருத்தில் எண்ணியோ !
 யாதோ அறியேன், இரவுபகல்
கன்னல் பாகில் கோல்தேனில்
 கனியில் கனிந்த கவிபாட (6)

*இதில் உள்ள உரைக்குறிப்பு: "பத்தனாய்ப் பணிந்து அடியேன் தன்னைப் பன்னாள் பாமாலை பாடல்*

*பயில்வித்தான்" என்ற அப்பர் சுவாமிகளின் கருத்து ஒப்பு நோக்கத்தக்கது.*

*"கன்னல் பாகில் கோல் தேனில் கனியில் கனிந்த கவி" என்று தம் கவியைக் கூறுவது இவ்வாசிரியரின் பெரு மிதத்தைக் காட்டுகின்றது.*

(4) ஆண்ட குரவன் ஆவானை
அல்லல் பிறவி அறுத்தானை
வேண்டும் பதவி தருவானை
வெளிவீட்டு இன்பம் அளிப்பானை
. . . . . . . . . . . . . . . . (7)

*இதன் குறிப்புரை: "அல்லல் பிறவி அறுப்பானே ஓ" என்பது திருவாசகம்.*

*சிவபுராணத்தில்,*

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ் (91–92)

*என்ற அடிகளுடன் ஒப்பிட்டு நோக்கினால் ஒப்பு தெளிவாகும்.*

(5) எவன்உயிர்க்கு உயிராய் எள்ளும்எண் ணெயும்போல்
எங்கணும் இடையறா நின்றான்
எவன்அனைத்து உலகும் என்றுகாத் தழிக்க
இறைமைசால் மூவுருவு எடுத்தான்
எவன்முதல் இடைஈறு இன்றிஎஞ் ஞான்றும்
ஈறிலா மறைமுடி இருப்பான்
அவன்எனைப் புரக்கத் திருக்களா நீழல்
அமர்ந்தருள் புரிந்தனன் உளனே. (16)

*இதன் உரைக்குறிப்பு: இப்பாடல்* 'உயர்வுற...மதிநலம்' *என்ற நம்மாழ்வாரின் பாசுரத்தின் கருத்தைத் தழுவியது.*

உயர்வுஅற உயர்நலம்
உடையவன் எவன் ?அவன்
மயர்வுஅற மதிநலம்
அருளினன் எவன் ?அவன்

அயர்வுஅறும் அமரர்கள்
　　அதிபதி எவன் ?அவன்
துயர்அறு சுடர்அடி
　　தொழுதெழு மன்னே (1.1:1)

என்பது திருவாய்மொழியின் முதல் பத்தின் முதற்பாசுரம்.

இந்த இரண்டையும் திரும்பத் திரும்பப் படித்தால் கருத்தும் சொற்போக்கும் ஒன்றுபோல் இருப்பதை அநுபவித்து உணர்ந்து மகிழலாம்.

(6) காரணம் ஏதென அறிகிலேன் தமியேன்
　　கல்தரு மனத்தினைக் கரைத்து
வார்அணி முலையாள் ஒப்பனை யோடு
　　மழுவிடை மேல்எழுந்து அருளி
. . . . . . . . . . . . . . . . . . (17)

இதன் உரைக்குறிப்பு: "கல்லைப் பிசைந்து கனியாக்கி" என்பது திருவாசகம்.

கல்லா மனத்துக்
　　கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன்
　　பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து
　　கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி. . . (திருவா. திருவம்மானை 5)

இரண்டிலுள்ள 'கல்லைப் பிசைந்து கனியாக்கி' என்ற தொடர்களை மீட்டும் மீட்டும் படித்து 'கல்லைக் கனியாக்கும்' வித்தையை அநுபவித்து மகிழலாம்.

(7) பெறுவது நினது திருவடிக் கமலம்,
　　பேசுவது உன்திரு நாமம்
உறுவது நினது திருஉரு வெளியாம்
　　உணர்வதுஉன் அருள்;அலாது உண்டோ ?
மறுஅறு சிறப்பின் மாசுஇலா மணியே !
　　. . . . . . . . . . . . . . . (19)

*இதன் உரைக்குறிப்பு: "ஈசனே மாசு இலாமணியே!" என்பது திருவாசகம்.*

'புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தேன்
என்பெலாம் உருக்கி எளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே

*இது திருவா. பிடித்த பத்து. 10*

*இரண்டு பாடல்களிலும் 'ஈசனே மாசிலாமணியே' அமைந்திருக்கும் நேர்த்தியை உன்னி உன்னி மகிழலாம்.*

**(8) மனத்தை யான்தினம் வணங்குவன் மின்என**
**வைகலும் நிலைஅற்ற**
**தனத்தை வாழ்வினை நிலைஎன மதித்துஉழல்**
**ஆசையில் தளராதே**
**புனத்து ழாய்முகில் போற்றிடும். (27)**

*இதன் உரைக்குறிப்பு: 'பேயாய் உழலும் சிறுமனமே' என்ற பாரதியின் பாடல் இதனோடு ஒப்பது. 'புனத்துழாய் மலையானே' என்பது தொண்டர் அடிப்பொடிகள்*

பேயாய் உழலும் சிறுமனமே!
பேணா யென்சொல் இன்றுமுதல்
நீயாய் ஒன்றும் நாடாதே
நினது தலைவன் யானேகாண்;
தாயாம் சக்தி தாளினிலும்
தரும மெனயான் குறிப்பதிலும்
ஓயா தேநின் றுழைத்திடுவாய்
உரைத்தேன் அடங்கி உய்யுதியால்[19]

மனத்தில்ஓர் தூய்மை இல்லை
வாயில்ஓர் இன்சொல் இல்லை
சினத்தினால் செற்றம் நோக்கித்
தீவிளி விளிவன்; வாளா

19. பா.க. வேதாந்தப் பாடல்கள் – மனத்திற்குக் கட்டளை.

புனத்துழாய் மாலை யானே !
பென்னிசூழ் திருவ ரங்கா ![20]
. . . . . . . . . . . . . . . . . . (30)

என்பது தொண்டரடிப் பொடிகள் அருளிய திருமாலையி லுள்ளது. இம்மூன்றும் மனத்தைப் பற்றியனவே.

(9) வணங்குஎ னத்தலை அளித்தனை;நின்புகழ்
வாழ்த்துஎன நாத்தந்தாய்;
இணங்குஎ னத்திருக் கூட்டமும் காட்டினை;
இனிப்பெறும் பேருண்டோ ?
. . . . . . . . . . . . . . . . . (28)

இதன் உரைக்குறிப்பு: 'வணங்கத் தலைவைத்து' என்ற திருவாசகத்தின் முதல் பகுதியின் சொல்லும் பொருளும் இப்பாடலில் அப்படியே எடுத்தாளப் பெற்றிருக்கின்றன. 'வாழ்த்தவாயும்' என்ற அப்பர் சுவாமிகள் தேவாரமும் ஈண்டு நினைக்கத் தக்கது.

வணங்கத் தலைவைத்து
வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார்
கூட்டமும்வைத் தெம்பெருமான்[21]

என்ற திருவாசகம் பகுதியை சொல்லும் பொருளும் அப்படியே எடுத்தாண்டுள்ளார்.

வாழ்த்த வாயும் நினைக்க நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை (5:90:7)

என்பது அப்பர் சுவாமிகளின் திருக்குறுந்தொகையில் உள்ளது.

(10) பெருமை சான்றநின் திருஎழுத்து ஐந்துமே
பெரும்புணை எனப்பற்றி
அருமை சான்றஇப் பவக்கடல் கடக்குமாறு
ஆசையில் துணிகின்றேன்
. . . . . . . . . . . . . . . . . (29)

20. திருமாலை – 30.
21. திருவா. திருப்பூவல்லி – 7.

இதன் குறிப்புரை: "ஐந்தெழுத்தின் புணை பிடித்து கிடக்கின்றேனை' என்பது திருவாசகம்.

'தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொற் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனியென்னே உய்யுமாறு என்றுஎன்று எண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை[22]

இரண்டையும் பயின்று நோக்கினால் அற்புதமான ஒப்புமையைக் கண்டு மகிழலாம்.

(11) உணராத நின்நிலையை
நீஉணர்த்த உணர்ந்ததற்பின்
புணராத தாள்தலையிற்
புணர்ந்ததுஎனப் புளகுஓங்கத்
தணவாமல் எனைஉனக்குத்
தந்தருளி இரண்டற்றேன்
. . . . . . . . . . . . . . . . . (42)

குறிப்புரை இது: 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' என்பது திருவாசகம். தாள்தலை என்பது தாடலை எனப் புணருமாப் போல இறைவனுடைய தாளும் நம்முடைய தலையும் சேருதல் வேண்டும்.

சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தைமகிழ சிவபுரா ணந்தன்னை[23]

என்பதன் கருத்து அந்தாதியில் அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம். தாள் + தலை - தாடலை. இக்கருத்தை என் 'சைவசமய விளக்கு'[24] என்ற நூலில் தெளிவாக்கியுள்ளேன்.

22. திருவா திருச்சதகம் - 27
23. திருவா. சிவபுராணம் அடி. 17–19
24. இது கடித உத்தியில் கண்ணுதலப்பனுக்குக் கார்த்திகேயன் கடிதங்களாக - அமைந்தது 51 கடிதங்கள். (வேங்கடல் வெளியீடு. 1984.) (இப்போது கிடைக்காது.)

**என் விளக்கம்:** "இவ்வுலக வாழ்வில் ஆன்மா ஆணவத்துடன் கூடியுள்ளது என்பதை நீ அறிவாய். ஆனால் அந்த உறவில் உறவு கொண்டவற்றுள் ஒன்றும் அறிவதில்லை. அதைப் போன்றே முத்தியிலும் ஆன்மாவும் இறைவனும் நெருங்கிக் கூடியுள்ளனர். ஆனால் அவர்களில் ஒருவருக்கும் இழப்பில்லை. அவர்தம் தனி இன்பமிகு மதிப்பும் மாறாமல் அப்படியே உள்ளன. இதைச் சித்தாந்திகள் "பசு பாசத்தில் அருந்தி நிற்கும் நிலை பெத்தம்; அது பதியில் அழுந்தி நிற்கும் நிலையே முத்தி" என்று விளக்குவர். இந்த அத்துவிதக் கலப்புக்குத் தமிழில் 'தாள்', 'தலை' என்று இரு சொற்களின் புணர்ச்சியை எடுத்துக் காட்டாகக் கொள்வது மரபு.

தலை ஆன்மாவையும் தாள் இறைவனையும் குறிப்பனவாகக் கொள்ள வேண்டும். அஃதாவது இறைவனது திருவடிகளில் ஆன்மாவின் தலை பொருந்து கின்றது என்பதே இதன் கருத்தாகும். தாளும் தலையும் தமிழ் இலக்கணப்படி புணரும்போது 'தாடலை' என்றாகும். 'தாள்' என்பதிலுள்ள 'ள்' மறைய, 'தலை'யிலுள்ள 'த', 'ட' ஆக மாறித் 'தாடலை' ஆகின்றது. இதனை இரு சொற்கள் எனக் கொள்ளவும் முடியாது; ஒருவிதத்தில் இஃது ஒரு சொல்; இன்னொரு விதத்தில் இருசொல். இதைப் போன்றதே இறைவனோடு ஆன்மா ஐக்கியப்படும் விதமும் என்பதே சித்தாந்தத்தின் முடிவாகும்."[25]

(12) சிந்தனை உனக்குத் தந்தேன்,
 திருவருள் எனக்குத் தந்தாய்;
வந்தனை உனக்குத் தந்தேன்;
 மலரடி எனக்குத் தந்தாங்
கைந்துணர் உனக்குத் தந்தேன்
 பரகதி எனக்குத் தந்தாய்
கந்தனைப் பயந்த நாதா!
 கருவையில் இருக்கும் தேவே! (63)

25. சைவசமய விளக்கு – பயனியல் கடிதம் – 43 (பக் 331)

*இந்தப் பாடலுக்கு இராய.சொ.வின் குறிப்பு இல்லை. நான் காட்டும் திருவாசக ஒப்புப் பாடல்.*

தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னைச்
சங்கரா ஆங்கொலோ சதுரர்
அந்தம்ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றொன்று என்பால[26]

*இரண்டையும் ஒப்புநோக்கி அநுபவிக்கலாம்.*

(13) தேவனே நின்னை யல்லால்
பிறிதொரு தேவை எண்ணேன்;
பாவனை நின்னின் அல்லால்
பிறிதொரு பற்றும் இல்லேன்;
யாவையும் காட்டக் கண்டேன்;
என்னுளே நின்னைக் கண்டேன்
. . . . . . . . . . . . . . . . . . . . (64)

*குறிப்புரை:*

"கற்றைவார் சடையெம் அண்ணல் கண்ணுதல்
பாதம்நண்ணி மற்றும்ஓர் தெய்வம்தன்னை
உண்டுஎன நினைந்துஎம் பெம்மான் கற்றிலா
தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே"

*என்பது திருவாசகம். (இஃது அடிமாறிக் கிடக்கின்றது.)*

புற்றில்வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடையெம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வம் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மான்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே[27]

26. திருவா. கோயிற்றிருப்பதிகம் – 10.
27. திருவா. அச்சுப்பத்து – 1

என்பது சரியான பாடல். இரண்டு பாடல்களையும் ஊன்றிப் பலமுறைப் படித்து அநுபவித்தால் ஒப்புமையில் நம் மனம் ஒன்றும்; இறையநுபவத்திலும் நம் மனம் ஆழங்கால் படும்.

இவற்றிலிருந்து ஓர் உண்மை நமக்குப் புலனாகின்றது. பேராசிரியர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் போன்று நம் தமிழ்க்கடல் தம் மனக்கடலி லிருந்து நினைவாக இப்பாடல்களை மேற்கோள்களாக ஒப்புமை காட்டுவார். முன்னவர்களின் உரைகளில் பாட்டெண், அடியெண் முதலியவை காட்டப் பெறாதவை போல இவர்தம் உரையிலும் அவை காட்டப் பெறாதவாறு அமைகின்றது.

இத்துடன் தமிழ்க்கடலின் உரைநயம், ஒப்புமை நயம் முதலியவற்றைக் காட்டுவதை நிறுத்தி இந்தக் குட்டித் திருவாசகத்தில் நவமணி போல் நான் கண்ட ஒன்பது பாடல்களைக் காட்டுவேன்.

1. உருவாகி நிற்றி; அருவாகி நிற்றி;
 உயிரோடும் வைக்கும் உறவாய்
மருவாகி நிற்றி; மலராகி நிற்றி;
 மறையாகி நிற்றி; மறையின்
பொருளாகி நிற்றி; உனையான்அ றிந்து
 புகழ்கின்ற வாறும் அறியேன்
கருவா புரிக்குள் உறைதேவ தேவ!
 கதியேதுஎ னக்கு மொழியே (52)

2. முத்திக்கு வித்துஉன் அடியார்கள் சிந்தை
 முளரிக்குஅ ருக்கன்; மொழிஎண்
சித்திக்கு மூலம்; தவயோகி கட்குத்
 தெளிகன்னல் ஊறும் அமிர்தம்;
பக்திக்கு நித்தம் அருள்வீசு கொண்டல்;
 களவீசன் எங்கள் பரமன்
அத்திக்கு முன்னம் வரமேஅ ளித்த
 கருவேசன் அம்பொன் அடியே (54)

3. உன்நாமம் ஓதி உனையேவ ணங்கி
உறுபூசை பேணும் உரவோர்
பொன்னாடுஅ ளிக்க வரம்தங்கும் ஆதி
புனித !க ளாவல் உறை வோய் !
முன்னேஉ னக்குயான் அடியானும் அல்லன்;
முழுஞானி அல்லன் எளியேன்;
என்னேபி ழைத்த பிழைகோடி உள்ள
எனினும்பு ரத்தல் கடனே (58)

4. வரையா தியற்றி யிருபாவ காரி;
மறம்அன்றி வேறு புரியேன்;
விரைமாலை சுற்று குழலாரி டத்து
மிகஆசை வைத்து மெலிவேன்;
கரையா திருக்கும் மனம்நீக ரைத்துஉன்
அடிபாட வைத்த கதைநான்
உரையால்நி றைக்க முடியாது; முக்கண்
உடையாய் !க ளாவின் ஒளியே ! (60)

5. இருக்கினும் நிற்கும் போதும்
இரவுகண் துயிலும் போதும்
பொருக்கென நடக்கும் போதும்
பொருந்திஊண் துய்க்கும் போதும்
முருக்குஇதழ்க் கனிவா யானர
முயங்கிநெஞ்சு அழியும் போதும்
திருக்களா உடைய நம்பா !
சிந்தைஉம் பால தாமே (62)

6. தேவனே நின்னை யல்லால்
பிறிதொரு தேவை எண்ணேன்;
பாவனை நின்னின் அல்லால்
பிறிதொரு பற்றும் இல்லேன்;
யாவையும் காட்டக் கண்டேன்;
என்னுளே நின்னைக் கண்டேன்;
காவலா ! கருணை யானே !
இனிமற்றோர் காட்சி உண்டோ ? (64)

7. உத்தி வாளரா முடிந்தபால
வண்ணனே! உனது
பத்தி வேண்டுவது அன்றியே
நரகிடைப் படினும்
முத்தி வேண்டிலேன்; துறக்கமும்
வேண்டிலேன்; முனிவர்
சித்தி வேண்டிலேன்; வேண்டினேன்
திசாதிபர் சிறப்பே (88)

8. சிறக்கத் தக்கது கருவையான்
திருவடி நேயம்!
மறக்கத் தக்கது மற்றுள
சமயத்தின் மயக்கம்;
துறக்கத் தக்கதுஇன் உடம்பை,யான்
என்றுறு தொடர்பு;
பிறக்கத் தக்கது சிவானந்த
வாரியின் பெருக்கே (89)

9. ஐய னே! சரண் போற்றி என்னையாள்
அப்ப னே!சரண் போற்றி! பொய்யிலா
மெய்ய னே!சரண் போற்றி! வானவா
வேந்தனே! சரண் போற்றி! மான்மழுக்
கைய னே!சரண் போற்றி! காலனைக்
காய்ந்த வா!சரண் போற்றி! நீறிறச்
செய்ய னே!சரண் போற்றி! காமனைச்
செற்ற வா!சரண் போற்றி! தேவனே! (97)

என்பன இந்த நவமணிகள். குட்டித் திருவாசகத்திலுள்ள இவை திருவாசகப் பாக்கள்போல் என்பையும் உருக்கும் தன்மையன என்பதைப் பக்தியுடன் படிப்போர் அறிவர். செட்டிநாட்டுப் பகுதியில் நவமணி மோதிரத்தைத் தரித்துக் கொள்பவருக்கு நவக்கிரகத்தைத் தொல்லை இராது என்று நம்புபவர்கள் உளர் என்பதை யான் அறிவேன். இந்த ஒன்பது பாசுரங்களை உளம் உருகி ஓதுபவர்கட்கு முத்தி - வீடுபேறு - உறுதி என்பதை நம்புவோம்.

# 4

# தொகுப்பு நூல்கள்

தமிழ்க்கடல் இராய.சொ. வாழ்வில் தொகுப்பு நூல்கள் பெரும் பங்கு பெறுகின்றன. கடல் அலைவீசுவது போல் தமிழ்க்கடலின் அலை செட்டி நாட்டுப் பட்டிதொட்டி முதலிய பல பகுதியில் வீசுவதால் தமிழ் இலக்கிய உணர்வும், பக்தி உணர்வும் எழுவதற்குக் காரணமாக அமைந்தது என்று கருதலாம். பெரும்பாலும் நகரத்தார் பெருமக்கள் சைவ சமயத்தைச் கடைப் பிடிப்பவர்கள். பெரும்பாலும் அக்குலத்தைச் சார்ந்த இக்கால இளைஞர்கள் தம் நடையுடை பாவனையில் காலத்திற் கேற்ப மாறுபடினும், முதியவர்கள் நெற்றியில் திருநீற்றுப் பட்டையும் சந்தனப் பொட்டும் திகழ்வதைக் காணலாம். ஆயினும் இளைஞர்களின் புறக்கோலம் மாறுபடினும், பக்தி உணர்வுக்கும் தமிழ் உணர்வுக்கும் அவர்களிடம் குறைபாடு இல்லை. மேலும் வைணவ சமயத்திலும் வைணவ இலக்கியத்திலும் சிறிதளவும் காழ்ப்புணர்வும் எதிர்ப்பு நோக்கும் காண முடியாது. மாறாக, அவற்றில் ஈடுபாடும் ஆர்வமும் காண முடிகின்றது.

செட்டி நாட்டுப் பகுதியில் செல்வர்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணம், புதுமை, மணிவிழா முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறும்பொழுது வருகை புரிபவர்கட்கு நூல்களை அன்பளிப்பாக வழங்கும் மரபு இருந்து வருகின்றது. அந்தந்த நிகழ்ச்சிக்கு ஏற்பப் பொருத்தமான நூல்களைத் தொகுத்து அச்சிட்டுத் தரும் பொறுப்பு, தமிழ்க்

கடலிடம்தான் இருக்கும். இராய.சொ வாழ்வில் இவ்வாறு வழங்கிய நூல்கள் இருபத்து ஒன்று உள்ளன. இவற்றைக் கடலில் கிடைக்கும் முத்துக்கள் போலத் தமிழ்க்கடல் தந்த இலக்கிய முத்துகள் எனக் கருதலாம். இவையே செட்டி நாட்டுப் பகுதிகளில் அணையா விளக்குகள் போலத் தமிழ் உணர்வையும் பக்தியுணர்வையும் குன்றாமல் வைத்துள்ளன என்று கருதலாம். அவற்றை ஈண்டுக் காட்டுவேன்.

**1. தேனும் அமுதும்**[1]: இஃது ஓர் அற்புதமான தொகுப்பு. 'திருவாசகத்தில்' மொத்தப் பதிகம் 51; பாடல்கள் 658. திருவாசகத்தில் 'தேன்' என்ற சொல் 51 இடங்களிலும் 'அமுது' என்ற சொல் 102 இடங்களிலும் உள்ளன. அதாவது பதிகத்திற்கு ஒரு தேன்; பதிகத்திற்கு இரண்டு அமுது.

இத்தொகுப்பு நூல் தேனும் அமுதும் முழுதும் சேர்ந்த 134 திருப்பாடல்களைக் கொண்டது. இவற்றுள் தேனும் அமுதும் கலந்த 130 முழுப் பாடல்கள்; நான்கு பெரிய பாடல்களின் பகுதிகள். இக்கையடக்க நூலில் அடங்கி யுள்ள பாடல்கள் மனனம் செய்து அநுபவிக்கத்தக்கவை. இப்படி அநுபவித்தால் மணிவாசகப் பெருமான் உண்டு களித்த தேனை - அதாவது -

நினைத்தொறும் காண்தொறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பும் உள்நெக
ஆன்ந்தத் தேனை (217)

நாமும் மாந்தி அநுபவிக்கலாம். திருவாதவூரரின் பக்திக் கடலில் திளைத்த நம் தமிழ்க் கடல் தொகுத்தளித்த நூலில் உள்ள பாடல்கள் அனைத்தும் ஆழ்வார் கூறுவது போல தேனாக, பாலாக, கன்னலாக அமுதாகத் தித்திக்கும் - நாவுக்கு அல்ல, மனத்திற்கு.

1. காரைக்குடி முத்த.வெ. சொக்கலிங்கம் செட்டியார் மகன் செல்வன் நாச்சியப்பனின் திருமண அன்பளிப்பு (5–9–1955).

**2. காதற்பாட்டு**[2]**:** இந்நூல் தமிழ் இலக்கியங்களில் காதல் துறையில் (அகத்துறையில்) அமைந்த 130 இனிய பாக்களைத் தன் அகத்தே கொண்டு திகழ்வது. சொற்சுவை பொருட்சுவை கொப்பளித்து நிற்கும் பாடல்கள் இவை.

'காதற்பாட்டு' என்ற நூலைப் பற்றிக் கூறுவதற்கு முன்னர் அறிவியல் நோக்கில் ஒரு முக்கியக் கருத்தைச் சொல்ல விழைகின்றேன். நமது உடல் உயிரணுக்களால் ஆனது. ஒவ்வொரு உயிரணுவிலும் இரட்டை நிறக் கோல்கள் (xx,xy என்பது போல்) உள்ளன. ஆனால் ஆணின் விந்தணுக்களிலும், பெண்ணின் முட்டையணுவிலும் ஒன்றை நிறக்கோல்கள் (x, x, y என்பது போல்) உள்ளன. இவை குழந்தைப் பருவத்தில் பக்குவப்படாத நிலையில் உள்ளன. அஃதாது இயக்கமில்லாத (dormant) நிலையில் உள்ளன. இவை ஆணின் முன் - குமரப் பருவத்திலும், பெண்ணின் பூப்பெய்தும் பருவத்திலும் வளர்ச்சியடைந்து இயங்கும் நிலையை எய்துகின்றன. இந்த இரண்டு வித ஒற்றையணுக்கள் ஒன்று சேர்ந்தால்தான் ஒரு புதிய உயிர் தோன்றும். இயங்கும் நிலையிலுள்ள இந்த இரண்டு வகை உயிரணுக்கள் ஒன்று சேர்வது எப்படி? இந்த இயக்கம் இரு பாலாரிடமும் காதலாக மலர்கின்றது. கலவி நிகழ்கின்றது. இந்த அணுக்கள் இரண்டும் கருக்குழலில் (Fellopian tube) சந்தித்து இணைகின்றன. இணைந்த அணு சிறிது சிறிதாக நகர்ந்து சென்று கருப்பையின் சுவரில் பதிந்து குழந்தையாக வளர்ச்சி பெறுகின்றது. எல்லா உயிர்க்கும் இது பொருந்தும்.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்.[3]

என்று ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியரின் நூற்பா குறிப்பிடுவதாகக் கருதலாம். இதுவே அக இலக்கியத்தின் தோற்றுவாய்; ஊற்றுவாயாகச் செயற்படுவது.

---

2. இது ஆத்தங்குடி கா.அரு.கா. காடப்ப செட்டியார் மகள் செல்வி மீனாள் திருமண மலராக வெளியிடப் பெற்றது. (23–5–1958).
3. தொல். பொருள். பொருளியல் – 27 (இளம்).

**அக இலக்கியம்:** சங்கத் தமிழ்ப்பாடல்களின் தொகை 2381. அவற்றுள் அகத்திணை நுதலியவை 1862. இவற்றைப் பாடிய 473 சங்கச் சான்றோர்களுள் அகம் பாடியவர்கள் மட்டிலும் 378 பேர்கள். அகப்பாடல்களின் மிகுதியான எண்ணிக்கையும், அப்பாடல்களைப் பாடியவர்களின் மிகுதியான தொகையும் அகத்திணையின் சிறப்பையும் ஒருவாறு தெரிவிக்கின்றது. அகப்பாடல்களின் தொகையும் பாடினோர் தொகையும் புறத்திணைப் பாடல்களின் தொகையினும் பாடினோர் தொகையினும் மும்மடங்கு மிக்கிருத்தலைக் காணலாம். இதனால் சங்க புலவர்கள் அகம் பாடுவதையே சிறந்த புலமையென மதித்திருந்தனர் என்பது புலனாகின்றது.

திணை என்பது ஒழுக்கம். ஐந்து நிலங்களில் வாழும் மக்களின் காமக் குறிப்பினைச் சிறப்பிப்பதாகும். இக்காமக் குறிப்பு பல்வேறு கட்டங்களில் நிகழும். அக்கட்டங்களில் நிகழும் நிகழ்ச்சியைத் துறை என்று குறிப்பிடுவார்.

சங்ககாலத்தில் தோன்றிய பாடல்கள் தனித்தனித் துறைகளாக, தனித்தனிப் புலவர்களால் பாடப் பெற்றவை. பிற்காலத்தில் தோன்றிய கோவை நூல்கள் ஒருவரால் பாடப் பெற்றவை. ஆதலால் திணை துறைகளைத் வகுத்தும் தொகுத்தும் பாடப் பெற்றுள்ளன. இக்கோவை நூல்களில் காலத்தால் முற்பட்டது மணிவாசகப் பெருமான் அருளிய **திருக்கோவையார்.** இதில் 400 துறைகள் உள்ளன. பிற்காலத்தில் எழுந்த கோவை நூல்களில் 400க்கு மேற்பட்ட துறைகளும் அமைந்துள்ளன.

தமிழ்க்கடல் இராய.சொ. அவர்கள் தொகுத்த 'காதற்பாட்டில்' சங்கப்பாடல்கள் சிலவும் கோவை நூல்களில் உள்ள பாடல்கள் பலவுமாக அடங்கியுள்ளன. இந்த நூலின் நூல்முகம் அனைத்தையும் அற்புதமாக விளக்குகின்றது. 400க்கு மேற்பட்ட துறைகளில் சிறப்பாக அமைந்திருப்பது ஒன்று **'பாலனைப் பழித்தல்'** என்ற துறையாகும். இதில் ஆறு பாடல்களைக் காட்டுவார் தமிழ்க்

கடல். ஆறும் சொல்நயம், பொருள் நயம் மிக்கவை. அவற்றுள் ஒன்று:

அரும்பால கா! முனம் பூமணச்,
சொற்பொருள், ஆகம்உயிர்.
கரும்பாம் சுவை, எள்ளும் எண்ணெயும்
போலொத்த காதலரைப்
பெரும்பாலில் நல்அன்னம் கங்கா
சலத்தைப் பிரிப்பதுபோல்
சுரும்பாம், புலவர் யமன், ஆலை
செக்கெனத் தோன்றினையே (121)

என்பது. ஒரு தாய் தான் ஈன்றெடுத்த செல்வனை நோக்கிப் பேசுவது! "அருமையான மகனே, அந்த நாளில் (நீ பிறப்பதற்கு முன்) நானும் உன் தந்தையும் பூவும் மணமும் போல் - சொல்லும் பொருளுமாக - உடம்பும் உயிரும் என்ன, கரும்பும் அதில் பொருந்தியுள்ள சுவையும் போல, - எள்ளும் அதனுள் இருக்கும் எண்ணெயும் என்று சொல்லும்படி - பிரியா இயல்பு கொண்டு வாழ்ந்திருந் தோம், நீரைவிட்டுப் பாலைப் பிரித்தெடுக்கும் அன்னப் பறவை போல் நீ வந்து தோன்றினாய் எங்களைப் பிரிப்பதற்கு; பூவும் மணமுமாக இருந்த எங்களைப் பிரிக்க நீ வண்டாக வந்தாய்; சொல்லும் பொருளுமாக இருந்த எங்களை வேறுபடுத்த நீ புலவனாக வந்தாய்; உடலையும் உயிரையும் பிரித்தெடுக்கும் எமனாக வந்து விட்டாய்; கரும்பையும் அதன் சுவையையும் தனியாக்கும் ஆலையென வந்துள்ளாய்; எள்ளைவிட்டு எண்ணெயை நீக்கும் செக்காக நீ வந்து தோன்றினாய்" என்கின்றாள்.

இந்நூலில் அசதிக் கோவையிலுள்ள ஒருபாடல் (7) நெஞ்சைக் கவரும் தன்மையுடையது. 'தாய் இரங்கல்' துறையில் வருவது.

அற்றானைத் தாங்கிய ஐவேல்
அசதி, அணிவரைமேல்

முற்றா முகிழ்முலை; எவ்வாறு
சென்றனள் ? முத்தமிழ்நூல்
கற்றார் பிரிவும்;கல் லாதார்
இணக்கமும் கைப்பொருள்ஒன்று
அற்றார் இளமையும்; போலே
கொதிக்கும் அருஞ்சுரமே (71)

"ஏதும் இல்லாரைக் காப்பாற்றுகின்ற அசதி என்னும் பிரபுவின் அழகிய மலையினிடத்தே, முதிராத கூம்பிய தனத்தையுடைய என் மகள், எப்படி நடந்தாளோ? பாலை வனத்தைக் கடந்து சென்றிருப்பாளே! அது கொதிக்குமே! எப்படிக் கொதிக்கும், தெரியுமா? முத்தமிழ் வல்ல வித்தகரைப் பிரித்தால் உள்ளம் எப்படிக் கொதிக்குமோ அப்படியல்லவா பாலை நிலம் கொதிக்கும்; கல்லா தாரோடு சேர்ந்து வாழ்தல் எவ்வாறு சுடுமோ அவ்வாறல்லவா அருஞ்சுரம் சுடும். கையில் பணம் இல்லாதவனுடைய இளமைப் பருவம் ஒன்றையும் நுகர வொட்டாமல், எங்ஙனம் அனலாகக் கொளுத்துமோ, அங்ஙனமன்றோ பாலை நெருப்பைக் கக்கும். அப்படிப் பட்ட அருஞ்சுரத்தில் என்சிறு பெண் – முற்றா முகிழ்முலை – எவ்வாறு சென்றனள்?" என்று கேட்கின்றார் அசதிக் கோவை ஆசிரியர்.

**3. மாதவமாலை[4]:** இத்தொகுப்பு நூல் திருமால் துதியாக 51 பாடல்களைக் கொண்டது. திருமாலுக்கு 'மாதவன்' என்ற பெயரும் உண்டு. ஆதலால் இது 'மாதவ மாலை' என்ற பெயர் பெற்றது. செட்டிநாட்டுப் பெருமக்கள் அரனைப் போல் அரியையும் வழிபடு தெய்வமாகக் கொண்டவர்கள் என்பதற்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டு. இதில் வில்லிபாரதத்தில் கண்ணன் துதியாக வரும் 41 பாடல்களும், பெருந்தேவனார் பாரதத்தில் திருமால் துதியாக வரும் 7 பாடல்களும்,

4. இலக்குமி – மாதவன் காப்புக் கட்டும் புதுமை (20–1–64). வெளியிட்டது அபிசீனியா. பழ. நாச்சியப்பன்.

இளங்கோஅடிகள் திருமாலைப் பற்றிப் பாடியுள்ள பாடல்கள் மூன்றும் அடக்கம்.

இராய.சொவுக்கு அவர்தம் நிழல்போல் தொடர்ந்து தோழனாக அமைந்து பணியாற்றியவர் அபிசீனியா பழ. நாச்சியப்பன். புலவர் பெருமானை ஒரு தெய்வம்போல் பாராட்டியவர். தளபதி போல் சேவை செய்தவர். இவர் தம் மகன் திருநாவுக்கரசுமூலம் பெற்ற மூன்று பெயரர்கட்கும் 'மாதவன்', 'கேசவன்', 'இராகவன்' என்ற பெயர்கள் சூட்டி மகிழ்ந்தவர். மூத்த பெயர்த்திக்கும் 'இலக்குமி' என்ற பெயரிட்டு மகிழ்ந்தவர். மூத்த பெயரன் மாதவனின் புதுமையில் வழங்கப்பெற்றதால் நூற் பெயரும், விழா நாயகன் பெயருடன் பொருந்தியது. இறைவனது திருக்குறிப்புபோல் அமைந்து விடுகின்றது; நூலும் பொலிவும் பெருமையும் பெற்றுத் திகழ்கின்றது.

**தேடிய அகலிகை சாபம் தீர்த்ததாள்;**
**நீடிய உலகெலாம் அளந்து நீண்டதாள்;**
**ஓடிய சகடுஇற உதைத்தும் பாம்பின்மேல்**
**ஆடியும் சிவந்ததாள் என்னை ஆண்டதாள்**

என்ற பாடல் இவற்றுள் அற்புதமாக அமைந்து எவர் மனத்தையும் கவர்வதாக உள்ளது!

**4. அண்ணாமலை மாலை[5]:** இந்த அரியநூல் திருவண்ணாமலைப் பெருமானைப் புகழ்ந்து பாடப் பெற்ற 51 பாடல்களைக் கொண்டது. இவற்றுள் மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தில் உள்ளவை 2 பாடல்கள்; சம்பந்தர் தேவாரத்தில் உள்ளவை 10 பாடல்கள்; அப்பர் தேவாரத்தில் உள்ளவை 15 பாடல்கள்; சேக்கிழார் பெருமான் அருளியுள்ள பெரிய புராணத்தில் உள்ளவை 6 பாடல்கள்; வில்லி பாரதத்தில் உள்ளது ஒன்று;

5. காரைகுடி சா.நா.அ.சொ. அண்ணாமலையார் தன் மகன் செல்வன் விசுவநாதன் திருமண வெளியீடாக வெளியிட்டது. (29–6–1964).

குகை நமச்சிவாயரின் தனி வெண்பா 2; குரு நமச்சிவாயரின் அருணகிரி அந்தாதியில் உள்ளவை 13 பாடல்கள்; சைவ எல்லப்ப நாவலரின் அருணாசல புராணத்தில் உள்ளவை 2 பாடல்கள்; ஆக 51 பாடல்கள் அண்ணாமலைப் பெருமானைப் பற்றிய பாடல்களாதலால் நூல் '**அண்ணாமலை மாலை**' என்று பெயர் பெற்றிருப்பது ஒரு சிறப்பு. இதனை வெளியிட்டவர் அண்ணாமலையார் என்று அமைத்தது மற்றொரு சிறப்பு. பாடல்கள் அனைத்தும் அண்ணாமலை எம்பெருமான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும் அரிய பாடல்களாக அமைந்துள்ளன.

இந்தத் தொகுப்பை ஆழ்ந்து நோக்கும்போது தமிழ்க் கடலின் பரந்த நூலறிவு, அவர்தம் பக்தி உணர்வு கலந்த நுண்ணறிவு, தேடித் திரட்டிய முயற்சி ஆகியவை நன்கு புலனாகின்றன.

**5. தில்லைத் திருநடம்[6]:** தில்லைக் கூத்தப் பெருமான் மீது பல அடியார்களால் பாடப் பெற்ற 101 திருப்பாடல் களைக் கொண்டது இத்தொகுப்பு நூல். பன்னிரு திருமுறையும் இந்நூலில் இடம் பெற்றிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பாகும். இத்திருமுறை பாடல்கள் மட்டும் 85. இவற்றுள் ஒன்பதாம் திருமுறையில் மட்டும் 30 பாடல்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளன. இந்த ஒன்பதாம் திருமுறைப் பாடல்கள் திருவாசகப் பாடல்கள்போல் இனிப்பவை. இவை ஒன்பதின்மரால் பாடப் பெற்றவை.

ஆசிரியர் வரிசைப்படி நோக்கினால் மணிவாசகப் பெருமானின் பாடல்களே அதிகமானவை. அவர்தம் பாடல்கள் 18; சேக்கிழார் அடிகளின் பாடல்கள் 10; வள்ளல் பெருமானின் பாடல்கள் 10; அப்பரடிகளின் பாசுரங்கள் 9; பொன்னம்பல நாதனைப் பற்றிய வில்லிப்புத்தூராழ்வாரின் பாடல் ஒன்று. மொத்தத்தில் 25 அடியார்களின் பாடல்கள்

6. காரைக்குடி "மெ.செ" குடும்பத்தைச் சேர்ந்த மெ.செ.ச.மு.மெ. முத்துராமனார் தம் அருமந்த மகன் மெய்யப்பன் திருமண நினைவாக வெளியிடப் பெற்று அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

இத்தொகுப்பு நூலில் அடங்கியுள்ளன. தமிழ்க் கடல் தமிழ் சைவ இலக்கியக் கடலில் மூழ்கி முத்தெடுப்பது போல் எடுத்தவை இந்த 101 பொறுக்கு மணிகள். இத்தொகுப்பு நூல் தமிழ்க் கடலின் ஆழ்ந்த புலமையையும் அரிய முயற்சியையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

**6. நால்வர் வணக்க மாலை**[7]: ஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மணிவாசகப் பெருமான் ஆகிய சமயக்குரவர் நால்வர்மீது 16 அடியார்கள் பாடிய 81 பாடல்களைக் கொண்டது இத்தொகுப்பு நூல். உமாபதி சிவம் என்ற ஒருவரே நால்வர்பற்றிப் பாடியுள்ள ஒரே பாடல் இந்நூலின் முதற் பாடலாக அமைந்துள்ளது. தேவாரமணிகள் மூவர்பற்றிப் பதின்மூன்று அடியார்கள் பாடியுள்ள பாடல்களும் மணிவாசகர்பற்றிப் பதினைந்து அடியார்கள் பாடியுள்ள பாடல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இன்னொரு முறையில் நோக்கினால் நால்வரும் தலா 20 பாடல்கள்வீதம் பெற்றுள்ளனர். நால்வரும் ஒரே பாடலில் அமைந்து திகழ்கின்றனர்.

நூலை ஆழ்ந்து நோக்கினால் தமிழ்க்கடல் இராய.சொ. இவற்றைத் தொகுக்கப் பட்ட அரும்பாடு தெளிவாகும். அவர்தம் ஆழ்ந்த புலமையும் பளிச்சிடும்.

**7. திருக்கானப்பேர் பாமாலை**[8]: கானப்பேர் என்பது காளையார் கோவில்! இது பாண்டி நாட்டிலுள் தேவாரப் பதிகம் பெற்ற 14 தலங்களுள் ஒன்று. இத்தலத்தில் மூன்று இறைவன் - இறைவியர் எழுந்தருளியுள்ளனர்.

7. குன்றக்குடிக்கு அருகிலுள்ள ஆத்தங்குடி கா.அரு. பழ. பழநியப்ப செட்டியார் அவர்களின் மணிவிழா வெளியீடு (4–3–1963)

8. இத்தலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் நாட்டரசன் கோட்டை இருப்பூர்தி நிலையத்தினின்றும் 10 கல் தொலைவில் உள்ளது. சிவகங்கை – தொண்டி பெரு வழிச் சாலையில் சிவகங்கையினின்றும் 11 கல் தொலைவில் உள்ளது. இத்தலத்தில் வேதாந்த மடம் ஒன்று உள்ளது. நகரத்தாருக்கு இத்தலத்தில் பல அறச்சாலைகள் உள்ளன.

காளீசர் - சொர்ணவல்லி

சோமேசர் - சௌந்திர நாயகி

சொக்கேசர் - மீனாட்சி

இத்தலத்து இராசகோபுரம் மிகப் பெரியது. மருது பாண்டியன் கட்டியது. இது சோமேசர் சந்நிதிக்கு எதிரில் உள்ளது. கோயிலை ஒட்டி வேதாந்த மடம் ஒன்று உள்ளது. நகரத்தாருக்கு இத்தலத்தில் பல அறச்சாலைகள் உள்ளன. மிகப்பெரிய தெப்பக்குளம் ஒன்று உள்ளது.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகம் (3:26) ஒன்றும் சுந்தர மூர்த்தியின் தேவாரப் பதிகம் (7:84) ஒன்றும் உள்ளன. அப்பர் பெருமானின் பதிகம் இல்லாவிடினும் அவர்தம் ஒன்பது பாடல்களில் இத்தலம் குறிக்கப் பெறுகின்றது.

இத்தலத்துப் பாடல்களைத் தொகுத்தவர் சிவநெறிச் செல்வர் அழ.அரு.ராம.வே. சோம நாராயணன். பொருள் எழுதியது தமிழ்க்கடல் இராய.சொ. இந்நூல் 52 திருப்பாடல்களைக் கொண்டது. (இராய.சொ. இதனை அறுதியிடவில்லை) இந்நூலை வெளியிட்டவர் காளையார் கோயிலில் பசுமடம் நிறுவி அறப்பணி புரிந்து வரும் தேவகோட்டை சொ.மெ.பழ. குடும்பத்தைச் சேர்ந்த சோம. சோமசுந்தரனார்.

**8. இராகவன் இசைமாலை**[9]**:** ஈண்டு 'இசை' என்பது 'புகழ்' என்ற பொருளில் வந்தது. இந்நூல் இராம காதையில் கம்பன் இராமர் தோத்திரமாகப் பலர் வாயில் வைத்துப் பேசும் பாடல்களின் தொகுப்பு. இத்தொகுப்பால் கம்பனில் அவ்வாறு அமைந்த 108 பாடல்களும் குலசேகரப் பெருமாளால் இராமனைப் பற்றி அருளப் பெற்ற 22 பாசுரங்களும் (இரண்டு பதிகளும்)[10] அடங்கியவை. கம்பன்

9. காரைக்குடி ராம.வெ.ராம. திருநாவுக்கரசு மகள் உமையாள் புதுமை வெளியீடு (20-4-1969)

10. பெரு.திரு. 8, 10.

இராமபிரானைத் தன் கூற்றாகவும், விராதன், கவந்தன், வீடணன், பிரகலாதன் இவர்கள் வழிபாடாகவும், அநுமன், சுக்கிரிவன் (மகாராசர்) வாயிலாகவும்; இந்திரன், கருடன், வருணன், பிரமன், சிவபெருமான் இவர்கள் வாய்மொழியாகவும் அமைக்கும் பாடல்கள் இராமாவதாரத்தின் பெருமையை எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ள நேர்த்தி சொல்லுந் தரமன்று.

தமிழ்க்கடல் இராய.சொ. தம் வாழ்நாளில் இறை வழிபாட்டுத் தொகுப்புகள் பல வெளியிட்டுள்ளார்கள். தாமே அந்த வழிபாட்டில் மூழ்கி வெளியிட்டவை இவை. அரி - அரன் வேறுபாடின்றி இரு கடவுள்களையும் இதயந் தோய்ந்து ஈடுபட்டு வழிபட்டதனால் அவர்தம் ஆன்மா அமரர் உருவில் சில காலம் வைகுண்டத்திலும், சில காலம் கைலாயத்திலுமாக இருந்து வரும் என்று என் மனம் எண்ணுகின்றது.

**9. இறைவர் அறுவர் வணக்கம்**[11]**:** இச்சிறிய தொகுப்பு நூலில் விநாயகர் வணக்கங்களாக 10 பாடல்கள்; முருகன் வணக்கங்களாக 10 பாடல்கள்; சிவபெருமான் வணக்கங்களாக 10 பாடல்களும்; திருமால் வணக்கங்களாக 10 பாடல்களும்; மலைமகள் வணக்கங்களாக 10 பாடல்களும்; கலைமகள் வணக்கங்களாக 10 பாடல்களும்; வாழ்த்தாகக் கச்சியப்பர் அருளிய பாடல் ஒன்றுமாக 61 பாடல்கள் அடங்கியுள்ளன. நூலை நுணுகி நோக்கினால் தமிழ்க் கடலின் இலக்கியப் பயிற்சி தெளிவாகும்.

விநாயகர் வணக்கங்களாக கபில தேவர் (11-ஆம் திருமுறை), உமாபதி சிவம், பெருந்தேவனார், திருமூலர் பரஞ்சோதி முனிவர், கடவுள் மாமுனிவர், சைவ எல்லப்ப நாவலர், அதிவீரராம பாண்டியன், நந்திக் கலம்பகம், பாரதி பாடல்கள அடங்கியுள்ளன.

11. கொத்தமங்கலம் சி.சு.சி.வெ.சி. சின்னகருப்பன் செட்டியார் மணிவிழா (சாந்தி) வெளியீடு (11-6-70).

முருகப்பெருமான் மீது நக்கீரர் (திருமுருகாற்றுப் படை) சேந்தனார் (9-ஆம் திருமுறை), பெருந்தேவனார் (குறுந்தொகை), அருணகிரி நாதர், திருத்தணிகை சந்நிதி முறை, பரஞ்சோதி முனிவர், சிவஞான சுவாமிகள், இலிங்கபுராணம், சைவ எல்லப்ப நாவலர், வள்ளலார் ஆகியோரின் திருவாக்குகள் அடங்கியுள்ளன.

சிவபெருமான்மீது மணிவாசகப் பெருமான், நாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி, கருவூர்த் தேவர், திருமாளிகைத்தேவர், காரைக்கால் அம்மையார், பட்டினத்து அடிகள், தாயுமான அடிகள், சேக்கிழார் பெருமான் ஆகியோரின் பாடல்கள் காணப்பெறுகின்றன.

திருமால் வணக்கங்களாக நம்மாழ்வார், திருமங்கை மன்னன், பெரியாழ்வார், அன்னை ஆண்டாள், குலசேகர ஆழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப் பொடிகள், பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய ஆழ்வார்களின் பாசுரங்கள் அடங்கியுள்ளன.

மலைமகள் (பார்வதி) வணக்கங்களாகப் பரஞ்சோதி, குமரகுருபரர் ஆகிய இருவருடைய பாடல்களும்; கலைமகள் (சரசுவதி) வணக்கங்களாகக் குமரகுருபரர் பாடல்களும் அமைகின்றன.

இந்தப் பனுவலிலுள்ள பாடல்களனைத்தும் படித்து மனனம் செய்வதற்கு ஏற்றவை.

**10. மீனாட்சி திருமணம்**[12]: 'மீனாட்சி திருமணம்' என்ற இந்தச் சிறிய பனுவல் அருமையான தொகுப்பு. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தினின்றும் தொகுக்கப் பெற்றது. திருவிளையாடற் புராணம் மதுரையில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரப் பெருமானின் 64 திருவிளையாடலைக் கொண்டது. இப்பெரியார் சற்றேறக் குறைய முந்நூறு ஆண்டுகட்கு முன்னே வாழ்ந்தவர். இவர்

12. காரைக்குடி சா.நா.அ.சொ. அண்ணாமலைச் செட்டியார் அருமைமகள் மீனாட்சித் திருமண வெளியீடு (11-9-1970).

தென்சொல் கடந்து வடசொற்கடலுக்கும் எல்லை கண்டவர். இவர்தம் பாடல்கள் 'தேனும் பாலும் அமுதும் கன்னலும் தித்திக்கும் பிறவும் கலந்த தீஞ்சுவைப் பொருள்கள்' என்பதற்கு எள்ளவும் ஐயம் இல்லை.

இப்பெருமான் வெறும் இலக்கண இலக்கியம் மட்டும் தெளிந்தவர் அல்லர்; பல கலை விற்பன்னர். செம்மணி இலக்கணம் அனைத்தும் பேசுவார் (மாணிக்கம் விற்ற படலம்). நடனக் கலையை அப்படியே காட்டுவார் (கால் மாறி ஆடிய படலம்). இவர்தம் இசையறிவுக்கு எடுத்துக் காட்டாக அமைவது இசைவாது வென்ற படலம். குதிரையின் இலக்கணம் முழுவதும் நவில்வார் (நரிபரி ஆக்கிய படலமாக). இங்ஙனம் இவர் பல துறைகளைப் பழுதற ஓதி உணர்ந்தவர் என்பதை இவர்தம் நூலில் பரக்கக் காணலாம்.

இவர்தம் தெய்வப் பாடல்களில் பல நெஞ்சை நெக்குருகச் செய்யும் பான்மையவை. இதனை இத்தொகுப்பு நூலில் கண்டு படித்து அநுபவித்து மகிழலாம். திருவிளையாடற் புராணத்தின் பாடல் தொகை 3363. அவற்றுள் இச்சிறிய பனுவலை அணிசெய்பவை 214.

இந்த நூலில் மீனாட்சி திருமணத்திற்கு முன்னதாகப் பரஞ்சோதி திருவிளையாடலிலிருந்து இறைவணக்கம், அடியார் வணக்கம், பாண்டி நாட்டின் வளம், மதுரை நகரின் சிறப்பு, மீனாட்சிக்கு முடி புனைந்தது, அவள் அரசாட்சி, வெற்றி கொண்டது முதலிய பகுதிகளிலுள்ள அரிய பாடல்களும், மீனாட்சி திருமணத்தில் நிறைந்த பாடல்களும், திருமணத்தையொட்டி வெள்ளியம்பலத் திருக்கூத்து ஆடிய பகுதியும் குண்டோதரனுக்கு அன்னமிட்ட பகுதியும் வையையை அழைத்த பகுதியும், கொண்டு இறுதியாகத் திருமணம், புரிந்து கொண்டு மீனாட்சி உக்கிரகுமார பாண்டியனை மகனாகப் பெற பாடலோடு இந்நூல் நிறைவு பெறுகின்றது. பாடல்கள் யாவும் தமிழ்க்கடல் சுவைத்தவை; நாமும் சுவைக்கலாம்.

**11. சீதை திருமணம்**[13]**:** செல்வி மீனாட்சி திருமணத்திற்கு மீனாட்சி (மதுரை) திருமணம் வெளிவந்தது போல செல்வி சீதை திருமணத்திற்குச் சீதாப் பிராட்டியின் திருமணம் வெளிவருகின்றது. சீதையின் தந்தை ப.வ.ராம. குழந்தையன் செட்டியாரைக் குழந்தப் பேறு பெறாத தமிழ்க் கடல் இராய.சொ. தம் குழந்தையாகப் - பெரிய குழந்தை யாக - பாவிக்கின்றார்; சீதையைத் தம் பெயர்த்தியாகக் கருதுகின்றார். இங்கு வெளிவரும் நூலும் நூலாசிரியருடன் மிக நெருங்கிய உறவுடையதாக அமைகின்றது.

இது கவிச்சக்கரவர்த்தி கம்பன் தன் இராம காதையில் சீதை திருமணங் குறித்த 208 பாடல்களின் தொகுப்பு. மிதிலை நகரம் சக்கரவர்த்தித் திருமகளை வரவேற்றது முதல் ஞானத்தின் திருவுருவாகிய சனக மகாராசன் சீதாப்பிராட்டியைச் சக்கரவர்த்தித் திருமகனுக்குத் திருமணம் முடித்தது ஈறாக இந்நூல் அமைகின்றது. மானிட வாழ்க்கையில் திருமணம் இன்ப வாழ்க்கையில் தள்ளுவது போல சொற்சுவை பொருட் சுவை நிறைந்த பாடல்களாலான இந்நூல் இலக்கியச் சுவையை அநுபவிப்பதற்கு மணமக்களுக்கு ஒரு கையேடாக உதவுகின்றது. திருமணத்திற்கு வருகை புரிந்து மணமக்களை வாழ்த்திய விருந்தினர் கையிலும் இந்நூல் தவழ்வதால் அவர்களும் திவ்வியத் தம்பதிகளின் திருமணத்தை நவிலும் கம்பர் பெருமான் பாடல்களை நுகர்ந்து மகிழலாம். இந்தப் பாடல்கள் யாவும் கம்பன் பக்தர்களின் நாவில் காலந்தோறும் வாழ்ந்து அவர்களை மகிழ்வித்துக் கொண்டிருப்பவை. இந்துமதாபிமான சங்கத்து நூலகத்திலும் தனிப் பெருமையுடன் இடம் பெற்றிருப்பவை.

**12. மலர் வணக்கத் தமிழ்மாலை**[14]**:** இந்நூல் விநாயகர், முருகன், சிவபெருமான், அம்பிகை, திருமால், தாயார்

13. இராயவரம் ப.வ.ராம, குழந்தையன் செட்டியார் அருமை மகள் செல்வி சீதை திருமண வெளியீடு (6–6–1971).

14. காரைக்குடி சா.நா.அ.சொ. அண்ணாமலை செட்டியார் மகன் இராமசாமி திருமண வெளியீடு (11–6–1973).

(இலக்குமி), சேக்கிழார் ஆகிய மூர்த்திகளை மலரிட்டுத் தமிழில் போற்றுதற்கு நூற்றெட்டுப் போற்றிகள் கொண்ட ஏழு வணக்கங்களின் தொகுப்பு.

தமிழ்க் கடவுளர்களை அருச்சிக்க, 'போற்றி' செய்து தரும்படி தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் தலைவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பணித்ததற்கேற்ப, தமிழ்க் கடல் அவற்றைச் செய்து கொடுத்தார்கள். தெய்விகப் பேரவையின் சார்பாக அவை, தனித்தனியாக வெளி வந்தன. அவ்வாறு வெளிவந்த போற்றிகள் விநாயக வணக்கம், முருக வணக்கம், சிவ வணக்கம், அம்பிகை வணக்கம், திருமால் வணக்கம், தாயார் (இலக்குமி) வணக்கம், சேக்கிழார் வணக்கம் என்பவையாகும்.

இவை ஒன்று சேர்ந்து திருமண வெளியீடாக வெளியிடப்பெறுகின்றது. இவ்வணக்கங்களில் தேவார, திருவாசக, திவ்வியப் பிரபந்தத்திலுள்ள அடிகளும் கருத்துகளும், பிற்காலச் சான்றோர்கள் அருளிய மொழி களும், நிறையப் பயின்று வருமாறு ஆளப்பெற்றுள்ளன. அந்தந்தக் கடவுளர்க்குரிய சிறப்பியல்புகள் அங்கங்கு மொழியப் பெற்றுள்ளன. ஒவ்வொன்றிலும் 108 போற்றிகள் அமைந்துள்ளன.

இந்நூல் வெளியீட்டால் நம் தமிழ்க்கடலின் தெய்வப் பணி முத்தாய்ப்பாக அமைந்து அவருக்குப் பெரும் புகழ் ஈட்டித் தந்து விடுகின்றது. அதனை நாமும் இன்று நினைந்து போற்றுகின்றோம்.

**13. திருவாசகத் தேன்[15]:** தமிழ்க்கடல் தொகுத்துக் குறிப்புரை எழுதி வெளியிட்ட இந்த நூலுக்குத் 'திருவாசகத் தேன்' என்று பெயர் சூட்டியுள்ளார்கள். இத்தலைப்பு,

15. காரைக்குடி உ.மு.சுப.லெ.மெ. மெய்யப்ப செட்டியார். மெ. அழகம்மை ஆச்சி இவர்கள் மணிவிழா (சாந்தி) நினைவாக வெளியிடப்பெற்று அன்பளிப்பாக வழங்கப் பெற்றது. (9–5–1974).

தொல்லை இரும்பிறவிச்
சூழும் தளைநீக்கி
அல்லல்அறுத்(து) ஆனந்தம்
ஆக்கியதே – எல்லை
மருவா நெறிஅளிக்கும்
வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும்
தேன்.

என்ற திருவாசகச் சிறப்புப் பாயிர வெண்பாவின் அடியொட்டி அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம்.

இனிப்புப் பொருள்களுள் சிறந்து விளங்குவது தேன். திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருமானுக்குத் தேனின்மீது அளவற்ற ஆசை. 'தேனாய் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமானைச் சுவைத்துச் சுவைத்து, மகிழ்ந்து மகிழ்ந்து' 'அந்தம் இலா ஆனந்தம்' பெற்றார் வாதவூர் அடிகளார். 658 திருப்பாடல்களைக் கொண்டது திருவாசகம். அதில் 300 திருப்பாடல்கள் இந்நூலில் அடங்கி யுள்ளன. தமிழ்க் கடலுக்கு திருவாசகமே சிவபெருமான் மாதிரி. அதனைச் சிவபெருமானாகவே வழிபடுவதும் உண்டு.

இஃது ஓர் அருமையான பதிப்பு. சாதாரண மக்களும் எளிமையாகப் படித்து அறிந்து சுவைக்கத் தக்கவாறு பாடலில் உள்ள புணர்ச்சி விதிப்படி அமைந்துள்ள தொடர்களை இயன்ற அளவு பதம் பிரித்து அச்சிடப் பெற்றுள்ளமை இதன் தனிச்சிறப்பு.

நாதன்றாள் – நாதன் தாள்
ஒண்ணித்தில நகையாய் – ஒள்நித்தில நகையாய்
சொற்கழிவு – சொற்கு அழிவு
நாடோறும் – நான்தோறும்
கன்னா ருரித்தென்ன – கல் நார் உரித்து என்ன

என்றவாறு பிரித்து வெளியிடப் பெற்றுள்ளது.

ஏடு பார்த்து எழுதுவோரால் நேர்ந்த யாப்புச் சிதைவு ஏற்பட்டுள்ள சில பாடல்களை அவ்வகைச் சிதைவுகளைச் சீர் செய்து வெளியிட்டிருப்பது இன்னொரு தனிச்சிறப்பு.

**அவன் அருளாலே அவன்தாள் வணங்கி,**
**சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை**

என்பதில் யாப்புப் பிழை உள்ளது. இப்பாடல் கலிவெண்பா. வெண்பாவில் வெண்தளை தவறக்கூடாது. 'வணங்கி' என்பது புளிமா. அடுத்த சீராகிய 'சிந்தை' நேர் அசையில் தொடங்குகின்றது. வெண்பா இலக்கணப்படி மா முன் நேர் வருதல் கூடாது. எனவே ஒரு சிறு மாறுதல் செய்தால் சரியாகி விடுகின்றது. இங்கு, 'வணங்கி' என்பதில் ஒரு 'ஏ' சேர்த்தால் போதும். 'வணங்கியே' என்று இருப்பதில் எவ்விதக் குறைபாடும் இல்லை.

**நான்ஆர் என்உள்ளம் ஆர். (120)**

என்ற பாடல் கலிப்பா ஆகும். கலிப்பா நான்கு சீர்கள் கொண்டு இருத்தல் வேண்டும். இப்பாடலில் பின் மூன்று அடிகளும் சரியாக நான்கு சீர்கள் கொண்டிருக்க முதல் அடி

**'நானார்என் உள்ளமார் ஞானங்களார் என்னை**
**யாரறிவார்'**

என ஐந்து சீர் கொண்டு நீள்கின்றது. இதனை,

**'நான்ஆர்என் உள்ளம்ஆர் ஞானம்ஆர்**
**யார் அறிவார்'**

என மாற்றுவதில் கருத்துச் சிதையவில்லை; பாடலும் கட்டுச் செம்மையாகி விடுகின்றது. இத்தகைய 'சீர்திருத்தங்கள்' பாடல்களில் செய்யப் பெற்றுள்ளமை, இந்நூலின் மற்றொரு தனிச்சிறப்பு. 'அன்பும் சிவமும்' ஒன்றாக இருப்பதைப் போல இராய.சொ.வும் திருவாசகமும் ஒன்றே என்று கருதும் அளவிற்கு தமிழ்க்கடல் திருவாசகத்தில் மூழ்கி முத்தெடுத்துக் கொண்டு இருப்பவர்கள்.

பட்டினத்து அடிகள் சிவப்பிரகாச அடிகள், தாயுமான அடிகள் இராமலிங்க அடிகள் ஆகிய அருட் செல்வர்களால் பாராட்டி அருந்தப் பெற்ற மணிவாசகப் பெருமான் வார்த்த திருவாசகத் தேனைப் பருகிக் களித்து 'அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம்' பெறுவது நம்மனோர் கடன்.

**14. ஆழ்வார் அமுது[16]:** 'திருவாசகத் தேனை' அருளிய தமிழ்க்கடல் இப்போது 'ஆழ்வார் அமுது' வழங்குகின் றார்கள். உரையுடன் வழங்கும் இத்தொகுப்பு நூல் ஜீராவில் தோய்ந்திருக்கும் குளோப் ஜாமூன். இனிப்புச் சாறில் மூழ்கி யிருக்கும் கல்கத்தா ரசகுல்லாபோல் படிப்பவர்கள் உணர்வார்கள் என்பது என் அதிராத நம்பிக்கை.

இத்தொகுப்பு நூல் 18 ஆண்டுகட்கு முன்னர் வெளிவந்தது[17]. அப்போது இது புதுக்கோட்டை ரிப்பன் அச்சகத்தில் அச்சிடப் பெற்றதாக நினைவு. அச்சக உரிமையாளர் திரு சக்தி செட்டியாருடன் உரையாடி மகிழ்ந்த காலம். இராய.சொ.வுடன் பார்வைப் படிவங் களைச் சரிபார்க்க நானும் தமிழ்க்கடலுடன் சென்றிருந் ததை நினைவுகூர்கின்றேன். திருமண நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ள இராய.சொ.வுடன் சென்றிருந்தேன். அப்போது எங்கள் கல்லூரி தாளாளர் சி.வி.சிடி.வி. வேங்கடாசல செட்டியார் அவர்களும் திருமண விழாவுக்கு வந்திருந் ததையும் அவர் ஓர் அறையில் உடம்பு பிடிக்கும் ஆளுடன் இருந்ததையும் உடம்பு பிடித்துக் கொண்டிருந்ததையும் கண்டதை நினைவுகூர்கின்றேன். அக்காலத்தில் எனக்கு தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

16. காரைக்குடி சா.நா.அ.சொ. அண்ணாமலை தம் அருமை மகள் விசாலாட்சியின் திருமண விழாவில் வந்தவர்கட்கு வழங்கி மகிழ்ந்த வெளியீடு (1–7–1974).

17. இராயவரம் ப.வ.ராம. குழந்தையன் செட்டியார் மகன் இராமநாதன் உமையாள் திருமண அன்பளிப்பாக வழங்கப்பெற்றது (11–6–1956)

இவற்றில் அதிகப் பயிற்சி இல்லை. அறிவியல், உளவியல் இவற்றில் அதிகமாக ஆழங்கால்பட்டிருந்த காலம்.

இந்த நூல் பன்னிரு ஆழ்வார்களால் அருளப்பெற்ற நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலிருந்து பொறுக்கி எடுக்கப்பெற்ற 400 பாசுரங்களைக் கொண்டது. அவை வருமாறு:

| | | |
|---|---|---|
| பெரியாழ்வார் | 55 | பாசுரங்கள் |
| ஆண்டாள் | 55 | பாசுரங்கள் |
| குலசேகராழ்வார் | 20 | பாசுரங்கள் |
| திருமழிசையாழ்வார் | 15 | பாசுரங்கள் |
| தொண்டரடிப் பொடிகள் | 15 | பாசுரங்கள் |
| பொய்கையார் | 12 | பாசுரங்கள் |
| பூதத்தார் | 12 | பாசுரங்கள் |
| பேயார் | 12 | பாசுரங்கள் |
| திருப்பாணாழ்வார் | 2 | பாசுரங்கள் |
| மதுரகவி ஆழ்வார் | 2 | பாசுரங்கள் |
| திருமங்கையாழ்வார் | 100 | பாசுரங்கள் |
| நம்ஆழ்வார் | 100 | பாசுரங்கள் |
| மொத்தம் | 400 | பாசுரங்கள் |

இந்தப் பாசுரங்கள் யாவும் படிப்போருக்குத் தேனாய், பாலாய், கன்னலாய் (கருப்பஞ்சாறு), அமுதமாக இனிக்கும். அவர்களைத் திருமால் பக்தியில் ஆழங்கால் படச் செய்யும். இந்தப் பதிப்பைப் பற்றிக் கூறும் பேச்சில் இரண்டு கருத்துகளை வலியுறுத்த விழைகின்றேன்.

**ஒன்று:** நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் 4000 பாசுரங்கள் இல்லை. பின்னர் வந்த ஆசாரியப் பெருமக்கள் இலக்கண வரம்பை மீறி 4000 எனக் கணக்கிட்டனர். தென் கலையார் ஒருவகையிலும் வடகலையார் மற்றொரு வகை யிலும் கணக்கிட்டுள்ளனர்.

**தென்கலையார்:** *இவர்கள் கணக்குப்படி (அப்பிள்ளையார் கணக்கு)*

| | |
|---|---|
| முதலாயிரம் | 947 |
| பெரிய திருமொழி | 1134 |
| திருவாய்மொழி | 1102 |
| இயற்பா | 593 |
| மொத்தம் | 3776 |

*இதில் 4000க்கு 224 பாசுரங்கள் குறைவாக உள்ளன. இதில் இராமாநுசர் காலத்தில் திருவரங்கத்தமுதனாரால் பாடப்பெற்ற இராமநுச நூற்றந்தாதி (108 பாசுரங்கள்) சேரவில்லை. இராமாநுசர் காலத்தில் இராமாநுச நூற்றந்தாதி 24-வது பிரபந்தமாகச் சேர்க்கப்பெற்றது என்பது அறியத்தக்கது. அதன் பாசுரங்களைச் சேர்த்தால் நாலாயிரத்தின் பாசுரங்களின் தொகை $3776 + 108 = 3884$ ஆகிறது. நாலாயிரத்திற்கு 116 பாசுரங்கள் குறைகின்றன.*

**வடகலையார்:** *இராமாநூற்றந்தாதியின் பாசுரங்களைச் சேர்த்து 4000ஆகக் கணக்கிடுவர் வேதாந்த தேசிகர். இவர் இயற்பாவின் பாசுரங்களை 701ஆகக் கணக்கிட்டு (அவற்றுடன் இராமாநுச நூற்றந்தாதிப் பாசுரங்கள் 108ம் சேர்த்து) 4000 எனக் கணக்கிடுவர், இவர் தமது பிரபந்தசாரம் என்னும் நூலில்,*

அத்தனுயர் வேங்கடமாற் காயிரத்தோ
டானஇரு நூற்றோரைம் பத்து மூன்றும்[18]

*என்று திருமங்கையாழ்வார் பாசுரங்களையே 1253 எனக் கணக்கிடுகின்றார். அதன் விவரம்:*

| | |
|---|---|
| பெரிய திருமொழி | 1134 |
| திருவெழுக் கூற்றிருக்கை | 1 |
| மொத்தம் | 1135 |

18. பிரபந்தசாரம் – 10 (தே.பி. 382).

*எஞ்சிய (1253-1135) 118 பாசுரங்கள் இரு திருமடல்களிலும் இருப்பனவாகக் கொண்டிருத்தல் வேண்டும். இரண்டு மடல்களிலும் உள்ள மொத்த அடிகள் 452. நான்கு அடிகளை ஒரு பாசுரமாகக் கொண்டு பார்த்தால் 113 பாசுரங்களாகின்றன. சிறிய திருமடலின் தலைப்பிலுள்ள தனியன் பாசுரம் ஒன்றும், ஈற்றிலுள்ள வெண்பா ஒன்றும், பெரிய திருமடலின் தனியன் ஒன்றும், ஈற்றிலுள்ள வெண்பாக்கள் இரண்டும் சேர்த்து 118 எனக் கணக்கிட்டனரோ என்று சிலர் கருதுவர். தனியன்களைச் சேர்த்திருந்தால் வேறு ஆழ்வார்களின் பாசுரங்களுக்குரிய தனியன்களையும் சேர்த்திருத்தல் வேண்டும். இங்ஙனம் சேர்க்கவில்லையாதலின் அது தவறு. பிரபந்தசாரத்தின் இன்னொரு பாடலில்,*

சிறியமடற் பாட்டு முப்பத் தெட்டிரண்டும்
சீர்பெரிய மடல்தனிற்பாட்டு எழுபத்தெட்டு[19]

*என்பதில் சிறிய திருமடலை 40 பாசுரங்களாகவும், பெரிய திருமடலை 78 பாசுரங்களாகவும் கொண்டுள்ளதை அறியலாம். பொருளுக்கேற்பச் சில அடிகளைச் சேர்த்துப் பாசுரங்களைச் கணக்கிடுதல் முன்னோர்களின் மரபே என்று கருத இடம் உண்டு.*

*இதனைச் சரி என்று கொண்டால் 118 பாசுரங்கள் கணக்கிற்கு வருகின்றன எனவே இருமடல்கள் நீக்கிய,*

| | |
|---|---|
| இயற்பா | 591 |
| சிறிய திருமடல் | 40 |
| பெரிய திருமடல் | 78 |
| இராமாநுசநூற்றந்தாதி | 108 |
| மொத்தம் | 817 |

*இக்கணக்குப்படி நாலாயிரத்தில் 4000 பாசுரங்கள் அமைந்து விடுகின்றன. ஆயினும் குறையொன்று தோன்றுகின்றது.*

19. பிரபந்தசாரம் - 13 (தே.பி. 379).

கலிவெண்பாவாலாகிய இரு திருமடல்களையும் சிதைத்துப் பாசுரக் கூறுகளைப் பாசுரங்களாகக் கொள்ளல் பொருந்தாது. யாப்பு இலக்கணத்திற்கும் முரணானது. எனவே, தேசிகளின் கணக்கை ஏற்றுக் கொள்ள இயலாததாகின்றது.

**அப்பிள்ளையாரின் கணக்கு:** இவர் இராமாநுச நூற்றந்தாதிப் பாடல்களைச் சேர்க்காமல் 4000 ஆகக் கணக்கிடுவர். அவர்தம் திருமங்கையார் வாழித் திருநாமத்தில்,

**இலங்கு எழுகூற்று இருக்கை**
**இருமடல் ஈந்தான் வாழியே!**
**இருமூன் றில்பாட்டு இருநூற்றிரு**
**பத்தே இசைத்தான் வாழியே![20]**

என்று கூறுவர். இவர் இரு மடல்களின் கண்ணிகளையும் பாசுரங்களாகக் கணக்கிடுவர்.

| | |
|---|---|
| சிறிய திருமடல் | 77½ கண்ணிகள் |
| பெரிய திருமடல் | 148½ கண்ணிகள் |
| **ஆக, மொத்தம்** | **226 கண்ணிகள்** |

எனவே,

| | |
|---|---|
| இரு மடல்கள் நீங்கிய இயற்பாப் பகுதிப் பாசுரங்கள் | 591 |
| மடல்களின் பாசுரங்கள் | 226 |
| ஆக, மொத்தம் | 817 |

இவர் கணக்குப்படியும் நாலாயிரத்தில் 4000 பாசுரங்கள் அமைந்து விடுகின்றன. இங்கும் ஒருகுறை தோன்றுகின்றது. கண்ணிகள் பாசுரங்களின் பகுதிகள். அவற்றைப் பாசுரங்களாகக் கணக்கிடல் இலக்கண வரம்பினை மீறிய குற்றமாகின்றது. ஆகவே, இக்கணக்கும்

20. வாழித் திருநாமம் – 10

பொருந்தாதாகின்றது. தவிர, இராமநுச நூற்றாந்தாதியைச் சேர்க்காத குற்றமும் செய்ந்நன்றி கொன்ற பாவமும் வந்து சேர்கின்றன. வைணவம் நிலைத்திருக்கும் காலம் வரையிலும் இராமாநுசருடைய பெயரும் நிலைத்திருக்கு மாறு காத்தல் வேண்டும்.

**என் முடிவு:** *நாலாயிரத்தில் 4000 பாசுரங்கள் இருந்தே யாக வேண்டும் என்ற கொள்கையை நிலை நாட்டவே இலக்கண வரம்பையும் மீறித் துணிந்தனர். இது தேவை இல்லாத கொள்கை. 4000க்குச் சில பாசுரங்கள் குறைவாக இருப்பினும், தொகை மிகுதி பற்றி 'நாலாயிரம்' என்றே வழங்கப்பெறுகின்றது என்று கொள்ளலே ஏற்புடைத்து. ப்த்துக்குக் குறைவாகவும் பத்துக்கும் மேலாகவும் உள்ள பாசுரங்களைச் சேர்த்து ஒரு பதிகமாகக் கொள்ளும் ஒரு வழக்கு உண்டல்லவா? 947 பாசுரங்களைக் கொண்ட பகுதியை 'முதலாயிரம்' என்று வழங்குகின்றோம் அன்றோ? அங்ஙனமே திருவாய்மொழி 1102 பாசுரங்களா லமைந்திருப்பினும் 'நிரநிறை ஆயிரத்து'[21] 'சீர்த்தொடை ஆயிரத்து'[22] 'அமர்சுவை ஆயிரத்து'[23] 'குருகூர்ச் சடகோபன் சொன்ன ஆயிரம்'[24] என்று ஆழ்வார்தாமே அருளிச் செய்துள்ளமை ஈண்டு அறியத்தக்கது. பெரிய திருமொழி 1134 பாசுரங்களால் அமைந்திருந்தும் 'பொங்குபுகழ் மங்கையர்கோன் ஈந்த மறையாயிரம்'[25] என்று எம்பார் அருளிச் செய்துள்ளமையும் 108 பாசுரங்களைக் கொண்ட அந்தாதியை (எ.டு. இராமநுச நூற்றந்தாதி) நூற்றந்தாதி என்று வழங்கப்பெறுவதும் ஈண்டுச் சிந்தித்தல் தகும். எனவே, 4000க்குச் சில பாசுரங்கள் குறைந்துள்ள திவ்வியப்*

21. திருவாய் 1.1:11
22. மேலது 1.2:11
23. மேலது 1.3:11
24. மேலது 2.1:11
25. பெரி. திரு. தனியன்.

பிரபந்தத்தை 'நாலாயிரத் திவ்வியப்பிரபநத்ம்' என்று வழங்குவது எல்லாவற்றாலும் பொருந்துகின்றது.

இரண்டு: இது பெரியாழ்வாரின்,

ஒருமகள் தன்னை உடையேன்;
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல்வ ளர்த்தேன்;
செங்கண்மால் தான்கொண்டு போனான்
பெருமகள் ஆய்க்குடி வாழ்ந்து
பெரும்பிள்ளை பெற்ற அசோதை
மருமக ளைக்கண்டு உகந்து
மணாட்டுப் புறஞ்செய்யும் கொல்லோ ? (44)

என்ற பாசுரத்தில் "பெரியாழ்வார் தன் ஒரே மகளாகிய ஆண்டாளைச் செங்கண்மால்தான் கொண்டு போனான் என்ற நிலையை நினைந்து உருகிக் கூறுவது இப்பாசுரம்" என்று தமிழ்க்கடல் கூறுவது தவறு. நானும் இப்படித்தான் கொண்டிருந்தேன் 1960களில். இக்கருத்தையே கொண்டு திருமலை-திருப்பதி தேவஸ்தானம் வெளியிடும் 'சப்தகிரி' என்ற திங்கள் இதழிலும் ஒரு கட்டுரை வரைந்திருந்தேன். இதைக் கண்ட காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் இதைத் தவறு என்று சுட்டிக்காட்டி விளக்கமும் அளித்தார்கள். இப்பாசுரம் (பெரியாழ். திரு. 3.8:4) கொண்ட பதிகத்தின் தலைப்பில் உள்ள தலைவன் பின்சென்ற மகளைக் குறித்துத் தாய் பலபடி உன்னி ஏங்குதல்' என்ற தொடரால் இது 'தாய்ப் பாசுரம்' வகையைச் சேர்ந்தது என்றாகின்றது.[26] ஆகவே இதனை பெரியாழ்வார் தம்மை யசோதைப் பிராட்டியாகப் பாவித்துக் கொண்டு பேசும் முறையில் அமைந்தது, ஆண்டாளைக் குறிப்பிடுவதல்ல என்பதை ஈண்டு அறிதல் வேண்டும்.

26. ஆழ்வார் பாசுரங்களில் அகப்பொருள் துறைகளைச் சார்ந்த பாசுரங்களை 'தோழிப் பாசுரம்', 'தாய்ப் பாசுரம்', 'மகள் பாசுரம்' என்று வகைப்படுத்திப் பேசப்பெறும்.

**15. பிள்ளைப்பாட்டு**[27]**:** பல பிள்ளைத் தமிழ் நூல்களிலுள்ள பாடல்களையும் தாலாட்டுப் பாடல் களையும் கொண்டது இந்நூல். பிள்ளைத் தமிழைப் பிள்ளைப்பாட்டு என்றே வழங்கும் பன்னிரு பாட்டியல். பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு முதன் முதலாக வித்திட்டவர் பெரியாழ்வார். இந்த நூலில் பெரியாழ்வார், குலசேகரர் (தாலாட்டு), குமரகுருபரர், பகழிக்கூத்தர், மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, இராய.சொ. அந்தகக்கவி வீரராகவமுதலியார், மார்க்க சகாய தேவர், கந்தப்ப தேசிகர், சிதம்பர சுவாமிகள் ஆகியவர்களின் படைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள் ஒரு சேரத் தொகுக்கப் பெற்று கருத்துரையுடனும் குறிப்புரை யுடனும் வெளியிடப் பெற்றுள்ளன. படிப்பதற்கு மிகவும் சுவையான தொகுப்பு நூல்.

**16. திருமணப் பாட்டு**[28]**:** பண்டைய இலக்கியங்களின் தொகுப்பு நூல். பண்டைய நூலாகிய சிலப்பதிகாரம் முதல் இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன் தோன்றிய திருவிளை யாடற்புராணம் ஈறாக ஒன்பது இலக்கியங்களிலிருந்து பதினொரு திருமண நிகழ்ச்சிகளை 101 பாடல்களாகத் தொகுக்கப் பெற்றது. பெரிதும் காதற்சுவை நிரம்பிய பாடல்கள் இவை. படித்து இலக்கியச் சுவையில் திளைக்கலாம்.

**17. தெய்வப் பாமாலை**[29]**:** இதில் முன்னை நாள் முதல் இன்று வரை அருள் பெற்ற செல்வர் பலராலும் இறைவன் திருவடிகளில் சாத்தப்பெற்ற மலர்களைப் பொறுக்கி

27. இராயவரம் ப.வ.ராம. குழந்தையன் செட்டியார் மகள் நிறைநாட் செல்வி அடைக்கம்மை புதுமைப் பூ – நினைவாக அன்பளிப்பாக வழங்கப்பெற்றது. (ஜய – சித்திரை –4)

28. ஆத்தங்குடி கா.அரு.கா. காடப்ப செட்டியார் மகன் செல்வன் அருணாசலம் திருமண மலராக வெளி வந்தது. மன்மத ஆனி – 12.

29. கோட்டையூர் க.வி.அழ.மு. இராமநாதன் செட்டியார் மகள் வசந்தா திருமணத்தின் அன்பளிப்பாக வெளியிடப் பெற்றது நந்தன. வைகாசி–6.

எடுத்து எழில்பெற இணைந்த ஓர் அற்புதப் பாமாலை. இத்தொகுப்பு நூலில் அடங்கியுள்ள வாடா மலர்கள் 101, சிவபெருமானுக்கு 40 மலர்களும், திருமாலுக்கு 32 பாசுரங்களும், முருகப் பெருமானுக்கு 10 மலர்களும், விநாயகருக்கு 3 பாடல்களும், கலைமகள் உமையம்மை, திருமகள் ஆகியவர்கட்கு முறையே 3, 2, 1 கவிதைகளும் பாரத மாதாவுக்கு ஒரு பாடலும், எந்தக் கடவுள் பெயரும் குறிப்பிடாத பொதுப் பாடல்கள் 9-உம் ஆக 101 பாடல்கள் இத்தொகுப்பை அணி செய்கின்றன. இதில் திருவாசகப் பாடல்கள் பெரிதும் எடுப்பாக அலங்கரிக்கின்றன. சைவ வைணவ வேறுபாடின்றி அரனையும் அரியையும் பின்னிப் பிணைக்கின்றது இந்நூல்.

**18. அங்கங்களின் பயன்[30]:** இத்தொகுப்பு நூல் 40 பாக்களைக் கொண்டது. இறையைத் தொழவே உடம்பும் அதன் உறுப்புகளும் படைக்கப் பெற்றன என்ற கருத்து அமைந்த கவிதைகளே இங்கு இடம் பெறுகின்றன. நாவுக்கரசர் பாசுரங்கள் 9, பிற பெரியார் 31 பேர்களின் பாடல்கள் 31உம் இந்நூலை அணி செய்கின்றன. நல்ல தொகுப்பு இது.

**19. தேவாரமணி[31]:** சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற மூவர் திருப்பதிகங்களையும் 'தேவாரம்' என்ற பெயரால் முதன் முதல் தெளிவாகக் குறிப்பிட்டு வழங்கியவர். சைவ எல்லப்ப நாவலர் ஆவர்.[32] 'தேவாரம்' என்ற தொடருக்கு பலர் பலவிதமாகப் பொருள் கூறுவர்.

---

30. காரைக்குடி – முத்துப்பட்டினம் சொ.நாராயணன் மகள் கலைச்செல்வி சரசுவதி திருமண அன்பளிப்பாக வெளியிடப் பெறுகின்றது. துன்முகி. ஐப்பசி–2.

31. 'தேவாரமணியை' கோட்டையூர் 'ஐயா' என வழங்கும் க.வீ.அழ.மு. இராமநாதன் செட்டியார் சொற்படி இராயவரம் அ.கு.ரா.ம.க.சோ இராமன் செட்டியார் வெளியிட்டு விலையின்றி வழங்கிப் புகழ் பெறுகின்றார். இந்த இரு அருட்செல்வர்கட்கும் தமிழுலகம் கடமைப் பட்டுள்ளது. காந்தி ஆண்டு 84. தை–4.

32. திருவருணைக் கலம்பகம் – நால்வரையும் போற்றும் காப்புச் செய்யுள்.

*(1)* தேவ+ஆரம் எனப் பிரித்து இறைவனுக்கு மாலையாவது எனப் பொருள் கூறுவர் சிலர். தேவார ஆசிரியர் மூவரும் இறைவனுக்கு அணியும் பாமாலைகளாக அழகிய திருப்பதிகங்களைப் பாடிப் போற்றிய திறத்தை இன்னோர் தம் கொள்கைக்கு ஆதாரமாகக் கொள்வர்.

*(2)* தே+வாரம் எனப் பிரித்துத் தெய்வத்தினிடத்து அன்பை விளைவிப்பது எனப் பொருள் கூறுவர் சிலர். தே - கடவுள்; வாரம் - அன்பு. "வாரமாகித் திருவடிக்குப் பணி செய் தொண்டர் பெறுவதென்னே" என வரும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் வாரம் என்னும் சொல் இறைவன்பால் மெய்யடியார்கள் வைத்த பேரன்பு என்னும் பொருளில் வழங்கப்பெறுதல் இவண் கருதற்குரிய தாகும்.

தேவாரம் ஒரு பெருங்கடல். அத்தெய்வக் கடலுள் மூழ்கி எடுக்கப்பெற்ற சிறந்த மணிகளைக் கொண்டது இந்நூல். இன்றுள்ள தேவார அடங்கன் முறைப்படி மூவர் பாடிய தேவாரப் பாடல்கள் 8239; சம்பந்தர் தேவாரம் 4147; அப்பர் தேவாரம் 3066; சுந்தரர் தேவாரம் 1026. இந்த 8239 பாடல்களில் பொறுக்கிய 300 பாடல்கள் கொண்டது இத்தொகுப்பு நூல். சம்பந்தர், தேவாரத்தில் 100-உம், அப்பர் தேவாரத்தில் 150-உம், சுந்தரர் தேவாரத்தில் 50-உம் ஆக தேர்ந்தெடுத்த 300 திருப்பாடல்கள் இந்நூலில் அடங்கி யுள்ளன. இம்மூவரும் பாடிய சிவத்தலங்கள் 275.

பல்லாயிரம் பாடல்களை அனைவரும் படிப்பர் என்று பார்த்தல் முடியாத செயல். தேவாரத்தில் உள்ள அருமணிகளை 'அடங்கல் முறை'யாக வைத்து விடாமல் அனைவரும் படித்து இன்புற வேண்டும் என்ற நன்னோக்கத்துடன் தமிழ்க்கடல் 300 பாடல்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். இவற்றை நாம் அவசியம் படித்து அநுபவிக்கவேண்டும்; நேரம் இருந்தால் ஆசையுள்ளவர்கள் முழுநூலில் மூழ்கலாம். அதற்கு இத்தொகுப்பு நூல் புணையாக உதவும்.

*இத்தொகுப்பு நூலைப் படித்து உணர தமிழ்க்கடலின் குறிப்புரைகள் (அடிக்குறிப்பில் உள்ளவை) கை கொடுத்து உதவும்.*

**20.** முருகன் பாமாலை[33]: *இத்தொகுப்பு நூல் 25 பாடல்களைக் கொண்டது. 25 நூல்களிலிருந்து நூலுக்கு ஒன்றாக 25 பாடல்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளன. பாடல்கள் யாவும் முருகப் பெருமானைப் பற்றியவை. பாடல் நூலின் வலப்பக்கத்திலும் அதன் கருத்து நூலின் இடப்பக்கத்திலுமாகத் தரப்பெற்றுள்ளன. தமிழறிவு குறைந்தவர்களும் பாடல்களைப் படித்து அநுபவித்து முருக பக்தியை வளர்த்துக் கொள்ளலாம்.*

**21.** பாவைப் பாட்டு[34]: *'பாவாய' என்று முடிவு பெறும் பாட்டு பாவைப்பாட்டு. திருப்பாவை, திருவெம்பாவை என்ற இரண்டு பாவைப் பாட்டும் சேர்ந்தது இத்தொகுப்பு நூல். மணிவாசகப் பெருமான் அருளியது திருவெம்பாவை ஆண்டாள் நாச்சியார் அருளியது திருப்பாவை. முன்னது இருபது பாடல்களை உடையது; பின்னது முப்பது பாசுரங்களைக் கொண்டது.*

*திருவெம்பாவை சிவபெருமானின் சீர் பரவவுவது; திருப்பாவை திருமாலின் (இங்கு கண்ணனின்) புகழ் பாடுவது. சிவன் ஆயினும் திருமால் ஆயினும் பெயர் வேறே தவிர இறை ஒன்றே என்பது பேரறிஞர் கண்ட முடிவு. 'ஒருவனே தேவன்' (திருமந் - 2104) என்பது திருமூலரின் திருவாக்கு. 'அரன் நாரணன் நாமம்' (முதல் திருவந் - 5) என்பது பொய்கையாழ்வாரின் பொன்மொழி. 'ஏற்றான் புள் ஊர்ந்தான்' (மேலது - 14) என்பதுவும் இந்த ஆழ்வாரின்*

33. கொத்தமங்கலம் திரு சி.வெ.சி. சின்னக் கருப்பன் செட்டியார் பேரன் செல்வன் சின்னக் கருப்பனின் புதுமை நாளில் வெளியிடப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்பெற்று ஜய. சித்திரை – 26.

34. கோட்டையூர் ராம.பெ.அழ. அழகப்பச் செட்டியார் – உமையாள் ஆச்சி இவர்கள் மணிவிழாவில் (அறுபதாவது ஆண்டு நிறைவு) அன்பளிப்பாக வழங்கப் பெற்றது. காந்தி ஆண்டு 84. பங்குனி – 12.

திருமொழி 'ஒன்றே மெய்ப்பொருள்' ஆகும் என்பதும். அரன் அல்லது சிவன் என்றாலும் நாரணன் அன்றித் திருமால் என்றாலும் அவை அனைத்தும் கடவுளையே குறிக்கும் சொல்லாகும். ஏற்றான் என்பது விடையில் ஏற்பவன்; புள் ஊர்ந்தான் என்பது கருடனின் அமர்ந்து செலுத்துபவன். ஏறூர்ந்த செல்வனாகிய எம்பிரான் சிவனும், புள்ளூர்ந்த புனிதனாகிய பூவைப் பூ புண்ணியனும் ஒருவனே. எப்பெயரால் வழங்கினும் மெய்ப் பொருள் ஒன்றேயாகும். எனவே ஒரே மெய்ப்பொருளை இருவகையாகப் பரவுகின்ற திருவெம்பாவை திருப்பாவை இரண்டையும் ஒன்றாக இணைப்பது இத்தொகுப்பு நூல்.

திருவெம்பாவை சிவனோடு இரண்டறக் கலந்த ஆண் தகையார் பாடியது. திருப்பாவை திருமாலையன்றி அறியாத பெண் அரசி பாடியது. திருவெம்பாவை சிவன் புகழ் பாடுவதில் இணையற்ற நூலாகிய திருவாசகத்தில் ஒரு பகுதியாக இலங்குவது. திருப்பாவை திருமால் சீர் பரவுவதில் தலை சிறந்த நூலாகிய நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் ஒரு பகுதியாகத் திகழ்வது.

இந்த இரண்டு 'பாவை'கட்கும் குறிப்புரை விளக்கவுரை எழுதி வெளியிட்டவர் தமிழ்க்கடல். இயன்ற இடங்களிலெல்லாம் ஒப்புமை காட்டிச் செல்வது இந்நூலின் தனிச்சிறப்பு. இதில் தமிழ்க்கடலின் புலமையும் பெருமையும் சமரச நோக்கும் புலனாகின்றன. அடியேனும் 'திருப்பாவை. திருவெம்பாவை ஒப்பு நோக்கு' என்ற தலைப்பில் எழுதிக் 'கலைமகளில்' வெளியிட்டேன். அது அடியேன் வெளியிட்ட கட்டுரை நூல் ஒன்றிலும் இடம் பெற்றுவிட்டது.

'சைவம் சாத்திர வளத்தால் பேர் பெற்றது; வைணவம் உரை வளத்தால் (வியாக்கியானம்) பேர் பெற்றது' என்ற வழக்கு மொழி ஒன்றுள்ளது. திருப்பாவைக்கு ஆறு வியாக்கியானங்கள் உள்ளன; ஆறும் மணிப்பிரவாள நடையில் உள்ளன. சாதாரண மக்கள்

அவற்றை அணுக முடியாது. அவற்றைத் தக்கவாறு தமிழ் வழிப்படுத்தி **'திருப்பாவை விளக்கம்'** என்ற தலைப்பில் ஒரு பெரிய நூலை திருமலை - திருப்பதி தேவஸ்தானத்தாரிடம் ஒப்படைத்துள்ளேன். விரைவில் அது வெளிவரும் - அவன் அருளால்.

**முடிவு:** பல்வேறு நிகழ்ச்சிகட்காகப் பல்வேறு காலத்தில் பொறுக்கப்பெற்ற இத்தொகுப்பு நூல்களை இன்று ஒரு சேர நோக்கி நுகர வாய்ப்பு தந்தது காரைக்குடி இந்து மதாபிமான சங்கம். அதற்கு சங்கச் சான்றோர்கட்கு என் இதயங் கலந்த நன்றி. இந்த நூல்களை அருளிய தமிழ்க்கடல் இராய.சொ.வை அவர் பிறந்தநாள் விழாவில் நினைந்து மகிழ்கின்றோம். அவர் ஆற்றிய சமய-தமிழ்த் தொண்டையும் நினைந்து போற்றுகின்றோம்.

# 5

# படைப்பு நூல்கள்

தமிழ்க்கடல் இராயசொ. பல் நோக்குடைய பெருமகனார். முறையாகத் தமிழறிவு பெற்ற இராய.சொ.வுக்குப் படைப்பிலக்கியம் மூச்சாக அமைந்து விடுகின்றது. படைப்புத் திறன் பாங்குற வெளிப்படுகின்றது. சுமார் 75 ஆண்டுகட்கு முன் இராய.சொ. குற்றாலத்தி லிருந்தபோது **காந்தி பிள்ளைத் தமிழைப்** பாடினதாக அறிகின்றோம். அது பல பதிப்புகளைப் பெற்றுள்ளது. வேலூர் சிறையில் ஓராண்டுக்காலம் இருந்த போது ஆறு திங்களில் 30 பகுதிகள் (639 பாடல்கள்) பாடினார்கள்[1]. 1948இல் காந்தியடிகள் திருநாடு அலங்கரித்த பிறகு **'காந்தியும் வள்ளுவரும்'** (125 பாடல்கள்) என்ற நூலைச் செய்தார்கள். மறைந்தவுடன் கையறு நிலையில் (இரங்கிய நிலையில்) ஏழு பாடல்கள் பிறந்தன. இந்தப் பாடல்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து (38 பிரிவுகள் - 901 செய்யுட்கள்) **'காந்திக் கவிதை'** என்ற தலைப்பில் அழகப்பா கல்லூரி தமிழ் ஆராய்ச்சித் துறையின் சார்பில், வள்ளல் அழகப்பரின் மகள் திருமதி உமையாள் இராமநாதன்

1. தொடக்ககாலத்தில் காங்கிரசுகாரர்கள் உண்மைத் தேச பக்தர்களாக விளங்கினார்கள். அவர்கள் சிறைச் சாலையை தவச் சாலையாகக் கொண்டவர்கள். சவகர்லால்நேரு சிறையிலிருந்தே (1) சுயசரிதை (2) உலக வரலாறு (மகளுக்கு எழுதிய கடிதங்கள்) (3) இந்தியாவின் கண்டுபிடிப்பு என்ற மூன்று நூல்களை எழுதினதை ஈண்டு நினைவுகூரலாம்.

(செயலர் அறநிலையச் செயற்குழுச் செயலர் ஆதரவில்) வெளிவந்துள்ளது. இஃது ஆராய்ச்சித் துறையின் மூன்றாவது வெளியீடு.

முந்திய இரண்டு வெளியீடுகளும் ஆராய்ச்சித் இனத்தைச் சார்ந்தவை; மூன்றாவது படைப்பு இனத்தைச் சார்ந்தது. எனினும் இது இத்துறையின் வாயிலாக வெளி வருகின்றது. இவ்விடத்தில் டாக்டர் வ.சுப. மாணிக்க னாரின் (கல்லூரி முதல்வர்) கருத்தையும் சிந்திக்கலாம் "பழைய நூல்களை ஆராய்ந்து அமைவதே ஆராய்ச்சித் துறையின் நோக்கம் என்று கருதிக் கொண்டிருக்கின்றோம். இக்கருத்து ஓரளவு பொருந்தும். பல்கலைக் கழகங்களில் புதுநூற் படைப்புக்குத் தனித்துறை இன்றில்லை; இல்லாதவரை உள்ள ஆராய்ச்சித் துறையே படைப்பிய லையும் மேற்கொள்ளவேண்டும். முன்னோர் படைத்தளித்த பனுவல்களை ஆராயும் நாம் பின்னோர் ஆராயும் வண்ணம் சிலவேனும் புதியன ஆக்கிப் படைக்க வேண்டாமா? கதிரறுப்பவர்கட்கு வித்திடலும் கடன். படைப்பு என்பது மூலநூல்; ஆராய்ச்சி என்பது வழிநூல் வழிநூல் இரண்டு வெளியீடு செய்த அழகப்பா கல்லூர் ஆராய்ச்சித் துறை பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறைக்கு ஒரு வழிகாட்டியாக இயக்குநர் தமிழ்க்கடல் இராய.சொ. படைத்த மூலநூலை வெளியிடுகின்றது என்பதனைப் பெருமிதமாகச் சுட்டிக்காட்ட விழைகின்றேன். திறமான புலமை என்பது ஆராய்ச்சி வன்மையும் படைப்பு வன்மையும் குறிக்கும். தமிழ்க்கடலார் இவ்விருவகைத் திறப்பாடும் வாய்ந்தவர் என்பதற்கு இம்மூன்று வெளியீடு களும் சான்றாகின்றன". இனி இந்த படைப்பு நூலைப்பற்றி சில சொல்ல விழைகின்றேன்.

இந்த நூலிலுள்ள செய்யுட்கள் வெண்பா, அகவற்பா, ஆசிரியத் தாழிசை, அறுசீர் - எண்சீர் - பன்னிருசீர் சந்த விருத்தங்கள், கலி விருத்தம், கட்டளைக் கலித்துறை,

வஞ்சித் தாழிசை, வஞ்சி விருத்தம், காவடிச் சிந்து, கண்ணி என்றவாறு பாவும் பாவினமும் கலந்த பல்வேறு யாப்புகளில் அமைந்துள்ளன. பிரிவு 38 என்ற போதிலும் அனைத்தும் காந்தி என்னும் ஒரு பொருளை நுதலி எழுந்தவையாகும். புலவர் ஒருவர் ஒரு பொருளை நேராகவும் பாடுவார்; உள்ளாகவும் பாடுவார். நேர் முகமாகப் பாடினால் பாடற் பொருள் எனவும், உள்முகமாகப் பாடினால் வைப்புப் பொருள் எனவும் வழங்கப்பெறும். இது, பாடல் பெற்ற தலம் எனவும் வைப்புத்தலம் எனவும் பாகுபடுத்தும் முறையை ஒப்பு நோக்கி மகிழலாம். பிள்ளைத்தமிழ், நான்மணிமாலை, திருப்பள்ளி எழுச்சி, திருத்தசாங்கம், திருப்பல்லாண்டு என்பன போன்ற பகுதிகளில் காந்தியடிகள் பாடற் பொருளாகத் திகழ்கின்றார். காந்தி அந்தாதி, காதல் மறுமணம், தாலாட்டு, தோழிப் பேச்சு என்பன போன்ற பகுதிகளில் அவர் வைப்புப் பொருளாக விளங்குகின்றார்.

இதனை மேலும் எடுத்துக்காட்டுகளால் விளக்கு வேன்.

**மயிலே ! மணியே ! மணமே !**
**மருந்தே ! மனத்தில்வளர்**
**குயிலே ! கொடியே ! குணமே !**
**கொழுந்தே ! குழலொடுயாழ்**
**பயில்இன் மொழியே ! விழிதிற**
**வாய்எனில் பாவிஎதும்**
**அயிலேன் ! இதுமெய் ! அருங்காந்தி**
**ஆணை ! அறிகுவையே.**[2]

இது காந்தி அந்தாதியில் 'நாணிக் கண்புதைத்தல்' என்ற துறையில் வரும் பாடல். நாணத்தால் கண் பொத்திக் கொண்ட காதலியை நோக்கி, "நீ எனைப் பார்க்கக் கண் திறவாவிட்டால், பட்டினி கிடப்பேன்; காந்தி மேல் ஆணை'

2. காந்தி அந்தாதி – 26 (நூல் பக் 133)

என்கின்றான் காதலன்.' இப்பாடலில் காந்தி வைப்புப் பொருளாகின்றார். தாலாட்டுப் பகுதியில்,

> காந்தி அறந்தனைக் காசினிஎலாம் பரப்பப்
> போந்த இளங்கொடியே[3]

எனவும், இராஜன் பாபு வரவேற்புரையில்,

> நடுஉயர் காந்தி நன்மணிப் பாங்கர்
> வடுவிலாது ஒளிரும் வயிரமா மணியே ![4]

எனவும் பாடுங்கால் காந்தி வைப்புப் பொருள் ஆகின்றார். தலம் எதுவாயினும் பலவாயினும் ஓரிறைவன் உறைகின்றான்; அதுபோல் தலைப்பு எதுவாயினும் பலவாயினும் ஒரு காந்தியே எங்கும் பொருளாகின்றார்.

**இராயசொ.வின் மனநிலை:** இராய.சொ.வின் மனநிலையையும் அவருக்கும் காந்தியடிகட்கும் உள்ள உறவுநிலை ஆகியவற்றைத் தெரிந்துகொண்டால்தான் காந்திக் கவிதையின் உயிரோட்டம் நன்கு விளங்கும். காந்தியடிகளைத் தம் தெய்வமாகவும் தம்மை அடிகளின் அடியவனாகவும் வைத்து வழிபடுகின்றார் தமிழ்க்கடல். எனவே தேவார திவ்வியப் பிரபந்தங்கள்போல காந்திக் கவிதையும் தெய்வப் பாசுரம்போல் அமைந்து விடுகின்றது.

> பண்கொண்ட குழலூதிப் பசுக்காத்த
>     திருமாலும் பங்கிற் பச்சைப்
> பெண்கொண்ட பெருமானும் பிரமனெனும்
>     மறையோனும் புத்தன், ஏசு,
> மண்கொண்ட வள்ளுவனும் மற்றொழிந்த
>     பெரியோரும் ஒன்றாய் வந்த
> கண்கண்ட தெய்வமெனும் காந்திதனை
>     இழந்திட்டோம் அந்தோ ? அந்தோ ![5]

3. தாலாட்டு பெண்பால்) – 6 (நூல்பக் 231)
4. இராசன் பாபு வரவேற்புரை – (16–17)
5. காந்தி இரங்கற்பா – 7 (நூல். பக் 277)

என்பது காந்தியடிகள் மறைந்தபோது தமிழ்க்கடல் கொந்தளித்துக் கதறியழுத கையறு நிலைப் பாடலாகும். இதுகாறும் இவ்வுலகின் வழிபடும் கடவுளர்களும் சமயச் சான்றோர்களும் திரண்டு ஓருருக் கொண்ட தனி முதல் தெய்வம் எனக் காந்தியடிகளைப் போற்றி வழிபடுவர். தெய்வ உறவு ஆயின்மையின் காந்திக் கவிதைகள் தெய்வம் மணக்கும் செஞ்சொற் பாசுரங்களாகின்றன. அவை தெய்வ நிலைக் கருத்துகள் பொலியும் கருவூலங்களாகின்றன. இந்நிலையில் காந்தியடிகள் கடவுள் நிலை பெற்று 'கடவுள் நிலை பெற்ற காந்திப் பெருமான்'[6] 'காந்திப் பரந்தாமன்'[7] 'கருதுமின் காந்திப் பதமலர்'[8] 'கன்னல் மொழிபகர் காந்தி அடியார்'[9] என வரும் பக்திச்சுடர் தெறிக்கும் புதிய தெய்வத் தொடர்கள் இந்நூலில் ஆளப்பெற்றுள்ளமை இக்கருத்துக்கு அரணாக அமைகின்றது. காந்திப்பிள்ளைத் தமிழும் காந்தியடிகளை,

'மைப்படித்தோன் ஆனாலும் அவன்புகழை
வாயார வாழ்த்து வானேல்
ஒப்பரிய உயர்பதத்தை உறுவன்[10]

என்று போற்றுவதையும் காண்கின்றோம்.

இலக்கியப் புரட்சி: தமிழ்க்கடல் தந்த 'காந்தி பிள்ளைத் தமிழ்', 'காந்தியும் வள்ளுவரும்', 'காந்தி அந்தாதி', 'காந்தி நான்மணி மாலை' என்ற நான்கும் தனிநூல் வனப்பின; இவை தமிழ்க்கடலில் விளைந்த நான்கு முத்துக்குவியல்கள். இவற்றில் காந்தி அந்தாதி இலக்கியப் புரட்சி செய்கின்றது. இரண்டு பாடல்களால் இதனை உங்கட்குக் காட்டுவேன். இந்நூலும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் வகையைச் சார்ந்தது.

6. காந்தியும் வள்ளுவரும் – 2.
7. மேலது – 61.
8. காந்தி அந்தாதி – 35.
9. மேலது – 3
10. காந்தி பிள்ளைத்தமிழ் – பாயிரம் – 4

அகப்பொருளில் பிரிவு பல கூறுதல் உண்டு. அத்துறைப்பாடல்கள் தெவிட்டாத தேனென இனிப்பவை. அப்பிரிவுகளிலும் வேறாகத் தாய்நாட்டுக் கடமைக்குப் பிரிகின்றான் காந்தி அந்தாதித் தலைமகன். தலைவியை விட்டுத் தலைவன் பிரிவான் என்று பாடுவதே அகப் பொருள் மரபு. ஈண்டு நாட்டுப்பற்று காரணமாகத் தலைவனைத் தலைவி பிரிந்து சிறையுள் புகுகின்றாள். இருவருமே இல்லத்தை விட்டுத் தனித்தனி சிறையில் வாழ்கின்றனர். ஒரு சிறையிலிருந்து மறுசிறைக்கு வண்டு தூது விடப் பெறுகின்றது. இங்ஙனம் துறைகள் புதியனவாம் போது துறைவிளக்கங்களும் புதியனவாதல் இயல்பா கின்றது.

**எவரும் விரும்ப இசையிடு**
**வண்டே! எழுந்து உயர்ந்த**
**சுவருள் இருக்கும்என் சுந்தரன்**
**தன்னிடம் தூது சென்று,**
**"கவரும் நினது கரும்பு**
**சிறையில் கலை பயின்று**
**தவரும் வியந்திட வாழுகின்**
**றாள்" எனச் சாற்றுகவே[11]**

சிறையுறையும் தன் காதலனுக்கு இன்னொரு சிறை வாழ் காதலி வண்டுமூலம் கூறுகின்றாள் என்பது இவ்வந்தாதித்துறை. இஃது அகத்துறையில் ஒரு புதுத்துறை.

இன்னொரு பாடல். இதில் காந்தியந்தாதித் தலைவி காதலுக்கு ஒரு விதி போடுகின்றாள். தன்னை விழையும் தலைவனை நோக்கி, "என்னை மணம் செய்து கொள்ள விரும்புவையேல் காந்தியின் அறத்தை உலகறியச் செயலால் பரப்புவேன்; யான் ஒத்துழைப்பேன் என்று காந்திமேல் ஆணை இடுவாய்; இடுவையேல் உனை நான் மன்றல் புரிவேன்; என்னை விரும்பின் இதுதவிர உனக்கு வேறு வழி

11. காந்தி அந்தாதி – 22

இல்லை" என்று காதல் விதி பகர்கின்றாள்[12]. இதனால் மணக்காதலினும் காந்திக்காதல் பெரிதென உணர முடிகின்றது.

மற்றும் ஒரு பாடல். இது 'பாலனைப் பழித்தல்' என்ற துறையில் அமைந்திருப்பது.

'மெய்நொந்து உனைப்பெற்று யான்பெற்ற
இன்பம்இம் மேதினியில்
அய்யா! பெரிதே; எனினும்
அருந்தவக் காந்திகளத்து
எய்யாது உழைத்து இன்றுஇனிது
பெருந்தவம் எய்தல் இன்றித்
துய்யாய்! சிலநாள் வறிது
கழித்திடத் தோன்றினையே.[13]

என்பது பாடல். இந்தத் துறை அகத்துறைகள் நானூறுக்கும் அப்பாற்பட்டது. இதில் தலைவி தான் பெற்ற பிள்ளையை நோக்கி, "அய்யா, உன்னைப் பெறக் கழித்த நாட்களில் காந்தி வழிப்படி நாட்டுத் தொண்டு செய்ய முடியாமற் போயிற்றே" என்று வருந்துகின்றாள் தாய். மக்கட்பேறால் பெற்ற இன்பத்தினும் நாட்டுக்கடமை பெரிது எனவும், நாட்டுக்கடமை வீழ்நாள் படாமல் நாடோறும் செய்ய வேண்டும் எனவும் உணர்கின்றோம்.

சுவைக்காக பல பட்டடைச் சொக்கநாதப் புலவர் இத்துறையில் பாடிய பாடல் ஒன்றையும் ஈண்டுத் தருகின்றேன்.

அரும்பால கா!முனம் பூமணம்,
சொற்பொருள், ஆகம் உயிர்
கரும்பாம் சுவை,எள்ளும் எண்ணெயும்
போலொத்த காதவரைப்

12. 50 மேலது. திருமங்கையாழ்வார் குமுதவல்லி நாச்சியார் போட்ட நிபந்தனைகளை ஈண்டு நினைவுகூரலாம்.
13. மேலது – 17

பெரும்பாலில் நல்லன்னம் கங்கா
சலத்தைப் பிரிப்பதுபோல
சரும்பாம் புலவர் யமன்ஆலை
செக்கெனத் தோன்றினையே.[14]

என்பது பாடல். "அருமையான மகனே, அந்த நாளில் - நீ பிறப்பதற்கு முன்னர், நானும் நின் தந்தையும் (காதலரும்) பூவும் மணமும் போல - சொல்லும் பொருளுமாக - உடம்பும் உயிரும் என்ன - கரும்பும் அதில் பொருந்தும் சுவையுமாக - எள்ளும் அதனுள் இருக்கும் எண்ணெயும் என்று சொல்லும்படிப் பிரியா இயல்பு கொண்டு வாழ்ந்தோம். நீரை விட்டுப் பாலைப் பிரித்தெடுக்கும் அன்னப் பறவைபோல் நீ வந்தாய் எங்களைப் பிரிவு செய்ய. பூவும் மணமுமாக இருந்த எங்களைப் பிரிக்க வண்டாகவும், சொல்லும் பொருளுமாக வாழ்ந்த எங்களை வேறுபடுத்தப் புலவனாகவும், உடலையும் உயிரையும் பிரித்தெடுக்கும் எமனாகவும், கரும்பையும் சுவையையும் தனித்தனியாக்கும் ஆலையாகவும், எள்ளை விட்டு எண்ணெயை எடுக்கும் செக்காகவும் நீ வந்து தோன்றினாய்" என்கின்றாள்.

இப்படி ஒரு புதிய துறையில் பாடவேண்டும் என்று இப்பாடல் இராய.சொ.வுக்கு அடி எடுத்துக் கொடுத்திருக்க வேண்டும் என்று கருதலாமல்லவா?

புறத்துறையிலும் ஒன்று காட்டுவேன்.

இந்தியத் தாய்சமம் எய்தாது
உலகில் இடர்அடைந்து
நொந்திடக் கண்டு, உடன்செய்கடன்
வேறுஇலை நுங்கட்குஎன
மைந்துடன் விண்டு, அவன்மகளைச்
சேர்ந்துஒரு மாபெரும்போர்

14. தனிப்பாடல் திரட்டு - முதற்பகுதி செய்யுள் - 44.

முந்தையர் காணா முறைவகுத்
திட்டவன் மோகனனே.[15]

இதில் வரும் புறத்துறை ஒரு புதுத்துறையாகும். தலைவன் போர்க்களம் செல்வான் என்பது புறமரபு. அப்போர்க்களம் குருதிப்படைப் போர்க்களம் ஆகும். காந்திப் போர்களம் உறுதியுடையதேயன்றிக் குருதியுடையதன்று. மக்களைச் சேர்த்து ஒரு மாபெரும் போர் முந்தையர் காணா முறை வகுத்திட்டவன், இது 'கத்தியின்றி இரத்தமின்றி வரும்போர்' என்று காட்டுவர் தமிழ்க்கடல்.

இந்தப் போர்முறை பகைவர்க்கும் இனியதாதலின் பெண்ணும் தனித்து அமர்க்களம் புகுகின்றாள்.

காந்தி அறம்எனும், கண்டார்
நடுங்கும் கடுந்தவத்து,என்
ஏந்துஎழில் வாய்ந்த இனிய
ஒருமகள், எல்படைகொள்
வேந்தர் விறலும் மதியா,
வெறுக்கை அமர்க்களத்தே
சேர்ந்தன ளே;அருந் தோழீ!
இனிநான் செய்வதென்னே ![16]

இது 'நற்றாய் இரங்கல்' என்ற புதுத்துறையின் பாற்படும். இதுவும் புறத்துறையில் ஒரு புதுத்துறை. கன்னி காதற்களம் புகாது காந்திக்களம் புகுகின்றாள்.

**சூழ்நிலைக்கேற்ற உணர்ச்சி:** பாடும் புலவனின் சூழ்நிலையைப் பொறுத்துப் பாட்டுக்கு உணர்ச்சி அமையும். இடத்துக்கும் உணர்ச்சிக்கும் உண்டு. மேடை மேல் ஏறிப் பேசும் உணர்ச்சி, பாயின் மீதிருந்து காதலியிடம் பேசும் உணர்ச்சி, நாற்காலியின் மீதிருந்து கொண்டு பிஞ்சு மணங்கொண்ட சிறுவனிடம் கொஞ்சும்போது எழும்

15. காந்தி அந்தாதி – 24.
16. மேலது – 39

உணர்ச்சி வெவ்வேறுபட்டனவாக இருப்பதை நாம் அறிவோம்.இராய.சொ.வின் காந்திக் கவிதையின் பல பகுதிகள் அவர் சிறையிலிருந்த போது பாடப் பெற்றவை.

'சிறைகாப்பு எவன் செய்யும்?' என்று வள்ளுவர் வினவுவர். சிறைகாப்பு தமிழ் செய்யும் என்பது இராய.சொ.வின் வாழ்வில் கண்ட உண்மை. காந்திக் கவிதையின் 38 பகுதிகளில் 30 வேலூர் சிறையில் ஆறு திங்களில் அரும்பியவை.

**கறையுடையார் நமக்காகக் காணப்பட்ட**
**காவல்அமை வறட்டுமலை ! சூழ்ந்தவேலூர்ச்**
**சிறையதனில் சிற்றறையில் இருந்து !ராய**
**சொக்கலிங்கன்.**[17]

என்று தமிழ்க்கடலாரே சிறைப்பேற்றை மதித்துப் போற்றுகின்றார் **'சிறைத்துயர்'** என்று பதிகத் தலைப் பிடாமல் **'சிறைவாழ்வு'** என்று தலைப்பிட்டிருத்தலின் இராய.சொவிற்கு சிறை தவச்சாலையாக அமைந்தது. 'வேலூர் அரண்மனை மேவிய நாளென்'[18] என்று எட்டடி கொள் சிற்றறையை அரண்மனையாகக் காண்பார். இங்ஙனம் வறட்டுமலை வேலூர்ச் சிறையை அரண்மனை யாக மதிக்கும் இராய.சொ. அடிகள் தம் தெய்வ காந்தி அடைப்பட்டிருந்த ஏர்வாடாச் சிறையை "ஏர்வாடாக் கோவில் உறை எம்மான்"[19] என்று போற்றித் தொழுதல் எத்துணைப் பொருத்தம்! இந்தக் கோவிலை பத்துத் திருத்தாண்டகச் செய்யுள் அடங்கிய பதிகத்தால் பாடிப் போற்றி மகிழ்கின்றார். சிறையிற்கிடந்து சிறையையே நினைத்துப் பாடிய பழக்கத்தால் இராய.சொவால் சிறையை மறக்க முடியவில்லை.

17. சிறைவாழ்வு – 10
18. காந்தித் திருத்தசாங்கம் – 1
19. ஏர்வாடாக் கோவில் – 1

யாரும்நிகர் இல்லாத
காந்திதனைத் திருக்குறளோடு
இணைவு கண்டு
நேரிசைவெண் பாஒருநூற்
றிருபத்தைந் தாஅமைத்து,
நெஞ்சில் அன்னான்
சீருருவை அகலாது
சிறைவைத்த ராய.சொக்க
லிங்கன்.[20]

என்று பாடுகின்றார்.

**வளளுவனார் நினைவு:** காந்தியடிகளை எண்ணும் போதெல்லாம் வள்ளுவனார் நினைவே இரா.சொவின் மனத்தகத்துத் தலைகாட்டுகின்றது. பிள்ளைத் தமிழின் சிறு தேர்ப் பருவத்துப் பாடலொன்றில் (3) வள்ளுவரோடு காந்தியடிகளை ஒப்பிடுகின்றார்.

வள்ளுவர் நெய்தொழிலை மேற்கொண்டவர். காந்தியும் அத்தொழிலை ஏற்றவர். வள்ளுவர்க்கு வாசுகி வாழ்க்கைத் துணைவியாக அமைந்ததுபோல் காந்தியடி கட்கு கஸ்தூர்பா மனைவியாக அமைந்தார். வள்ளுவர் ஏதம் இலா அறம் உரைத்தார். காந்தியும் தன்னரிய அவ்வறத்தைத் தகவு அறிந்து சாற்றுகின்றார். இக்காரணங் களால் காந்தியடிகள் 'தெள்ளுத்தமிழ் வள்ளுவனார் திருவரவு' – வள்ளுவனார் காந்தியடிகளாகப் பிறந்தார் என்கின்றார்.[21]

காந்திக் கவிதையில் வள்ளுவ மணம் பரவாத இடம் இல்லை. சோமேசர் முதுமொழி வெண்பா, திருக்குறள் குமரேச வெண்பா போன்ற திருக்குறளுக்கு வரலாறு காட்டும் நூல்கள் முன்னரே பல உள்ளன. இந்நூல்களில் ஒவ்வொரு குறளுக்கும் பலருடைய வாழ்க்கைச் செயல்கள்

20. காந்தியும் வள்ளுவரும் – 1
21. கா.பி.த. சிறுதேர்ப்பருவம் – 3

இலக்கியமாகக் காட்டப்பெற்றுள்ளன. **'காந்தியும் வள்ளுவரும்,'** என்ற இராய.சொ.வின் கவிதைப் பகுதியில் எல்லாக் குறள்கட்கும் காந்தியடிகள் ஒருவரின் வாழ்க்கை வரலாறுகளே எடுத்துக்காட்டாக அமைகின்றன. இஃது ஒரு புதுமுறை. மேலும், இந்தப் பகுதி உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக அமைந்துள்ளது. செய்யுள் யாத்த தமிழ்க்கடல் அவர்களே வேண்டிய விளக்கத்தை உரைநடையில் காட்டியுள்ளார்கள். வெண்பாவாலும் விளக்கத்தாலும் திருக்குறட்கே சில புதிய கருத்துகளை அறிந்துகொள்ள முடிகின்றது. வெண்பாவிலுள்ள பின்னிரண்டடித் திருக்குறளுக்கு ஏற்ப முன்னிரண்டடி குறள் பாடும் புலவர் தனிச் சொல்லும் சேர்த்துப் பாடவேண்டும். யாப்பு நிறைவுக்காகப் பாடுபவர் யாப்பறி புலவர் ஆகின்றார். இத்தனிச் சொல்லை ஒப்பற்ற சொல்லாகத் திறம்படத் தொகுப்பவர் பொருளறி புலவராகின்றார். 125 வெண்பாக்களையுடைய இக்கவிதைப் பகுதியில் இராய.சொ. இணைக்கும் தனிச்சொற்கள் திருக்குறளின் பொருளை முன்னிலும் வசப்படுத்துகின்றன. வெண்பாக் களை ஊன்றி நோக்கி இவ்வுண்மையை அறியலாம்.

**பழையதடம் – புரட்சிநோக்கு:** தெய்வக் காந்தியைத் தொழும் இராய.சொ. இடத்து நாயன்மார் ஆழ்வார் அடியவர் மனப்பான்மையைக் காண முடிகின்றது. 'எளியேன் உள்ளம் கோயில் கொண்டிருக்கும் கருணை கருங்கடலே'[22] எனவும், 'இனிப் பிறவி எடுக்கும் போது எம் பெருமான் உன் குணத்தை இடைவிடாது கொண்டு பிறத்தல் வேண்டும்'[23] எனவும் பாடுவர். 'தண்ணளி சேர் காந்திபாதம் தலைக்கொளும் நற்காரைநகர் ராய.சொக்க லிங்கன்'[24] என்று தாள்–தலை உறவு குறிப்பர். 'நாயேனை நஞ்சாம் உலகத் திநெறி அதனுள் நண்ணாது ஆட்கொண்ட

22. கா.பி.த தாலப்பருவம் – 1
23. மேலது. சப்பாணிப் பருவம் – 1
24. காந்தி அந்தாதி – பாயிரம் – 1

சில'[25] என்று மணிவாசகரின் தாழ்வு நடையில் 'நாயேன' என்று பணிவுகாட்டிப் பேசுவர்.[26]

தெய்வப் பாடல்களையும் பாசுரங்களையும் பாடிப் பாடிப் பக்தி இலக்கியத்தின் எல்லை கண்டது தமிழ். ஆதலின் எத்தெய்வத்தை யார் பாடினாலும் பழம் பாடல் அமைப்பின் படிவமாகத்தான் இருக்கமுடியும் என்பது ஓர் உண்மை. 'போரார் திறம் பாடிப் பொன்னூசல் ஆடாமோ?'[27] என்பது திருவாசகத்தடம்.[28] 'பாரதர் முடிமணிக் காந்தியடிகட்குப் பல்லாண்டு கூறுதுமே'[29]....... என்பது சேந்தனார் பெரியாழ்வார் என்பவர்களின் திருப் பல்லாண்டுச் சாயல்.[30] 'காந்தி திருமுன் குவியாக் கையென்ன கையே'[31] என்பது சிலப்பதிகார நெறி.[32] 'எக்குறியும் திருநெற்றி இடாதான் கண்டாய் ஏர்வாடாக் கோவிலுறை எம்மான்தானே'[33], 'பொன்னாருந் திருமேனிக்கு பொலிந்து தோன்றும்'[34], 'பூவிலுயர் சபர்மதிஎம் புனிதனார்க்கே' என்பன திருத்தாண்டக வழி.[35] இவ்வாறு அடிகள் இராய.சொ. புதிய காந்திக் கடவுளை பண்டையோர் புனைந்த தெய்வத் தலைப்புகளில் நெக்கு நெக்குருகிப் போற்றுவர்.

பழைமையான தடத்தைப் பின்பற்றினாலும் கவிதையின் உணர்ச்சிகளும் கொள்கைகளும் புதியனவே.

25. க.பி.த: செங்கீரைப் பருவம் – 5
26. திருவா். கண்டபத்து – 4,5; குழைத்த பத்து – 8
27. காந்தி திருப்பொன்னூசல் – 6
28. திருவா. திருப் பொன்னூசல் காண்க.
29. காந்தி திருப்பல்லாண்டு – எல்லா ஈற்றடிகளும்.
30. பெரியாழ் திருப்பல்லாண்டு, (முதலாயிரம் சேந்தனார் திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை).
31. அங்கங்களின் பயன் – 7
32. சிலப், ஆய்ச்சியர் குரவை (முன்னிலைப் பரவல்)
33. ஏர்வாடாக் கோவில் – 5
34. சபர்மதி – 2
35. அப்பர் தேவாரம் – ஆறாம் திருமுறை

மரபான முறையில் தரமான நடையில் காந்தியின் புரட்சி யங்களைப் போற்றிப் புது மெருகு ஊட்டியுள்ளார். தெய்வப் பாசுரமாயினும் 'கைம்மையை உடைத்திடுவேன்' என் மாதர் மறுமணம் கமழ்கின்றது. 'எங்ஙனம் பெண்மை இழிவாகும்' எனச் சமுதாயத் திருத்தம் வளியுறுத்தப் பெறுகின்றது; 'இந்தியா எழுந்து விட்டது' என நாட்டுப்பற்று எழுப்பப் பெறுகின்றது; 'வையகத்தில் எல்லோரும் பசியாமல் உண்டு உடுத்தி வாழவேண்டும்.' எனப் பொது வாழ்வியம் வேண்டப் பெறுகின்றது; 'எனக்குத் தமிழ் வராது' என உரைப்பவர்தம் மனநிலை பழிக்கப்பெறு கின்றது. இவை யாவும் காந்தியப்பாடலின் புதுக்கூறுகள். காந்தி மக்கள் தலைவராதலின், பொது மக்களின் நலவாழ்வுக்கு வேண்டிய மக்களியம் காந்திக் கவிதை முழுவதும் இயங்கக் காண முடிகின்றது.

சிறியதொரு கத்தர்பை பக்கம் தோன்றும்!
தினம்படிக்கும் ஒருகீதை அதனுள் தோன்றும்!
மறைஎழுதும் ஒருசிறிய குச்சி தோன்றும்!
வனப்புயர்ந்த இராட்டொன்று திருமுன்
தோன்றும்!
கறைஎதுவும் இல்லாத கத்தர் மாலைக்
கயிற்றுடனே கடிகாரம் ஒன்று தோன்றும்!
பொறிஅடக்கி ஆண்டபெரும் தகைமை தோன்றும்!
பூவில்உயர் சபர்மதிஎம் புனித னார்க்கே.[36]

இத்திருத்தாண்டகப் பாடலில் தெய்வக் காந்தியின் திருவுருவத் தோற்றம் புனையப்பட்டு புதுக்கருத்துகளும் காலப் புதுச்சொற்களும் தொக்குக் கிடக்கும் அருமைப் பாட்டைக் கண்டு மகிழ்கின்றோம்.

**பாவில் இடம் பெறும் கதர்:** சைவப் பாடல்களில் திருநீறும், வைணவப் பாசுரங்களில் திருமண்ணும் இடம் பெறுதல்போல, காந்திக் கவிதையில் கதர் நல்லிடம்

36. சபர்மதி – 9

பெறுகின்றது. காந்தி மதத்திற்குக் கதர் புறச்சின்னம். கதர் என்பது முரட்டுத் துணி. அதனை மென் திருத்தித் தலைவி உடுத்துகின்றாள் என்னும்போது பெண்ணிலக்கியப் போக்கு மாறாமல் இருக்க முடியாதல்லவா?

அனிச்சப் பூவையும் சூட்டமாட்டாத மெல்லிய இடையினள் வள்ளுவர் காட்டும் தலைவி. அத்தகைய மெல்லிடைப் பெண் கதர் பெறுகின்றாள். அதன் மேலும் வண்டுகள் தலைமேல் இருந்தால் இடை என்னாகும் என்று வினவுகின்றான் தலைவன்.[37] 'கதர் உடுத்தியே கைராட்டை உருட்டும் காரிகையீர்'[38] என்று காதலன் காரிகையைக் "கலைமான் இப்பக்கம் சென்றதோ?" என்று வினவு கின்றான். 'தரித்தாள் முரட்டுத் துணிக்கதரை'[39] என்று உடன் போகிய மகளுக்கு நற்றாய் இரங்குகின்றாள்.

நாடு செழித்திட நண்ணும்
முரட்டுக் கதர்சுமந்து
வாடிய சிற்றிடை நொந்து[40]

என்பதனால் கதரால் இடைவாடினாலும் நாடு செழிக்கும் என்ற கருத்து புலனாகின்றது. தனிக் கதர் தாங்கும் அழகினன்'[41] என்று தலைவனும் காந்தி மதத்தவன் என்று காட்டுவதற்குக் கதர் அணிகின்றான். 'தமிழே பயின்று கதரே சுமந்து தளரும் இடை'[42] என்பதில் இடைத்தளர்ச் சிக்கு முரட்டுத்துணி அணிதல் பொருத்தமாகின்றது. ஆனால் தமிழ் பயில்தல் இடைத் தளர்ச்சிக்கு எப்படிக் காரணமாகும்? காந்தித் தலைவி நடந்து தமிழ் நூலை ஏந்திப் படிப்பவள். ஆதலின் தமிழும் அவள் நுசுப்புத் தளர்ச்சிக்குக் காரணமாயிற்று. தமிழ்ப்படிப்பு மெலிவு தரும்

37. காந்தி அந்தாதி - வண்டோச்சி மருங்கு அணைதல் - 51
38. மேலது - கலைமான் வினாதல் - 13
39. மேலது - நற்றாய் இரங்கல் - 41
40. மேலது - வண்டோச்சி மருங் கணைதல்.
41. காந்தி அந்தாதி - மனத்திற்குக் கட்டளை - 15
42. மேலது - தோழி தூது உரைத்தல் - 49

என்பதனை 'தமிழின் துறைவாய் நுழைந்தனையோ?'[43] என்ற திருக்கோவையார் வினாவால் உயத்துணரலாம்.

**எடுத்துக்காட்டு நடை:** பல்வேறு இலக்கியக் கூறுகளுள் ஒன்று எடுத்துக்காட்டு நடையாகும். இந்நடையால் ஏற்றமும் இறக்கமும், வாழ்வும் தாழ்வும் , பெருமையும் சிறுமையும், வன்மையும் மென்மையும், தெள்ளிதின் புலனாகும். "கீழ்த்திசைவாயில் கணவனொடு பெயர்ந்தேன், மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென" என்று சிலம்புச் செல்வி முன்னை நிலையைப் பின்னை நிலையொடு இணைத்துக் காட்டும்போது அவலச் சுவை பொள்ளெனப் பிறக்கின்றது. உணர்ச்சி கிளர்ந்தெழ வேண்டுமெனின், பாடலில் இருநிலை அல்லது பன்னிலை அமைதல் வேண்டும்.

ஒருநிலைப்பாடல் தன்மைகாட்டுமேயன்றி உணர்ச்சியின் கொடுமுடி காட்டாது.

மெத்தையின் கண்வளர்ந்த மேலோர் எல்லாம்
மிதிப்பதற்கும் தகுதி இல்லாக் கயிற்றுப் பாயில்!
கைத்தலைக்கு வைத்துறங்கும் காட்சி ஒன்று
கனவினிலும் காண்பதுவோ காந்தி வள்ளால்! (2)

கட்டிலின்மேல், பூஅணையில், தென்றல் உண்டு;
கவின்உயர்ந்த மாளிகையில் துயின்றோர் எல்லாம்
எட்டடிகொள் சிற்றறையில் பூட்டப் பட்டே
இருள்கிடத்தல் நிலைத்துண்டோ ஏந்தால்
காந்தி! (3)

புத்துருக்கு நெய்அன்றி வேறு காணாப்
பொருவுஅரிய பெருவாழ்க்கை பூண்டோர்!
எல்லாம்
கைத்துணை,எண் ணெயும்அறியா மிடிகூர் வாழ்வைக்
கடனாகக் கருதிடுதல் தரையில் உண்டோ? (4)

43. திருக்கோவை – 20 (பாங்கன் வினாதல்)

எண்சீர் விருத்தத்தில் அமைந்த 'சிறைவாழ்வு'ப் பாடல்கள் யாவும் இருநிலைப் பாடல்களாகும்; அவல உணர்ச்சி கிளர்ந்தெழும் பாடல்களாகும்.

இவ்விடத்தில் குலசேகரப் பெருமாளின் பாடல் ஒன்று நம்மனத்தில் குமிழியிடுகின்றது.

மெல்லணைமேல் முன்துயின்றாய்
இன்றினிப்போய் வியன்கான
மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக்
கற்றனையோ ? காகுத்தா !
கரிய கோவே ![44]

என்ற பாசுரப் பகுதி கல்நெஞ்சத்தையும் உருக்குவதை அறிகின்றோம்.

**இலக்கியநயம்:** பலவித இலக்கிய நயங்களுள் அறிவு இனிக்குமாறு சொல்வது பொருள் நயமாகும். இதனால் புலவரின் சிந்தனையையும் புரிந்து கொள்ள முடிகின்றது. இம்மை மறுமை என்ற பிறப்புக் கொள்கைகள் பல சிந்தனையைப் புலவர்களிடம் தூண்டியுள்ளன. 'இம்மைப் பிறப்பிறப்பில்' என்று தலைவன் ஆறுதல் மொழிந்தபோது, அப்படியானால் மறுபிறப்பில் பிரிவான் போலும் என்று தலைவி கலங்கினதாகப் பொய்யில் புலவர் கூறுவர்.[45]

எந்திரபீ ரங்கி எங்கள்
உணர்ச்சிதன்னை என்செய்யும் ? – உடல்
வெந்து போயின் வேற்றுடலில்
வீறுகொள்வது உறுதியால்[46]

என்பர் இராய.சொ. உடலைக் கொல்லலாம். விடுதலை உணர்வுக்குக் கொல்லி இல்லை. ஆசையுடையவர்கட்கு

44. பெருமாள் திருமொழி – 11. தசரதன் புலம்பால் – பாசுரம் (3)
45. குறள் – 1315
46. விடுதலை – 10

மறுபிறப்பு உண்டு.[47] விடுதலை வேட்கையுள்ள நாங்கள் இந்த மண்ணில் மறுபிறப்பு அடைவோம். எங்கள் உணர்ச்சி மறு உடம்பில் என்று உடலற்றாலும் உணர்ச்சியருமையைப் பிறப்புக் கொள்கையில் வைத்துக் காட்டுவர் புலவர். முருகன் வேலேந்தியதாக இராய.சொ. கூறும் கருத்துரை வேறு. குறவள்ளியை மணந்தான் வேலன். கோயிலில் அவ் வள்ளியைத் தொழுது பூசை செய்யும் மாந்தர் வள்ளி குலத்தாரைத் தீண்டாதார் என்று கோயிலில் தடை செய்கின்றனர். இத்தடையாளர்களை வள்ளிக் கணவன் பொறுப்பானா? "தீதுடையார் தமைஒறுக்க அன்றோ, அந்தத் திருக்கோலம்?"[48] என்று விளக்குவார் இராய.சொ.

இவ்விடத்தில் 'தீண்டாமை' குறித்து எழுந்த **'வள்ளி சிரித்தாள்'** என்ற தலைப்பில் ஒரு கவிதை நினைவிற்கு வருகின்றது.

**சப்பரத்திலே வள்ளியும் முருகனும்
காஷ்லைட் தூக்கியவாறு
நான் முன்னால் சென்று கொண்டிருந்தேன்
அபிஷேகத்திற்காக
பன்னீர் பாட்டலுடன் வந்த பட்டர்
என்மீது மோதி விட்டார்.
"டேய் மடப்பயலே தீட்டாச்சேடா
நான் குளிச்சிட்டிலேடா சாமிகிட்டே போகணும்"
நான் சப்பரத்தைப் பார்த்தேன்
வள்ளியின் உருவம்
சிரித்துக் கொண்டிருந்தது[49]**

நல்ல கிண்டல் கவிதை தீட்டைப் பொருட்படுத்தாது இறைவனே வேடர்குலப் பெண்ணை மணந்து

47. தசரதன் இராமன்மீது ஆசை வைத்ததால் அவனுக்குப் பிறவி உண்டு என்று சொல்வர்.
48. கோயில் திறவு – 7
49. சுப்பு ரெட்டியார்; ந: புதுக்கவிதை; போக்கும் நோக்கும் பக். 150

த.க.10.

கொண்டதை நினையாமலே அந்த இறைவனுக்கும் பூசனை புரியும் பட்டர் தீட்டைப் பற்றிப் பேசுகின்றார்.

இலக்கிய உலகில் சொல்நயம், பொருள்நயம் சான்ற பாடல்களையே கவிநயம் உடையனவாக கருதுவார்கள். இவை இல்லாத கவிதைகள், டாக்டர் வ.சு.ப. மாணிக்கம் அவர்களின் மொழியில் சொன்னால், "பட்டையடிக்கும் எழுதுகோலை யொக்கும்; மழுங்கற் பாடல்களாகக் காட்சி யளிக்கும்."

**வேர்மாளத் தீண்டாமை வேண்டியவாறு ! உரைத்தருளி**
**ஏர்வாடாச் சிறையிருந்த எம்மானும் நீதானோ**[50]

என்ற தாலாட்டில் தீண்டாமை என்ற மரத்தின் இலை, தழை, கிளைகளை வெட்டினால் போதா; என்றும் தளிராதபடி வேரும் மாளவேண்டும் என்று அழுத்தமாக அறைவர். இக்கருத்தினையே,

**தீண்டா மைஎனும் தீமை நிலத்தில்**
**சிறிதும் இடனின்றிச் சென்று ஓடி,**
**மாண்டு மடிந்துமண் ணாடித் தொலைந்திட**
**மங்கைய ரே !நனி கும்மியடி.**[51]

என்ற கும்மியிலும் வற்புறுத்துவர்.

காந்தியடிகள் ஓராடை ஆண்டி. இந்திய மக்களின் சராசரி ஏழை யொருவனை நினைவுறுத்தப் புனைந்து கொண்ட கோலம். வெள்ளைக்காரன் இவரை Half-naked fakir என்று கிண்டல் செய்வான். இவர்தம்மை அடிமைப் படுத்திய ஆங்கிலேயரோ ஆடை பல அணியும் நாகரிகர் ஆயினும், ஓராடையுடனே இலண்டன் மாநகர் சென்று அரசரையும் அந்நாட்டு மக்களையும் கண்டு இந்திய உரிமையை எடுத்து இயம்பிய பெருமை உண்டு காந்தி யண்ணலுக்கு.

50. தாலாட்டு – 44
51. கும்மி – 42

ஒன்னார்கள் கண்டஞ்சும் ஒற்றைக் கத்தர்
உடுத்துஆடை பலசுமக்கும் ஓரார் காட்டும்
எல்நாட்டி மீண்டபெரும் எழிலோன்[52]

காந்தியடிகள் உடுத்திய ஒரு சிறிய கதராடை பகைவர்க்குப் படையாய்த் தோன்றியது. அழகு என்பது ஆடை மென்மையிலும் எண்ணிக்கையிலும் இல்லை என்பதனை 'எழிலோன்' என்ற சொல்லால் குறிப்பிடுவர் தமிழ்க் கடலார்.

**இராய.சொவின் பாடல்கள்:** பாடல்களைப் படிப்போரிடம் உணர்ச்சியையும் கிளர்ச்சியையும் எழுப்ப வேண்டுமானால் அலங்கார நடைப் பாடல்கள் போதா. பாடல்களில் வெள்ளம் நிகர்க்கும் வேகம் வேண்டும். துள்ளு நடை வேண்டும். சொல்லிலும் சொற்றொடரிலும் சொல் முறையிலும் சுறுசுறுப்பும் விறுவிறுப்பும் அமைய வேண்டும்; அவை நெளியும் பாங்கில் அமைந்து புது வேகத்தில் பாய வேண்டும், கருத்தில் ஆழம் மட்டும் போதாது; சுழிப்பாடும் வேண்டும். செவிச்சுவை அறியா வாய்ச்சுவை மாக்கள் அவிந்தாலென்ன? அவிதலினின்றும் தப்பிப் பிழைத்து வாழ்ந்தலென்ன? என்று வள்ளுவப் பெருமான் வேகப்படுதல்போல் வேகப்படல் வேண்டும். பாரதிதாசனின் உதாரன் (புரட்சிக்கவி) பேச்சுபோல் அமைதல் வேண்டும். வேகமில்லாத கவிதைகள் இலக்கியப் பாகம் இல்லாதவை. காந்திக் கவிதையில் காட்டாறு போன்ற வேகத்தைக் காண முடிகின்றது. காந்திப் பெருமானைக் கொன்ற **கொடுசேய்** (கோட்சே) ஊழிக்காலம் முழுவதும் நரகம் அடைவான் என்று சிலர் சொல்வது இராய.சொ.வின் செவியில் படுகின்றது. சின உணர்வும் அவல உணர்வும் இணைந்து செயற்படுகின்றன புலவர் பெருமானிடம்.

52. ஏர்வாடாக் கோயில் – 9. காந்தியடிகளின் ஓராடை இலண்டன் மாநகரிலுள்ள பக்கிங்காம் அரண்மனையையும் அசைத்து ஆட்டிவிடும் என்று சொல்வதுண்டு.

உய்யாது ஒருபாவி ஊழிநரகு உற்றாலென் ?
மெய்யான காந்திநமை விட்டானே – ஐயோ[53]

*என்று துடிக்கின்றார். 'ஐயோ' என்ற சொல்லில் உள்ள அவலம் கொடுமுடியை எட்டி விடுகின்றது. வெண்பாவி லேயே இந்த வேகத்தைக் காண முடிகின்றது.*

புலையர்எ னச்சொல் உலுத்தர் வீணர்கள்
புலையையு டைத்துப் பிறப்பி னாலுறு
புலைனமகி ளத்தல் அறுக்கு சீருறு – புலவோனே[54]

*என்ற திருப்புகழ் அடிகளில் இவற்றைக் காணலாம். மேலும்,*

– புகழ்த்
தாய்பயந்த மக்களைத் தரீதீண்
டாரெனவே ஓர்குழுவார்
சாற்றுசெயல் கண்டுமிக நொந்தான் – அவன்
தாம்புரியும் தீமைக்கு உளம் வெந்தான்.[55]

*என்ற காவடிச் சிந்திலும் இந்தச் சொல் நெளிவைக் காணலாம்.*

புலையர் என்றபெயர் – கொடுத்துப்
பூவில் அவர்இழிந்தோர்
நலம்அ வாக்கிலைஎம் – பொருட்டு
நாயடி மைதவிர
இலைஅ வாக்குரிமை – எனச்சொல்
இழிந்த மெய்ப்புலையர்
நிலைநி றுத்திடவே – பிறந்தான்
நீண்டபு கழ்க்காந்தி.[55]

*என்ற 'கண்ணிப்பா'விலும் சொல் நெகிழ்ச்சியைக் கண்டு மகிழலாம்.*

53. காந்தியும் வள்ளுவரும் – 109
54. காந்தி திருப்புகழ் – 4
55. திருப்பணி – 3
56. தீண்டாமை – 3

*'எந்நாட்கண்ணி'யில் இந்த உணர்ச்சி பீறிட்டுப் பாய்கின்றது.*[57]

பித்துக்கொண்டு ஒப்புஉயர்வுஇல் பெண்மைதனைப்
பழிப்போர்
செத்தஇடம் புல்முளைக்கச் செப்பும்நாள்
எந்நாளோ ? (16)

இருவர் இணைந்துபெறும் இல்வாழ்க்கை அறிகுறியா
ஒருவர் பெறுந்தாலி ஒழியுநாள் எந்நாளோ ? (34)

எனக்குத் தமிழ்வராது என்று உரைக்கும் புன்தமிழர்
இனித்த தமிழ்பேசி எழிலுறும்நாள் எந்நாளோ ? (18)

*இன்னும் 'இந்தியா'*[58]

அன்றுபுத்தன் தன்னை நல்கி அறம்வளர்த்தது இந்தியா;
இன்றுகாந்தி தன்னைப்பெற்றே எழில்வளர்ப்பது இருந்தியா (2)

வானமீன் அளக்கவல்ல மாண்புமிக்க அறிஞரை
ஏனைநாடு அளிக்குமுன்னர் ஈன்றதுஎங்கள் இந்தியா (7)

விலைமதிப்பில் பண்டைநாள் மேதினியோர் மெச்சிட
எலிமயிரால் ஆடைநெய்தது ஈடில்எங்கள் இந்தியா (8)

*என்று பேசுகின்றது.*

*இங்ஙனம் காந்தி திருப்புகழ், எந்நாட் கண்ணி, தீண்டாமை போன்ற பாடல்களிலும் கடுநடைப் பாடல்களைக் காணமுடிகின்றது.*

*மேலும் கும்மியிலும்,*[59] *இவற்றைக் காண முடிகின்றது என்பதை,*

57. எந்நாட் கண்ணி – பக் 246
58. இந்தியா – பக் 254
59. கும்மி – பக். 239

காந்தி அறம்தரை எங்கும் வளர்த்திடக்
கைகொட்டிக் கும்மி யடியுங் கடி !
ஏந்திழை வெண்நகை மாதர்க ளே !நல்ல
எழில்தரு கப்பாடிக் கும்மியடி ! (3)

பழைய புராண மதம்பிடித் தோரே,இப்
பாரினில் பெண்மை பழிப்பவர்கள்;
பழைய புராணங்கள் பகரும் கருத்தையும்
பகுத்தறி வோடுஅவர் பார்ப்ப தில்லை (25)

தீண்டா மைஎனும் தீமை நிலத்தினில்
சிறிதும் இடன்இன்றிச் சென்றுஓடி,
மாண்டு மடிந்துமண் ணாகித் தொலைந்திட
மங்கைய ரே !நனி கும்மியடித்திட ! (43)

*என்ற பாடல்களில் கண்டு மகிழலாம்.*

முத்திறம் பெற்ற மூதறிஞர்: *இராய.சொ. ஓர் அற்புதமான மனிதர்; பல திறன்கள் படைத்த பேரறிஞர். இவர்தம் ஆளுமை அனைவரையும் வியப்படையச் செய்யும் பான்மையது. கல்விப்பெருமை, கவிதைப் பயிற்சி, சொற் பொழிவுத்திறன் ஆகிய மூன்றையும் அருளினான் இறைவன் இந்தச் சிவம்பெருக்கும் சீலருக்கு. இதனால் தமிழ் இலக்கியங்களில் காணும் பெருமை இவரை வந்தடைந்தது. இதனைக் 'காந்திக் கவிதை'யிலும் மிளிரக் கண்டு மகிழலாம். இலக்கிய நுணுக்கங்கள் இவர்தம் பாடல்களில் பூவில் மணம்போல் பிறங்கக் காண முடிகின்றது. இவற்றை யெல்லாம் திறனாய்வுத் துறையாக எண்ணுவதில் தவறில்லை.*

சேக்கிழார் நூலிலுள்ள சீர்திருத்தக் கொள்கையெலாம்
வாக்கினால் உரைத்துலகை வரைத்தருளிக் கண்
வளராய்[60] (10)

60. தாலாட்டு – பக். 232

பெரியபுராணத்தைச் சீர்திருத்த நூல் என்பது தமிழ்க் கடலாரின் கல்விப் பயிற்சியால் கண்ட முடிபு.

**கல்விதனிற் பெரிய கம்பனார் பெற்றெடுத்த**
**செல்வத் தமிழ்ச்சீதை செம்பொனாள் நீதானோ ?[61] (38)**

வான்மீகியில் வரும் சீதைக்கும் கம்பர் தமிழ் நாகரிகத்திற்கேற்ப உருவாக்கிய சீதைக்கும் உள்ள வேறு பாட்டைக் கண்ட தமிழ்க் கடலார் இங்ஙனம் கூறியது. அவர்தம் திறனாய்வு நோக்கால் எனலாம்.

**முன்பின் அறியா ஒருவனுக் கும்,உயர்**
**மொம்பிலி, மூர்க்கன் முதலோக்கும்**
**அன்புஅறி யானுக்கும் வாழ்க்கைப் படு, புன்மை**
**அகற்றிடு வோம்என்று கும்மியடி ! (34)**

**இட்டம் இலாத ஒருவ னுடன்கூடி**
**இல்லறம் என்றுஒரு பேர்சொலியே**
**கட்டி அழுவதில் செத்துத் தொலைவதைக்**
**கைக்கொளல் மேல்எனக் கும்மியடி ! (37)**

என்ற பாடல்கள் சமுதாயத் திறனாய்வு நோக்கில் அமைந்தவை.

சுருக்கமாகக் கூறினால், "**காந்திக் கவிதை**' என்ற படைப்பிலக்கியம் கவிதை வடிவில் தோன்றிய பெறலரும் வரலாற்று இலக்கியம்; வருங்காலத்தார்க்கு ஓராயிரம் உண்மைக் குறிப்புகளைக் காத்து வைத்திருக்கும் தமிழ்ப் பேழை; சால்பியம், புரட்சியம், பொதுவியம், மக்களியம் என எண்ணப்படும் பல்லியங்களும் உள்ளடங்கிய காந்தியத்தின் வழிகாட்டி; காந்திப் பொருளும் தமிழ்க் கடலார் புலமையும் இரண்டறக் கலந்து பிறந்தது"[62] எனலாம். தமிழ் மக்களுக்குத் தமிழ்கடல் வழங்கிய ஒப்புயர் வற்ற தமிழமுதம். கடலில் பிறப்பதும் அமுதம்தானே.

---

61. மேலது – பக். 234
62. டாக்டர் வ.சு.ப மாணிக்கத்தின் பதிப்புரையும் மதிப்புரையும் பக். 22.

**6**

# ஆய்வு நூல்கள்

*காரைக்குடி வாழ்வில் (1950-60) எனக்கு மூன்று பெரியார்களுடன் தொடர்பு ஏற்பட்டது. அவர்கள்* **கம்பன் அடிப்பொடி சா. கணேசன், சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா, தமிழ்க்கடல் இராய. சொ.** *ஆகியவர்கள். மூவரும் ஆராய்ச்சி அறிவு நாட்டம் உடையவர்கள். இயல்பாகவே சிறு வயது முதற் கொண்டே ஆய்வுத் துடிப்பு உள்ள எனக்கு இவர்கள் தொடர்பால் என் ஆராய்ச்சி அறிவு வளர்வதாயிற்று இஃதுடன் இது நிற்க.*

*தமிழ்க் கடல் இராய. சொ. பற்றிய கருத்துகள்* **"இன்பம் எது ?"** *என்ற நுல் 'ஆராய்ச்சி அறிவு' என்ற கட்டுரையில் காணலாம். அவர் அதில் கூறுவது; "எதையும் ஆராய்ச்சி செய்து மெய் அறிதல் வேண்டும். ஆராய்ச்சி அறிவு மக்கட் பிறப்பினர்க்கு மிகவும் இன்றியமையாதது. பகுத்தறிவு என்பதுதான் ஆராய்ச்சி அறிவு. பகுத்தறிவு என்றால் பிரித்தறியும் அறிவு என்பது பொருள். பகுத்தல் - பிரித்தல்; ஒவ்வொரு பொருளையும் பிரித்துப் பிரித்து மெய்காண்டல். அதுவே ஆராய்ச்சி.*

* * *

**தமிழ் ஆய்வுத் துறை:** *'தமிழ்க் கடல்' இராய. சொ. சங்கச் சான்றோர் போன்ற பெருமிதம் மிக்கவர். சங்கப் புலவர்களைப்போல் வள்ளல்களைப் பாராட்டும் பெற்றி யுடையவர்; செல்வர்களை வள்ளல் படுத்தும் நோக்கம்*

உடையவர். தமிழன்னையின் பேரருளால் இராய. சொவும் அழகப்பரும் நீடிய நண்பர்களாயினர் தமிழின் ஆழ அகலங்களை வள்ளலுக்கு எடுத்துக் காட்டினார் தமிழ்க் கடல். கொடை புலமையை வியந்தது; புலமை கொடையை வியந்தது. 'இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்." இந்த முறையில் நட்பும் வளர்ந்தது. புலவரை வள்ளல் தமிழ்க் குருவாகவும் ஏற்றார் வள்ளல் தாம் கண்ட கல்லூரியில் ஒரு 'தமிழ் ஆராய்ச்சித் துறை'யை நிறுவவும் அதற்குத் தமிழ்க் கடலைத் தலைவராகக் காணவும் கருதினார். இந்த எண்ணத்தை 1957ல் வெளியிடவும் செய்தார். அப்போது நான் காரைக்குடியில் இருந்தமையால் இதனை நன்கு அறிவேன். அந்த ஆண்டில் வள்ளல் சிவப்பேறு அடைந் தமையால் எண்ணம் செயற்படவில்லை.

அழகப்பர் அறத்தின் செயலர் க.வெ.சித.வெ. வேங்கடாசலம் செட்டியார் அழகப்பரின் இனிய பெரிய நண்பர்; வாழ்க்கை முழுதும் அகலாது அணுகிப் பழகியவர். தம் இறுதிக் காலத்தில் "நண்பரீர், என் அறங்கள் நும் அடைக்கலம்" என்று ஒப்படைத்தார். வள்ளலின் தமிழ் ஆய்வுத் துறை காணும் எண்ணத்தை உருவாக்கும் காலம் 1964ல் முகிழ்த்தது. தமிழ்க் கடலை கல்லூரி வட்டத்தில் கொண்டு வந்து வைத்துக் கொண்டார். திருவருள் கூடியதால் தமிழ் ஆராய்ச்சித் துறையும் பிறந்தது. தமிழ்க் கடலும் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இந்தப் பொறுப்பில் இருந்த காலத்தில் இரண்டு ஆய்வு நூல்கள் உருவாயின. அவை (1) **கம்பனும் சிவனும்**, (2) **வில்லியும் சிவனும்** என்பவை. இக்காலத்தில் திருத்தலப் பயணத் திட்டமும் மேற்கொள்ளப்பெற்றது. அதன் விளைவாக **'திருத்தலப் பயணம்'** என்ற நூலும் வெளி வந்தது. இதுவும் ஆய்வு நூல் பட்டியலில் சேரக் கூடியதே.

## 1. கம்பனும் சிவனும்

முத்து விளையும் இடங்களில் கடலும் ஒன்று. தமிழ்க் கடல் தந்த முதல் முத்து **'கம்பனும் சிவனும்'** என்பது.

இராமகாதை காவியத்தில் சிவனைப்பற்றிய பாடல்கள் பல உண்டு என்று பலர் அறிவர். அவற்றைக் கவி தன் கூற்றாகவும் காவிய மாந்தர்களின் வாய்மொழியாகவும் வரும் பாடல்களையும் சிவனைக் குறித்த சொல்லாட்சி களையும் எடுத்துத் தொகுத்தளித்த தொகுப்பு நூல்தான் **'கம்பனும் சிவனும்'** என்ற ஆய்வு நூல்.

தொல்காப்பியர் நூல் முறையைத் தொகுத்தல் வகுத்தல் விரித்தல் என்று பாகுபடுத்திக் காட்டுவர். அம்முறையைத் தழுவியது இத்தொகுப்பு நூல். இராம காதையில் கம்பன் சிவனைப்பற்றிக் குறிப்பிட்டுள்ள எல்லாப் பாடல்களையும் தொகையாக இந்நூலில் காணலாம். அப்பாடல்களைக் காவியமாந்தர்களின் மொழியாக வகைப்படுத்தியதையும் காணலாம். அதற்கு மேல் பொழிப்பு, விளக்கம் என்ற முறையில் விரிவையும் காணலாம். பொழிப்பு எழுதியதன் நோக்கம் யாவரும் பொருள் விளங்கிப் படிக்கத் துணை செய்ய வேண்டும் என்பது. விளக்கம் எழுதியதன் நோக்கம் அறிஞர்க்கு விருந்தாக வேண்டும் என்பது. இந்த நூலில் நயஞ் செறிந்த இடங்களைப் படித்து அநுபவிக்க வேண்டும்.

சில இடங்களை மட்டிலும் ஈண்டுக் காட்டுவேன். கவிமொழியாகக் காட்டப் பெறும், 'நீறு அணிந்த கடவுள்' என்று ஆற்றுப்படலத்தில் வரும் பாடல் (பக்.7) மேகம் கடல் குடித்து மழை பொழிதலை துவல்வது. இந்தப் பாடலின் விளக்கம் தமிழ்க் கடல் இராய. சொவின் நுண்மாண் நுழை புலத்தைக் காட்டுகின்றது.

"மேகம் நீறு அணிந்து சிவபெருமானின் வெண்மேனி பெற்றுச் சென்று, கடலைக் குடித்து, மழை பொழியத் திரும்புங்கால் திருமாலின் "பச்சை மாமலை போல்"[1] மேனி பெற்று மீண்டது. சிவபெருமானுக்குச் சொல்லப் பெற்ற நிறம் செம்மையாதலின் மேகத்தின் வெண்மையையுணர்த்த

1. திருமாலை –2

"நீறணிந்த கடவுள்" என்றார். கடல் பருகி மழை பொழியும் மேகத்தைப்பற்றி "முன்னிக் கடலைச் சுருக்கி"[2] என்ற திருவாசகத்தில் மணிவாசகப் பெருமானும், "ஆழி மழைக் கண்ணா"[3] என்ற திருப்பாவையில் ஆண்டாள் நாச்சியாரும் 'கருவி மாமழை' என்னும் நைடதப் பாடலில் அதி வீரராமபாண்டியனாரும் கூறும் கருத்து இதனையொத்தது. இதனை 'நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்; தடிந்து எழிலி, தான்நல்கா தாகி விடின்[4], என்ற திருக்குறளில் புலவர் பெருமான் வலியுறுத்துவர், 'நீறுஅணிந்த கடவுள்' என்ற இப்பாடலின் எடுப்பு கம்பீரமாக அமைந்திருக்கிறது"

அடுத்து, 'மண்உற விழுந்து' என்று வரைக் காட்சிப் படலத்தில் வரும் பாடலின் (பக்.25) விளக்கமும் நயஞ் செறிந்தது. "புழுதியில் படிந்த மதயானை தன் உடம்பில் ஒரு பக்கத்தைத் துதிக்கையால் துடைத்து விட்டு, மற்றொரு பக்கத்தில் படிந்த புழுதியொடு வருகின்றது. அக்காட்சி ஒரு புறம் சிவனும், மற்றொருபுறம் திருமாலும் சேர்ந்த 'சங்கர நாராயண' வடிவத்தை ஒத்திருந்தது. வெண்புழுதி படிந்த பகுதி வெண்ணீறு பூசிய சிவனையும் புழுதி துடைக்கப் பெற்ற யானையின் இயற்கை நிறமான கருமைப் பகுதி திருமாலையும் காட்டா நிற்கின்றது. சிவனும் திருமாலும் கலந்த வடிவத்தைக் காட்டும் திருமங்கையாழ்வாரின்,

> பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
> பிரமனைதன் உந்தியிலே தோற்றுவித்து,
> கறைதங்கு வேல்தடல்கண் திருவை மார்பில்
> கலந்தவன்தாள் அணை நிற்பீர்[5]

என்ற பாசுரத்தை மனத்தில் கொண்டு இப்பாடலைக் கவிச் சக்கரவர்த்தி செய்திருக்க வேண்டும் என்று தோன்று கின்றது."

2. திருவெம்பாவை – 16
3. திருப்பாவை –4
4. குறள் –17
5. பெரி. திரு. 3.4;9

இதற்குமேல்,

**தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்**
**சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்**
**திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு**
**இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து.**[6]

என்ற பேயாழ்வாரின் பாசுரமும் "சங்கர நாராயண" (அரன்-அரி) வடிவத்தைக் காட்டுவதாகவும் கொள்ளலாம்.

"தமிழ்க் கடலின் தனிப்பேறு நினைவாற்றல்; கற்றது மறவாமை. மறப்பென்னும் பகைவன் இப்புலவரைப் பற்ற மறந்தனன். ஆதலின் தக்க மேற்கோள்கள் இவர்கள்தம் உரையில் எளிதாக வந்து விழுகின்றன"[7] என்ற டாக்டர் வ.சுப. மாணிக்கனார் கூற்றையும் ஈண்டு நினைக்கின்றோம்.

மேலும், "இந்த நூலினுள் கம்பனைக் காணலாம்; சிவனைக் காணலாம்; கம்பனையும் சிவனையும் சேர்த்துக் காணலாம்; தொடர்புபடுத்திக் காட்டும் தமிழ்க்கடலின் மதி நுட்பத்தையும் நூல் நுட்பத்தையும் ஒருங்கு காணலாம்."[8] என்ற டாக்டர் அ. சிதம்பரனார் வாக்கையும் நினைவு கூர்ந்து மகிழ்கின்றோம்.

## 2. வில்லியும் சிவனும் (1966)

இந்நூல் - ஆய்வுப் பனுவல். அழகப்பர் கல்லூரித் தமிழ் ஆராய்ச்சித் துறையின் வெளியீடு. இந்த நூலையும் 'கம்பனும் சிவனும்' என்ற பனுவலையும் உடன் வைத்து நோக்கும்போது சில நுண் கூறுகள் புலப்படுவதைக் காணலாம். இராமகாதையில் 42 கதைமாந்தர்கள் சிவனைப் பற்றிப் பேசுகின்றனர் ஆனால் சிவன் மொழியாக வந்த

6. மூன் திருவந் - 63
7. பதிப்புரை - பக் 11-12
8. முகவுரை -பக்.16.

பாடல் யாதுமில்லை இது தவறு. நான்கு பாடல்கள் உள்ளன.[9]

மாயா சீதையை வாளால் வெட்டிப் போக்குக் காட்டிய இந்திரசித்து தவறாமல் வெற்றி காண வேண்டும் என்ற கருத்தினால் நிகும்பலை என்ற இடத்தில் யாகம் செய்கின்றான். இதனை வீடணனால் அறிந்த இராமன் வீடணனோடும் வானரப் படையோடும் இலக்குமணனை அனுப்பிப் பொரச் செய்து வேள்வியை முடிக்க வொட்டாது தடுக்கச் செய்கின்றான். கடுமையான போர் நடைபெறுகின்றது. இந்திர சித்து மலரவன் கணையைத் தொடுக்க, இலக்குவனும் எவர்க்கும் தீங்கு விளைக்காது அரக்கன் விடுத்த கணையை மட்டிலும் ஒழிக்குமாறு மலரவன கணையைத் தொடுக்கின்றான். அஃது அரக்கன் விடுத்த கணையை ஒழித்து எங்கும் பரவி நிற்கின்றது. தேவர்கள் இலக்குவனின் நற்குணத்தை பாராட்டுகின்றனர். இப்போது சிவபெருமான் இராம லக்குமணர்களின் பெருமையைத் தேவர்கட்கு நான்கு பாடல்களில் எடுத்துரைக்கின்றான். இவற்றால் சிவபெருமான் இராமனது பரத்துவத்தைப் பேசுவதைக் காண்கின்றோம்.

நாராயண நரர்என்றிவர்
உள்ராய் நமக்கெல்லாம்
வேராய்முழு முதற்காரணப்
பொருளாய்வினை கடந்தோர்
ஆராயினும் தெரியாததோர்
நெடுமாயையின் அகத்தார்
பாராயண மறைநான்கையும்
கடந்தார் இவர் பழையோர் (141)

9. இவற்றைத் தமிழ்க்கடல் காட்டவில்லை. நான் காட்டுகின்றேன். யுத்த. நிகும்பலையாகம் – 141, 142, 143, 144. நான் காரைக்குடியில் இருந்தபோதே ஒரு காரணத்தைப்பற்றிப் பேச்சு வந்தபோது இவற்றைத் தமிழ்கடலுக்குக் காட்டினேன், அவர் வியந்தார்.

இதிலும் இதனைத் தொடர்ந்து வரும் மூன்று பாடல்களிலும் இராமனே இவ்வண்டங்கட்கெல்லாம் முழு முதற்கடவுளான காரணப் பொருள் என்று எடுத்துக் கூறுவான் சிவபெருமான். இதனைக் கேட்ட தேவர்கள் சிவபெருமானைத் தொழுகின்றனர். இத்துடன் நிற்க.

வில்லிபாரதத்தில் 21 கதை மாந்தர்களில் சிவன் மொழியும் ஒன்றாக வருகின்றது. பார்த்தன் தவநிலையைப் பார்வதியிடம் சிவனே பாராட்டிப் பேசுவதாக அமைந்த பாரதப் பகுதியை உளம் பதிய உணர்ச்சி தோன்ற வரைந்துள்ளார். "தலப் பெருமை சொல்லுங்கால் வில்லி, தன்னை மறந்து சைவப் புலவர் எவரையும் விஞ்சி விடுகின்றார்" என்று கூறுவர் இராய. சொ. தலங்களைச் சுற்றி வந்த சிவமணிப் புலவரின் நடுநிலையை இது காட்டு கின்றது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம், இராமகாதை, தேவாரம், திருவாசகம், முத்தொள்ளாயிரம் முதலிய பன்னூல் மேற்கோள்களை தமிழ்க்கடல் காட்டுவார். இம்மேற்கோள்கள் கற்கும் சுவையை மிகுவிக் கின்றன. சில மேற்கோள்கள் தெளிவு தரும் சான்றாக அமைகின்றன.

எ-டு: பாடல் **54.** செந்தமிழ் உரைத்த குறுமுனி என்ற தலைப்பில் வருவது

**கந்தனை அளித்த கன்னிஓர் பாகம்**
**கலந்தமெய்க் கண்ணுதற்கு எதிராய்,**
**செந்தமிழ் உரைத்த குறுமுனி இருந்த**
**தெய்வமால் வரையிடைத் தோன்றி,**
**இந்துவும் அரவும் உறவுசெய் முடிமேல்**
**இருந்தமந் தாகினி அருவி**
**வந்துழி புனலும், சகிதனம் கமழ**
**வந்தது, மந்தமா ருதமே.**[10]

10. அர்ச்சுனன் தவநிலை – 54

**விளக்கம்:** *கன்னி. அம்பிகை. உலகம் முழுவதையும் ஈன்றும் இன்றளவும் கன்னியாகவே உள்ளாள்*

**சிவன்சக்தி தன்னை ஈன்றும்**
**சக்திதான் சிவத்தை ஈன்றும்**
**உவந்துஇரு வரும்பு ஊர்ந்துஇவ்**
**உலகுயிர் எல்லாம் ஈன்றும்**
**பவன்பிரம சாரி ஆகும்;**
**பான்மொழி கன்னி ஆகும்;**
**தவந்தரு ஞானத் தோர்சுருஇத்**
**தன்மைதான் தெரியும் அன்றே**

*என்பது சிவஞான சித்தியார் குறுமுனி-குட்டை வடிவமுள்ள முனியாகிய அகத்தியன். சிவபெருமான் தமிழை உரைத்தான். அவனுக்கு; எதிராக இருந்து அகத்தியமை தமிழ்சொன்னான்.*

**தழற்புரை சுடர்க்கடவுள்**
**தந்ததமிழ் தந்தான்**

*என்பர் கம்பர். வரை - பொதிகை. இது அகத்தியன் இருந்து தமிழ் சொன்ன இடம். இந்து - சந்திரன்; அரவு - பாம்பு. 'இந்துவும் அரவும் உறவு செய்முடி' என்பதைத் 'திங்களுடன் அரவு உறவு செய்யும் வேணி' என்று முன்னரும் கூறினார். மந்தாகினி - கங்கை. மந்தமாருதம் - இளங்காற்று (தென்றல்). பொதிகையிற் பிறந்த தென்றல் சிவன் முடியிலிருக்கும் கங்கையிற் கலந்து பொதிகை மலையில் மிகுந்திருக்கும் சந்தன மரத்தின் மணத்தைக் கமழச் செய்தது என்க.*

*இங்கு சிவஞான சித்தியாரின் மேற்கோள் பொருத்தம் அற்புதம்.*

*இன்னொரு எடுத்துக்காட்டு: பாடல் 222.*

**ஐந்துஆன னத்தோன் அருள்செய்ய**
**அழகின் மிக்கான்**
**ஐந்துஆன சொல்லால் "கணவன் தருக,**
**ஐய !" என்றாள்;**

ஐந்துஆன சொல்லான் அளித்தான், மற்று
அவனும் முன்நாள்,
ஐந்துஆன போகம் இவள்எய்திய
ஆறுஅ றிந்தே.[11]

**விளக்கம்:** *ஐந்து ஆனனம் - ஐந்து முகம். ஐந்து ஆன சொல் - ஐந்துமுறை. ஐந்தான சொல்லான் - ஐந்து எழுத்தான் சொல்லை உடையவன். ஐந்து எழுத்து - சிவாய நம; ஒவ்வொரு எழுத்தையும் ஒவ்வோர் சொல் என்று சொல்லுவர் பெரியார்.*

**அந்தியும் நண்பகலும்**
**அஞ்சுபதம் சொல்லி (7.83:1)**

*என்பார் சுந்தரமூர்த்திகள். ஐந்தான போகம் - ஐம்புலனும் நுகரும் இன்பம். இப்பாடலில் எல்லா அடிகளும் ஐந்தான என அமைந்திருப்பது ஒரு அணி."*

இங்கு சுந்தரமூர்த்தியின் மேற்கோள் இன்றியமை யாதது. இந்த இரண்டு பாடல்களிலும் காட்டப்பெறும் மேற்கோள்கள் தமிழ்க்கடலின் சைவநூற் பயிற்சிக்கும் எடுத்துக்காட்டுகள்.

இன்னொரு சிறப்பையும் இத்தொகுப்பு நூலில் காணலாம். இராமகாதையில் சிவனது கோலமும், பூக்களும் கருவிகளும் பலபடப் புனையப் பெற்றிருப்பினும் ஒரு சில கூறுகளைப் புலப்படுத்துவதில் வில்லிபாரதம் விஞ்சி நிற்கின்றது. பார்வதியை "அறம் வளர்க்கும் தெய்வப் பாவை" என்றும் "ஆற்றினால் அறம் வளர்க்கும் அம்மை" என்றும், "பச்சைக் கொடி விடையானொடு பாகன் நிறை கொண்டாள்" என்றும் மிகவும் ஈடுபாட்டுடன் பாடுவர் வில்லி. சிவன் அணியும் கொன்றைமாலைபற்றிய குறிப்பு இராமகாதையில் ஓரிடத்துத்தான் வருகின்றது. வில்லியிலோ 'கொன்றை வாழமுடியோன்' *(66)*, 'கொன்றை நாள் மலரோன்' *(268)*, கொன்றையம் சடையான்' *(231)*

---

11. திரௌபதி மாலையிட்ட சருக்கம் –31

எனப் பல இடங்களில் அன்றலர்ந்த கொன்றை புகழப்படுகின்றது.

கவி ஞானியர் கண்ணில்
பருகும் சுவை அமுதானவர்
பாதம் தலை வைத்தான்[12]

அர்ச்சுனன் பெண்ணையாற்றங்கரையிலுள்ள திருக்கோவிலுக்கு வந்ததைக் கூறும் பாடல் இது.

விளக்கம்: பெண்ணையாற்றில் நீராடி உலகலந்த பெருமாள் கவிஞானியார் ஆகிய தேவார ஆசிரியர்கள் கண்ணினால் உண்ணும் சுவைமிக்க அமுதம் போன்றவராகிய சிவன் ஆகியோர் திருவடிகளைத் தலைமீது கொண்டான் (பார்த்தன்). கவிஞானியர் - அப்பர் சம்பந்தர். இவர்களை வில்லிபுத்தூராழ்வார் குறிப்பிடுவது காப்பிய உலகில் அவருக்கே உரிய தனிச்சிறப்பு என்பதை நாம் அறிகின்றோம்.

"மிக நகைத்தும், வெறுத்தும்" என வரும் வீமனது இருவகை உணர்ச்சிகளுக்கு தமிழ்க் கடல் நயங் கூறுவதும், வில்லியிலிருந்து அதற்கு ஒரு எடுத்துக்காட்டு நல்குவதும் மறக்க முடியாத இடங்கள்.

போர்முடித்தான்; அமர்பொருது, புலம்புறுசொல்
பாஞ்சாலி பூந்தண் கூந்தல்
கார்முடித்தான்; இளையோர்முன் கழறியவஞ்
சினம்முடித்தான் கடவுள் கங்கை
நீர்முடித்தான் இரவுஒழிந்த நீஅறிய,
வசைஇன்றி, நிலைநின்று ஓங்கும்
போர்முடித்தான்; இப்படியே யார்முடித்தார் ?
இவனுடனே பிறப்ப தேநான் ?[13]

இது வீமன் கண்ணனை நோக்கிப் பேசுவது.

12. அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை – 16
13. கிருட்டிணன் தூது – 13

**விளக்கம்:** கண்ணனை நோக்கி வீமன் தருமன் செயலுக்கு வருந்தி விளம்புவது. தருமனின் அளவற்ற பொறுமைக்கு ஆற்றாது வீமன் கூறிய உரை என்க.

**அரவுயர்த்தோன் கொடுமையினும்**
**முரசுயரத்தோய் !**
**உனது அருளுக்கு**
**அஞ்சினேனே ! (கிருஷ். தூது –11)**

என்று தருமனைப் பார்த்து முன்னும் சொன்னான் வீமன். அருள் அளவுக்கு மேற்பட்டுவிட்டால் தாங்க முடியாது தானே? மற்றபடி,

**அன்புறு தருமனுக்கு**
**அநுசன் ஆயினேன் (அர்ச்சு – தவநிலை 121)**

என்று இயம்பித் தருமனை மதிக்கும் பார்த்தனைவிட வீமன் தருமனிடம் குறைந்த மதிப்புடையவன் என எண்ண வேண்டுவது இல்லை. சிவன் பலி ஏற்றதைத் திருமால் ஒழித்தான் என்ற கதையை வில்லி வேறு இடத்தும் கூறுவர்.

இஃது அற்புதமான விளக்கம்!

சிவன் சில பாத்திரங்கள் வாயிலாக இழித்து உரைக்கப் பெறுகின்றான் என்பதை ஒப்பி பாரதத்தில் சில கதை மாந்தர்களால் திருமாலே பழிக்கப்பட்டது உண்டு எனக் காட்டி, "இது கதை மாந்தர்களின் தகுதியையும் சூழ்நிலையையும் பொறுத்தது'' என்று காப்பிய இலக்கணத்தைச் சூத்திரம்போல் வடித்துத் தருகின்றார் தமிழ்க்கடல். இன்றைய மேனாட்டுத் திறனாய்வாளர் ஒப்பிய உண்மையும் இதுவே என்பதை நாம் அறிவோம்.

எ–டு.

**'கற்கொண்டு கன்மழைமுன் காத்த கள்வன்'**

**'வஞ்சனைக்கோர் கொள்கலமாம் கொடிய பாவி'**

இவை இரண்டும் திருமாலை இழித்துக் கூறும் இடங்கள்.

பாரதம் கண்ணன் தலைமைக்குரிய நூலாயினும்,[14] வில்லி பெரிவாழ்வார் பெயர் கொண்ட வைணவப் புலவராயினும், யாவரும் போற்றத்தக்க சமயம் பொது நோக்கினர் என்ற கருத்தை தமிழ்க் கடல் இராய. சொ நிலைநாட்டினர். எனவே, வைணவர்கள் போற்றும் கம்ப நாட்டாழ்வாரும் வில்லிபுத்தூராழ்வாரும் தாம் வைணவக் கடவுளர்களாகிய இராமன், கிருட்டிணன் ஆகியோரின் காப்பியங்களில் தமது சமயப் பொறையைப் புலப்படுத்தும் பாங்கில் சிவபெருமானையும் சைவர்கள் போற்றும் பாங்கில் புகழ்கின்றனர் என்பதைத் தமிழ்க் கடல் தெளிவாகக் காட்டியுள்ளார் என்பதை அறிகின்றோம். மேலும் சிறந்த சிவம்பெருக்கும் சீலராகிய தமிழ்க் கடலும் சமயப் பொறையுடன் திகழ்ந்தவர் என்பதையும் உறுதியாக அறிய முடிகின்றது.

14. 'தூது போன்வான் ஏற்றம் சொல்வது பாரதம்' – ஸ்ரீவச. பூஷ. சூத்திரம் 6– (புருடோதம் நாயுடு பதிப்பு).

7

# உரைநடைப் படைப்புகள்

அச்சுப் பொறிகள் தோன்றி அவற்றுடன் நம் நாடு போந்த ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர்தான் தமிழில் உரைநடை அமைந்தது என்று சிலர் கருதுகின்றனர். இதனை முற்றிலும் ஒப்புக் கொள்வதற்கில்லை. அவர்கள் வருகைக்குப் பின்னர்தான் உரைநடை என்ற இலக்கியப் பிரிவு விரிவாக, கலையாக, வளர்ச்சி பெற்றது என்பதற்கு இருவேறு கருத்துகள் இல்லை.

பண்டிருந்தே தமிழில் உரைநடைபற்றிய குறிப்புகள் உள்ளன. தொல்காப்பியம் என்ற பழைய இலக்கணத்தி லேயே உரைநடைபற்றிய குறிப்பினைக் காண்கின்றோம். உரைநடையும் செய்யுளும் கலந்த நூல்கள் அக்காலத்தில் முகிழ்த்திருந்தன என்ற குறிப்பு அதில் உள்ளது.

> **தொன்மைதானே**
> **உரையொடு புணர்ந்த யாப்பின் மேற்றே.**[1]

என்பதே அக்குறிப்பு. இதனை '**உரையிடப் பெற்ற பாட்டுடைச் செய்யுள்**' என்று அக்காலத்தில் வழங்கினர். பெருந் தேவனார் பாரதமும் தகடூர் யாத்திரையும் இதற்குச் சான்றுகளாகப் பழைய உரைநூல்களில் காட்டப் பெறுகின்றன. மேலும் அந்த இலக்கண அறிஞர்,

1. தொல்–பொருள்–செய்யு– 231 (இளம்)

அங்கதம் முதுசொல்லோடு
அவ்வேழ் நிலத்தும்[2]

என்று கூறுவர். இந்த நூற்பாவால் நூல் புணர்க்கும் முறை ஒரு பிரிவென்றும், அவற்றில் ஒன்று 'உரையாப்பு' வகை என்றும் விதந்தோதுகின்றது. அந்த உரை நடையினை நான்கு வகையாக அவரே பிரித்துரைக்கின்றார்.

பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருண் மரபில்லாப் பெய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்என்று
உரைவகை நடையே நான்கென வொழிப[3]

இதனால் உரைநடையும் செய்யுளும் கலந்துள்ள நூல்களும், பாட்டிற்கு உரையாகக் கூறப்பெறும் நூல்களும், ஒரு பொருளின்றால் பொய்ப்படத் தொடர்ந்து சொல்லும் புதினங்களும், நகுதற்கு ஏதுவாகிய நாடகங்களும், சிறுகதைகளும் உரைநடை நூல்களாம் என்பது பெறப் படுகின்றது.

சிலப்பதிகாரச் செய்யுட்கட்கு இடையில் சில இடங்களில் உரைநடை விரவி வருதலைக் காணலாம். இறையனார் அகப்பொருள் உரையில் சிறிது கடினமான நடையில் அமைந்த உரைநடைகாணப் பெறுகின்றது. இடைக்காலத்தில் வடமொழி கலந்த தமிழ் உரைநடை யினைச் சமண ஆசிரியர்கள் சிலர் மணிப் பிரவாளம் என்ற நடையில் எழுதினர் என்று ஸ்ரீ புராணம், கதியசிந்தாமணி முதலிய நூல்களால் அறிய முடிகின்றது. வைணவ உரையாசிரியர்கள் நாலாயிரத்தில் திவ்வியப்பிரபந்தத்திற்கு மணிப்பிரவாள நடையில் உரை செய்தனர்.

**பழைய முறையில்:** மறைமலையடிகள், ந.மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி, கதிரேசச்

2. மேலது–பொருளி – 291
3. மேலது. செய்யு–166 (இளம்)

செட்டியார், சோமசுந்தர பாரதியார் போன்றோர் பழஞ் சொற்களைக் கையாண்டு பழந்தமிழ் இலக்கிய நடையில் ஆய்வு நூல்கள் எழுதியுள்ளனர். பேச்சு வழக்கில் உள்ள சொற்களைப் புறக்கணித்து இலக்கியத்தில் வழங்கும் சொற்களை மிகுதியாகக் கையாண்டு அவற்றைச் செறிவாக அமைத்து எதுகை மோனைகளை வைத்து எழுதுவதே பழைய உரைநடை. இந்த நடையில் திட்பமும் ஆழமும் இருப்பது உண்மையேயாயினும், இலக்கியம் கற்றுப் பழகியவர்கட்கு மட்டுமே. அந்த உரைநடை விளங்கும். எல்லோரும் அதைப் படித்துத உணர முடியாது. சிலருக்கு அஃது **"எட்டாப் பழமாகவே"** இருக்கும்.

**எளிய உரைநடை:** காலம் மாறிவிட்டது. மக்கள் பலரும் விழித்தெழுந்துவிட்டனர். அறிவுச் செல்வம் ஒரு சிலருக்கே உரியது என்ற நிலைமை மாறிவிட்டது. அச்சுப் பொறிகள் பெருகி பலருக்கும் பயன்படுமாறு அமைய வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆகவே, சிலருக்கு மட்டுமே பயன்படும் தமிழ்நடை இக்காலத்திற்கு எலாதது ஆகிவிட்டது. உரைநடை எளிய சொற்களால் தடை யில்லாமல் நேரே பொருள் தருவதாய் அமைய வேண்டும் என்ற நிலையை அறிஞர்கள் உடன்பட்டு விட்டனர். இந்தப் போக்கில், நோக்கில், எளிய நடையைக் கையாண்டு வழிகாட்டியவர்களில் முன்னோடிகளாக அமைந்தவர்கள் திரு. வி. க. உ. வே. சா. ஆகியவர்களைக் குறிப்பிடலாம். இவர்களை எண்ணற்றோர் பின்பற்றி எழுதி வந்தனர். நாள், வார, பிறை, திங்கள் இதழ்கள் இதற்குக் கை கொடுத்து உதவின.

**இராய. சொ:** இந்தச் சூழ்நிலையில் முன் வந்து தமிழ் உரைநடையை எளிய முறையில் கையாண்ட பலருள் நம் தமிழ்க் கடல் ஒருவராக அமைகின்றார். அவர் படைத்த உரைநடை நூல்கள் மூன்று, அவை. *1.* **இன்பம் எது ?** *(1942), 2.* **குற்றால வளம்** *(1947), 3.* **காவேரி** *(1960).* இவை ஒவ்வொன்றையும்பற்றி ஈண்டு நோக்குவோம்.

**1. இன்பம் எது ? (1942)[4]:** இந்நூலில் 'இன்பம் எது?' முதல் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது இறுதியாக பதினாறு அழகிய கட்டுரைகள் அடங்கியுள்ளன. இத்தொகுப்பு நூல் வெளியிட்டது. சக்தி காரியாலயம். இதில் பல்வேறு பொருள்களில் தமிழ்க் கடலின் சிந்தனை யோட்டங்களைக் கண்டு மகிழலாம். ஒவ்வொரு கட்டுரையும் இராய. சொ.வின் சிந்தனைக் கருத்துகள் அடங்கியவை. பதிப்பித்த முறையிலேயே இது பட்ட வர்த்தனமாக அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம். ஈண்டுச் சிலவற்றைக் காட்டுவேன்.

முதல் கட்டுரையில் சில சிந்தனைத் துளிகள்: இன்பம் எது என்பதிலேயே பெரிய ஐயப்பாடு உள்ளது. "ஒருவர் தம்மைப் பிறர் புகழ்வதே இன்பம் எனக் கருதுகின்றார். ஒருவருக்கு அது நாராசமாகத் தோன்றுகின்றது" *(பக்.2)* "ஒருவருக்குப் படிப்பதில் இன்பம்; மற்றொருவருக்குப் படிப்பென்றால் எல்லையற்ற துன்பம்" *(பக்.4)*. "இன்பம் எப்பொருளிலும் இல்லை; உளத்தின் உணர்ச்சியே இன்பம் என்பது; இன்பம் என எண்ணித் தீமை செய்யலாகாது" *(பக்.5)* "அறம் வகுத்த பேரறிஞருள் வள்ளுவரை நிகர்த்தார் எவரும் இலர் என்பது பல அறிஞர்களின் கருத்து. அப்புலவர் பெருமானார் 'நான் சொல்வதே மறை; அதனை ஏற்றுக் கொள்க' என்று கூறினாரல்லர். அவ்வாறு கூறியிருந்தால் அவ்ர உலகம் போற்றும் அறிவு பெற்றிருக்க முடியாது. "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு" *(குறள்-423)*, "எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" *(குறள்-355)*. என்னும் இரண்டு அருங்குறள்களை அருளினர் அப்பெருந்தகை *(பக்.7)*

* * *

4. இக்காலத்தில் நான் துறையூரில் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியன் (வயது 26). அக்காலத்தில் சக்தி காரியாலியம் வெளியிட்ட சில நூல்கள் என் கவனத்திற்கு வந்தாலும், இது வரவில்லை.

**'ஊழியம்'** *(2) என்ற கட்டுரையில்: "இப்பரந்த பேருலகில் பிறந்த எவர்க்கும் உறுகடன் இவ்வூழியமேயாம். இதுபற்றியே 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்றார் பெரியார் (பக்.9) 'பிறவிப் பேறு ஊழியம் புரிதலே என்பது அப்பர் முதலிய பெரியோர் கருத்து' (பக்.13)*

**'பெருநெறி'** *(3) என்ற கட்டுரையில், 'பெருநெறி பிடித்தொழுக வேண்டும்' என்பது வள்ளல் பெருமான் வாய்மொழி. 'சமய உண்மைகளை ஓர்ந்து உணர்ந்து உரைக்காது கருமமாற்றுவார் சமயங்கட்குத் தீங்கு புரிபவரே ஆவர். அவர்களால்தான் மூடநம்பிக்கை வளர் கின்றது" (பக்.20).*

**'மதக்குறிகள்'** *(4) என்ற கட்டுரையில்; 'மதங்களின் உட்கருத்து இவ்வடையாளங்கள் அன்று.... குறியின்றிக் கொள்கை இயங்கும் தகுதியுடையது' (பக்.25) 'மதக்குறிகள் ஏதேனும் ஒருவகையில் இருந்தே தீரும். அக்குறிகளை ஆய்ந்து ஆய்ந்து காலத்திற்கேற்றவாறு கொள்ளுதல் வேண்டும்' (பக்.28).*

**'சாத்திரங்கள்'** *(5) என்ற கட்டுரையில்; 'சாத்திரம் என்பது நூல் என்று பொருள்படும். இவ்வளவே. சாத்திரங்கள் என்றால் நூல்கள் என்பது பொருள்' (பக்.33). 'சாத்திரங்கள் கூறுவன அனைத்தும் கொள்ளத்தக்கனவு மன்று. அவை கூறா அனைத்தும் தள்ளத்தக்கனவும் அன்று. சாத்திரங்கள் கூறுவனவற்றுள் தள்ளத்தக்கனவும் உண்டு. அவை கூறாதவற்றுள் கொள்ளத் தக்கனவும் உண்டு' (பக்.37).*

**'புராணங்கள்'** *(6) என்ற கட்டுரையில்; 'நம் இந்திய நாட்டில் உலவும் புராணங்கள் இத்துணை என்று வரைப் படுத்தக் கூறா நிலையில் புராணங்கள் பெருகிக் கிடக்கின்றன. "புராணங்கள் மெய்யென நான் நம்பியிருந்த காலமும் உண்டு. அறியாமையால் மெய் எனக் கொண்ட ஒன்றைப் பொய்யென ஆராய்ச்சி அறிவால் கண்டால் அன்றே அதைத் திருத்திக் கொள்ளவேண்டும்" (பக்.40-41)*

'புராணங்கள் கட்டுக் கதைகள் என்பதைப் பல வழிகளால் பகாமுடியும். வேறு வழிகளைக் காட்டிலும் புராணங்கள் மெய் என நம்பியிருப்பார்க்கு அப்புராணங்கள் வாயிலாகவே புகல்தல் நலம் எனக் கொண்டே இவ்வாறு கூறப்பட்டது" *(பக்.44)*.

**'ஆராய்ச்சி அறிவு'** *(7)* என்ற கட்டுரையில்; 'எதையும் ஆராய்ச்சி செய்து மெய்யறிதல் வேண்டும். ஆராய்ச்சியறிவு மக்கட் பிறப்பினர்க்கு மிகவும் இன்றியமையாதது?' 'மக்கள் தாமே ஆறறி உயிரே...மாவும் மாக்களும் ஐயறிவினவே '....' என்பது தொல்காப்பியம், ஆறாவது அறிவுதான் பகுத்தறிவு என்பது" *(பக்.46)* 'பகுத்தறிவு என்பதுதான் ஆராய்ச்சியறிவு, பகுத்தறிவு என்றால் பிரித்தறியும் அறிவு என்பது பொருள், பகுத்தல் - பிரித்தறிதல் - ஒவ்வொரு பொருளையும் பிரித்துப் பிரித்து மெய்காண்டல். ஆராய்தலும் அதுவே' *(பக்.48)*

**'இயற்கை இன்பம்'** *(8)* என்ற கட்டுரையில்; 'இயற்கை இன்பம் செல்வர்க்கும், வறிஞர்க்கும் மாறுபட்ட இன்பம் தருவதன்று. எத்துணைப் பெருஞ்செல்வராயினும் எவ்வளவு வறிஞராயினும் அவர் செல்வத்திற்கேற்ற அளவு இன்பப் பெருக்கமும் மற்றவர் நல்கூர்வுக்கேற்றபடியாக இன்பச் சுருக்கமும் இயற்கை இன்பத்தில் இல்லை' *(பக்.55)*. 'இயற்கை இன்பத்திற்கு இணை எதுவும் இல்லை; எத்துணை கோடி கோடி செலவிட்டு ஆக்கப்பெறும் செயற்கையில் தோன்றும் இன்பமும் இயற்கை இன்பத்திற்கு ஈடாகாது' *(பக்.59)*.

**'அகமும் புறமும்'** *(9)* என்ற கட்டுரையில்: 'உள்ளத்தால் ஒழுகும் ஒழுக்கம் உள்ளொழுக்கம்; அஃதாவது அக ஒழுக்கம். உடலால் ஒழுகும் ஒழுக்கம் வெளியொழுக்கம்; அதாவது புறவொழுக்கம் ..... இரண்டிலும் சிறந்தது அகவொழுக்கமே' 'அகஒழுக்கத்தோடு கூடிய புற ஒழுக்கத்திற்கு மதிப்புண்டேயன்றி வெறும் புற ஒழுக்கத்தால் ஒரு பயனும் இல்லை. ..... அக ஒழுக்கம் இல்லாத புறஒழுக்கம் உயிரற்ற உடல் போலாகின்றது'

*(பக்.62).* 'சைவ சமயம் என்றால் விபூதி என்றும், வைணவ சமயம் என்றால் திருமண் என்றும் மட்டும் எண்ணிக் கொண்டிருப்பவர் பலர் உள்ளனர்' *(பக்.67)*

**'உயிரும் உடலும்'** *(10)* என்ற கட்டுரையில்: 'உயிரைத் தாங்கி நிற்பது உடல். உயிரும் உடலும் வெளித்தோற்றத் திற்கு ஒன்றாகவே காணப்படும். உயிர் வேறு; உடல் வேறு. உடல்தான் கண்முன் தோன்றும். உயிரைக் கண்ணால் காணமுடியாது' *(பக்.71-72).* 'உயிரெல்லாம் ஒன்றே. உயிரில் வேறுபாடே இல்லை. புல்லினுள் இருப்பதும் மாக்களுள் இருப்பதும் மக்களுள் இருப்பதும், ஆணுள் இருப்பதும் பெண்ணுள் இருப்பதும் எல்லாம் ஒரு தன்மையான உயிரே' *(பக்.73).* 'உலகம் ஒரு நாடக மேடை. அம் மேடையில் உயிர்கள் ஆண் பெண் என்று வேடம் பூணுதலாகிய உடல் தாங்கி நடிக்கின்றன. நாடகக் காட்சி முடிந்தவுடன் உடலாகிய வேடத்தைக் களைந்து விட்டுச் சென்று விடுகின்றன' *(பக்.74)* 'புண்ணியம் செய்யத்தக்கது. பாபம் செய்யத்தகாதது. பாபகாரியத்தை ஏன் செய்கிறோமென்று ஆராயும்பொழுது உடலின் பொருட்டாகவே என்பது கிடைக்கும். உடல் அழியும் தன்மை வாய்ந்தது; உயிர் அழிவில்லாதது; உடலின் பொருட்டுச் செய்யப் பெற்ற பாபத்தை இறுதியில் ஏற்றுக் கொள்ள வேண்டியதாகின்றது' *(பக்.76).*

**'இறைக்கு வேலை என்ன ?'** *(13)* என்ற கட்டுரையில்: 'இறைவன் பெயர்கள் பல என்றாலும் பொருள் ஒன்றே. உலகத்துக்கெல்லாம் கடவுள் ஒன்றேயன்றி வேறன்று *(பக்.91)* 'எவரெவர் எவ்வெவ்வினை ஆற்றுகின்றனரோ அவற்றை யெல்லாம் சீர்தூக்கி அவ்வவ்வினைக்கேற்ற பயனை நல்கிக் கொண்டிருப்பதே இறை வேலை' *(பக்.96).*

அகவை 44இல் தமிழ் கடல் இத்தகைய சிந்தனைகளில் ஆழ்ந்து நூல் வடிவம் தந்ததை எண்ணி மகிழ்கின்றோம்.

## 2. குற்றாள வளம் (1947)

இந்த நூல் **'குற்றால வளம்'** என்ற கட்டுரை முதலாகக் கொண்டு பதினான்கு கட்டுரைகள் அடங்கியது. இவை இருபதாண்டுகட்கு முன் (1927) எழுதப் பெற்றவை.[5] 'ஊழியன்' பத்திரிகையில வெளிவந்தவை. அனைத்தும் நீதிகளைப் பற்றியவை.

அந்தக் காலத்தில் நல்ல தமிழுக்கு 'நவசக்தியும்' 'ஊழியனும்' என்று சொல்லுவர். 'நவசக்தி'யில் திரு.வி.க.வின் எழுத்தோவியங்களும், 'ஊழியனில்' இராய.சொ. அவர்களின் கட்டுரைகளும் அணி செய்தன.

முதல் கட்டுரை சம்பந்தப் பெருமான் பாடிய பெருந்தண் சாரல் வளம் செய்யும் குற்றாலக் காட்சியை அழகிய சொல்லோவியமாக நம்முன் நிறுத்துகின்றது. அதனைத் தொடர்ந்து சிந்தனை அருள் உலக வாழ்வின் பல்வேறு துறைகளை வளஞ்செய்து செல்லுகின்றது. இந்நூலை **'வாழ்க்கை வளம்'** காட்டும் ஒளி விளக்கு என்று சொல்லலாம். நல்லன நாடல், கல்வியும் அறிவும், நிலையிலா வாழ்வு, அடக்கம், அழுக்காறாமை, அஞ்சாமை, ஒழுக்கம் போன்ற தலைப்புகளில் அமைந்த ஒரு கட்டுரை விளக்கு. திருக்குறளை அளவுகோலாகக் கொண்டு உலக வாழ்வை அளந்து காட்டும் ஒளி விளக்கு. காந்தியடிகளை நல்வாழ்விற்கு இலக்காகக் காட்டும் கலங்கரை விளக்கம் வள்ளுவரும் காந்தியடிகளும் இராய. சொவின் குறிக்கோள் நாயகர்களாதலால் இருவர் கருத்துகளும் இதில் அடங்கியுள்ளன.

## 3. காவேரி (1960)

இந்தத் தொகுப்பு நூலில் **'காவேரி'** என்ற கட்டுரையை முதல் கட்டுரையாகக் கொண்டு இளவேனிற்காலம், கம்ப

5. 1927 இல் நான் கோட்டாத்தூரில் (திருச்சி மாவட்டம்) தொடக்க நிலைப் பள்ளியில் (அகவை 11) படித்துக் கொண்டிருந்த காலம்.

ராமாயணத்தில் நகைச் சுவை, திருமங்கையாழ்வார், உயர்வு நவிற்சி அணி, குயில் பாட்டு என்ற ஆறு கட்டுரைகள் அடங்கியுள்ளன.

**'காவேரி'** என்ற கட்டுரை சிலப்பதிகாரத்தில் வரும் காவேரிபற்றி வரும் குறிப்புகளைக் கொண்டு புனையப் பெற ஓர் அழகான கட்டுரை. இத்துடன் பாரதியார், சேக்கிழார் பெருமான், வில்லிபுத்தூரராழ்வார், ஆகியோர் குறிப்புகளும் கட்டுரையை மேலும் வளமாக்குகின்றன. பட்டினப்பாலையிலுள்ள

> **வான் பொய்ப்பினும் தான் பொய்யா**
> **மலைத்தலைய கடற்காவிரி**

என்ற அடிகளும், பொருநர் ஆற்றுப்படையிலுள்ள காவிரி பற்றிய வருணனையும் கட்டுரைக்குப் பொலிவு ஊட்டுகின்றன. சமய இலக்கியங்களில் ஆழங்காற்பட்ட தமிழ்கடல் தேவார திவ்வியப்பிரபந்தங்களில் காவிரியைப் பற்றிய குறிப்புகளையும் கட்டுரையில் சேர்க்கத் தவற வில்லை.

முத்தாய்ப்பாகத் தொண்டரடிப் பொடியாழ்வாரின் 'கங்கையிற் புனிதமாய் காவிரி' என்ற பாசுர அடிக்கு விளக்கம் தரும் போக்கில் கட்டுரை முடிகின்றது. தமிழ் கடல் தரும் விளக்கம். "காசிமா நகரில் கங்கையாறு இறந்தார் உடல்களை ஏராளமாக வாரிக்கொண்டு வரும் நிலைகளை அடைந்து ஓரளவு புனிதத்தன்மையை இழந்தது போலல்லாமல் காவிரியாறு முழு பரிசுத்தமாக விளங்கு கின்றது என்ற கருத்து தொண்டரடிப் பொடியாழ்வாரின் **'திருமாலை'**யில் வருவது" என்று காட்டுவார்.

வைணவ உரைகளில் கண்ட விளக்கக் குறிப்பையும் ஈண்டு தருவது மிகப் பொருத்தமாகும். கங்கை திருமாலின் உலகளந்த சேவடியினின்றும் தோன்றியதாதலால் பரிசுத்த மானது. அது சிவனது சடைமுடியில் தங்கியனால் அழுக்கு அடைந்துவிட்டது. காவிரிக்கு அத்தகைய குறைபாடு

ஒன்றும் நேரிடவில்லை. தவிர, கங்கையைத் தம் திருவடியினின்றும் உண்டாக்கிய பெருமானும் காவிரியின் நடுவில் பள்ளி கொள்ளும் பேறும் பெற்றதால் கங்கையை விட மேலும் சிறப்புடையதாகின்றது.

தமிழ்நாட்டில், சிறப்பாக செட்டிநாட்டுப் பகுதியில், தான் 'காவேரி' என்ற பெயரை மகளிர்க்குச் சூட்டும் வழக்கைக் காணமுடிகின்றது.

**'கம்பராமாயணத்தில் நகைச்சுவை'** என்ற கட்டுரை சூர்ப்பணகை இராமன்மீது கொண்ட காதலால் பிராட்டியைத் தூக்க முயன்றதும், இலக்குவன் வாளால் மூக்கறுபட்டதும், அதனைத் தொடர்ந்து வரும் உரையாடல் களும் அமைந்தது.

**'உயர்நவிற்சியணி'** என்ற கட்டுரை இந்த அணியை சேக்கிழார் பெருமான், இளங்கோ அடிகள், மணிவாசகப் பெருமான், விறலிவிடு தூது ஆசிரியர், கவிச்சக்கரவர்த்தி கம்பன் இவர்தம் பாடல்களைக் கொண்டு விளக்குவதாக அமைகின்றது. விரிவஞ்சி அந்த விளக்கத்தில் புக முடிய வில்லை.

**'குயில் பாட்டு'** என்ற கட்டுரை பாரதியின் குயில் பாட்டை அற்புதமாக விளக்குவது. பாரதியின் கவித்துவத்தைக் காட்டும் ஓர் அழகிய சொல்லோவியம். பாட்டின் இறுதியில்,

> **வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க**
> **யாதானும் சற்றே இடமிருந்தாற் கூறீரோ ?**

என்று கூறியதற்கேற்ப தமிழ்க்கடல் அதனை விளக்காமல் கட்டுரையை முடித்துக் கொள்கின்றார்.[6]

6. என்னுடைய குயில்பாட்டு – ஒரு மதிப்பீடு என்ற நூலில் (1982) இதனை ஓரளவு விளக்கியுள்ளேன் (கழகத்தில் கிடைக்கும்)

# 8

# திருத்தலப் பயணம்*

மூர்த்திதலம் தீர்த்தம்
முறையால் தொடங்கினற்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே[1]

என்பது திருத்தலப் பயணத்தைப் பற்றிய தாயுமான அடிகளின் குறிப்பு.

'சார்வே தமக்குத் தாமோதரன் தாள்கள்'[2] என்ற கொள்கையில் ஊற்றமுடையவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் எம்பெருமான் அநுபவத்தைப் பலவிதமாகப் பெறுவார்கள். அவர்களிடம் ஞானம் மீதூர்ந்து நிற்கும்பொழுது எம் பெருமானின் திருநாமங்களைச் சொல்லியநுபவிப்பர்; அவனுடைய திருக்குணங்களில் ஈடுபட்டு அநுபவிப்பவர்; அவனுடைய திவ்வியமங்கள் வடிவழகை வருணித்து அநுபவிப்பர்; அவன் உகந்த திவ்விய தேசங்களின் வளங்களைப் பேசி அநுபவிப்பர்; அவ்விடங்களில் ஆதரம் மிக்க பாகவதர்களின் பெருமையைப் பகர்ந்து அநுபவிப்பர். அவர்களிடம் பக்தி மீதூர்ந்து நிற்கும்பொழுது அது காதலாகப் பரிணமித்துத் தாமும் தாமான தன்மையை

---

* இயற்றியது. தமிழ்கடல் இராய.சொ. வெளியீடு க.வெ.சித.வெ.வேங்கடாசலம் செட்டியார் அழகப்பா அறநிலையச் செயலர், காரைக்குடி. 630 003. (அவரது மணி விழா வெளியீடு).

1. தா.பா.பராபரக் கண்ணி.
2. திருவாய் 10.4.:1

இழந்து பிராட்டிமாருடைய தன்மையை அடைவர். அந்நிலைக்கேற்பப் பாசுரங்களும் வேற்றுவாயாலே வெளிப்படும். இந்நிலையே ஆசாரிய ஹிருத்யம்

**ஞானத்தில் தம்பேச்சு;**
**பிரேமத்தில் பெண் பேச்சு**[3]

என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆழ்வார்களும் ஆழ்வார் நாயகியராக நின்று பேசுவர்.

திருத்தலங்களின் வளங்களைப் பேசவேண்டு மானால் திருத்தலப் பயணம் இன்றியமையாதது. எம்பெருமான்களின் திருக்கோயில்கள் இயற்கை வளம் மிக்க சூழ்நிலையில் அமைந்திருக்கும். இந்தச் சூழ்நிலை வைணவ தத்துவத்தை விளக்குவதாகவே அமைந்திருக்கும், வைணவ தத்துவம் **சித்து, அசித்து, ஈசுவரன்** என்பது. ஒரு திவ்விய தேசத்தில் வாழும் மக்கள் யாவரும் சித்து என்ற தத்துவத்தைக் குறிக்கின்றனர் 'அசித்து' என்பது திருக் கோயிலின் இருப்பிடம், அதன் சுற்றுப்புறச் சூழ்நிலையாகிய தோட்டம், தோப்பு முதலியவற்றைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். ஈசுவரன் என்பது அங்குக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானைக் குறிக்கின்றது. இதனால் திருத்தலப் பயணம் செய்வோர் ஒருவித பக்தி நிலையை அநுபவிப்பதோடு வைணவ தத்துவத்திலும் ஆழங்கால் படுவது என்ற ஐதிகமாக அமைகின்றது.

சைவ தத்துவமும் **பதி, பசு, பாசம்** என்ற மூன்றாக அமைகின்றது. திருத்தலங்கள் யாவும் இவற்றை விளக்குவன வாக அமைகின்றன என்று கூறுவதும் பொருந்தும்.

**திருத்தலங்கள்:** ஆழ்வார்கள் மங்களாசாசனம் பெற்ற தலங்கள் *108.* பாசுரங்களில் திருத்தலப் பெயர்கள் அமைந்தாலேயே அவை மங்களாசாசனம் பெற்றனவாகக் கொள்ளப் பெறும்.

3. ஆசா. ஹிரு. – 118

கடலலைகள் தோற்கும் கடும்பிறவி வெள்ளத்
துடநரகத் துள்நின் றுழலாது – அடைநெஞ்சே !
ஆழ்வார்கள் பாட்டால் அலங்கரித்த லால்பதிகள்
மூவாறு முப்பத்து மூன்று.

அறனளிக்கும் ஆன்ற பொருளளிக்கும் வீட்டின்
திறனளிக்கும் வேறென்ன செய்ய ? – பிறஉரைக்க
நூலா யிரங்கற்பின் நோக்குங்கால் யாதுபயன்
நாலா யிரத்தின் நலம்.

என்ற வெண்பாக்கள் திருத்தலங்களையும் அவற்றிற்குப் பயணம் செய்வோர் அடையும் பயன்களையும் தெரிவிக்கின்றன.

இவை தவிர ஆழ்வார்கள் பாசுரங்களில் இடம் பெறாமல் மக்களால் வழிபடப் பெறும் தலங்களும் உள்ளன. இவை புராண அபிமானத் தலங்கள் என்ற பெயரால் வழங்கப் பெறுகின்றன.

**சைவத் திருத்தலங்கள்:** இங்கு, திருத்தலங்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பதிகங்கள் பெற்றிருந்தால் தான் 'பாடல் பெற்ற தலங்களாகக்' கருதப்பெறும். பதிகம் அல்லது பதிகங்கள் பெறாமல் பாடல்களில் இடம் பெற்றிருக்கும் தலங்கள் 'வைப்புத் தலங்கள்' என்ற பெயரால் வழங்கப்பெறும்.

**தலங்கள் அமைந்து இருக்கும் இடங்கள்:**

முதலில் வைணவ திவ்விய தேசங்களைக் காண்போம்.

| | |
|---|---|
| சோணாட்டுத் திருப்பதிகள் | 40 |
| பாண்டிநாட்டுத் திருப்பதிகள் | 18 |
| மலைநாட்டுத் திருப்பதிகள் | 13 |
| நடுநாட்டுத் திருப்பதிகள் | 2 |
| தொண்டை நாட்டுத் திருப்பதிகள் | 22 |
| வடநாட்டுத் திருப்பதிகள் | 12 |
| திருநாட்டுத் திருப்பதி | 1 |
| மொத்தம் | 108 |

வைணவ அபிமான புராண தலங்கள் 64 என்று கணக்கிடப் பெற்றுள்ளன.[5]

இனி பாடல் பெற்ற சிவத்தலங்களைக் (தேவாரத் தலங்களைக்) காண்போம்.

| | |
|---|---|
| 1. சோழநாடு | 191 |
| 2. ஈழகாடு | 2 |
| 3. பாண்டிநாடு | 14 |
| 4. மலைநாடு | 1 |
| 5. கொங்கு நாடு | 7 |
| 6. நடுநாடு | 22 |
| 7. தொண்டைநாடு | 32 |
| 8. துளுவ நாடு | 1 |
| 9. வடநாடு | 5 |
| மொத்தம் | 275 |

வைப்புத் தலங்கள் 237 எனக் கணக்கிடப் பெற்றுள்ளன.[6]

பயணத்திட்டம்: இந்தத் திட்டத்தை வகுப்பதில் முக்கியமாகப் பங்கு பெற்றவர் தமிழ்க் கடல் இராய.சொ. அவர்கள். ஏற்கெனவே தேவாரத்திருத்தலங்கட்குச் சென்று சேவித்தவர். மற்றொருவர் முத்த. வெ. சொ. அவர்கள்; இவரும் திருத்தலப் பயணத்தில் நல்ல அநுபவம் பெற்றவர். ஊர்தியில் செல்வதுதான் வசதி என்ற முடிவு செய்யப் பெற்றது. அதற்காக சுமார் பத்துப் பேர்கள் செல்லவும், இரவில் சயனிக்கவும் கூடிய வகையில் சிறியதொரு இல்ல வசதியுடன் கட்டப்பெற்ற உல்லாசஊர்தி (Caravan) ஒன்று பெரிய செலவில் C.V.CT.V. அவர்கள் வாங்கினார்கள். அதில் நவீன கழிப்பறை வசதியும் பொருத்தப் பெற்றிருந்தது. சமய வேறுபாடின்றி தேவார-திவ்வியப்பிரபந்த தலங்கள்

5. வைணவச் செல்வம் – பகுதி 2. காண்க. (தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.)
6. பன்னிரு திருமுறை வரலாறு – முதற் பகுதி – பக் (694–721)

அனைத்தையும் சேவிக்க வேண்டும் என்பது திட்டம். எடுத்த காரியத்தைச் சிறப்புடன் செய்து முடிப்பதில் மிக்க திறனுடையவர் C.V.CT.V. அவர்கள்; அவருக்கு நிகர் அவரே.

இந்தப் பயணத்தில் கலந்து கொண்டவர்கள் இராய.சொ, C.V.CT.V., முத்த வெ.சொ. C.V.CT.V. யின் தமையனார் மகன் க.வெ.ராம. இராமசாமி செட்டியார், இராசிபுரம் புலவர் மு. இராமசாமி ஆகியோர். 28-1-65இல் தொடங்கப் பெற்ற பயணம் 19-3-66 (ஓராண்டு ஒரு திங்கள் இருபத்திரண்டு நாட்கள்) நிறைவு பெற்றது. பயணம் மணிவாசகப் பெருமானை இறைவன் ஆட்கொண்ட திருவாசகம் பெற்ற திருப்பெருந்துறையில் தொடங்கப் பெற்று நடுநாட்டில் திருப்பாதிரிப் புலியூருக்கு அடுத்த மாணிக்குழி என்ற தேவாரத்தலத்தில் நிறைவு செய்யப் பெற்றது.

இந்தக் கூட்டுத் திருத்தலப் பயணத்தில் சேவித்த தேவாரத் திருத்தலங்கள் 275இல் 269, திவ்வியப் பிரபந்தத் தலங்கள் 108இல் 77 (திருப்பாற்கடல், பரமபதம் இப்பூவுலகில் இல்லாமையால் சேவிக்க முடியாதவை). இவை தவிர ஆங்காங்கே உள்ள பிற தலங்கள் 90.ஆக ஓராண்டு ஒரு திங்கள் 22நாட்களில் ஏனைய அலுவல்கட்கிடையில் சேவித்த தலங்கள் 456. இவற்றின் விவரம்.

## சிவத்தலங்கள்

| | |
|---|---|
| தேவாரம் | 269 |
| வைப்பு | 6 |
| திருவாசகம் | 4 |
| திவிசைப்பா | 5 |
| பிறசிவன் | 31 |
| ஆக | 315 |

## திருமால் தலங்கள்

| | |
|---|---|
| திவ்வியப் பிரபந்தம் | 97 |
| பிற திருமால் | 13 |
| ஆக | 110 |

| | |
|---|---|
| சிவத்தலங்கள் | 315 |
| திருமால்தலங்கள் | 110 |
| முருகன் (திருவிசைப்பா உட்பட) | 15 |
| அம்பிகை தலங்கள் | 2 |
| அடியார் தலங்கள் | 14 |
| ஆக | 456 |

பாடல்பெற்ற திருக்கோயில் ஒவ்வொன்றிலும் அத்தலத்திற்குரிய தேவார-திருவாசக-திவ்வியப் பிரபந்த பாடல்-பாசுரங்கள் சேவிக்கப் பெற்றன. தலம் குறிப்பிடாத பாடல்கள் இல்லத்தில் சேவிக்கப் பெற்றன. எனவே இத்திருத்தலப் பயணத்தின் காரணமாக தேவாரப் பாடல்கள் எண்ணாயிரம், திவ்வியப் பிரபந்தம் பாசுரங்கள் நாலாயிரம் சேவித்து நிறைவு செய்த பேறு கிடைத்தற்கரிய பேறாகும். இந்தப் பயணத்தில் பெரியார்களைத் துணை கொண்டு, நல்ல பணி செய்து, தேவார-பிரபந்தப் பாடல்களை-பாசுரங்களைச் சேவித்து அனைவரையும் மகிழ்வித்தது என் தம்பி.மு. இராமசாமிக்குக் கிடைத்த பெரும் பேறு.

இத் திருத்தலப் பயண நூலைத் தொகுத்தவர் தமிழ்க் கடல் இராய.சொ. முதுமைக் காலத்தில் இரவு-பகல் என்று பாராது உழைத்தது பெருமைக்குரியது; போற்றத்தக்கது. கைப்படி எழுதுவதில் துணைபுரிந்தவர்கள் அழகப்பா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்கள் விசுவநாதன், சொக்கலிங்கன் முருகன் ஆகியோர். அனைத்திற்கும் உடன்

இருந்து உதவியவர் அழகப்பா பொறியியற் கல்லூரியில் பணிபுரியும் இரா. பதுமநாபன்.

**இந்த நூலின் சிறப்பு:** ஒவ்வொரு தலத்தின் அடியிலும் (1) இறைவன்-இறைவி பெயர்கள், (2) பதிகங்கள் விவரம், (3) வழிப்பட்ட நாள்[7], (4) அந்தத் தலத்தின் இருப்பிடம் பற்றிய விவரம், (5) தலங்களை வணங்கும் **"போற்றிப் பாடல்கள்."** இங்ஙனம் இந்த நூலை தேவார, திருவாசக, திவ்வியப் பிரபந்த பாடல்களும், பின்வந்த பெரியார்களின் பாடல்களும் சேர்ந்து 813 அருட்பாக்கள் அணி செய்கின்றன. நூலைப் படிப்போர் இப்பாடல்களை மனப்பாடம் செய்தால் இறையருளுக்குப் பாத்திரங்க ளாவார்கள்.

இந்த நூல் C.V.CT.V. அவர்களின் மணிவிழா வெளியீடாக வருவது ஒரு தனிச் சிறப்பு. மனிதன் வாழ்வில் அறுபது ஆண்டுகள் ஒரு பகுதி. தமிழ் ஆண்டுகளின் எண்ணிக்கையும் அறுபது, நாயன்மார்களுள் சுந்தரர், சடையர், இசைஞானியார் நீங்கலாக அடியார்களின் எண்ணிக்கையும் அறுபது. மனிதன் இல்லற வாழ்க்கையின் பயன் பெரும் பகுதியை அநுபவித்த நிலையில் மணி விழாவுக்குப் பின் வாழ்க்கையின் பிற்பகுதியைத் தொடங்கு கின்றான். உடல் பெற்ற பயனை ஓரளவு துய்த்தபின் அவன் உயிர்க்குறுதி பயக்கும் ஆன்ம வாழ்வில் கவனம் செலுத்தும் வாய்ப்பு கிட்டுகின்றது. C.V.CT.V. அவர்கள் தம் வாழ்க்கையை நன்கு அமைத்துக் கொண்டுள்ளது அவர் குலதெய்வமாக வணங்கி வரும் அரியக்குடிப் பெருமானின் திருவருட்பயனேயாகும் என்பது வெள்ளிடைமலை. பொருட்செல்வம் நிறைந்த பெருமகனார் அருட்செல்வம்

7. முதலில் குறிப்பிட்ட நாள் – இராய. சொ. தனியாக வழிபட்டது; இரண்டாவதாகக் குறிப்பிட்ட நாள். கூட்டாக வழிபட்டது.

பெற்றது தமிழ்க்கடல் இராய. சொ.வின் புருஷகாரத்தால் தான் என்பது அனைவரும் அறிந்ததேயாகும்.[8] இதனை விட அவர் அடைந்த மற்றொரு சிறப்பு அவர் சுத்த சைவமானார்; புலால் உணவை அடியோடு தவிர்த்து விட்டார்!

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின்! பாடிப் பணிமின்! பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக கொள்வனே.[9]

– திருமூலர்

8. நானும் என் பிஎச்.டி. ஆய்வின் காரணமாகக் கோடை விடுமுறை காலங்களில் இத்திருத்தலப் பயணத்தைக் குடும்பத்துடன் மேற்கொண்டு 101 திவ்விய தேசங்களைச் சேவித்தேன் ஆறு பயண நூல்களை வெளியிட்டுள்ளேன். அவற்றில் பெரும்பாலும் தலம்பற்றிய விவரம், பயண அநுபவம், ஆழ்வார் பாசுரங்களின் அமைந்த வைணவ தத்துவம் ஆகியவைபற்றி விவரமாக விளக்கியுள்ளேன்.

9. திருமந்திரம் – 1445 (ஐந்தாம் தந்திரம் – 5. சரியை.3)

# முடிப்புரை

இன்றைய பேச்சு எட்டுப் பகுதிகளாக அமைந்தன. கி.பி.1898–இல் தோன்றி, தமிழ் கற்று, செட்டிநாட்டுத் தமிழ்வானில் ஒரு துருவ மீன் போல் திகழ்ந்த தமிழ் கூறு இந்திய மலேசியா நாடெங்கும் கால்நடையாடி சைவ–வைணவ திவ்விய தேசங்களைச் சேவித்து 1974–இல் சிவப்பேறு அடைந்த தமிழ்க்கடல் இராய.சொ.வைப் பற்றி அவர்தம் நூற்றாண்டு விழாவில் பேசி அப்பேச்சு அச்சு வடிவம் பெறுவதென்பது அடியேனுக்குக் கிடைத்தற்கரிய பெரும் பேறு. அவர் வாழ்ந்த காலத்தில் அவரோடு நெருங்கிப் பழகிய பத்தாண்டுக் காலத்திலும் (1950–60), அடுத்து விட்டுவிட்டுப் பழகிய ஆறாண்டுக் காலத்திலும் (1960–66) என்னுடைய வாமனன்போல் இருந்த குறைந்த தமிழறிவு இன்று நெடுமால்போல் வளர்வதற்கும் மெருகேறியதற்கும் தமிழககடலே முதற்காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என்ற காரணங்களில் துணைக் காரணம் என்று கருதுகின்றேன்.

**'பெரியோர்கேண்மை'** என்ற முதல் பகுதியில் இராய. சொ.வுக்கும் அடியேனுக்கும் ஏற்பட்ட தொடர்பு, மகளிர் இல்லக் கம்பராமாயண ஆராய்ச்சி, இந்துமதாபிமான சங்கத்தில் வில்லிபாரதம் படிக்கப்பெற்ற செய்தி, இராய.சொ. சங்க நிர்வாக சபைக் கூட்டத்தை நடத்தியது தீர்மானங்களை பதிவு செய்யப்பெற்ற அற்புதமான முறை கல்லூரியில் ஆராய்ச்சித் துறை இயக்குநராக நியமனம் பெற்ற செய்தி போன்றவை சுருக்கமாகத் தெரிவிக்கப் பெற்றன. அனைத்திலும் தமிழ்க் கடலின் நேரிய போக்கு முதலியன சுட்டி விளக்கப் பெற்றன. செட்டிநாட்டைச்

சார்ந்த பண்டிதமணி வாழ்ந்த மகிபாலன் பட்டியில் வாழ்ந்து 'யாதும் ஊரே யாவரும் கேளிர்" (புறம்-192) என்ற ஒரே பாட்டால் உலகப் புகழ் பெற்ற கணியன் பூங்குன்றனாரைப்போல், 'தமிழ்க்கடல்' தம் காந்திக கவிதையில் இந்தியத் துணைக் கண்டப் புகழ் பெறுகின்றார் என்று கருதுவதால் இரு வேறு கருத்து இருக்க முடியாது.

'பதிப்பித்த நூல்கள்' என்ற இரண்டாம் பகுதியில் தமிழ்க் கடல் பதிப்பித்த 'வருணகுலாதித்தன் மடல்' 'சோண சைவ மாலை' 'அருணாசல புராணம்', 'திருவிளையாடற் புராணம்- (மதுரைக் காண்டம்)' என்ற நான்கு நூல்களின் பதிப்புச் சிறப்பைச் சுருக்கமாக எடுத்துக் காட்டினேன். அவர் அதில் பட்ட அல்லல்களையும் சுட்டி உரைத்தேன்.

இதில் முதல் நூலைப்பற்றிப் பேசுங்கால் 'மடல் ஏறுதல்' பற்றிய விளக்கம் தந்தேன். வள்ளுவர் இதனைப் பற்றி இயம்பியுள்ள கருத்துகளையும், திருமங்கையாழ் வாரின் இருமடல்கள் பற்றிய செய்திகளையும் விளக்கினேன். என்னதான் நேர்ந்தாலும் ஆணைப்போல் பெண்மானத்தை விற்கத் துணியமாட்டாள் என்ற வள்ளுவப் பெருந்தகையின் கருத்தை விளக்கும் பாங்கில் "திருமங்கையாழ்வார் என்னும் பரமபக்தர் இம்முறையில் வழுவியுள்ளர்" என்ற தமிழ்க்கடல் கூறும் கருத்து தவறானது என்பதை விளக்கினேன். இதற்குத் துணையாக பன்னிருபாட்டியல் சூத்திரம் ஒன்றைக் கொண்டேன். "மகளிர் காதல் தம்மை மிகுதியும் கவற்றிய காலத்தும் மடலேறார் என்பது உண்மையே. ஆயினும் கடவுளர் தலைவராய் வருங்காலத்து மடலேறுவர்" என்பதால் பெண்களும் மடலேறுவதற்கு வகை செய்கின்றது. இதனால் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த இருமடல்களும் இக்கூறிய சூத்திரத்திற்கு இலக்கியங்களாக அமைகின்றன என்று நியாயம் காட்டி விளக்கினேன். தவிர, ஆழ்வார் வட நூல் இலக்கணத்தின் அடிப்படையில் மடல் ஏறுவதாகக் கூறுவதையும் சுட்டியுள்ளேன்.

இரண்டாவது நூலைக் குறித்துப் பேசும்போது சிவப் பிரகாச அடிகளைப் பற்றிப் பல குறிப்புகள் தந்தேன். அவர் நகைச்சுவையாகப் பாடின **"அரனவன் இடத்திலே"** என்ற பாட்டிலுள்ள நகைச்சுவையை எடுத்துக் காட்டினேன்.

மூன்றாவது நூலைப்பற்றி விளக்கும் பாங்கில் அண்ணாமலை தலப்பெருமையை விளக்கினேன், நூலின் சுவையான பாடல்களை எடுத்துக் காட்டி விளக்கினேன்; உவமை நயத்தையும் அவ்வாறே விளக்கினேன். அண்ணாமலையார், உண்ணாமுலையார் துதிகள் நெஞ்சை நெகிழ்விக்கும் பாங்கைப் புலப்படுத்தினேன்.

நான்காவது நூலைப்பற்றிய விளக்கத்தில் மதுரைக் குரிய நான்கு புராணங்களைப் பற்றிய குறிப்புகள் தந்தேன் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் மதுரை நகரில் சங்கத் தலைவராய் அமர்ந்து பெரும்புலவர்களோடு ஒன்றித் தமிழ் ஆய்ந்தார் என்ற பெருமை மதுரையைத் தவிர வேறு எந்த நகருக்கும் இல்லை என்பதை எடுத்துக் காட்டி உறுதிப்படுத்தினேன்.

**'விளக்கநூல்கள்'** என்ற மூன்றாம் பகுதியில் வள்ளுவர் தந்த இன்பம் என்பது அப்பெருமானின் காமத்துப்பால் பற்றிய விளக்கமாகும் என்று கூறும் போக்கில் அப்பகுதியில் உள்ள 25 அதிகாரங்களின் தலைப்புபற்றியும், அவற்றிலுள்ள ஒரு சில குறள்களின் விளக்கம்பற்றியும் தமிழ்க்கடல் கூறியிருப்பதைப்பற்றி எடுத்துக் காட்டினேன் இவ்விளக் கங்கள் சாதாரண மக்களும் அகப் பொருள் பற்றிய நுட்பமான கருத்துக்களைத் தெளிவாக அறிந்து கொள்வதற்குத் துணையாக அமைந்திருப்பதைச் சுட்டி யுரைத்தேன்.

இரண்டாவதாக உள்ள 'திருக் கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி'யிலுள்ள பாடல்கள் கிட்டத்தட்ட திரு வாசகத்தையொட்டி உள்ளத்தையுருக்கும் பான்மை யுடனிருப்பதால் **குட்டித் திருவாசகம்** என்று வழங்கப்

பெறுகின்றது என்பதைச் சுட்டியுரைத்தேன். பல பாடல்கட்குத் தமிழ்க் கடல் இராய.சொ. காட்டியுள்ள உரைக் குறிப்புகளிலுள்ள ஒப்புமைப் பாடல்களை எடுத்துக் காட்டி அவை அந்தாதிப் பாடல்களுடன் எந்த அளவு ஒப்பாய் அமைகின்றன என்பதைத் தெளிவாக்கினேன். இந்த நூலிலுள்ள நவமணிகள் போன்ற பாடல்களையும் எடுத்துக் காட்டி அவற்றை உள்ளங்கலந்து ஓதினால் வீடு பேற்றிற்கு வழியாக அமையும் என்பதைத் தெளிவாக்கினேன்.

'தொகுப்பு நூல்கள்' என்ற நான்காம் பகுதியில் உள்ளவை 21 நூல்கள் எனக் காட்டினேன். இவை கடலில் கிடைக்கும் முத்துகள்போல் தமிழ்க்கடல் தந்த முத்துகள் எனக் கருதலாம் என்று தெரிவித்து இவை செட்டிநாட்டுப் பகுதிகளில் அணையா விளக்குகள்போல் தமிழ் உணர்வையும் பக்திஉணர்வையும் குன்றாமல் வைத்துள்ளன என்பதைச் சுட்டி உரைத்தேன்.

'படைப்பு நூல்கள்' என்ற ஐந்தாம் பகுதியில், தமிழ்க்கடலின் படைப்புகள் யாவும் அடக்கமாக **'காந்தி கவிதை'** என்ற ஓரே நூலில் திகழ்கின்றன என்பதைக் கூறி அவற்றின் எண்ணிக்கை 38 என்றும் காட்டினேன். இவை பெரும்பாலும் வேலூர் சிறையில் பிறந்தன என்பதைச் சுட்டும் போக்கில் இராய. சொ.வுக்கு சிறைச்சாலையே தவச்சாலையாகி இவை பிறக்கக் காரணமாயிற்று என்பதைத் தெரிவித்தேன். தமிழ்க் கடலுக்குத் திருவள்ளுவரே, காந்தியடிகளாகப் பிறந்தார் என்ற நம்பிக்கை உண்டு என்பதைப் புலப்படுத்தினேன். தமிழ்க் கடலுக்குக் காந்தியடிகள் உடல் பொருள் ஆவி என்ற எல்லாமாக இருந்தனர் என்பதை இந்தப் படைப்புகளால் அறிய முடிகின்றது என்பதைத் தெளிவாக்கினேன். இப்படைப் புகள் தமிழ்க்கடலின் ஆளுமையை (Personality) நிலை நாட்டுபவையாக அமைகின்றன என்பதையும் சுட்டி

உரைத்தேன் 'காந்தியக் கவிதை' என்ற படைப்பிலக்கியம் பெறலரும் வரலாற்று இலக்கியமாக, காந்தியடிகளையும் இராய.சொ.அடிகளையும் ஒருங்கு காட்டும் காலக் கண்ணாடியாக நின்று நிலவும் என்பதைத் தெளிவாக்கி னேன்.

**'ஆய்வு நூல்கள்'** என்ற ஆறாம் பகுதியில் அழகப்ப வள்ளல் கருதிய அழகப்பா கல்லூரி தமிழ் இலக்கியத் துறையின் இயக்குநராக இருந்த காலத்தில் துறை மூலமாக வெளியிடப் பெற்றவை *(1)* **கம்பனும் சிவனும்,** *(2)* **வில்லியும் சிவனும்** என்பவை வெளிவந்தன என்றும் இவை இரண்டும் நூலாசிரியர்களையும், தமிழ்க்கடல் இராய. சொ.வையும் சிவபெருமானையும் நமக்குக் காட்டுகின்றன என்பதைத் தெரிவித்தேன்.

**'உரைநடைப் படைப்புகள்'** என்ற ஏழாம் பகுதியில் இராய. சொவின், 'இன்பம் எது?', 'குற்றாலவளம்', 'காவேரி' என்ற மூன்று கட்டுரைத் தொகுப்புகளின் அடக்கம்பற்றிய செய்திகளை விவரமாக எடுத்துரைத்தேன்.

**'திருத்தலப் பயணம்'** என்ற எட்டாம் பகுதியில் தமிழ்க் கடலும் திரு.சி.வி.சிடி.வியும் வேறு சில அன்பர்களும் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டு சைவ-வைணவ வேறுபாடின்றிச் சேவித்த *456* தலங்களைப்பற்றிய விவரங்கள், தலங்கள்மீதுள்ள பாடல்கள் முதலியவற்றை பதிவு செய்துள்ளதை எடுத்துக் கூறினேன். இந்த நூலும் அழகப்பா கல்லூரி ஆய்வுத் துறையின் வெளியீடாகவே நமக்குக் கிடைத்தது என்பதையும் சுட்டியுரைத்தேன்.

இந்த பொழிவு நூலில் தமிழ்க் கடல் **இராய.சொ.** என்ற **துருவ மீன் செட்டிநாட்டுத் தமிழ்வானில் தோன்றியும்** *76* ஆண்டுகள் வாழ்ந்தும், ஊனுடம்பு மறைந்தாலும் புகழுடம்பை நமக்கு-ஏன்? தமிழ் கூறு நல்லுலகிற்கு-விட்டுச்

சென்றதையும் நினைந்து மகிழ்ந்து போற்றி வாழ்த்து கின்றோம்.

தமிழ்க்கடலின் புகழ் நீடு நிலைத்து வாழ்க! கைலையில் வாழும் சிவம்பெருக்கும் சீலர் இந்த நூற்றாண்டு விழாவைக் கண்டு "குமிழ் சிரிப்புடன்" மகிழ்வார் என்று எண்ணி இறும்பூது எய்துவார் என்று நாமும் எண்ணி மகிழ்வோம்.

# பின்னிணைப்பு

## பயன்பட்ட நூல்கள்

### (அ) முதன்மை நூல்கள்

**(i) இராய.சொ. பதிப்பித்த நூல்கள்:**

*1. வருணகுலாதித்தன் மடல்*

*2. சோண சைல மாலை*

*3. அருணாசல புராணம்*

*4. திருவிளையாடற்புராணம் - மதுரைக் காண்டம்*

**(ii) விளக்க நூல்கள்**

*5. வள்ளுவர் தந்த இன்பம்*

*6. திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி*

**(iii) தொகுப்பு நூல்கள்**

*7. தேனும் அமுதும்*

*8. காதற்பாட்டு*

*9. மாதவ மாலை*

*10. அண்ணாமலை மாலை*

*11. தில்லைத் திருநடம்*

*12. நால்வர் வணக்க மாலை*

*13. திருக்கானப்பேர் பாமாலை*

*14. இராகவன் இசைமாலை*

*15. இறைவர் அறுவர் வணக்கம்*

*16. மீனாட்சித் திருமணம்*

*17. சீதைத் திருமணம்*

*18. மலர் வணக்கத் தமிழ் மாலை*

*19. திருவாசகத் தேன்*

*20. ஆழ்வார் அமுது*

*21. பிள்ளைப்பாட்டு*

*22. திருமணப் பாட்டு*

*23. தெய்வப் பாமாலை*

*24. அங்கங்களின் பயன்*

*25. தேவாரமணி*

*26. முருகன் பாமாலை*

*27. பாவைப் பாட்டு*

**(iv) படைப்பு நூல்**

*28. காந்திக் கவிதை (38 பகுதிகள் அடங்கியது)*

**(v) ஆய்வு நூல்கள்**

*29. கம்பனும் சிவனும்*

*30. வில்லியும் சிவனும்*

**(vi) உரைநடைப் படைப்புகள்**

*31. இன்பம் எது?*

*32. குற்றால வளம்*

*33. காவேரி*

**(vii) பயணநூல்**

*34. திருத்தலப் பயணம்*

## (ஆ) துணை நூல்கள்

1. சுப்புரெட்டியார், ந. சைவசமயவிளக்கு
2. சோழநாட்டுத் திருத்தலங்கள் (பகுதி-1, 2)
3. பாண்டிநாட்டுத் திருத்தலங்கள்
4. மலைநாட்டுத் திருத்தலங்கள்
5. தொண்டை நாட்டுத் திருத்தலங்கள்
6. வடநாட்டுத் திருத்தலங்கள்

□ □ □

# இந்நூலாசிரியரைப் பற்றி...



(பிறப்பு : 27-8-1916)

*82 - அகவையை எட்டும் இந்த நூலாசிரியர் எம். ஏ. பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பிஎச்.டி. பட்டங்கள் பெற்றவர். ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப் பள்ளி நிறுவனர் - தலைமையாசிரியராகவும் (1941 - 50), பத்து ஆண்டுகள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1950 - 60) பதினேழு ஆண்டுகள் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை நிறுவனர் - பேராசிரியர் துறைத் தலைவராகவும் (1960 - 77) பணியாற்றி ஓய்வு பெற்றவர்.*

*1978 ஜனவரி 14இல் சென்னையில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978 பிப்பிரவரி - 1979 ஜூன்) தமிழ்க் கலைக் களஞ்சியம் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் 1986 - ஆண்டு மூன்றுமாதங்கள் மதிப்பியல் பேராசிரிய ராகவும், 1989 - மே முதல் 1990 அக்டோபர் முடிய 18 மாதங்கள், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் காஞ்சி தத்துவ மையத்தில் தகைஞராகவும் பணியாற்றி 1200 பக்கத்தில் வைணவச் செல்வம் என்ற ஒரு பெரிய ஆய்வு நூலை உருவாக்கி வழங்கியவர். முதற்பகுதி 1995-ல் 575 பக்கத்தில் வெளிவந்துள்ளது; இரண்டாவது பகுதி அச்சேறும் நிலையில் உள்ளது. 1996 பிப்பிரவரி முதல் சென்னைப் பல்கலைக்கழக தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மரபுவழிப் பண்பாட்டு நிறுவனத்தின் இயக்குநரர்கப் பணியாற்றுபவர்.*

நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச். டி) பட்டம் பெற்றவர். (அந்த ஆய்வு நூல் ஆ...லத்தில் 940 பக்கங்களில் திருவேங்கடவன் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்துள்ளது) பல எம்.ஃபில், பிஎச். டி மாணவர்களை உருவாக்கியவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல் வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன. தவிர, ஆசிரியம் உளவியல் (5), இலக்கியம் (21), சமயம், தத்துவம் (31), வாழ்க்கை வரலாறு தன் - வரலாறு (11), திறனாய்பு (19), அறிவியல் (18), ஆராய்ச்சி (6) ஆக : 111 நூல்களின் ஆசிரியர்.

இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும் சமய நூல்களில் மூன்றும்; திறனாய்வு நூல்களில் ஒன்றும்; தமிழக அரசுப் பரிசுகளையும்; அறிவியல் நூல்களில் ஒன்று தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசினையும் ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றன. இவர்தம் அறிவியல நூல்களைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 'அருங்கலைக்கோன்' என்ற விருதையும் (1968), வைணவ நூல்களைப் பாராட்டி, பண்ணுருட்டி வைணவ மாநாடு 'ஸ்ரீசடகோபன் பொன்னடி' என்ற விருதையும் (1987), தமிழ்ப்பணியைப் பாராட்டி தமிழக அரசு திரு.வி.க. விருதையும் (10000 வெண்பொற்காசுகள் - 1987), மதுரைகாமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' (1991) விருதையும்; இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளை கல்வி, இலக்கியம், அறிவியல் என்ற மூன்று துறைகளில் இவர்தம் பணியைப் பாராட்டி இராசா. சர். முத்தையவேள் விருதையும் (1994 - 50000 வெண்பொற்காசுகள்) சென்னைக் கம்பன் கழகம் இவர்தம் கம்பன் பணியைப் பாராட்டி பேராசிரியர் இராதா கிருஷ்ணன் விருதையும் (1994 - 1000 வெண் பொற்காசுகள்) சென்னை ஆழ்வார்கள் ஆய்வு மையம் இவர்தம் வைணவ வெளியீடுகளைச் சிறப்பிக்கும் முறையில் 'இராமாநுசர் விருது' (1996 - 25,000 வெண்பொற்காசுகள்) வழங்கிச் சிறப்பித்தன. இனிமை, எளிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

# மணிவாசகர் பதிப்பகம்

| | | |
|---|---|---|
| நிறுவனர் | : | தமிழவேள் ச. மெய்யப்பன் |
| நிறுவிய ஆண்டு | : | 1961 |
| வெளியீடுகள் | : | 650 |
| பல்கலைக்கழகப் பாடநூல்கள் | : | 60 |
| பரிசுபெற்ற நூல்கள் | : | 50 |

தமிழ்நாட்டில் தலைசிறந்த பதிப்பகங்களுள் ஒன்று.

'எல்லாம் தமிழால் முடியும்' என்ற குறிக்கோளுக்காகப் பாடுபடுகிறது.

தரமான நூல்களை வெளியிடுவதையே உன்னத நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

ஆராய்ச்சி நூல்கள் வெளியிடுவதில் முதலிடம் பெறுகிறது.

இலக்கிய ஆய்வுக்குப் புதுவழி வகுக்கிறது.

அறிஞர்களின் சிந்தனைப் பதிவேடுகளாகத் திகழ்வன எமது நூல்கள்.

சிறந்த அமைப்புடையவை

சீரான விலையுடையவை

மொழிக் கொள்கை

விலைக் கொள்கை

இவற்றில் தெளிவான திட்டத்துடன் நூல்கள் வெளியிடும் பதிப்பகம்.